2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி
நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான

# தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கை

# 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கை.

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
ராஜகிரிய

தேர்தல் ஆணைக்குழு - 2021

* இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், அட்டவணைகள் அல்லது புள்ளிவிபரக் குறிப்புக்களைப் பிரித்தெடுத்து வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

CM 34244 - 200 (2021/08) அரசாங்க அச்சுத் திணைக்களம், இலங்கை.

## உள்ளடக்கம்

**தலைப்பு** **பக்க இலக்கம்**


**முன்னுரை** v

1. அறிமுகம் 1
2. பாராளுமன்றத் தேர்தல் சட்டங்கள் 2
3. தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமனம் 2
4. பெயர் குறித்த நியமனம் மற்றும் வைப்புப் பணம் 2
5. வாக்கெடுப்பு பற்றிய அறிவித்தல் 7
6. பெயர் குறித்த நியமனத்தின் பின்னர் வேட்பாளரொருவர் இறத்தல் 8
7. தேர்தல் அலுவல்களின் ஒழுங்கமைப்பில் தாக்கம் செலுத்திய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை 9
8. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 15
9. அரசியற் கட்சிகளுக்கான அரசின் உதவி 17
10. பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்கள் 17
11. தேருநர் இடாப்புக்கள் 19
12. தேருநர் இடாப்புக்கள் மற்றும் தேர்தல் மாவட்டங்களுக்கமைய தெரிந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 20
13. வாக்கெடுப்புப் பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம், வாக்கெடுப்பு நிலையங்கள் 20
14. வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்குதல் 21
15. அஞ்சல் மூலம் வாக்களித்தல் 21
16. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 25
17. வாக்குப் பெட்டிகள் 26
18. வாக்காளர்களை இனங்காண்பதற்காக வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாள ஆவணங்களைப் பயன்படுத்தல் 27
19. வாக்காளர்களை பரிசோதித்தலும் தோதான குறியீட்டை இடுதலும் 29
20. இறப்பெய்தியுள்ளதாக மற்றும் வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்ட வாக்காளர்கள் 29
21. உடல்வலிமையிழப்பொன்றிட்கு உட்பட்ட நபரொருவருக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தல் 30
22. உடல்வலிமையிழப்புக்குற்பட்ட வாக்காளர் ஒருவருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரொருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல் 30
23. தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கு இயலக்கூடியவாறு லீவு வழங்குதல் 31
24. பணியாட் குழுவினர் தேவைப்பாடு 31
25. போக்குவரத்துத் தேவைப்பாடுகள் 33
26. பாதுகாப்பு அலுவல்கள் 34
27. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம் 35
28. அரச வளங்கள் துஷ்பிரயோகத்தைத் தவிர்த்தல் 38
29. அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் மற்றும் தேர்தல் பிரச்சார அலுவல்கள் 39
30. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகள் 41

31. சமூக ஊடகங்கள் 42
32. பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் ஊடக அறிக்கைகள் 43
33. அரசியல் வானலை ஒலிபரப்புகளுக்காக தொலைக்காட்சி மற்றும் வானொலி வசதிகளை வழங்குதல் 43
34. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களால் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் 44
35. போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு தேர்தல் மற்றும் தொடர்புடைய பொருட்களை இலவச அஞ்சலில் அனுப்பி வைப்பதற்கான உரிமை 45
36. தேர்தல் கண்காணிப்பு அலுவல்கள் 46
37. வாக்கெடுப்பு 48
38. கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக பொலன்னறுவை மாவட்டத்தில் லங்காபுர பிரதேச செயலகப் பிரிவில் வாக்கெடுப்பை நடாத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 54
39. வாக்கெண்ணல் 57
40. இறுதி முடிவுகளைத் தயாரித்தல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் 63
41. தேர்தல் முடிவுகள் 67
42. தேர்தலுக்காகச் செய்யப்பட்ட செலவுகள் 68
43. அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற வருமானம் 71
44. பாராளுமன்றத் தேர்தல்கள் மற்றும் தொடர்புடைய நீதிமன்ற நடவடிக்கைகள் 72
45. கண்காணிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் 75
   i. பெயர்குறித்த நியமன நடைமுறைகள் 75
   ii. வைப்புப் பணம் வைப்புச் செய்தல் 77
   iii. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்குதல் 77
   iv. முன்கூட்டி வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல் (Advance Voting) 78
   v. தேர்தல் கடமைகளுக்காக பணியாட்குழுவினரை ஈடுபடுத்தல் மற்றும் அரச வளங்கள் 78
   vi. ஊடக வழிகாட்டு நெறிகள் 79
   vii. அரசியல் வானொலி பிரச்சாரம் மற்றும் தொலைக்காட்சிப் பிரச்சாரம் 80
   viii. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம் மற்றும் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்தல் 80
   ix. தகவல் தொழில்நுட்ப வழிமுறைகள் பயன்பாடு 82
   x. வேட்பாளர்களின் தேர்தல் செலவினக் கட்டுப்பாடு 83
46. முடிவுரை மற்றும் பாராட்டுக்கள் 83
47. அட்டவணைகள் 87
48. புள்ளிவிபரக் குறிப்புக்கள் 153

# முன்னுரை

1931 ஆம் ஆண்டில் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்த போதிலும் 1947 ஆம் ஆண்டுவரை தேர்தல்களை நடாத்துவதற்கு அதற்காகவே குறித்தொதுக்கப்பட்ட தனியான நிறுவனமொன்று காணப்படவில்லை. அக்காலப்பகுதியினுள் தேர்தல்களை நடாத்தும் பொறுப்பு, சில அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. தேர்தல்களை நடாத்துவதற்கு ஆணையாளரொருவர் மற்றும் உதவி ஆணையாளரொருவர் நியமனம் செய்யப்பட்டதோடு, மாவட்டத்தினுள் வாக்கெடுப்பை வழிநடாத்தும் மற்றும் பொறுப்பு அரசாங்கத்தின் முகவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் 1946 ஆம் ஆண்டு தொடக்கம் 1955 ஆம் ஆண்டு வரை தேர்தல்களை நடாத்துவதற்காக உள்ளூராட்சி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்ற அடிப்படையில் இரண்டு நிறுவனங்கள் தாபிக்கப்பட்டிருந்ததோடு, 1955 ஆம் ஆண்டில் இவ்விரு நிறுவனங்களும் ஒன்றிணைக்கப்பட்டு தேர்தல்கள் திணைக்களம் தாபிக்கப்பட்டது. அதற்கமைய 1955ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தேர்தல்கள் ஆணையாளரின் கீழ் தேர்தல்கள் திணைக்களத்தினால் தேர்தல்கள் நடாத்தப்பட்டன. 2001 ஆம் ஆண்டில் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 17 ஆம் திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழு அறிமுகம் செய்யப்பட்டிருந்த போதும் அதற்கான உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படாமையினால் தேர்தல் ஆணைக்குழுவின் தத்துவங்கள் சகிதம் தேர்தல்களை நடாத்தும் அலுவல்கள் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் 2015 ஆம் ஆண்டில் அரசியலமைப்பில் செய்யப்பட்ட 19 ஆம் திருத்தத்தின் பிரகாரம் 2015.11.13 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதோடு, தவிசாளர் உள்ளிட்ட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது. அன்றிலிருந்து இன்று வரை தேர்தல் ஆணைக்குழுவின் வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் தேர்தல்கள் நடாத்தப்பட்டன.

1947 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் தொடக்கம் 1977 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட தேர்தல் வரையான தேர்தல்கள் தனியாள் தேர்தல் தொகுதி முறையில் நடாத்தப்பட்டதோடு, 1989 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையான காலப்பகுதியினுள் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையின் கீழ் தேர்தல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் தயாரிக்கப்படுகின்ற அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், பாராளுமன்றத்தினால் அவை "பாராளுமன்ற கூட்ட அறிக்கை" அடிப்படையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. 1947 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் தொடக்கம் 1989 வரையான காலத்தினுள் (இரண்டு சந்தர்ப்பங்கள் தவிர) நடாத்தப்பட்ட தேர்தல்களுக்குரிய தேர்தல் சட்டங்கள், நிருவாகச் செயற்பாடுகள், அவை ஒழுங்கு செய்யப்பட்ட விதம் மற்றும் தேர்தல் முடிவுகள் உள்ளடக்கப்பட்ட தேர்தல் அறிக்கை அச்சிடப்பட்டுள்ளது. இருப்பினும் 1952 மற்றும் 1956 ஆகிய வருடங்களில் நடாத்தப்பட்ட தேர்தல்களின் அறிக்கைகள் பாராளுமன்ற கூட்ட அறிக்கை அடிப்படையில் அச்சிடப்படவில்லை. இருந்த போதிலும் 1952 ஆம் வருட பாராளுமன்றத் தேர்தல் அறிக்கை தேர்தல்கள் ஆணையாளரினால் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. 1956 ஆம் வருட தேர்தலுக்கான அறிக்கை தேர்தல்கள் திணைக்களத்தினால் இணைப்பிரதிகள் செய்யப்பட்டுள்ளதோடு அது அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்படவில்லை. மேலும் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்களுக்குரிய தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கைகளின் அச்சிடப்பட்ட பிரதிகள் வெளியிடப்படவில்லை என்பதோடு, அந்தந்த தேர்தல்களின் முடிவுகள் மற்றும் ஏனைய தகவல்கள் தேர்தல்கள் திணைக்களத்தின் வருடாந்த நிருவாக அறிக்கைகளினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2010 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான இடைக்கால அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோடு 2015 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தலொன்று நடாத்தப்பட்ட பின்னர் வெளியிடப்படுகின்ற அறிக்கை பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய திருத்தங்கள், அரசியல் கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல், வாக்கெடுப்புப்பிரிவுகள், வாக்கெடுப்பு நிலையங்கள், பெயர்குறித்த நியமனங்களைக் கையேற்றல், பிணைப் பணம் வைப்புச் செய்தல், அலுவலர்கள் நியமனம் மற்றும் பயிற்சியளித்தல், அஞ்சல் மூலம் வாக்களித்தல், போக்குவரத்து அலுவல்கள் உள்ளிட்ட பூர்வாங்க ஒழுங்கமைப்பு செயற்பாடுகள், வாக்கெடுப்பை நடாத்துதல், வாக்கெண்ணல், தேர்தல் முடிவுகளை வெளியிடல், பிரச்சார அலுவல்கள், பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம், முறைப்பாட்டு முகாமைத்துவம் மற்றும் முழுமையான முடிவுகள் போன்ற தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாகும். ஆதலால் தேர்தலுடன் தொடர்புடைய

அதற்கு இடைநேர்விளைவான அனைத்து விடயங்களையும் பொழிப்புப்படுத்தி நூலுருப்பெறச் செய்வதன் ஊடாக அது தொடர்பாக கல்வி கற்பவர்களுக்கு, ஆராய்ச்சியாளர்களுக்கு, தகவல் ஆய்வாளர்களுக்கு, எதிர்கால தேர்தல் வழிநடாத்தல் செயற்பாடுகளுக்கு, அரசியல் கட்சிகளின் எதிர்கால திட்டமிடல்களுக்கு பெரிதும் உதவியாக அமையும். அதற்கமைய பாராளுமன்றத் தேர்தல் அல்லது வேறு தேர்தலொன்று தொடர்பான உரிய அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றை வெளியிடுவதன் மூலம் அது தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற அனைத்து தரப்பினர்களதும் கற்றல் தேவைப்பாடுகள் பூரணத்துவம் அடையும் என எண்ணுகின்றேன்.

மேற்படி விடயங்களை ஆராய்ந்து பார்க்கும் போது தேர்தலொன்றின் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கியதான அறிக்கையொன்றைத் தயாரித்தல் கூட்டுச் செயற்பாடொன்று போன்றே, அது மிகவும் அர்ப்பணிப்புடனும் மற்றும் பொறுப்புடனும் ஆற்றப்பட வேண்டிய ஒரு பணிப்பொறுப்பாகும். கடந்த 2020.08.05 ஆம் திகதி இலங்கையின் 16 வது பாராளுமன்றத் தேர்தலை நடாத்தி ஒரு வருடம் நிறைவடைவதற்கு முன்னர் அதனோடு தொடர்புடைய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட முழுமையான அறிக்கையை அச்சிட்டு வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையை தேர்தல் ஆணைக்குழுவின் சாதகமான நடவடிக்கையொன்றாகக் குறிப்பிட முடியும்.

தேர்தல் ஆணைக்குழு 2021.05.04 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் இந்த அறிக்கையை தொகுக்கும் பொறுப்பை கையேற்றுக் கொண்டு, அப்பணியை சிறப்பாக நிறைவேற்றிய ஆணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளர் சன்ன பீ. த சில்வா அவர்களுக்கு ஆணைக்குழுவின் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அதற்குத் தேவையான தலைமைத்துவம் மற்றும் ஆலோசனைகளை வழங்கிய தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன், அதே போன்று இந்த அறிக்கையைத் தொகுப்பதற்குத் தேவையான தகவல்கள் / கோப்புகள் / ஆவணங்கள் மற்றும் புள்ளிவிபரக் குறிப்புக்களை உரியவாறு பேணிவருதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களின் போது அவற்றைப் பயன்படுத்துவதற்காக தயக்கமின்றி வழங்கிய தேசிய தேர்தல்கள் பிரிவின் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ரசிக்க பீரிஸ் அவர்களுக்கும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஸ்ரீன் யாப்பா பொரலெஸ்ஸ அவர்கள் உள்ளிட்ட தேசிய தேர்தல்கள் பிரிவின் அனைத்து அலுவலர்களுக்கும், ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் தேர்தலின் ஒவ்வொரு விடயங்களுக்கும் பொறுப்பாகச் செயலாற்றிய தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவி நிலை அலுவலர்கள் உள்ளிட்ட அவர்களின் உதவி பணியாட்குழுக்களின் அலுவலர்களுக்கும் மற்றும் இவ்வறிக்கையைத் தொகுப்பதற்குத் தேவையான தகவல்களை தலைமை அலுவலகத்திற்கு வழங்கிய அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் உள்ளிட்ட பணியாட்குழுவினர்களுக்கும், இவ்வறிக்கையின் கையெழுத்துப் பிரதியை மிகவும் கவனமாக வாசித்துப் பார்த்து திருத்தங்களை மேற்கொண்ட மற்றும் தொகுப்புப் பணிகளின் போது பெறுமதிமிக்க ஒத்துழைப்பொன்றை வழங்கிய தவிசாளரின் இணைப்புச் செயலாளர் நலீன் சேமகே அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போன்று ஆணைக்குழுவின் கோரிக்கையின் பிரகாரம் இதன் ஆங்கில மொழி மூலமான மொழிபெயர்பை செய்த அரச பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் எஸ். மெதவெவ அவர்களையும் மற்றும் தமிழ் மொழி மூல மொழிபெயர்பை மேற்கொண்ட தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் மொழிபெயர்ப்பாளர் ஏ.எம்.முஹாஜிரீன் அவர்களையும் மரியாதையுடன் நினைவு கூறுகின்றேன். மேலும் இந்நூலின் தட்டச்சுப் பொறித்தல் பணியில் ஈடுபட்ட சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை அலுவலர் செல்வி ஏ.பீ.எஸ்.எஸ். புஷ்பகுமாரி அவர்களுக்கும், கணினி பக்க வடிவமைப்புச் செய்த ஊடகப் பிரிவின் அமில கமகே அவர்களுக்கும் மற்றும் அச்சிடல் பணிகளை மேற்கொண்ட அரசாங்க அழுத்தகர் உள்ளிட்ட பணியாட்குழுவினருக்கும், தேவையான சந்தர்ப்பங்களில் ஒத்துழைப்பு வழங்கிய சட்டம், விசாரணை மற்றும் திட்டமிடல் பிரிவின் அனைத்து பணியாட்குழுவினருக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் ஆணைக்குழுவின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்டத்தரணி **நிமல் ஜீ. புஞ்சிஹேவா,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

2021 யூலை மாதம் 16 ஆம் திகதி.

## 01. அறிமுகம்

i. இலங்கையின் முதலாவது பிரதிநிதிகள் சபையைத் தெரிவு செய்து கொள்வதற்கான தேர்தலொன்று 1947 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டுள்ளது. அன்று தொடக்கம் 2020 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இந்த பாராளுமன்றத் தேர்தல் உள்ளடங்கலாக 16 பாராளுமன்றத் தேர்தல்கள் நடாத்தப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியினுள் நடாத்தப்பட்ட அனைத்து தேர்தல்களின் போது செயல்வலுவில் காணப்பட்ட வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை, பாராளுமன்றம் கலைக்கப்பட்ட திகதிகள், பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் கையேற்கப்பட்ட திகதிகள், வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட திகதிகள் மற்றும் புதிய பாராளுமன்றம் கூட்டப்பட்ட திகதி உள்ளிட்ட தகவல்கள் **01 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

ii. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 62(2) உப உறுப்புரையின் பிரகாரம் ஒவ்வொரு பாராளுமன்றமும் முதலாவது கூட்ட தினத்திலிருந்து ஐந்து வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு தொடர்ந்திருத்தல் வேண்டும். இருப்பினும் குறித்த காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் சனாதிபதிக்கு பாராளுமன்றத்தைப் கலைக்க முடியுமென்பதோடு, ஐந்து வருடங்கள் காலப்பகுதி கழிந்த பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாக கருதப்படும்.அதற்கமைய 2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 7 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் 2015 செப்தெம்பர் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அப்பாராளுமன்றம் 2020.08.31 ஆம் திகதி கலைக்கப்படவிருந்த போதிலும் அரசியலமைப்பின் 70 ஆம் உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து நான்கு வருடங்கள் மற்றும் ஆறு மாதங்கள் காலப்பகுதி நிறைவடையும் வரை சனாதிபதி அவர்கள் பாராளுமன்றத்தைக் கலைத்தல் கூடாதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலப்பகுதி 2020.08.28 ஆம் திகதி நிறைவடையவிருந்தது. ஆதலால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் (33) (2) (இ) உப உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அரசியலமைப்பின் 70 உறுப்புரையின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2165/8 ஆம் இலக்க மற்றும் 2020 மார்ச் மாதம் 02 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2020 மார்ச் மாதம் 02 ஆம் திகதி தொடக்கம் செயல் வலுப்பெறும் வகையில் இலங்கையின் 7 வது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. சனாதிபதி அவர்களின் மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 8 வது பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பை 2020 ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடாத்துவதற்கும் மற்றும் 2020 மார்ச் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 19 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பெயர் குறித்த நியமனப் பத்திர கையளிப்புக் காலப்பகுதியாக விதிக்கப்பட்டது. அந்த வர்த்தமானி அறிவித்தல் **02 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

iii. இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது நாடு முகம் கொடுக்காத கொவிட் 19 தொற்று நோய் பரவல் காரணமாக நாட்டின் இயல்பு வாழ்க்கை மாத்திரமின்றி நிருவாக மற்றும் பொருளாதார செயற்பாடுகளும் பின்னடைவுக் குட்பட்டிருந்தது. நாட்டினுள் காணப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பற்ற தன்மை காரணமாக தேர்தல் ஆணைக்குழுவினால் இத் தேர்தல் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 24 (3)ஆம் பிரிவின் தத்துவங்களின் பிரகாரம் இரண்டு சந்தர்ப்பங்களில், அதாவது 2172/3 ஆம் இலக்க மற்றும் 2020.04.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2020 யூன் 20 ஆம் திகதிக்கும், 2179/17 ஆம் இலக்க மற்றும் 2020.06.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2020 ஆகஸ்ட் மாதம் 05 திகதிக்கும் பிற்போடப்பட்டன. மேற்படி வர்த்தமானி அறிவித்தல்கள் **03 மற்றும் 04 ஆம் இலக்க அட்டவணைகளில்** காட்டப்பட்டுள்ளது.

iv. 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டமை, அதன் பின்னர் ஐந்து மாதங்கள் போன்ற குறுகிய காலமொன்றினுள் பாராளுமன்றத் தேர்தலுக்குத் தயாராக வேண்டியேற்பட்டமை, பூர்வாங்கப் பணிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் நடைமுறைப் படுத்துவதில் சில வசதிகள் கிடைக்கின்றதென வெளிப்பார்வைக்கு தெரிந்த போதிலும் சனாதிபதித் தேர்தல் போலன்றி பாராளுமன்றத் தேர்தலை விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் தேர்தல் மாவட்ட மட்டத்தில் நடாத்த வேண்டியுள்ளமை, அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடல் மற்றும் வேட்பாளர் களிடையே ஏற்படுகின்ற போட்டித்தன்மை அடிப்படையில் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்படு கின்ற பொறுப்புக்கள் மற்றும் பணிகள் சிக்கல் கொண்டதாக அமைவதைத் தவிர்க்க முடியாது. அதற்கு மேலதிகமாக வாக்கெடுப்பு தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து கொவிட் தொற்றுநோய் நாட்டினுள் பரவிச் செல்ல ஆரம்பித்தமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி பூர்வாங்க அலுவல்களை ஒழுங்கமைக்க நேரிட்டமையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு பாரிய சவாலாகக் காணப்பட்டது. நிலவிய இந்த நிலை மையை கருத்திற்கொண்டு தேர்தல் ஆணைக் குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் தலைமை அலுவலகம் போன்றே மாவட்ட அலுவலகங்களிலும், தேர்தலுக்கான பூர்வாங்க அலுவல்களைத் திட்டமிடல்

மற்றும் ஒழுங்கமைத்தல் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் 2020.03.05 ஆம் திகதி தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு ஏற்பட்டுள்ள நிலமையின் கீழ் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது தொடர்பாக கலந்துரையாடி தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## 02. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டங்கள்

i. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்துவதற் குரிய சட்டரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2020 பாராளுமன்றத் தேர்தல்கள் நடாத்தப்பட்ட சந்தர்ப்பமாகும் போது 1978 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 19 சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதோடு, 07 திருத்தச் சட்டங்களினால் குறித்த தேர்தல்கள் சட்டம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 19 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் 2015.11.13 ஆம் திகதி தாபிக்கப்பட்ட தேர்தல் ஆணைக் குழுவின் நேரடி மேற்பார்வையின் கீழ் நடாத்தப்பட்ட முதலாவது பாராளுமன்றத் தேர்தல் இத்தேர்தலாகும்.

## 03. தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்தல்.

i. இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்காக பெயர் குறித்த நியமனப்பத்திரங்களைக் கையேற்றல் 2020 மார்ச் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி நண்பகல் வரை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 6 (1) பிரிவிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் சார்பாகவும் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்பதற்காக அந்தந்த தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களாக யாழ்ப்பாணம், வன்னி, திகாமடுல்லை தவிர்ந்த அந்தந்த தேர்தல் மாவட்டங்களான நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபரை நியமனம் செய்வதற்கும் மற்றும் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்கும் இடங்கள்,திகதி மற்றும் நேரங்களைக் குறிப்பிட்டு 2165/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் 2020.03.03 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய 03 நிருவாக மாவட்டங்களை உள்ளடக்கிய (வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார்) வன்னி தேர்தல் மாவட்டத்திற்காக வவுனியா நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் அவர்களும், இரண்டு நிருவாக மாவட்டங்களைக் கொண்ட(யாழ்ப்பாணம், கிளிநொச்சி) யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்காக யாழ்ப்பாண நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் அவர்களும், திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராக அம்பாறை நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் அவர்களும் அலுவல்களை மேற்கொண்டனர். உரிய தகவல்கள உள்ளடங்கிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் **05 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

ii. அதே போன்று 1981 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 6 (1) பிரிவின் பிரகாரம் 2165/20 ஆம் இலக்க மற்றும் 2020.03.03 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் அனைத்து மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் நிருவாக அலுவலர்கள் தெரிவத்தாட்சி அலுவலர் களாக நியமனம் செய்யப்பட்டனர். இந்தத் தகவல்கள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல் **06 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

## 04. பெயர் குறித்த நியமனம் மற்றும் வைப்புப் பணம்.

i. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 15(1) ஆம் பிரிவுக்கு அமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் சார்பாகவும் கட்சியொன்று அல்லது சுயேச்சைக் குழுவொன்று சார்பாக ஒவ்வொரு பெயர் குறித்த நியமனப் பத்திரத்திலும் உள்ளடக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் அச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் சுயேச்சைக் குழுக்களினால் வைப்புச் செய்யப்பட வேண்டிய வைப்புப் பணத் தொகைகள் குறிப்பிடப்பட்ட 2165/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2020.03.03 ஆம் திகதி தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அவர்களால் வெளியிடப்பட்டது. அது **07 ஆம் இலக்க அட்டவணையில்** உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரக-ாரம் 2020.03.12 ஆம் திகதி தொடக்கம் 2020.03.19 ஆம் திகதி நண்பகல் 12.00 வரை சுயேச்சைக் குழுக்களினால் பெயர் குறித்த நியமனம் செய்யப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் இரண்டாயிரம் ரூபா (2000/=) வீதம் வைப்புப் பணம் கையேற்றல், மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள்/

மாவட்டச் செயலகங்களில் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் காணப்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விடுமுறைகள் சட்டத்தின் 10 (1) (அ) பிரிவின் கீழ் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் விடயப் பொறுப்பு கௌரவ அமைச்சர் அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2020.03.16 ஆம் திகதி அரசாங்க பொது விடுமுறை தினமாக 2166/51 ஆம் இலக்க 2020.03.15 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரம் மூலம் பிரகடனம் செய்த காரணத்தால் அன்றைய தினம் தேர்தலுக்கான வைப்புப் பணம் கையேற்றல் அல்லது பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்றல் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பாக ஊடக அறிவித்தலொன்றின் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு வினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. குறித்த ஊடக அறிவித்தல் **08 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

iii. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவிற்கு அமைய சுயேச்சைக் குழுக்களால் வைப்புப் பணம் வைப்புச் செய்யப்படல் வேண்டும் என்பதோடு, அதன் தலைவர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் கையளிக்கப்பட்ட நபரொருவருக்கு வைப்புப் பணத்தை வைப்புச் செய்வதற்கான சந்தர்ப்பம் செய்து கொடுக்கப்பட்டது. போட்டியிடுகின்ற தேர்தல் மாவட்டத்திற்காக உரிய வேட்பாளர் எண்ணிக்கை சார்பாக செலுத்த வேண்டிய மொத்தத் தொகையும் ஒரே தடவையில் காசாக வைப்புச் செய்யப்படுதல் வேண்டும். இந்த வைப்புப் பணம் தவணை அடிப்படையில் அல்லது காசோலை மூலம் அல்லது வேறு மாற்று வைப்பிடல் மூலம் கையேற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதே போன்று சுயேச்சைக் குழுவொன்று சார்பாக வைப்புப் பணத் தொகை கையேற்க்கப்பட்டவுடன் அதற்காகப் பற்றுச் சீட்டொன்று வழங்கப்பட வேண்டுமென்பதோடு, அதில் வைப்புப் பணம் வைப்புச் செய்த குழுத் தலைவரின் / அவர் சார்பாக அதிகாரம் கையளிக்கப்பட்ட நபரின் பெயர், அந்த வைப்புப் பணம் யார் சார்பாக வைப்புச் செய்யப்பட்டது என்பது, வேட்பாளர்களின் எண்ணிக்கை, வைப்புச் செய்யப்பட்ட தொகை மற்றும் திகதி மற்றும் நேரம் என்பன குறிப்பிடப் படுதல் வேண்டும். பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 17 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கையேற்கப்படுகின்ற அனைத்து வைப்புப் பணமும் வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்படுதல் வேண்டு மெனவும் ஏதேனும் சுயேச்சைக் குழுவொன்றின் பெயர் குறித்த நியமனப் பத்திரம் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 19 ஆம் பிரிவிற்கமைய நிராகரிக்கப்படுகின்ற போது வைப்புச் செய்யப்பட்ட வைப்புப் பணத்தை குறித்த நபருக்கு மீளச் செலுத்துதுல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று ஏதேனுமொரு சுயேச்சைக் குழு வொன்று பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை இத்தேர்தலின் போது குறித்த தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் எட்டில் ஒன்றிற்கு மேற்படாத விடத்து மாத்திரம் வைப்புப் பணத்தை அரசுடமை யாக்கி ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட வெளியிடப்பட்டதன் பின்னர் விரைவாக அந்த வைப்புப் பணத்தை வைப்பிலிட்ட நபர்களுக்கு மீள வழங்குதல் வேண்டும்.

iv. தேர்தலின் ஒழுங்கமைப்பின் போது பிரதான பணியான பெயர் குறித்த நியமனங்களை கையேற்கும் செயன்முறை தொடர்பான PE/2020/2 ஆம் இலக்க மற்றும் 2020.03.04 ஆம் திகதியிடப்பட்ட அறிவுறுத் தல்கள் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணை யாளர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த அறிவுறுத்தல் கடிதத்தின் மூலம் பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் நடவடிக்கைகள் மற்றும் அதன் பின்னரான நடவடிக்கைகள், வழங்க வேண்டிய ஆவணங்கள். அறிக்கைகள் பற்றி அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அவ்வாறே பெயர் குறித்த நியமன நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அதன் முடிவுகள் அறிவிக்கப்படும் போது வருகை தரவுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் பிரதிநிதிகளை அறிவுறுத்துவதற்காகவும் அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டதோடு, அவற்றின் பிரதிகள் உரிய அனைத்து தரப்பினருக்கும் வழங்கப்பட்டன. பெயர் குறித்த நியமன பத்திர படிவங்கள் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போதும் மற்றும் வைப்புப் பணம் வைப்புச் செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்திலும் வழங்குமாறும் மேலும் குறிப்பிடப் பட்டிருந்தது.

v. 2020.03.11 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட எதிர்ப்பார்க்கப் படுவதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவித்திருந்த அனைத்து அரசியற் கட்சிகளின் செயலாளர்கள் / நிரந்தர முகவர்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு பெயர் குறித்த நியமன நடைமுறைகள் பற்றிமுழுமையாக அறிவுறுத்தப்பட்டனர்.

vi. பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் நிலையங்களாக தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகத்தைப் பயன்படுத்த வேண்டுமெனவும் அந்த இடங்கள் நிர்ணயிக்கப்பட்டு பிரகடனப் படுத்தப்பட்டதன் பின்னர் அதனை மாற்றலாகாது எனவும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதேபோன்று பெயர் குறித்த நியமனங்களை கையேற்கும் இடத்திற்கு இலகுவாக வருகைதரக் கூடியவாறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் மற்றும் அந்த இடங்களை இலகுவாக இனங்காண்பதற்காக தெளிவாகத் தெரியும் வண்ணம் பெயர்ப் பலகைகளைப் பொருத்துவதற்கும் குறித்த அனைத்து பெயர்ப் பலகைகள் மற்றும் அறிவித் தல்களை மும்மொழிகளிலும் தயாரித்து காட்சிப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை

மேற்கொள்ளுமாறு அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப் பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக கொவிட் கட்டுப்பாட்டு வழிகாட்டல்களுக்கு ஏற்ப பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் கையேற்கப்படுகின்ற இடங்களுக்கு சட்டவிரோதமான மற்றும் தேவையற்ற நபர்கள் உட்பிரவேசிப்பதைத் தடுப்பதற்கு ஏதேனும் அனுமதிப் பத்திர நடைமுறையொன்றை பின்பற்றுதல் பொருத்தமானதெனத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

vii. கடந்த தேர்தல்களின் போது தேர்தல் ஆணைக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப தெரிவத்தாட்சி அலுவலர்களால் செயற்பட்டவாறு கையளிக்கப்படு கின்ற பெயர் குறித்த நியமனங்கள் நிராகரிக்கப் படுவது குறைவடையும் முறையில் உரியவாறு சமர்ப்பித்தல் மற்றும் கையளித்தல் தொடர்பாக அனைத்து அரசியற் கட்சிகள் மற்றும் குழு முகவர் களுக்கு அறிவுறுத்தல் பத்திரமொன்றின் மூலம் அறிவுறுத்தப்பட்டனர். மேலும், பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்க வருகைதருகின்ற முகவர்களிற்கும் மேலும் அப்பணிகள் தொடர்பாக புரிந்துணர்வை வழங்குவது போன்றே பிரதானமான கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பற்றி தெளிவு படுத்துவதற்காக பெயர் குறித்த நியமன மண்டபத்திற்கு வெளியில் உதவி நிலையமொன்று (Help Desk) தாபிக்கப்பட்டு குறித்த விடயங்கள் தொடர்பான அறிவு கொண்ட உதவித் தெரிவத் தாட்சி அலுவலர் ஒருவரை அந்த இடத்தின் கடமைக்காக இணைப்புச் செய்வதற்கு தெரிவத் தாட்சி அலுவலர்களால் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருந்தன. அதே போன்று இவ்வலுவல்கள் தொடர்பான முழுமையான விபரங்கள் அடங்கிய செயன்முறை கோப்பொன்றை பேணிச் செல்வதற்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

viii. தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக் களால் 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவிற்கமைய ஏதேனும் தேர்தல் மாவட்டமொன்றிற்காகத் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை யுடன் மூன்று அதிகமான வேட்பாளர்களின் எண்ணிக்கைக்குச் சமமான வேட்பாளர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரமொன்றை சட்டத்தின் முதலாம் அட்டவணையின் "அ" படிவத்திற்கு இசைவான படிவமொன்றின் மூலம் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காகவும் அவற்றின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு கையளிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைக் குழுவினால் பெயர் குறித்த நியமனச் செய்யப்படு கின்ற ஒவ்வொரு வேட்பாளரினதும் எழுத்து மூலமான விருப்பம் பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே, ஒவ்வொரு வேட்பாளரும் அரசிய லமைப்பில் ஏழாவது அட்டவணையில் காட்டப் பட்டுள்ள படிவத்தினூடாக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சத்தியப் பிரமாணம்/ உறுதியுரை வழங்கி அதில் கையொப்பமிட்டு பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் குறித்துக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், சுயேச்சைக் குழுக்கள் இதற்கு மேலதிகமாக வைப்புப்பணம் வைப்பிலிடப்பட்ட பற்றுச்சீட்டையும் பெயர் குறித்த நியமனப் பத்திரத்துடன் இணைக்கப் படல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பெயர் குறித்த நியமனப் பத்திரம் அக்கட்சிச் செயலாள ரினாலும் சுயேச்சைக் குழுவொன்றினால் சமர்ப்பிக்கப் படுகின்ற பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் அதில் முதலாவதாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டு மென்பதோடு ஒவ்வொரு பெயர் குறித்த நியமனப் பத்திரமும் சமாதான நீதவானொருவர் அல்லது பிரசித்த நொத்தாரிஸ் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப் பட்டிருத்தல் அவசியமாகும். ஒவ்வொரு பெயர் குறித்த நியமனம் செய்யப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர்களினதும் பெயர்கள் மோசடி அல்லது தவறான முறையில் குறிப்பிடப்படுவதைத் தடுப்பதற்காக அனைத்து வேட்பாளர்களினதும் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி யொன்றை பெயர் குறித்த நியமனப் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலர்கள் உள்ளடங்கலாக அனைத்துத் தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டது. அவ்வாறு பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற அனைத்தும் அரசியல் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களுக்குச் அப்பணிகளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மிகவும் சரியான விதத்தில் மேற்கொள்வதை எளிதாக்குவதற்காக PE/2020/INFO ஆம் இலக்க படிவத்தை முன்கூட்டியே வழங்குவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்ததோடு பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்கும் இடங்களிலும் அவற்றைக் காட்சிப் படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன அப்படிவம் **09 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

ix. மேலும், 1985 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பிரிவுகளினால் திருத்தம் செய்யப்பட்ட 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பெயர்குறித்த நியமனம் செய்யப் படுகின்ற தினத்தில் அல்லது அத்தினத்திலிருந்து மூன்று மாதத்தினுள் கையளிக்க வேண்டி யிருப்பினும், பெயர் குறித்த நியமனம் செய்யப்படு கின்ற அனைத்து வேட்பாளர்களினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைகளை பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை கையளிக்

கின்ற தருணத்திலேயே வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து அரசியற் கட்சிகளின் செயலாளர்களுக்கு எழுத்து மூலமாகவும் அதே போன்று அவர்களுடன் இடம்பெற்ற கலந்துரை யாடல்களின் போதும் அறிவிக்கப்பட்டது. சிறந்த அரசியல் கலாசாரமொன்றை தாபிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழு, பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றினால் செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கமைய தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களிடமிருந்து அதற்குச் சிறந்த பதில் குறிகள் கிடைத்திருந்ததென்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

x. இத்தேர்தலில் போட்டியிடுகின்ற பெண்கள் பிரதி நிதித்துவம் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக தனியான படிவமொன்றைத் தயாரித்து அரசியல் கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்களுக்கு வழங்கி அப் படிவத்தையும் பெயர் குறித்த நியமனப் பத்திரத் துடன் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

xi. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 15 (5) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அங்கீகரிக்கப் பட்ட அரசியற் கட்சியுடன் தொடர்புடையதெனில் அக்கட்சியின் செயலாளருக்கு அல்லது உரிய பெயர் குறித்த நியமனத்தில் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளருக்கு (அதிகார மளிக்கப்பட்ட முகவருக்கு) தெரிவத்தாட்சி அலுவலருக்கு பெயர் குறித்த நியமனக் கால எல்லைக்குள் வழமையான அலுவலக நேரத்தினுள் மேற்கூறப்பட்ட ஆட்களுக்கு பெயர் குறித்த நியமனங்களைக் கையளிப்பதற்கு முடியு மென்பதோடு மேற்குறித்த நபர்களுக்கு ஏதேனும் காரணங்களினால் பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்க முடியாமல் போகும் சந்தர்ப்பங்களில், உரிய பெயர் குறித்த நியமனங்களில் இரண்டாவதாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் களுக்கு பெயர் குறித்த நியமனங்களை கையளிக்க முடியும். அவ்வாறே சுயேச்சைக் குழுவினால் பெயர் குறித்த நியமனங்கள் கையளித்தல் தொடர்புடைய தெனில் குழுவின் தலைவர் / தொடர்புடைய பெயர் குறித்த நியமனத்தில் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் மூலம் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கையளிக்கப்படல் வேண்டு மென்பதோடு அந்த நபருக்கு ஏதேனும் ஒரு காரணத்தால் பெயர் குறித்த நியமனங்களைக் கையளிக்க முடியாத சந்தர்ப்பமொன்றில் அப்பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் இரண்டாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் தெரிவத் தாட்சி அலுவலர்களுக்கு பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

xii. பெயர் குறித்த நியமனப்பத்திரத்தை கையளிக்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட முகவர் மற்றும் சுயேச்சைக் குழுவொன்றின் தலைவருக்கு அவர்கள் கையளித்த பெயர் குறித்த நியமனங்களில் ஏதாவது விடுவிப்புக்கள் அல்லது எழுத்துத் தவறுகள் காணப்படுகின்ற போது, அவர்களால் அத்தகைய விடுவிப்புக்கள் அல்லது எழுத்துப்பிழைகளைச் சீர்செய்தல் தொடர்பில் எழுத்து மூலம் கோரிக்கை யொன்றை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு முன்வைப்பதற்கு பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 15 (8) (அ) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான சரிசெய்வதற்கான எழுத்து மூலமான கோரிக்கைக்கு இடமளிக்கப்படுவது, விடுவிப்பு அல்லது தவறு கவனக்குறைவினால் ஏற்பட்டதெனத் தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடையும் பட்சத்திலாகும். எனினும், சட்டத்தின் 8 (இ) ஆம் பிரிவிற்கமைய வேட்பாளரின் பெயர் விடுபடல், வேட்பாளர் ஒருவர் தமது சம்மதத்தை பெயர் குறித்த நியமனத்தில் புறக்கையெழுத்திட்டிராமை, பெயர் குறித்த நியமனப் பத்திரமொன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் செயலாளர் அல்லது குழுத்தலைவர் கையொப்ப மிடவில்லையெனில் அக் கையொப்பம் சமாதான நீதவானொருவர் அல்லது பிரசித்த நொத்தாரிஸ் ஒருவர் அத்தாட்சிப்படுத்தி கையொப்பமிடத்தவறியமை போன்ற விடயங்கள் மேலே 15 (8) (அ) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக் கருத்திற் கொள்ளப்படக் கூடாதெனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதே போன்று அவ்வாறான விடுவிப்புக்கள் அல்லது எழுத்துத் தவறுகளைச் சரிசெய்வதற்கு எழுத்து மூலமான கோரிக்கைக்கு தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைந்ததன் பின்னர் அதற்கு அங்கீகாரம் வழங்கப்படுமாயின் தெரிவத்தாட்சி அலுவலர்களின் முன்னிலையில் அரசியல் கட்சியின் செயலாளர்/ அங்கீகரிக்கப்பட்ட முகவர் மற்றும் சுயேச்சைக் குழு ஒன்றின் தலைவர் என்போரால் மாத்திரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமெனத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

xiii. தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றவுடன் அதன் நிழற் பிரதிகளை எடுத்து பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக அறிவித்தல் பலகையில் காட்சிப் படுத்தல் வேண்டும். அவ்வாறு காட்சிப்படுத்துவதன் மூலம் பெயர் குறித்த நியமனங்களுக்காக ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குச் சாத்தியம் காணப்படுகின்றது. சட்டத்தின் 19 (1அ) ஆம் உப பிரிவிற்கமைய பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் இறுதித் தினமான 2020.03.19 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணி வரையான காலத்தினுள் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் செய்து கொடுக்கப் பட்டிருந்தது.

xiv. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 19 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பெயர் குறித்த நியமனக் காலப்பகுதி முடிவடைந்தவுடன் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள பெயர்

குறித்த நியமனங்கள் பரிசீலனை செய்யப்படல் வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைவாக,

- சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (4) மற்றும் (5) ஆம் உப பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் செயலாளர்/ அங்கீகரிக்கப்பட்ட முகவர் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் தலைவர் அல்லது பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் இரண்டாவதாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் பெயர்குறித்த நியமனக் காலப்பகுதியினுள் வழமையான அலுவலக நேரத்தினுள் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு கையளிக்கப்படாத பெயர் குறித்த நியமனப் பத்திரமொன்று: அல்லது,

- சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காக பெயர்குறித்த நியமனம் செய்யப்படவேண்டியுள்ள மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை உள்ளடக்கப்படாத பெயர் குறித்த நியமனப் பத்திரம் : அல்லது,

- சட்டத்தின் 16 ஆம் பிரிவிற்கமைய வைப்புச் செய்ய வேண்டிய சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு வைப்புப் பணம் வைப்புச் செய்யப்படாத பெயர் குறித்த நியமனப் பத்திரம் : அல்லது,

- பெயர் குறித்த நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர் களில் ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானவர்கள் விருப்பம் அல்லது அரசியலமைப்பில் ஏழாம் அட்டவணையில் காட்டப் பட்டுள்ள சத்தியம் அல்லது உறுதியுரை பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் குறிப்பிடப்படாதுள்ள சந்தர்ப்பமொன்றில் : அல்லது,

- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று தொடர் புடையதெனில் கட்சியின் செயலாளரின் அல்லது சுயேட்சைக் குழுவுடன் தொடர்புடையதெனில் குழுவின் தலைவரின் கையொப்பம் பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் இடப்படாதுள்ள சந்தர்ப்ப மொன்றில் : அல்லது, சட்டத்தின் 15 (3) ஆம் உப பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு அக்கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கையெழுத்திடப்படாத பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் : ,
நிராகரிக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

xv. மேலே 19 (1) ஆம் உப பிரிவின் கீழான ஏதேனு மொரு பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கும் போது தெரிவத்தாட்சி அலுவலர் அதனை நிராகரித்தல் தொடர்பாக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு குறித்த பெயர் குறித் நியமனங்களைச் சமர்ப்பித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர் அல்லது குழுத் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் பெயர் குறித்த நியமனப் பத்திரம் ஒன்றை நிராகரித்தல் தொடர்பில் தெரிவத் தாட்சி அலுவலரின் தீர்மானம் இறுதியானதாக இருக்க வேண்டுமென பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 19 (2) ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளது.

xvi. இப்பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்காகவும் குறித்த பெயர் குறித்த நியமனக் காலப்பகுதியினுள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகளிடமிருந்து 339 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும், சுயேச்சைக் குழுக்களினால் 358 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் என்ற அடிப்படையில் மொத்தமாக 697 பெயர் குறித்த நியமனங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததோடு தெரிவத்தாட்சி அலுவலர்களின் பரிசீலனைக்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 35 பெயர் குறித்த நியமனங்களும், சுயேட்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 45 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டன. அதற்கமைய இத்தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட மொத்த பெயர் குறித்த நியமனப்பத்திரங்களின் எண்ணிக்கை 617 ஆகும். இந்த எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 304 பெயர் குறித்த நியமனக்களும், சுயேச்சைக் குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனங்கள் 313 உம் அடங்கும். இப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையான பெயர் குறித்த நியமனங்கள் திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் சார்பாக சமர்ப்பிக் கப்பட்டிருந்தது. அந்தப் பெயர் குறித்த நியமனங்களின் எண்ணிக்கை 20 ஆகும். அவ்வாறே சுயேச்சைக் குழுக்கள் சார்பாகவும் அத் தேர்தல் மாவட்டத்திலிருந்தே அதிக எண்ணிக்கையான பெயர் குறித்த நியமனங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன. அந்த எண்ணிக்கை 38 ஆகும். 22 தேர்தல் மாவட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட 304 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களின் கீழ் 3652 வேட்பாளர்களும், 313 சுயேச்சைக் குழுக்களின் கீழ் 3800 வேட்பாளர்களும் இத்தேர்தலின் போது போட்டிக் களத்தில் குதித்துள்ளனர். கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இவ் வேட்பாளர் களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானதாகக் காணப்பட்டதோடு, இவ்வாறான நிலைமை தேர்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதில் அசௌகரியமாக இருந்ததோடு தேர்தல் செலவினங்கள் அதிகரித்த மைக்கும் காரணமாக அமைந்தமையும் குறிப்பிடத் தக்கது. கையளிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் தொடர்பான அனைத்து விபரங்களும் **01 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

xvii. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 99 (அ) உறுப்புரையின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பட்டியல் எனப்படுகின்ற அதாவது, பிரயோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பட்டியலின் கீழ் 29 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இவ்வாறு தெரிவு செய்வதற்குத் தகைமையுடைய நபர்களின் பெயர்ப் பட்டியல் பெயர் குறித்த நியமனக் காலப்பகுதியினுள்

அறிவிக்குமாறு அதனுடன் தொடர்புடைய படிவத்துடன் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியற் கட்சிகளின் செயலாளர்களுக்கும் 2020.03.10 ஆம் திகதியிடப்பட்டு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட 22 அரசியல் கட்சிகளிலிருந்து 418 பேரின் பெயர்கள் உள்ளடங்கும் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டிருந்த பெயர்களை சமர்ப்பித்த அரசியல் கட்சி தொடர்பான தகவல்கள் 2167/13 ஆம் இலக்க 2020.03.20 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அரசியலமைப்பில் குறித்துரைக் கப்பட்டதன் பிரகாரம், உரிய பெயர்களின் பட்டியல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அறிவித்தல்களாக வெளியிடப்பட்டன. அதே போன்று எந்தவொரு சுயேச்சைக் குழுவினாலும் 99 அ உறுப்புரையின் கீழ் பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்கவில்லை.

xviii. பெயர் குறித்த நியமனங்களை கையேற்றல் காலப் பகுதி நிறைவில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கு அவற்றின் அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களுக்கு சின்னம் மற்றும் ஒவ்வொரு குழுக்களை இனங்காண் பதற்கான இலக்கங்களும் தெரிவத்தாட்சி அலுவலர் களினால் குறித்தொதுக்கி வழங்கப்பட்டது. அதற்கமைய 2020.04.25 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலை நடாத்தும் தினமாக தீர்மானிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) (ஆ) மற்றும் (இ) பிரிவின் பிரகாரம் ஏதேனும் தேர்தல் மாவட்டமொன்றிற்கு உறுப்பினர் ஒருவராக தெரிவு செய்யப்படுவதற்காக பெயர் குறித்த நியமனங்களைச் செய்த ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் மற்றும் சுயேச்சைக் குழுவின் சிங்கள அகரவரிசை ஒழுங்கில் தயாரிக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள், ஒவ்வொரு வேட்பாளரையும் இனங்காண் பதற்காக வழங்கப்பட்ட தொடரிலக்கம் அக்கட்சிக்கு குறித்தொதுக்குவதற்கு அல்லது குறித்தொதுக்கிக் கொடுக்கப்பட்ட சின்னங்கள், சுயேச்சைக் குழுக் களுக்கான இலக்கங்கள் மற்றும் தேர்தல் மாவட்டங்களின் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்களிப்பு நிலையங்களின் அமைவிடம் மற்றும் பெண் வேட்பாளர்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட விசேட வாக்களிப்பு நிலையங்கள் காணப்படின் அவற்றையும் குறிப்பிட்டு 2179/7 ஆம் இலக்க மற்றும் 2020.06.09 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப் பட்டது. பின்னர் அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள் சில வாக்களிப்பு நிலையங்கள் சில நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் சமயோ சிதமான காரணங்களின் அடிப்படையில் மாற்றம் செய்வதற்கு நேரிட்டதோடு 2186/8 ஆம் இலக்க மற்றும் 2020.07.27 ஆம் திகதிய திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானியில் அது தொடர்பாக பகிரங்கப்படுத்தப்பட்டது.

xix. கொவிட் தொற்று நோய் நிலைமையை கட்டுப் படுத்துவதற்காக பின்பற்றப்படவேண்டிய சுகாதார வழிகாட்டல்களின் கீழ் பெயர்குறித்த நியமனங் களைக் கையேற்றல் செயற்பாடுகள் போன்றே பெயர் குறித்த நியமனங்கள் கையேற்கப்படுகின்ற தினங்களில் அந்தந்த தெரிவத்தாட்சி அலுவல கங்கள் போன்றே பிரதேச பாதுகாப்பு நடவடிக்கைகளை பேணிச்செல்லல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (தேர்தல்கள்) அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்ததோடு, 2020.04.21ஆம் திகதி பொலிஸ் பிரதானிகள் மற்றும் இராணுவ பிரதானிகள் தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடலொன்றும் நடாத்தப்பட்டது. அதே போன்று அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களும் பிராந்திய பொலிஸ் பிரதானிகள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை அழைத்து கலந்துரையாடி பெயர் குறித்த நியமனங்களைக் கையளித்தல் தினங்களின் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மிகவும் சிறப்பாக ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.

## 05. வாக்கெடுப்பு பற்றிய அறிவித்தல்

i. பெயர் குறித்த நியமனங்கள் கையேற்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு தெரிவத்தாட்சி அலுவலர்களினதும் அறிக்கை கிடைத்த பின்னர் தேர்தல் ஆணைக்குழுவினால் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) (அ) விற்கமைய 22 தேர்தல் மாவட்டங்களில் பாராளு மன்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கான போட்டி யொன்று நடாத்தப்படுமெனவும் அப் பிரிவின் (இ) இன் பிரகாரம் தேர்தலொன்று நடாத்தப்படும் திகதியும் நேரமும் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 07.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணி வரை எனவும் மற்றும் அச்சட்டத்தில் அப்பிரிவின் (ஆ) மற்றும் (ஈ) இன் கீழ் குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள் வேறு வர்த்தமானியில் வெளியிடப்படுமெனவும் அறிவித்து 2167/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 2020.03.20 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

ii. அண்மைக்கால வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப் பத்திலும் எமது நாடு முகம்கொடுக்காத விதத்திலான தொற்றுநோய் நிலைமையான கொவிட் 19 வைரஸ் தொற்றுநோய்யைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை யொன்றாக 2020.03.20 ஆம் திகதியில் இருந்து நாடு முழுவதிலும் செயல்வலுப்பெறும் வகையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது. இதேபோல் நாட்டினுள் தனிமைப் படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் செயல் வலுவாக்கம் செய்வதற்காக சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலைமையின் கீழ் தேர்தல்கள் நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யும் போதும் தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சில

இடையூறுகள் ஏற்பட்டன. விசேடமாக தனிமைப் படுத்தல் ஊரடங்குச்சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டிருந்தமை, அரசாங்கம் வெளியிட்டிருந்த சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப வழமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தமை, தேர்தல் பூர்வாங்க ஆரம்ப நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்குத் தேவையான உத்தியோகத்தர்களை அலுவலகங் களுக்கு வரவழைத்துக் கொள்ள முடியாமை, அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற முடியாத எதிர்பாராத நிலைமையொன்று தோன்றியது. அவ்வாறே அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர் களுக்கு பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமையொன்றும் ஏற்பட்டது. நாட்டினுள் திடீரென ஏற்பட்ட இப்பிரச்சினைக்கு மத்தியில் தேர்தலொன்றை நடாத்துவதை ஒத்திவைக்குமாறு பதிவு செய்யப்பட்ட பெரும்பாலான அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளும் தொடர்ச்சியாக விடயங்களை முன்வைத்துவந்தனர். குறிப்பாக பூர்வாங்க ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப் படுத்துவதில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 (3) பிரிவின் அதிகாரங் களின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவினால் 2167/12 ஆம் இலக்க 2020.03.20 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலை இரத்துச் செய்து வாக்கெடுப்பு தினம் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னர் 14 நாட்களுக்குப் பின்னரான தினமொன்று தீர்மானிப்படும் என அறிவித்தல் விடுக்கப்பட்டு 2167/19 ஆம் இலக்க 2020.03.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டது. அதனைத் தொடர்ந்து, இரு சந்தர்ப்பங்களில் அதாவது 2172/3 ஆம் இலக்க 2020.04.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2020.06.20 ஆம் திகதிக்கும், 2179/17 ஆம் இலக்க 2020.06.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2020.08.05 ஆம் திகதிக்கும் பாராளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்டது. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள்/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் களிலும், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிச் செயலாளர்கள், மற்றும் போட்டியிட எதிர்ப்பார்க்கப்படுவதாக அறிவித்திருந்த கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களுடன் 2020.04.21, 2020.05.12 மற்றும் 13 ஆம் திகதிகளில் தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்ற பல சுற்றுக் கலந்துரையாடல்களின் போது நாட்டிலே ஏற்பட்டுள்ள தொற்று நோய் நிலைமைகள் மற்றும் அவற்றைக் கட்டுப் படுத்துவதில் கடைப்பிடிக்கப்பட வேண்டியிருந்த சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடி அவற்றில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டு இரு சந்தர்ப்பங் களில் தேர்தலை நடாத்துவதை ஒத்திவைப்பதற்குத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேரிட்டது.

iii. பாராளுமன்றத் தேர்தலை நடாத்தும் போது சுகாதார அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்வ தற்குத் தேவையான அனைத்து மூலோபாயங்களும் தேர்தல் ஆணைக்குழுவால் எடுக்கப்பட்டன. அதேபோன்று சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாகச் செயற்பட வேண்டியதன் தேவைப்பாடு தொடர்பாக பணியாற்றொகுதியினருக்கும் மற்றும் தொடர்புடைய ஏனைய தரப்பினருக்கும் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதன் பிரகாரம் வாக்களிப்பதற்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருகின்ற வாக்காளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையப் பதவியணியினர் பின்பற்றப்பட வேண்டிய விசேட வழிமுறைகள் (முன்னர் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது) காரணங்களினால் வாக்கைப் பிரயோகிப்பதற்கு அதிக காலமொன்று செலவாகும் என்பதால், அதன் காரணமாக எவரொருவருக்கும் வாக்கைப் பிரயோகிப்பதற்கு முடியாமல் போவதனைத் தடுப்பதற்கான பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய வாக்கெடுப்புக் காலத்தை மு.ப. 07.00 மணி தொடக்கம் பி.ப. 05.00 மணி வரை எனத் தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் 2184/18 ஆம் இலக்க 2020.07.15 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பத்திரம் மூலம் வெளியிடப் பட்டது. அது **10 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

## 06. பெயர் குறித்த நியமனத்தின் பின்னர் வேட்பாள ரொருவர் இறத்தல்.

i. 1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25 (1) பிரிவின் பிரகாரம் வாக்கெடுப்பின் நோக்கங்களுக்கு தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதற்கும் வாக்கெடுப்பு தொடங்குவதற்கும் இடைப்பட்ட காலத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவைச் சமர்ப்பித்திருந்த வேட்பாளர் ஒருவர் இறந்தால் மற்றும் அது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு திருப்திப்படுவதன்மீது, இறந்த வேட்பாளருக்குப் பதிலாக வேறு வேட்பாளர் ஒருவரை பெயர்குறித்து நியமனம் செய்யுமாறு விடயத்திற்கேற்ப அரசியல் கட்சிச் செயலாளர் அல்லது சுயேட்சைக் குழுத் தலைவருக்கு ஆணைக்குழுவினால் எழுத்துமூலம் அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறான எழுத்து மூல அறிவித்தலொன்று தொடர்புடைய கட்சிச் செயலாளர் அல்லது குழுத் தலைவருக்கு கிடைத்த பின்னர் இறந்த வேட்பாளருக்குப் பதிலாக வேறு வேட்பாளர் ஒருவரின் பெயர் மற்றும் முகவரியைத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உடனடியாக அறிவிக்க வேண்டுமென பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ii. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25 (3) ஆம் பிரிவின் பிரகாரம் அரசியல் கட்சியொன்றின் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுத் தலைவரினால் 25 (2) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புதிதாக வேட்பாளர் ஒருவரின் பெயர் குறித்த நியமனம் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மரணித்த வேட்பாளரின் பெயர் உரிய பெயர் குறித்த நியமனமத்திருந்து பதிவழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் புதிதாக முன்மொழியப்பட்ட வேட்பாளரின் பெயரை உரிய பெயர் குறித்த நியமனப்பத்திரத்தில் பதிவு செய்யுமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கட்டளையிட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மரண மடைந்த வேட்பாளரின் பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் இரண்டாவதாக பெயர் குறித்து நியமனம் செய்த வேட்பாளரின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள பெயர் குறித்த நியமனப் பத்திரம் செல்லுபடியானது எனவும் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் தேர்தல்கள் நடாத்தப்படும் எனவும் அறிவிக்கப்படுகின்ற அறிவித்தலொன்றைத் தேர்தல் ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

iii. இத்தேர்தலின் போது பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக்கையளித்த பின்னர் மற்றும் வாக்கெடுப்பை நடாத்துவதற்கு முன்னர் மூன்று வேட்பாளர்களின் மரணங்கள் ஏற்பட்டுள்ளன. அதற்கமைய மரணமடைந்த வேட்பாளர்கள் மற்றும் அதற்குப் பதிலாக நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கி சட்டத்தின் 25 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2180/18 ஆம் இலக்க மற்றும் 2020.06.16 ஆம் திகதிய, 2186/47 ஆம் இலக்க மற்றும் 2020.08.01 ஆம் திகதிய் 2186/48 ஆம் இலக்க மற்றும் 2020.08.01 ஆம் திகதிகளிலான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. அந்த வர்த்தமானிகள் முறையே **11 ஆம், 12 ஆம் மற்றும் 13 ஆம் இலக்கங்கள் கொண்ட அட்டவணைகளில்** காட்டப்பட்டுள்ளன.

## 07. தேர்தல் ஒழுங்கமைப்பு அலுவல்களில் தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் 19 தொற்று நோய் நிலைமை.

i. முழு உலகமும் கொரோனா வைரஸ் காரணமாக செயலிழந்து போயுள்ள நிலைமைக்குள் இலங்கையில் 8 ஆவது பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கான சட்டத் தேவைப்பாடுகளுக்கமைய அலுவல்களை ஒழுங்கமைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேரிட்டது. இலங்கை இராணுவத்தின் மருத்துவப் படைப்பிரிவின் பொதுச் சுகாதார விசேட வைத்தியர் ஒருவர் தேர்தல் ஆணைக்கழுவின் தவிசாளருடன் நடாத்திய கலந்துரையாடலொன்றின் போது இலங்கையில் கொரோனா தொற்றுநோய் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் அந்த நிலைமைக்கு முகங் கொடுத்து தேர்தலை நடாத்துவதற்குத் தேவையான மூலோபாயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவது அத்தியவசியமானதாகுமெனச் சுட்டிக்காட்டப்பட்டது. அதன் பின்னர் தவிசாளரின் வேண்டுகோளின் பேரில் அந்த விசேட வைத்தியரினால் அன்றைய தினம் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உட்பட தேர்தல்கள் செயலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்றுநோய், அவற்றின் பரவல் தொடர்பாவும், நோய் தொற்றுதல், பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக முழுமையாக அறிவுறுத்தப்பட்டது.

ii. கொரோனா தொற்று நோய்க்கு மத்தியில் பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல் அலுவல்களைக் ஒழுங்கு செய்தல் மற்றும் பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் அலுவல்களில் ஈடுபடுகின்ற பணியாட்குழுவினரின் மற்றும் பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிப்பதற்கு வருகை தரும் நபர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் வைத்தியர்களின் பங்கேற்புடன் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள் உட்பட பதவிநிலை அலுவலர்கள் கலந்து கொண்டனர். அன்றைய தினம் மு.ப. 11.30 மணிக்கு மாவட்ட பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு கொரோனா தொற்றுநோய் பற்றிய மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான விடய தெளிவுபடுத்தலொன்று தொற்று நோய் நிவாரணப் பிரிவின் வைத்தியர்களால் மேற்கொள்ளப்பட்டது. அனைத்துத் தொழிற்பாடுகளும் சுகாதார வழி முறைகளைப் பின்பற்றி மேற்கொள்வது கட்டாய மானதென தெரிவிக்கப்பட்டது. மேலும், தொற்று நோய் நிலைமைகள் நாட்டினுள் பரவுவதைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக உறுதியான அடிப்படையில் விடயங்களைத் தெரிவிக்க முடிவது எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதியின் பின்னர் எனவும் வைத்தியர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

iii. பாராளுமன்றத் தேர்தலின் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்றல் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்படவுள்ளதென அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்ததோடு 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான முதலாவது நோயாளி பற்றி அறிக்கையிடப்பட்டது.

iv. எதிர்பாராதவிதமாக பரவிய இந்த வைரஸ் அச்சுறுத் தலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு சுகாதார வரையறை களுக்கமைவாகத் தேர்தலுக்கான பெயர் குறித்த நியமனங்களைக்கையேற்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபடவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள், தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு நேரிட்டது. இக் காலப்பகுதியினுள் இலங்கையின் பல்வேறு பிரதேசங் களிலிருந்தும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உட்பட்ட நோயாளிகள் இனங்காணப்பட்டமை காரணமாக, ஏற்கனவே உலக சுகாதார தாபனம், சுகாதார அமைச்சு மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு செயலணியினரால் இந்நோய் பரவவுதைத் தவிர்ப்பதற்கு பின்பற்றவேண்டுமென வெளியிடப்பட்ட விடயங்கள் குறித்து முன்னுரிமை வழங்கி தேர்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க நேரிட்டது. அதன் பிரகாரம், பொதுமக்கள் ஒன்றுகூடுவதை வரையறை செய்தல், தனிநபர் இடைவெளியைப் பேணுதல், அடிக்கடி கைகளைச் சுத்தப்படுத்தல் தேவைப் பாடுகள் கட்டாயமாகக் காணப்பட்டன. இவ்வாறான பின்னணியொன்றின் கீழ் இதற்கு முன்னர் தேர்தல்களை நடாத்திய அனுபவம் இல்லை யென்பதால் 2020 பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது தேர்தல் ஆணைக்குவிற்கு உண்மை யிலேயே சவால்மிக்கதாகக் காணப்பட்டது.

v. பயணங்களை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் பெயர் குறித்த நியமனங்களை பெற்றுக் கொள்ளும் காலப்பகுதிக் குரிய பொதுவான கடமைகளை நிறைவேற்றும் சில நாட்கள் விசேடமான விடுமுறைத் தினங்களாகப் பிரகடனப்படுத்தல், அத்தியாவசிய சேவை வழங்கு கின்ற பெரும்பாலான நிறுவனங்கள் மூடப்படல், பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகள் மட்டுப் படுத்தப்பட்டமை காரணமாக பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்பதற்காகத் தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அமைவாக அந்த மாவட்டங்களின் தெரிவத்தாட்சி உத்தியோகத் தர்களினால் விசேட நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு அந்த நடவடிக்கைகள் அரசியல் கட்சிச் செயலாளர்கள் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் குழுத் தலைவர்கள் ஆகியே-ாருக்கு அறிவிக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை களை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. கொரோனா ஒழிப்புக்காக அரசாங்கத்தினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக் கமைய உத்தரவிடப்பட்டிருந்தவாறு சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றும் தேவைப்பாடு கட்டாயமாக்கப்பட்டதன் காரணமாக மற்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் அவ்வாறு செயற்படுமாறு பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைச் கையளிக்கின்ற அனைத்து அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சிறந்த பதிலளிப்பு கிடைத்த மையினால் பெயர் குறித்த நியமனக் காலப் பகுதிக்குப் பின்னர் வழமையாக நடைபெறுகின்ற கூட்டங்கள், பாதயாத்திரைகள் அல்லது வாகன ஊர்வலங்கள் எதுவும் இடம்பெற்றதாக அறிக்கைகள் கிடைக்கப் பெறவில்லை.

vi. கொரோனா தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுவ தற்காக பொருத்தமான வைத்தியர்களை 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கலந்து கொள்ளச் செய்யுமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியவர்களுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலும், இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தேர்தல்கள் பணிகளுக்குப் பொறுப்பான சிரேட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே அரசாங்கத்தினால் நிறுவப்பட்டிருந்த கொவிட் கட்டுப்பாட்டு செயலணியின் பிரதிநிதி ஒருவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் சார்பாக அதன் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகியவர்களும், தேசிய தொற்று நோய்கள் தொடர்பான வைத்தியசாலையின் பணிப் பாளரும் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.இக்கலந்துரையாடலின் போது தேர்தலை நடாத்துவதிலுள்ள சவால்கள் மற்றும் சுகாதார பாதுகாப்புடன் அந்நிலைமைகளை எதிர்கொள்வ தற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடி பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

vii. பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றுக் கொண்டதன் பின்னர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் தேர்தல்கள் அலுவலகங்களின் பொது நிர்வாக நடவடிக்கைகளை தொற்று நோய்க் கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கேற்ப ஓரளவிற்கு கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. இருந்த போதிலும், தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், மாவட்ட பிரதி மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் அத்தியாவசிய தேர்தல் கடமைகளில் ஈடுபட்டதோடு, அலுவலக உத்தியோ கத்தர்களில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினர் பூர்வாங்க ஒழுங்கமைப்புக் கடமைகளுக்கான அழைக்கப்பட்டனர். இக்காலப் பகுதியில் அலுவலக நடவடிக்கைகளின் போது சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை உச்சளவில் பின்பற்றுமாறு தேர்தல்ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப் பட்டதோடு, பொதுமக்கள் தேர்தல்கள் அலுவலக வளாகத்திற்குள் நுழைவதும் வரையறுக்கப் பட்டிருந்தது. தேர்தலுக்கு மீளத் திகதி நிர்ணயிக்கப் பட்டதன் பின்னர் நாளாந்த சாதாரண நடவடிக்கை களுக்காக நாட்டைத் திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து தேர்தலுக்கான பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகளும் அதற்கமைய துரிதப்படுத்தப்பட்டன.

viii. சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், தொற்று நோய்கள் தொடர்பான பணிப்பாளர் மற்றும் தொற்றுநோய் விஷேட வைத்திய நிபுணர்களுடன் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி சுகாதார அமைச்சில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் நடாத்தப்பட்ட விசேட கலந்துரையாடலொன்றின் போது கட்டுப்படுத்தப்பட்ட கொவிட் 19 நிலைமையொன்றின் கீழ் தேர்தலொன்றை நடாத்துவதற்குத் பொருத்தமான வழிகாட்டல் மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார அறிவுறுத்தல் கோவையொன்றை சுகாதார அமைச்சு சார்பாக சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் வெளியிடுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது.

ix. இதற்கமைவாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவிற்கு சுகாதாரத் துறையை பிரதிநிதித்துவப் படுத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் அவரது பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக, தேர்தல் விடயங்களுக்குப் பொறுப்பான சிரேட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம், கொவிட் ஒழிப்பு செயலாற்றுகைப் படையணியின் பிரதிநிதியொருவர், பொது நிர்வாக அமைச்சின் மேலதிகச் செயலாளரொருவர், தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆலோசகரொருவர், தேசிய தேர்தல்கள் பிரிவின் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பிரதி தேர்தல்கள் ஆணையாளர் (கொழும்பு நகரம்), பிரதி தேர்தல்கள் ஆணையாளர் (நிர்வாகம்) ஆகியவர்களை நியமனம் செய்வதற்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

x. இக்குழுவின் முதலாவது கூட்டம் 2020.04.29 ஆம் திகதி முற்பகலில் கொவிட் ஒழிப்புக்கான தேசிய நிலையத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் சுகாதார அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட வைத்திய உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கிணங்க சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி கட்டுப்படுத்தப்பட்ட கொவிட் நிலைமையின் கீழ் தேர்தலை நடாத்துவதற்கான வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல் கோவையைத் தயாரிப்பதற்கான பொறுப்பு சுகாதார அமைச்சின் தொழில்சார் மற்றும் சுற்றாடல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சின் சுற்றாடல், தொழில்சார் பிரிவின் சமூக வைத்தியர் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட குழுக்களை பிரதிநிதித் துவப்படுத்துகின்ற தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றைய தினம் தேர்தல் ஆணைக்குழுக் கேட்போர் கூடத்தில் கூடிய இந்தக் குழு தனது பணிகளை ஆரம்பித்தது.

xi. அதன் பிரகாரம்,பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கான சுகாதார அதிகாரிகளின் பரிந்துரைகள் உள்ளடங்கிய சுகாதார வழிகாட்டல் கோவையின் வரைவொன்று தேர்தல் ஆணைக்குழுவின் அவதானத்திற்காக 03.05.2020 ஆம் திகதி வழங்கப் பட்டது. அவ் வழிகாட்டல் கோவையின் வரைவு தேர்தல் ஆணைக்குழுவின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் தகவலுக்காகவும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பாக 2020.05.04 ஆம் திகதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றம் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் ஆகியோர்களுகிடையில் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது.

xii. சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி, தேர்தலை நடாத்தும் போது வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பிரிவின் பணிக்குழுவினரின் சேவையைப் பெற்றுக்கொள்வது அத்தியவசியமானதென தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக் கப்பட்டிருந்தமையினால் இது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங்கு விசேட தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சுகாதார பணியாட்குழுவின் அங்கத்தவர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பு வசதிகளை வழங்குவதற்குத் தேர்தல் ஆணைக் குழு உடன்பட்டதுடன் அதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டது.

xiii. சுகாதார அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப தேர்தலை நடாத்துவதற்குப் பொருத்தமான வழிமுறைகளைத் தயாரித்துக் கொள்ளல், அவற்றின் பிரகாரம் தேர்தலை நடாத்துவதற்குரிய பணிகளை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு தேவையான கால எல்லையைத் தீர்மானித்தல் மற்றும் அதன் பிரகாரம் தேர்தலை நடாத்துவதற்கு வழிகாட்டல் வரைபடமொன்றை தயாரிக்கும் நோக்கில் தேர்தல்கள் செயலகத்தின் பதவிநிலை அலுவலர்கள் மற்றும் மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் பல கலந்துரையாடல்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நடாத்தப்பட்டன.

| திகதி மற்றும் இடம் | கலந்து கொண்டோர் |
|---|---|
| 2020 மே 15. இராஜகிரிய. தேர்தல்கள் செயலகம். | தேர்தல்கள் அலுவலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், தேர்தல் ஆணைக் குழுவில் பணியாற்றி தற்போது மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி வருகின்ற அலுவலர்கள் (இருவர் கலந்து கொண்டனர்), அஞ்சல் மா அதிபர், கொழும்பு மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்கள் |
| (2020 மே 16 அநுராதபுரம் (தமிழ் மொழி) | தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசகர், பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி), வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்கள், அநுராதபுரம் / புத்தளம் / மன்னார் / யாழ்ப்பாணம் / முல்லைத்தீவு / கிளிநொச்சி / மட்டக் களப்பு ஆகிய மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் |
| 2020 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி அம்பந் தோட்டை | மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்) பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்), இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர்கள், அம்பாந் தோட்டை/ மாத்தறை/ மொனராகலை/ பதுளை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் |
| 2020 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி கண்டி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (நிர்வாகம்) கண்டி மற்றும் குருநாகல் மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணை யாளர்கள், மாத்தளை/ நுவரெலியா/ அம்பாறை/ கேகாலை மற்றும் பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் |

xiv. மேற்குறிப்பிட்டவாறு இடம்பெற்ற கலந்துரையாடல் களின் போது சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை ஆராய்ந்து பரிந்துரை களைச் சமர்ப்பித்தல், தேர்தல்கள் செயலகத்தின் மற்றும் மாவட்ட பதவிநிலை அலுவலர்களை உள்ளடக்கிய 5 குழுக்களுக்கு ஒப்படைக்கப் பட்டது. 2020 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி அக் குழுக்களின் உறுப்பினர்கள் தேர்தல்கள் செயலகத்தில் ஒன்றுகூடி கலந்துரையாடி தேர்தலை நடாத்துவதற்கான வழிகாட்டல் வரைபடத்தின் அடிப்படை வரைவைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கும் வகையில் தேர்தலின் பூர்வாங்க நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்காக புதிய பரிந்துரைகளை முன்வைத்தல் மேற்படி 5 குழுக் களுக்கும் கையளிக்கப்பட்டிருந்தன.

1. தேர்தல்களுக்குரிய பூர்வாங்க அலுவல்கள் (புதிய வழிமுறைகள்)
2. தேர்தல் பிணக்கு முகாமைத்துவம்
3. வாக்கெடுப்பு நிலையம்
4. வாக்கெண்ணல், பெறுபேறுகளை அட்டவணைப் படுத்தல் மற்றும் வெளியிடல்
5. நடைமுறை செயலொழுங்குகளைத் தயாரித்தல்

xv. மேற்குறிப்பிடப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்களுக்கு மேலதிகமாக 2020.05.12 மற்றும் 13 ஆம் திகதிகளில் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகளினதும் அதிகார மளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் குழுக்களின் தலைவர்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக் கப்பட்டு இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் உத்தியோகத்தர்களுடன் இடம்பெற்ற முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டனர். அங்கு அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. வாக்கெடுப்பை நடாத்துதல், வாக்கெண்ணல்கள் மற்றும் தேர்தல் பிரச்சார விடயங்களில் உத்தேச நடைமுறைகளிற்கு மேலதிகமாக வேறு முன் மொழிவுகள் இருப்பின் அவற்றைச் எழுத்து மூலமாக துரித கதியில் தேர்தல் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்களிற்கு அறிவிக்கப்பட்டது.

xvi. அதேபோன்று, உலக சுகாதார தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி, தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக சுகாதாரம் விசேட நிபுணத்துவ மருத்துவர்கள் நிறுவனத்தின் பிரதிநிதிகள், மருத்துவ பீடங்களின் விரிவுரையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள். இலங்கை மருத்துவ சங்கப் பிரதிநிதிகள், தனியார் மருத்துவ சம்மேளனத்தின் பிரதிநிதிகள், தேசிய மருத்து வர்கள் மற்றும் சுகாதாரத் துறையின் ஏனைய தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் தேர்தலை நடாத்துதல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு முன்மொழிவுகளையும் மற்றும் ஆலோசனை களையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

xvii. மேலும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் பிரிவுகளின் சிரேட்ட அலுவலர்கள், தேர்தல் ஆணைக்குழுவுடன் நேரடியாகத் தொடர்புபடுத்தப் படுகின்ற அரச நிறுவனங்களின் சிரேட்ட உத்தியோகத்தர்கள். பிரதேச செயலாளர்கள் கிராம உத்தியோகத்தர்கள் ஆகியவர்களுடனும் இந்த வழிகாட்டல் வரைபடத்தை தயாரிக்கும் போது அவர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

xviii. மேற்கூறப்பட்ட தரப்பினர்களிடமிருந்தும் குழுக் களிடமிருந்தும் கிடைக்கப் பெற்றிருந்த அறிக்கைகள் தொடர்பாக மீண்டும் கலந்துரை

யாடப்பட்டு சுகாதார வழிகாட்டல் வரைபடத்தைத் தயாரிப்பதற்கான வதிவிட செயலமர்வொன்று 2020 ஆம் ஆண்டு மே மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் பேருவலை சினமன் ஹோட்டலில் தேர்தல் முறைகள் தொடர்பான சர்வதேச நிறுவனத்தின் (IFES) அனுசரணையுடன் நடத்தப் பட்டது. கொவிட் 19 தொற்றுநோயைக் கட்டுப் படுத்தும் வழிமுறைகளுக்கமைவாக தேர்தல்களை நடாத்துவதற்கான வழிகாட்டல் வரைபடத்தை தயாரிக்கும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.

xix. இவ்வாறு அனைத்து பங்குதாரத் தரப்பினர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட கட்டுப்பாட்டு கொவிட் நிலைமையின் கீழ் தேர்தலை நடாத்துவதற்கான வழிகாட்டி வரைபடம் தேர்தல் ஆணைக்குழு வினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதில் குறிப் பிடப்பட்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்களின் கீழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் தினால் வெளியிடப்படுகின்ற சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி மிகவும் பொருத்த மானதும் மற்றும் கிட்டயதுமான தினமொன்றில். பாராளுமன்றத் தேர்தல நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

xx. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல், பெயர்ப்பட்டியல் தயாரித்தல். அஞ்சல் வாக்குச்சீட்டுகள் விநியோகம், அத்தாட்சிப்படுத்தல் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்புக்களை நடாத்துதல் மற்றும் அஞ்சல் வாக்கு அடையாள மிடல் பணிகளும் கொவிட் 19 தொற்று நோய் கட்டுப்பாட்டு சுகாதார வழிகாட்டலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, தேர்தலின் பிரதானமான மற்றும் முக்கியமான பணியொன்றான உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி யளித்தலை மிகவும் குறுகிய காலத்தினுள் பூர்த்தி செய்வதற்கு நேரிட்டது. இங்கு சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களின் பிரகாரம் பயிற்சி வகுப்புக்களை நடாத்துவது சிக்கலான மற்றும் சவால் நிறைந்த பணியாகக் காணப்பட்டது. முன்னைய தேர்தல் களின் போது ஒரு பயிற்சி அமர்வுக்காக 100 – 150 இடையிலான எண்ணிக்கையான அலுவலர்கள் அழைக்கப்பட்டதோடு, இத்தேர்தலின் போது சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்ற நேரிட்டதன் காரணமாக அதனை 50 உத்தியோகத் தர்களுக்கு மட்டுப்படுத்த வேண்டியேற் பட்டது. இதன் காரணமாக உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தல் வகுப்புக்களை நடாத்துவ தற்கா அதிக காலப்பகுதியை ஒதுக்க வேண்டியேற்பட்டது.

xxi. சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி வாக்கெடுப்பை நடாத்தும் நடைமுறை ரீதியான நிலைமைகள் தொடர்பாக கருத்துக்களை பெற்றுக் கொள்ளுவது தேர்தல் ஆணைக்குழுவின் தேவைப்பாடாகக் காணப்பட்டது. அதற்கிணங்க சில பிரதேசங்களில் மாதிரி வாக்கெடுப்பினை நடாத்துதல் மற்றும் வாக்கெண்ணல் நிலையங்களைத் தாபித்து மாதிரி வாக்கெண்ணலை நடாத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி 2020.06.07 ஆம் திகதி காலி மாவட்டத்தில் அம்பலங்கொட வாக்கெடுப்புப் பிரிவிலுள்ள விலேகொட கிராம அலுவலர் பிரிவில் ஸ்ரீ தம்மயுக்திகாராம விஹாரையில் முதலாவது மாதிரித் தேர்தலொன்று நடாத்தப்பட்டது. அந்த நிகழ்வில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அனைத்து பதவிநிலை உத்தி யோகத்தர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் மாவட்ட பதவிநிலை அலுவலர்கள், காலி மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், அம்பலாங்கொடை பிரதேச செயலாளர், கிராம அலுவலர்கள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் பங்குபற்றியதோடு, கட்டுப்படுத்தப்பட்ட கொவிட் தொற்று நிலைமையின் கீழ் தேர்தலை நடாத்தும் போது தேவையான அறிவுறுத்தல்களை வழங்கிய விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட சுகாதார அமைச்சின் அலுவலர்கள் பலரும் இதில் கலந்து கொண்டார். இவ்வாறான மாதிரித் தேர்தலை ஒவ்வொரு மாவட்டங்களிலும் குறைந்தது ஒரு தேர்தலையேனும் நடாத்துவதற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட பதவிநிலை அலுவலர்கள் ஆகியோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் மாதிரித் தேர்தல்கள் நடாத்தப் பட்டிருந்தன. இந்த மாதிரித் தேர்தல்கள் மற்றும் வாக்கெண்ணல்களிலிருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்கள் தேர்தலை நடாத்தும் போது மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன.

xxii. நாட்டின் சில பிரதேசங்களிலிருந்த கொவிட் தொற்றுக்குள்ளான நோயாளிகள் அடிக்கடி அறிக்கையிடப்பட்டமை காரணமாக அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களின் அஞ்சல் வாக்கு அலுவல்களுக்கு தடைகள் ஏற்பட்டன. பொருத்தமானவாறு அலுவல்களை மேற்கொண்டு அஞ்சல் வாக்கு அடையாளமிடும் பணிகளை சட்டத்திற்கு அமைவாக மேற்கொள்வ தற்குரிய நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்து முன்னெடுத்துச் செல்வதற்கு மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களை முதன்மையாகக் கொண்ட தேர்தல் பணிக்குழுவினரால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தனிமைப்படுத்துதல் மற்றும் பயணக் கட்டுப்பாடு என்பவற்றின் காரணமாக விதிக்கப்பட்டிருந்த நாட்களில் தமது அஞ்சல் வாக்குகளை அடையாளமிட முடியாமல் போன அஞ்சல் வாக்காளர்களுக்காக மாற்று வழிகளை அறிமுகப் படுத்தி முடிந்தவரை அவர்களின் வாக்குரிமை பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

xxiii. கட்டுப்படுத்தப்பட்ட கொவிட் தொற்று நிலைமையின் கீழ் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட வருகின்ற போது நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டதன் காரணமாக அந்தப் பகுதிகளை தனிமைப் படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த நிலைமைகள் தேர்தலை நடாத்துவதற்கு பெரும்பாலும் தடைகளை ஏற்படும் நிலைமை களாகக் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய கொரோனா பரவல் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானத்தோடிருந்து எழுகின்ற நிலைமையை மீளாய்வு செய்வதற்காக முழு நேரம் பணிபுரிவதற்காக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் குடும்ப சுகாதார மற்றும் சுகாதாரக் கல்விப் பிரிவுகளின் இரண்டு விரிவுரையாளர்கள், விசேட வைத்தியர் ஒருவர் உள்ளிட்ட மருத்துவர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்பட்டது. அக் குழுவினால் சுகாதார அமைச்சு, பிரதேச சுகாதாரம் அதிகாரிகள், மாவட்டம் தெரிவத்தாட்சி உத்தி யோகத்தர்கள் மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கை களுக்குப் பொறுப்பான பாதுகாப்பு உத்தியோகத்தர் களுடன் தொடர்ச்சியான நெருக்கமான தொடர்பினை பேணி தடையின்றி தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கான மூலோபாயங்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு விடயங்கள் அறிக்கையிடப்பட்டன.

xxiv. வாக்குச் சீட்டுகள் உள்ளடங்கலாக பொருட் களாதியவற்றை விநியோகித்தல் மற்றும் மீளப் பெற்றுக் கொள்ளல் நிலையங்கள், வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்கமைத்தல் அவற்றின் பணியாட்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்தல் சுகாதார கொவிட் கட்டுப்பாட்டு சுகாதார வழிகாட்டல் களுக்கு இணங்க மேற்கொள்வது கட்டாயமாகக் காணப்பட்டது. நாட்டில் பொது நிர்வாகப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவந்த போதிலும், தொற்றுநோய் பரவுதல் முழுமையாகக் குறைவடைந்திருக்கவில்லை தேர்தலொன்று என்பது பாரிய எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் நிறை வேற்றப்பட வேண்டிய கூட்டானதொரு முயற்சி என்பதால் நோய்காவி வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கக்கூடிய அனைத்து மூலோபாயங்களையும் மேற்கொள்வது தேர்தல் ஆணைக்குழு, அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்கள், மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணை யாளர்களின் பொறுப்பாகக் காணப்பட்டது. அதற்கிணங்க, சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு பொருட்களாதியவற்றை விநியோ கித்தல், அவற்றை மீளப் பெறல் மற்றும் வாக்கெண்ணல் நிலையங்களின் கடமைகளுக் காகவும் முன்னைய தேர்தல்களை விடவும் குறைவான அலுவலர்கள் ஈடுபடுத்தி அப்பணிகளை மேற்கொள்ளக்கூடிய வகையிலான நிகழ்ச்சித் திட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டது ஆகையால், குறித்த விநியோகித்தல் மற்றும் கையேற்றலுடன் வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை முந்தைய தேர்தல்களை விடவும் அதிகரித்ததோடு, தேர்தல் செலவினங்கள் அதிகரிப்பதற்கும் இது காரணமாக அமைந்தது.

xxv. அரச துறையின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் மக்களின் வாழ்க்கை போன்றன சாதாரண நிலை மைக்கு மாற்றமடைந்து காணப்படுகின்ற நேரத்தில் தேர்தலை நடாத்துவதற்குத் தேர்தல் ஆணைக் குழுவுக்கு நேரிட்டதோடு, நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகத் தேர்தல் ஆணைக்குழு வினால் வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற எல்லா இடங்களும் முழுமை யாகக் தொற்றுநீக்கம் செய்யப்பட்டன. அந்த இடங்களுக்குள் பிரவேசிக்கின்ற அனைத்து நபர்களினதும் உடல் வெப்பநிலையை பரிசோதித்தல் மற்றும் கைகளைக் கழுவுதல் மற்றும் தொற்று நீக்கம் செய்தல் செயன்முறைக்கு உட்படுத்தல் என்பன மிகவும் சரியான முறையில் மேற்கொள்ளப் பட்டிருந்தன. வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வருகை தருகின்ற வாக்காளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்கள் ஒருவருக் கொருவர் முகத்திற்கு முகம் சந்தித்துக் கொள்வதைத் தடுப்பதற்காக அலுவலர்களுக்கு முகக் கவசம், முக மறைப்புக்கள் மற்றும் தொற்று நீக்கித் திரவங்கள் வழங்கல் மற்றும் அவர்களின் கடமை நிலையங்கள் தெளிவாகத் தெரியக்கூடிய பொலிதீன் கொண்ட கார்ட்போட் அட்டைகளைக் கொண்டு மறைப்பதற்கு நேரிட்டது. மேலும், வாக்காளர்கள் உட்பட வாக்கெடுப்பு நிலையத் திற்குள் ஏதேனும் அனுமதியின் கீழ் சமூகமளிக்கும் அனைவரும் முகக் கவசம் அணிந்திருப்பது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. தேர்தலின் கட்டாயமான தேவைப்பாடாக இருக்கின்ற தேருநர்களை தோதான குறியீட்டினால் அடையாளமிடுவதற்காக ஒவ்வொரு தேருநர் சார்பாகவும் ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்திய பின்னர் வீசப்படுகின்ற விசேட குச்சொன்று பயன்படுத்தப்பட்டது. வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கினை அடையாளமிடுகின்ற சிற்றறைகள் மற்றும் வாக்கினை அடையாள மிடுவதற்காக வழங்கப்பட்ட காபன் பேனா என்பன 15 நிமிடங்களுக்கு ஒரு முறை தொற்று நீக்கம் செய்யப்பட்டது. அவ்வாறே, வாக்கினை அடையாள மிடுவதற்குத் தேவைப்படுகின்ற நீல அல்லது கறுப்புநிற குமிழ்முனைப் பேனாவொன்றைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஊடக அறிவித்தல் மூலம் வாக்காளர்கள் கோரப்பட்டனர். வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சமூகமளிக்கும் போதும் வாக்கெடுப்பு நிலையத் தினுள்ளும் மற்றும் வாக்கெடுப்பு நிலையத் திலிருந்து வெளியேறும் போதும் மூன்று தடவைகள் வாக்காளர்களை தொற்று நீக்கம் செய்வதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன. பயன்படுத்திய பின்னர் எஞ்சிய அனைத்துப் பொருட்களையும், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் ஆகிய வற்றை வாக்களிப்பு நிலைய வளாகத்திலேயே

சுகாதாரப் பிரிவின் உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்களின் பேரில் அவற்றை முறையாகப் அழிப்பதற்கும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

xxvi. இத்தேர்தலில் போது சுகாதார வழிகாட்டல்களை அமுல்படுத்துதல், அவை சரியான விதத்தில் உரிய தரப்பினர்களால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கான முழுமையான பொறுப்பு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையிலான சுகாதாரப் பிரிவின் பதவியணி யினருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் சுகாதாரப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இணைக்கப் பட்டதுடன் வலய மட்டத்தில் அச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக சுகாதாரப் பிரிவின் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த சுகாதார பணியாட்குழுவினரின் கண்காணிப்பின் கீழ் சில பிரதேசங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகிய தேருநர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த தனியான வாக்கெடுப்பு சிற்றறை ஒன்றினுள் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

xxvii. (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தவிர்த்தல் கட்டளைச் சட்டத்திற்கு ஏற்ப, கட்டுப்படுத்தப்பட்ட கொவிட் நிலைமையின் கீழ் தேர்தலை நடாத்தும் போது பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் அடங்கிய 2184/34 ஆம் இலக்க 2020.07.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் வெளியிடப் பட்டது. **அது அட்டவணை 14 இல்** காட்டப் பட்டுள்ளது. தேர்தலை நடாத்தும் போது இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதி களுக்கமைவாக அலுவல்களை திட்டமிட்டுக் கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கும், மாவட்டப் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டிருந்தன.

xxviii. தேர்தல் செயற்பாடுகள் காரணமாக கொவிட் தொற்று நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக, தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட மேற்கூறப்பட்ட அனைத்து நடவடிக்கை களும் அனைவரதும் பாராட்டுக்கும் மற்றும் மெச்சுதலுக்கும் உட்பட்டது. வாக்களிப்பதற்கு வருகை தருகின்ற எவரொருவருக்கும் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து நோய் பரவுவதை தவிர்ப் பதற்கும். அதே போன்று வாக்களிப்பதற்கு வருகை தருகின்ற வாக்காளர்களிடமிருந்து மற்றும் வாக்கெடுப்பு நிலைய முகவர்களிடமிருந்து தேர்தல்கள் பணியாட்குழுவின் எவருக்கும் நோய் பரவாதிருப்பதற்காக நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதில் தேர்தல் ஆணைக்குழு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்பட்டதன் காரணமாக சமூகத்தில் நோய் பரவலொன்று ஏற்படாமை தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழு மிகவும் மகிழ்ச்சியடை வதோடு, இது தொடர்பில் தேவையான ஆலோ சனைகளையும் உதவிகளையும் வழங்கிச் செயற்பட்ட அனைத்து ஊழியர்களும் நன்றி நவில்கின்ற அதேவேளை, அது தொடர்பாக இவ்வறிக்கையின் நிறைவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 08. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்

i. இந்த பாராளுமன்றத் தேர்தல் பிரகடனம் செய்யப் பட்ட போது பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவிற்கமைய தேர்தல் ஆணைக்குழுவினால் 70 அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. மேலும் பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தலொன்றில் போட்டியிடுவதற்கு கட்சியொன்று எதிர்ப்பார்க்குமிடத்து தேர்தலொன்றை நடாத்துமாறு கட்டளை பிறப்பித்து வெளியிடப்பட்ட அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவினால் இது தொடர்பாக அனைத்து அரசியற் கட்சிகளின் செயலாளர்களும் அறிவுறுத்தப்பட்டனர். அதற் கமைய இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதாக 50 அரசியல் கட்சிகளால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இக்கட்சிகளில் 12 கட்சிகள் வேறு கட்சிகளுடன் கூட்டிணைந்து போட்டியிடு வதாகவும், ஏனைய கட்சிகள் தனியாக போட்டியிடு வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக போட்டியிட்ட தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் குறித்து நியமனம் செய்த வேட்பாளர்கள் உள்ளடங்கலாக தொடர்புடைய தகவல்கள் **02 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

ii. மேலே குறிப்பிட்டதன் பிரகாரம், தேர்தலுக்கான அறிவித்தல் பிரகடனப்படுத்தப்படும் போது தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 70 காணப்பட்ட போதிலும் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7 (4) (இ) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் நோக்கங்களுக்காக 67 அரசியல் கட்சிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய, எக்சத் லங்கா மகாசபா கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி ஆகிய அரசியற் கட்சிகளின் செயலாளர் பதவி தொடர்பான பிரச்சினைகள் காணப்படுவதால் அந்த அரசியல் கட்சிகளை இத்தேர்தலுக்காக

அங்கீகரிக்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டு 2167/2 ஆம் இலக்க 2020.03.16 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றுக்கு எதிரான குழுக்களில் எந்தக் குழுவொன்றுக்கு அந்த கட்சி உரித்தாகும் என்று தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்குரியதாகும். அந்த அதிகாரத்தின் கீழ், தேர்தல் ஆணைக்குழுவினால் அந்த அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு குழுக்களிலிருந்து ஏதேனும் குழு வொன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாக இருப்பதாக அல்லது அந்தக் குழுக்களில் எந்தவொரு குழுவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியல்ல என தமது தற்றுணிபின் பிரகாரம் அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பணிப்புரை வழங்குதல் வேண்டும். செயலாளர் பதவி குறித்து இத் தேர்தலில் சிக்கல் நிலவுகின்ற அங்கீகரிக்கப்பட்ட மூன்று அரசியல் கட்சிகளிலிருந்து குறித்த ஏற்பாடுகளின் கீழ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஈழவர் ஜனநாயக முன்னணிக் கட்சி ஆகியன கட்சிகளால் எதிர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க, இரண்டு கட்சிகளினதும் தரப்பினர் தேர்தல் ஆணைக் குழுவிற்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. அங்கு ஏற்படுத்திக் கொள்ளப் பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் இந்த பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மாத்திரம் தற்காலிகச் செயலாளர் பதவிகளை அங்கீகரிக்க தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தின் பிரகாரம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளராக திரு. ரிசாட் பதியுதீன் அவர்களையும், ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளராக திரு. ராஜனாதன் பிரபாகரன் அவர்களையும் ஏற்றுக் கொள்வதற்கு குறித்த தரப்பினர் இணக்கம் தெரிவித்தமை தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டது.

iii. 1981 ஆம் ஆணடின் 1 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசியற் கட்சிகளுக்காகக் குறித்தொதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அரசியற் கட்சிகளுக்காக குறித்தொதுக்கப்படாத சின்னங்கள் உள்ளடக்கப் பட்ட 2165/45 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2020.03.05 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவிற்கமைய அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் அங்கீகரிக் கப்பட்ட சின்னத்திற்குப் பதிலாக புதிய சின்னமொன்றைக் கோருவதற்கான விண்ணப்ப மொன்றை தேர்தலை நடாத்துவதற்கான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்தில் இருந்து 07 நாட்களுக்குள் கட்சியின் செயலாளர் அவர்களால் தேர்தல் ஆணைக்குழு விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான வேண்டுகோள் கிடைக்கப் பெற்றதன் பின்னர், தேர்தல் ஆணைக்குழுவினால் சட்டத்தின் 12 (2) ஆம் பிரிவின் பிரகாரம் மேற்படி கட்சிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சின்னத்திற்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்தவோர் அரசியல் கட்சிக்கும் அனுமதிக்கப்பட்ட சின்ன மல்லாத வேறு அங்கீகரிக்கப்பட்ட சின்னமொன்றை குறித்தொதுக்கி கொடுத்தல் வேண்டும். இத் தேர்தலுக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர், உரிய காலப்பகுதிக்குள் அவ்வாறான கோரிக்கை யொன்று தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெறவில்லை.

iv. 2020.03.11 ஆம் திகதியாகும் போது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்திருந்த அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/ நிரந்தர முகவர்கள் மற்றும் தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்களும் அழைக்கப்பட்டு கலந்துரையாட லொன்று நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலின் போது பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம், அன்றைய தினம் பாதுகாப்பு அலுவல்கள் மற்றும் தேர்தல் சட்டங்கள், வேட்பாளர்களின் ஒழுக்க நெறிகள், ஊடக வழிகாட்டல்கள், வாக்கெடுப்பு நிலை யங்களின் அலுவல்கள், அஞ்சல் வாக்கு விநியோகம், அடையாளமிடல், வாக்கெண்ணல் தொடர்பான விடயங்கள் மற்றும் அதிகாரமளிக்கப் பட்ட முகவர்கள் மற்றும் ஏனைய முகவர்களை நியமித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பான ஆரம் பகட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன. மேலும், தேர்தல் மற்றும் தொடர்புடைய பத்திரங்களை இலவசமாக அனுப்பி வைப்பதற்கான வசதிகள், வேட்பாளர்களுக்கு தேசிய தொலைக்காட்சி மற்றும் வானொலியில் வானலைக் கால வசதிகளை வழங்குதல். (சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம்) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி களுக்கு அரச உதவிகள் மற்றும் தேர்தல்பிரச்சார அலுவலகங்கள் என்பவற்றை தாபிப்பது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டு தெளிவுபடுத்தப் பட்டது. தேர்தல் காலப்பகுதியின் போது தேர்தல் சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்தல், தேர்தல் பிரச்சார அலுவலகங்கள், பிரச்சாரக் கூட்டங்கள் தொடர்பாக சந்தர்ப்பத்திற்கேற்ப தோன்றுகின்ற பிரச்சினைகளைக் கலந்துரையாடுவ தற்காக மற்றும் அப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் நோக்கங்கள் மற்றும் அது தொடர்பில் கட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அறிவுறுத் தல்கள் மற்றும் கட்டளைகள் தொடர்பாக எழுத்து மூலமும் மற்றும் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டும் விளக்கமளிப்பது பொதுவான சம்பிரதாயமாகும். அதன்படி 2020.05.02, 2020.05.12 மற்றும் 2020.05.13 ஆம் திகதிகளில் தொடர்புடைய தரப்பினர்களுடன் தேர்தல்கள் செயலகத்தில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

## 09. அரசியற் கட்சிகளுக்கான அரசின் உதவி

i. 1981 ஆம் அண்டின் 1 ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆம் பிரிவிற்கமைய இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஏதேனுமோர் அரசியல் கட்சி ஏதேனும் தேர்தல் மாவட்டம் ஒன்றில் அதற்கு முன்னர் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் ஒரு தேர்தல் மாவட்டத்திற்காகப் போட்டியிட்டு அத்தேர்தல் மாவட்டத்தின் செல்லுபடியான வாக்கு எண்ணிக்கையில் நூற்றுக்கு ஒன்றை விட (1%) மேற்பட்ட வாக்கு எண்ணிக்கையொன்றை பெற்றுக் கொண்டிருப்பின் அவ்வாறான கட்சிகளுக்கு முன்னைய தேர்தலின் போது பெற்றுக் கொண்ட ஒரு வாக்கிற்கு ஐம்பது (50) சதம் வீதம் உதவியாகப் பெற்றுக் கொள்ள முடியும். அதன்படி, 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இப்பாராளுமன்றத் தேர்தலின் போட்டியிடுகின்ற இரண்டு (02) அரசியல் கட்சிகளுக்கு மாத்திரம் அக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்கு சாத்தியம் கிடைத்தது.

ii. கடந்த 2015 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் 1% இற்கும் அதிகமான வாக்குகள் எண்ணிக்கையை பெற்றுக்கொண்ட மொத்த அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 04 ஆகும். அதாவது,

1. இலங்கைத் தமிழ் அரசு கட்சி
2. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
3. ஐக்கிய தேசியக் கட்சி
4. மக்கள் விடுதலை முன்னணி

iii. எவ்வாறாயினும் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 (3) (அ) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த உரிமையைப் பெற்றுக் கொள்ளும் அடிப்படை நிபந்தனையான 2020 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பெயர் குறித்த நியமனம் செய்திருத்தல் என்ற வகையில் உரித்துப் பெற்றுக்கொள்ள இரண்டு (02) அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே முடியுமாக இருந்தது. அவையாவன:

1. இலங்கை தமிழ் அரசுக் கட்சி
2. ஐக்கிய தேசியக் கட்சி

iv. இவ்விரு கட்சிகளுக்கு கொடுப்பனவு செய்வதற்கு உரித்துக் காணப்பட்ட அரசாங்க உதவிகள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டவாறாகும்.

| கட்சியின் பெயர் | போட்டியிடுகின்ற தேர்தல் மாவட்டங்களுக்காக 2015 ஆம் ஆண்டின் தேர்தலின் போது பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | அரசாங்க உதவியாக செலுத்த வேண்டிய தொகை (ரூபா) |
|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 515,963 | 257,981.50 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 5,098,916 | 2,549,458.00 |
| **மொத்தம்** | | **2,807,439.50** |

v. இந்த உதவித் தொகையைப் பெற்றக் கொள்வதற்காக விண்ணப்பிக்குமாறு குறித்த அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளித்து ஐக்கிய தேசியக் கட்சியினால் மாத்திரம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமையால் அக் கட்சிக்கு உரித்தான ரூபா 2,549,458.00 தொகை 2020.06.11 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

## 10. பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்கள்

**i.** 2019 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததைத் தொடர்ந்து அதன் தேர்தலுக்குப் பின்னரான கடமைகளான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், அறிக்கைகள் தயாரித்தல் போன்றவை காரணமாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் அதிக வேலைப்பளுவுக்கு உட்பட்டிருந்தனர். தேர்தலொன்று முடிவுற்று ஐந்து (05) மாத வேலைப்பளுமிக்க காலப்பகுதியினுள் இந்த பாராளுமன்றத் தேர்தலுக்குமாக தயாராக வேண்டியேற்பட்டமை சவால்மிக்கதாகக் காணப்பட்டது. கடந்த சனாதிபதி தேர்தலுக்குரிய வாக்கெடுப்புப் பிரிவுகள், வாக்கெடுப்பு நிலையங்கள், அலுவலர், போக்குவரத்து, நலன்புரி ஒருங்கிணைப்பு, செயற்பாட்டு நடவடிக்கைகள் போன்ற பிரிவுகள் தொடர்பான தகவல்கள் தேர்தல்கள் அலுவலகத்தில் ஏற்கனவே காணப்பட்டமையினால் அத் தேர்தல் ஒழுங்கமைப்பு பணிகளுக்கு வசதியாக அமைந்ததோடு, அவற்றைக் கட்டாயம் இற்றைப்படுத்தப்பட வேண்டியிருந்தது. சனாதிபதித் தேர்தலோடு ஒப்பீட்டளவில் இத்தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியவற்றுக்கிடையில் காணப்பட்ட போட்டித்தன்மைகளுக்கமைய ஆணைக் குழுவிற்கு ஒப்படைக்கப்படுகின்ற பொறுப்புக்கள் மற்றும் பணிகள் என்பன சிக்கலடைவதனைத் தவிர்க்க முடியாது. தேர்தல் ஆணைக்குழு அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணை

யாளர்கள் அழைக்கப்பட்டு துரிதமாக அதுபற்றி அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அவ்வாறே, இந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் மாவட்டத் தெரிவத் தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியோர் தமது மாவட்டத்தில் பூர்வாங்க ஒழுங்கமைப்புச் செயற்பாடு களுக்குப் பொறுப்பான அலுவலர்களுக்குப் அத்தியாவசிய சேவை வசதிகளை வழங்குகின்ற மின்சார சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கை டெலிகொம் போன்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், மாவட்ட பொலிஸ் பிரதானிகள், உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் மற்றும் மாவட்ட மட்டத்திலான நிறுவனத் தலைவர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு பூர்வாங்க நடவடிக்கைகளை முறையாக ஒழுங்கு படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொண்டதன் மூலம் இந்தப் பணிகள் மேலும் எளிதானதாக அமைந்தது.

ii. தேர்தலின் பூர்வாங்க ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் தொடக்கம் தேர்தல்களை நடாத்திப் பெறுபேறுகள் வெளியிடப்படும் கால வரையில் தேர்தல் ஆணைக்குழு ஏனைய அரச மற்றும் நியதிச் சட்டரீதியான நிறுவனங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் ஆவணங்களைத் துரிதமாக பரிமாறிக் கொள்வதற்காக இலவச அஞ்சல் வசதிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இது தொடர்பாக 2020.02.21 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் அஞ்சல்மா அதிபருக்கு அறிவித்து அனுப்பப்பட்டிருந்த அதேவேளை, அஞ்சல்மா அதிபர் தலைமையிலான அஞ்சல் திணைக்களத் பிரதானிகளுடன் 2020.03.11 ஆம் திகதி மற்றும் 2020.06.22 ஆம் திகதிகளில் தேர்தல்கள் செயலகத்தில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதுடன் தேர்தல் ஆவணங்களை “முன்னுரிமைச் சேவைகள்” இன் கீழ் கட்டணமின்றி விரைவாக அனுப்பி வைத்தல், அஞ்சல் வாக்களிப்புச் செயற்பாடுகள், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகம் செய்தல் ஆகியன தொடர்பாக நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு மற்றும் தபால்மா அதிபரின் ஆலோசனைகளின் பிரகாரம் தெரிவத்தாட்சி அலுவலர்கள்/ மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் மாகாண பிரதித் தபால் ஆணையாளர்கள் மற்றும் பிரதேச தபால் அத்தியட்சகர்கள் ஆகியவர் களுடனும் மாவட்ட மட்டத்தில் இவ்வாறான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அங்கு கலந்துரை யாடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பாராளு மன்றத் தேர்தல் தொடர்பான சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் கடிதங்கள், அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைத் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு சமர்ப்பித்தல், அஞ்சல் வாக்கு உள்ளடக்கப்பட்ட காப்புறுதி பக்கற்றுக்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பக்கற்றுக்களை மீண்டும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு மீளவரவழைத்துக் கொள்ளல், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகித்தல் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வகுப்புகளை நடாத்துதல் மற்றும் நியமனக் கடிதங்களை அனுப்புதல், கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு தேர்தல் பிரச்சார ஆவணங்களை தபால் கட்டணமின்றி அனுப்புவதற்கான பணிகள் உள்ளடங்கலாக, பாரியதொரு பணிப் பொறுப்புக் களை வரையறுக்கப்பட்ட காலப் பகுதிக்குள் மேற்கொள்ள அஞ்சல் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது. சிறந்த ஒருங்கிணைப் பொன்றுடன் அஞ்சல் மா அதிபர் தலைமையிலான திணைக்களத்தின் மொத்த அலுவலர்களும் திறமையானதும் வினைத்திறனானதுமான விதத்தில் கையளிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றியமை இந்தத் தேர்தலின் பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகள் எளிதாக்கிக் கொள்வதற்க உதவியாக அமைந்தது.

iii. தேர்தல் ஒன்றின் போது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் உள்ளடங்கலாக நியதிச் சட்ட ஆவணங்களை அச்சிட்டு வழங்கும் பொறுப்பு அரசாங்க அச்சகத்திற்கு ஒப்படைக்கப்படும். பாராளுமன்றத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங் களுக்காக ஒன்றுக்கொன்று வேறுபட்ட வாக்குச் சீட்டுக்களை அச்சிடுதல் இலகுவான ஒரு பணியன்று. மாவட்ட அலுவலகங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற மாதிரி வாக்குச் சீட்டுக்கள் மற்றும் வாக்குச் சீட்டு அச்சிடல் கட்டளைக்கமைய பல முறைகள் ஒப்பிட்டு பரிசீலனை செய்து மிகச் சரியான கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்படும். தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலக உத்தி யோகத்தர்கள் மற்றும் அரசாங்க அழுத்தகர் உட்பட பதவியணியினருடன் தொடர்ச்சியான இணக்கப்பாடினைப் பேணி வாக்குச் சீட்டுக்கள் உள்ளடங்கலாக நியதிச் சட்டரீதியான ஆவணங்களை உரிய நேரத்தில் விதிமுறையான அடிப்படையில் அவற்றை மாவட்டங்களுக்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது. தேர்தலின் பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு இது பேருதவியாக அமைந்தது.

iv. முழுமையான தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குத் தேவையான மேலதிகத் தொலைபேசி, தொலைநகல் வசதிகளைப் பெற்றுக் கொள்ளல், இணையத்தள வசதிகளை மேம் படுத்துவதற்கும் மற்றும் புதிய தொடர்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் இலங்கை ரெலிகொம் நிறுவனமும், தேவையற்ற இடையூறுகள் அல்லது தடங்கல்கள் ஏற்படாதவாறும் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை மின்சார சபை,

இலங்கை மின்சார தனியார் நிறுவனம் மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் அலுவலர்களுடன் தேர்தல்கள் செயலகத்தில் கலந்துரையாடி உரிய பணிகள் ஒழுங்கு செய்யப்பட்டதோடு, அவர்கள் வழங்கு கின்ற சேவைகளுக்கான கட்டண அளவுகள் குறித்தும் இணக்கப்பாடு காணப்பட்டது. ஆணைக் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் மாவட்ட மட்டத்திலும் இதே விதத்தில் உரிய நிறுவனங் களின் பிராந்திய அலுவலர்களுடன் கலந்துரையாடி அச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

v. தேர்தல் பணியாட்குழுவினர் மற்றும் வாக்காளர் களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் களின் பொறுப்பில், வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் உள்ளடங்கலான நியதிச்சட்ட ஆவணங்கள் மற்றும் பொருட்களாதியவற்றைப் போக்குவரத்து செய்வதை சிறந்த திட்டமிடலுடன் ஒழுங்கமைத்தல் அவசியமான விடயமொன்றாகும். எனவே, இலங்கைப் போக்கு வரத்துச் சபை, புகையிரத திணைக்களம் மற்றும் பொதுப் போக்குவரத்து அதிகாரசபை, தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் ஆகிய வற்றுடன் கலந்துரையாடி போக்குவரத்து வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்படடன. எனினும், இலங்கையில் காணப்படுகின்ற நில வேறுபாடுகளுக் கமைய சில வாக்கெடுப்பு நிலையங்களுக்கு தரைவழியாக மாத்திரம் போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு சிரமமான வாக்கெடுப்பு நிலையங்களும் உள்ளன. அது தொடர்பாக மாற்றுவழியில் இலங்கை விமானப் படை மற்றும் இலங்கை கடற்படை மற்றும் ஏற்புடையதானவாறு உள்ளூராட்சி நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டியிருந்தது. எனவே அந்த நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரை யாடலொன்று நடாத்தப்பட்டு பொருத்தமான வகையில் மாவட்ட உத்தியோகத்தர்களும் அறிவுறுத்தி போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒழுங்கமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த தோடு, அதற்காக குறித்த நிறுவனங்களின் முழுமை யான ஒத்துழைப்பு தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றமை பாராட்டப்படுதல் வேண்டும். தேர்தல் செயற்பாடுகளுக்காக மாவட்ட அலுவலகங் களின் தேவைக்கேற்ப, வாக்குப் பெட்டிகள், சுகாதாரப் பாதுகாப்புப் பொருட்கள், எழுத்தாவ ணங்கள் போன்றவைகளை மாவட்டங்களுக்கு விநியோகிக்கும் போது போக்குவரத்துத் தேவைப் பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேர்தல்கள் செயலகத்தில் வாகன ஒதுக்கொன்றும் பேணிவரப்பட்டது.

vi. கடந்த சனாதிபதித் தேர்தலின் போது அமுல்படுத் தப்பட்ட ஊடக ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் இத்தேர்தலிற்காகவும் பயன்படுத்தப் பட்டிருந்தது. அதன் பிரகாரம், அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் அரசாங்க தகவல் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி ஊடகப் பிரிவொன்று தேர்தல் ஆணைக்குழுவில் நிறுவப்பட்டது. அதன் பிரகாரம், பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான ஊடகக் கலந்துரையாடல் களை நடாத்துதல், நியதிச்சட்ட விடயங்கள் அடங்கிய குறுந்திரைப் படம் மற்றும் விவரண நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் மற்றும் ஒளிபரப்புதல், தேர்தல் தொடர்பாக ஊடகங்களில் வெளியிடப்படு கின்ற பத்திரிகை அறிக்கைளைச் சேகரித்தல், ஊடக அறிவித்தல்கள், ஊடகங்களுக்குத் தகவல் மற்றும் செய்திகளை துரிதமாக வழங்கல் மற்றும் பெறுபேறுகளை உடனுக்குடன் அனைத்து ஊடகங்களுக்கும் வழங்குதல் போன்றே அனைத்து தரப்பினருக்கும் சமமான சேவையை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை வினைத்திறனாக நிறை வேற்றுதல் இந்நிலையத்தின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உட்பட்டதாகக் காணப்பட்டது. அதே போன்று தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையின் பிரகாரம் வெகுசனத் தொடர்பாடல் அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் அனைத்துத் தொலைக்காட்சி அலைவரிசைகளினதும் செய்தி மற்றும் அரசியல் நேர்முகக் கலந்துரையாடல்களின் விடயங்களை நாளாந்தம் பகுப்பாய்வு செய்து அது தொடர்பான அறிக்கைகள், நாளாந்தம் ஆணைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

## 11. தேருநர் இடாப்புக்கள்.

i. இந்தப் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற் குரிய அறிவித்தல் வெளியிடப்படுகின்ற போது செல்லுபடியாகக் காணப்பட்டது 2019 ஆம் ஆண்டில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பாகும். பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவ தற்கான இடவசதியை கவனத்திற் கொண்டு போதுமானளவு 2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் பிரதிகளைத் தயாரித்து வைத்திருத்தல் பூர்வாங்க ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளுக்குப் பெரிதும் உதவியது. 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட குறை நிரப்பு தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள வாக்காளர்கள் பதினொரு (11) பேர் சகிதம் 2019 ஆம் ஆண்டில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேருநர் இடாப்பிற்கமைய மொத்தப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 16,263,885 ஆகும். அந்த எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட தேருநர் இடாப்பில் பதிவு செய்யப் பட்டுள்ள வாக்காளர்களைவிட 271,789 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததோடு இது 1.69% அதிகரிப்பாகும். 2018 மற்றும் 2019 வருடங்களில் தேர்தல் மாவட்டங்களின்படி தேருநர் இடாப்புக் களின் தகவல்கள் **03 இலக்க புள்ளி விபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளன. பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் செய்யப்பட்ட கோரிக்கைகள் மற்றும் அவற்றின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவ தற்கு தேருநர் இடாப்பின் மென் பிரதிகள்

(இறுவட்டுகள்) இவ்வாறு இறுவட்டுக்களாக தேருநர் இடாப்பின் பிரதிகளை வழங்குதல் ஆணைக் குழுவினதும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றின் செயற்பாடு களின் போது வசதியாக அமைந்தது. சமகாலத்தில் எழுத்தாவணப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தகவல் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தும் போது இறுவட்டுக்களில் வழங்கப்படுகின்ற தேருநர் இடாப்புக்களின் மென் பிரதிகள் மிகவும் பயனுடையவையாகும். இவ்வாறு போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு விற்பனை செய்யப்பட்ட தேருநர் இடாப்புக்களின் இறுவட்டுகள் தொடர்பான தகவல்கள் **04 ஆம் இலக்க புள்ளிவிபர அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

## 12. தேருநர் இடாப்புக்கள் மற்றும் தேர்தல் மாவட்டங்களுக்கமைய தெரிந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை.

i. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவிற்கமைய தேர்தலொன்று நடாத்தப்படுதலை தேவைப்படுத்தும் பிரகடனம் வெளியிடப்படும் திகதியில் நடைமுறையிலிருக்கும் தேருநர் இடாப்பு குறித்த தேர்தலுக்கு செல்லுபடியானதாக இருந்தமை யினால் இந்தப் பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும் என்ற பிரகடனம் வெளியிடப்பட்ட திகதியில் செல்லுபடியாக இருந்த 2020.01.24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் அடிப்படையில் அரசியலமைப்பின் 98 (8) ஆம் உறுப்புரைக்கு அமைவாக நியமிக்கப்படவுள்ள (தெரிந்தனுப்ப வேண்டிய) உறுப்பினர்களின் எண்ணிக்கை 2164/9 ஆம் இலக்க 2020.02.24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேர்தல் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டது.

ii. அரசியலமைப்பின் 96 (4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஒவ்வொரு மாகாணத்தின் தேர்தல் மாவட்டங்களுக்கும் அந்தந்த தேர்தல் மாவட் டத்தின் தேருநர் இடாப்பில் பெயர்களைக் கொண்டுள்ள தேருநர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒட்டு மொத்தமாகத் தேர்ந்தெடுப்ப தற்கு உரித்துடைய உறுப்பினர்கள் (160) இதற்கு மேலதிகமாக ஒரு மாகாணத்திற்கு நான்கு உறுப்பினர்கள் வீதம் 36 உறுப்பினர்களை (9X4-36) நியமனம் செய்வதற்கு உரித்துண்டு. மேற்குறிப் பிட்டவாறு நியமிக்கப்பட்ட (160+36) 196 உறுப்பினர் களுக்கு மேலதிகமாக 29 உறுப்பினர்கள் அரசியலமைப்பின் 99 (அ) உறுப்புரையின் கீழ் ஒவ்வொரு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் உறுப்பினர்கள் (தேசியப் பட்டியல் உறுப்பினர்கள்) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதன் பிரகாரம், பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகும்.

## 13. வாக்கெடுப்புப் பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்கள்

i. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் மூன்றாம் பிரிவுக்கமைய மற்றும் 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கு ஏற்ப தற்காலப்பகுதியில் செயல்வலு விலுள்ள ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவு மற்றும் வாக்கெடுப்பு மாவட்டம் சட்டத்தின் நோக்கங் களுக்காக முறையே வாக்கெடுப்புப் பிரிவொன்று மற்றும் வாக்கெடுப்பு மாவட்டமொன்றாகக் கருதப் படல் வேண்டும். எனவே, பாராளுமன்றத் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் செல்லுபடி யாகக் காணப்பட்ட 2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கமைய வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்கள் இந்தத் தேர்தலின் நோக்கங்களுக்காக செல்லுபடியானதாக்கப்பட்டது.

ii. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவிற்கமைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தலில் அப்பிரிவின் (இ) இன் பிரகாரம் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டங்களிலும் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும். ஒரு வாக்கெடுப்பு மாவட்டத்தினுள் வாக்கெடுப்பு நிலையங்களைத் தாபிக்கும் போது வாக்காளர் களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறைக்கும் வகையில் மற்றும் இயலுமான வரையில் 1500 இற்கு அல்லது அதற்கு அண்மித்த வாக்கு எண்ணிக்கையொன்றுக்காக ஒரு வாக்கெடுப்பு நிலையமொன்று என்றவாறு அவற்றை தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. சிற்சில சந்தர்ப்பத்திற்கேற்ற விடயங்கள் காரணமாக மற்றும் நிலத்தில் காணப்படுகின்ற நடைமுறை நிலைமையைக் கருத்திற் கொள்ளும் போது மிகவும் பொருத்தமான புதிய கட்டிடங்கள் இனங்காணப்பட்டதன் காரணமாக முந்தைய தேர்தலின் போது பயன்படுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் சிறு எண்ணிக்கையொன்று திருத்தம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் தகவல்கள் உள்ளடங்கலாக 2179/7 ஆம் இலக்க மற்றும் 2020.06.09 ஆம் திகதிய வாக்கெடுப்புப் பற்றிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப இந்த பாராளுமன்றத் தேர்தலுக்குரிய வாக்கெடுப்பு மாவட்டங்கள் 12,774 ஆகக் காணப்பட்டதோடு அவற்றில் தாபிக்கப்பட்ட மொத்த வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை 12,985 ஆகும். அவ் வாக்கெடுப்பு நிலையங்களில் 215 வாக்கெடுப்பு நிலையங்கள் பெண் வாக்காளர்களுக்காக குறித்தொதுக்கப்பட்டிருந்தது. அவை தொடர்பான அனைத்து விபரங்களும் **05 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

iii. பொதுவாக வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுவதற்கு அண்மித்த காலப்பகுதியின் போது நடைமுறை யிலுள்ள வாக்கெடுப்பு நிலையங்களின் அமைவிடம், பொருத்தப்பாடு மற்றும் வசதிகள் என்பன தொடர்பாகப் பரிசோதனையை மேற்கொள்வது தேர்தல் ஆணைக்குழுவின் சம்பிரதாய மொன்றாக உள்ளது. அப்பணி சம்பிரதாயத்திற் கமைய மேற்கொள்ளப்படுகின்ற ஒன்று மட்டு மல்லாது சுதந்திரமாகவும், நியாயமாகவும் அனாவசியமான இடையூறுகளின்றி தேருநர்கள் தமது வாக்கைப் பிரயோகிப்பதற்கு தேவையான பின்னணியைப் பூர்த்திசெய்கின்ற ஒரு நடவடிக்கையுமாகும். இத்தேர்தலுக்கு ஏறக்குறைய 05 மாதங்களுக்கு முன்னர் சனாதிபதித் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் இப்பாராளுமன்ற தேர்தல்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்ற கட்டிடங்களில் தேவையான சிறு சிறு பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு பொருத்த மானவாறு அமைத்துக் கொள்வதற்கு மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் பூர்வாங்க நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பிரிவுகளுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர்களின் உதவியுடன் மேற்கொள்ளப் பட்டது. எவ்வாறாயினும், சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பின் பின்னர் வாக்காளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களிலிடமிருந்த கிடைக்கப் பெற்ற வேண்டுகோள்கள், கருத்துக் கள்/ முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு சனாதிபதித் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் சிறு எண்ணிக்கை யொன்று வேறு இடங்களுக்கு மாற்றம் செய்யப் பட்டது. வாக்கெடுப்பு நிலையங்களைத் தாபிக்கும் போது வாக்காளர்கள் இலகுவாக பிரவேசிக்கக் கூடிய இடங்களில் அமையப்பெற்றுள்ள அரச பாடசாலைகள், அரசாங்கக் கட்டிடங்கள், சனசமூக நிலையங்கள், மதத் தலங்கள் தெரிவு செய்யப் பட்டது. அவ்வாறான கட்டடங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் அரச காணிகளில் அல்லது பிரத்தியேக தனியார் இடங்களில் தற்காலிகமாகக் கட்டிடங்கள் (கொட்டில்கள்) நிர்மாணிக்கப்பட்டு வாக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

iv. தற்போதுள்ள நிலவுகின்ற நடைமுறை நிலை மையின் கீழ் ஒரு நிலையத்திற்கு செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கை சாதாரண எண்ணிக் கையை விட அதிகமான பெறுமதியொன்றை கொண்டிருக்குபோது ஆண்கள் மற்றும் பெண்கள் எனத் தனித் தனியாக வரிசைகளைப் பேணி வருதல் அல்லது வாக்காளர் இடாப்பில் தொடரிலக் கங்களின் பிரகாரம் பொறுத்தமானவாறு வரிசை களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் அல்லது ஆண், பெண் வாக்காளர்களுக்காக தனியான வாக்கெடுப்பு நிலையங்கள் நிறுவப்படுகின்றன. அந்த வாக்கெடுப்பு நிலையங்களின் வகைப்படுத்தல் மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்களின் வகைப்படுத்தல் **06 ஆம் இலக்க புள்ளி விபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

## 14. வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்குதல்.

i. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கு 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத் திருத்தம் செய்யப்பட்ட சட்டத்தினால் செய்யப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் தனது வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தின் நிலமையைக் காரணமாகக் கொண்டு, அந்த வாக்கெடுப்பு நிலை யத்தில் தனது வாக்கினைப் பிரயோகிக்க முடியாது போகுமென்ற நியாயமான பயத்தைக் கொண்டுள்ள வாக்காளர் ஒருவருக்கு, சட்டத்தின் 127 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவிடம் வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப் பதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை முன்வைக்க முடியும். அவ்வாறான கோரிக்கை யொன்றை பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரான ஒரு வாரத்திற்குள் செய்யப்படுதல் வேண்டும். இது தொடர்பாக 2165/18 ஆம் இலக்க 2020.03.03 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டதோடு பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் ஊடக அறிவித்தல்கள் மூலமாகவும் பரந்தளவிலான பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

ii. இப்பாராளுமன்றத் தேர்தலின் போது இந்த வசதியைக் கோரிய, வன்னி தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள போதும், தனக்கு உரித்தான வாக்கெடுப்பு நிலை யத்திற்குச் சென்று வாக்களிப்பதற்கு முடியாது போகுமென்ற நியாயமான பயத்தைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்காக, வாக்களிப்பதற்காக 16 ஆம் இலக்கம் கொண்ட புத்தளம் தேர்தல் மாவட்டத்தில் வாக்கெடுப்பு நிலையங்கள் குறித் தொதுக்கிக் கொடுக்கப்பட்டது. இது தொடர்பான தகவல்கள் 2184/19 ஆம் இலக்க மற்றும் 2015.07.15 ஆம் திகதிய அரசாங்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதோடு இது தொடர்பான விபரங்கள் **07 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது

## 15. அஞ்சல் மூலம் வாக்களித்தல்.

i. வாக்கெடுப்புக் கடமைகளில் ஈடுபடுகின்ற அரசாங்க ஊழியர்களுக்கும் மற்றும் தேர்தல் கடமைகள் மற்றும் தொடர்புடைய ஏனைய அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுகின்ற ஊழியர்களுக்கும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 26 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அஞ்சல் மூலம் வாக்களிப்

பதற்கான உரிமை உண்டு. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26 (3) ஆம் பிரிவின் பிரகாரம் அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப் படுவதற்காகச் செய்யப்படுகின்ற கோரிக்கை யொன்று, தேர்தலொன்றை நடாத்துவதை தேவைப்படுத்தும் பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட திகதியின் பின்னர் ஏழாம் நாளுக்கு முற்படாதும், பதினான்காம் நாளுக்குப் பிந்தாமலும் சென்றடையும் வண்ணம் தெரிவத் தாட்சி உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

ii. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகைமை பெறுவோர் யாவர் என்பது, பாராளுமன்றம் தேர்தல்கள் சட்டத்தின் 26 (2) ஆம் பிரிவில குறிப்பிடப்பட்டுள்ளவாறு முப்படையின் உறுப்பினர்கள், பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் உத்தி யோகத்தர்கள், சிறைச்சாலை திணைக்கள உத்தியோகத்தர்கள், புகையிரதத் திணைக்களம், அஞ்சல் திணைக்களம் மற்றும் தொலைத் தொடர்புகள் திணைக்களத்தின் பணியாட் குழு வினர் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பணியாட் குழுவினர், தேர்தல் கடமைகள் கையளிக்கப்படுகின்ற அரச அல்லது மாகாண சேவையின் அல்லது மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள், வசிக்கும் மாவட்டம் தவிர, வேறு நிர்வாக மாவட்டமொன்றுக்காகத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் ஆகியோர் களுக்கு இவ் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்ப வேண்டிய விண்ணப் பங்களைப் பூர்த்தி செய்வதற்காக விண்ணப்ப தாரர்கள் தமது பதிவு விபரங்களைத் தேருநர் இடாப்புக்களிலிருந்து தேடிப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அப்பணிகளை எளிதாக்குவதற்காக வாக்கெடுப்பு நடாத்தப்படுகின்ற மாவட்டங்களில் தேர்தலுக்கு செல்லுபடியான தேருநர் இடாப்புக்கள், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும் பிரதேச செயலகங்களிலும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஏற்புடையவாறு கிராம உத்தி யோகத்தர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப் பட்டது. இதற்கு மேலதிகமாக, பெரும்பாலான அரசாங்க உத்தியோகத்தர்கள் பணிபுரிகின்ற பொது நிர்வாக அமைச்சு, மாகாண சபைகள் மற்றம் உள்ளூராட்சி அமைச்சு,தொழில் செயலகம், கல்வி அமைச்சு, பதிவாளர் நாயகத் திணைக்களம், அஞ்சல் தலைமையகம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு, செத்சிரிபாய முதலாம் கட்ட அலுவலகக் கட்டிடத் தொகுதி ஆகிய கொழும்பு மாவட்டத்தின் அரசாங்க அலுவலகங்கள் அமையப்பெற்றுள்ள வளாகங் களிலும் தேருநர் இடாப்புக்களை காட்சிப்படுத்துவ தற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. பாதுகாப்புப் பிரிவுகளின் உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாடுபூராவும் அமையப்பெற்றுள்ள சேவை நிலையங்களில் சேவையாற்றுவதால், முப்படை மற்றும் பொலீஸ் ஆகியவற்றுக்குரிய கடமை நிலையங்களில் அஞ்சல் வாக்களிப்பு வசதிகளுக்காக விண்ணப்பிக் கின்றவர்களின் பதிவுத் தகவல்களைப் பரிசீலனை செய்து பார்ப்பதற்காக இறுவட்டுக்களாகத் தயாரிக்கப்பட்ட தேருநர் இடாப்புக்களின் பிரதிகளை தேர்தல் செயலகத்திலிருந்து அவ்வலுவலகங்களின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, இத்தகவல்களை வழங்குவ தற்காக தேர்தல்கள் செயலகத்தில் தாபிக்கப் பட்டிருந்த விசேட தொலைபேசி வழியாகவும், 1919 அரசாங்க தகவல் மையத்தினூடாகவும் தேருநர் இடாப்பில் தமது பதிவு விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. அஞ்சல் மூலம் வாக்களிப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பவர்களை அது பற்றி அறிவுறுத்துவதற்காக மும்மொழி களிலும் செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

iii. இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைப் கையேற்றல் 2020.03.06 ஆம் திகதி ஆரம்பித்து 2020.03.16 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடிவடையவிருந்தது. எனினும், எதிர்பாராத விதத்தில் எதிர்கொள்ள வேண்டியேற்பட்ட 19 கொவிட் நோய் பரவல் கட்டுப்பாட்டுக்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள், அதாவது சாதாரண வேலை நாட்கள் அரச விடுமுறை தினங்களாகப் பிரகடனப்படுத்தப்படல், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தல், பயணக் கட்டுபாடுகளை விதித்தல் என்பவற்றின் காரணமாகவும், இரண்டு சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பு தினம் திருத்தம் செய்யப்பட்டமையாலும் அஞ்சல் வாக்கு விண்ணப் பங்களைக் கையேற்கும் காலப்பகுதியை பிற்போட வேண்டியேற்பட்டது. அதன் பிரகாரம் அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்களுக்கு 2020.05.14 ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை கிடைக்கப்பெற்றிருந்த அனைத்து விண்ணப்பங்களையும் கையேற்றுக் கொள்வதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதோடு, அது தொடர்பாக விரிவான அடிப்படையில் ஊடகப் பிரச்சார மொன்றை செய்வதற்கும் நடவடிக்கையெடுக்கப் பட்டது. தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்துவ தற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அனைத்து உத்தி யோகத்தர்களுக்கும் அஞ்சல் மூல வாக்களிப்பு வசதிக்காக விண்ணப்பிப்பதற்கு போதுமான காலயெல்லையொன்றை வழங்கும் நோக்கில், அஞ்சல் வாக்கிற்காக விண்ணப்பிக்கும் காலப் பகுதியை மாற்றம் செய்வது ஒரு அவசியமான விடயமாகக் காணப்பட்டது.

iv. எதிர்பாராத விதத்தில், நாடு முழுவதும் வேகமாகப் பரவிய கொவிட் தொற்று நோயைக் கட்டுப் படுத்துவதற்கான முழுப் பொறுப்பும் சுகாதாரப் பணிக்குழுவினருக்கு நேரடியாகக் கையளிக்கப் பட்டது. அதற்காக 24 மணி நேரமும் சுகாதார பணியாட்குழுவின் அங்கத்தவர்கள் அவர்களின்

பங்களிப்பை முழுமையாக வழங்கி கொவிட் தொற்று நோய் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். வாக்காளர்கள், தேர்தல்கள் பதவி யணியினரும் சுகாதாரத்தைப் பேணி தொற்று நோய் கட்டுப்பாட்டு சட்ட விதிகளின் கீழ் தேர்தலை நடாத்துவதற்கு சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது கட்டாயமான தேவைப்பாடாகக் காணப்பட்டது. நாட்டிற்குள் கொவிட் தொற்று நோய்க் கட்டுப்பாடு, பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பை முறையாக முன்னெடுத்தல் மற்றும் வாக்கெடுப்பை நடாத்தும் போது சுகாதார பாதுகாப்பான வழிமுறைகளை பின்பற்றுவதை செயல்வலுப்படுத்தும் பணிக்காக சுகாதாரப் பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதன் காரணமாக, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26 (2) (ஆ) பிரிவில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் சுகாதாரப் பணியாட் தொகுதி உறுப்பினர்களுக்கும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், சுகாதார உத்தியோகத்தர்களின் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல் 2020.05.21 ஆம் திகதி ஆரம்பமாகியதோடு, அது 2020.06.08 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடிவடைந்தது.

v. கிடைக்கப் பெற்றுள்ள அனைத்து அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்பட்டு அவை அங்கீகரிக்கப்பட்டதென்ற அல்லது அவை நிராகரிக் கப்பட்டதென்ற மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் களின் தீர்மானங்கள் விண்ணப்பதாரர்களிட்கும் பிரதியொன்று சகிதம் அவர்களின் அத்தாட்சிப் படுத்தும் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படும். அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படுவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படு கின்றன. தெரிவத்தாட்சி அலுவலர் அவர்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதியினுள் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெறாமை, அஞ்சல் வாக்கு உரித்தின்மை, விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது விண்ணப்பதாரரின் விபரங்கள் சரியான முறையில் குறிப்பிடப்படாமை அல்லது குறைபாடு களுடன் குறித்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரினால் அல்லது விண்ணப்பதாரி யினால் விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடப் படாமை, அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் தகவல்கள் உறுதிப்படுத்தப்படாமை போன்ற விடயங்கள் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் நிராகரிப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணங்களாகும். தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைத்த விண்ணப்பங்கள் மற்றும் அவை நிராகரிக்கப்பட்ட விதம் தொடர்பான விபரங்கள் **08 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப் பட்டுள்ளது.

vi. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 1981 அஞ்சல் வாக்காளர்கள் தொடர்பான (பாராளுமன்றத் தேர்தல்கள்) ஒழுங்கு விதிகள் 4 (1) ஆம் ஒழுங்கு விதிக்கு இணங்க அஞ்சல் வாக்காளர்களின் பட்டியலைத் தயாரிப்பதற்காக ஒவ்வொரு அஞ்சல் வாக்காளரினதும் செல்லுபடியான தேருநர் இடாப்பின் பதிவுக்குரிய தகவல்கள் மற்றும் அத்தகையவர் களின் அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் அலுவலக முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் என்பன அவசியமாகும். அஞ்சல் வாக்காளர் பெயர்ப்பட்டியலைத் தயாரிக்கும் போது மேற்கூறப்பட்ட விபரங்களும் கணனியில் பதியப் படும். அதேபோன்று ஒவ்வொரு அஞ்சல் வாக்காளரின் பதிவு பற்றிய தகவல்கள் தேருநர் இடாப்புடன் தொடர்புடைய கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் வசதிகளைப் பயன்படுத்தி அஞ்சல் வாக்குப் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. அதற்கமைய அஞ்சல் வாக்கு பதிவேட்டைத் தயாரிக்கும் போது மேலதிகமாக உள்ளடக்கப்பட வேண்டியது, அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் தகவல்கள் மாத்திரமாகும். அஞ்சல் வாக்கு பெயர்ப் பட்டியல் வன் பிரதிகளாகவும் மற்றும் மென் பிரதிகள் கொண்ட இறுவட்டுக்கள் (CD) வடிவிலும் தயாரிக்கப்பட்டன. போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு இறுவட்டுக்கள் (CD) மாத்திரம் வழங்கப்பட்டன.

vii. அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் களின் கடமைகள் தொடர்பாக அவர்களை அறிவுறுத்துவதற்காக அச்சிடப்பட்ட அறிவுறுத் தல்களை அந்த உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், அதற்கு மேலதிகமாக, அவர்களை அழைத்து அறிவுறுத்தல் பயிற்சி அமர்வுகளை நடாத்துவதற்கும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணை யாளர்கள் ஆகியோரால் நடவடிக்கையெடுக்கப் பட்டது. அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்புக்களை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்துவ தற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

viii. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் (26 ஆம் பிரிவு) குறிப்பிடப் பட்டுள்ளவாறு அஞ்சல் வாக்காளர்கள் தொடர்பான ஒழுங்கு விதித் தொடரின் 10 (1) ஆம் ஒழுங்கு விதிக்கு ஏற்ப மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் ஏனைய விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட அரச அலுவலகங்கள், அரச பாடசாலைகளில் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்க வேண்டியிருந்தது. முன்னைய தேர்தல்களின் போது இந்தப் பணியினை ஒரு தினத்தினுள் நிறைவு செய்த போதும், கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டியிருந்த காரணத்தினால், இம்முறை அஞ்சல் வாக்குச் சீட்டுக்கள் 2020.06.30 மற்றும் 2020.07.01 மற்றும் 02 ஆம் திகதிகளில் விநியோகிக்கப்பட்டதோடு, அவ்வாறு விநியோகிக்கப்படுவதாகவும் மற்றும்

ஒவ்வொரு விநியோகித்தல் நிலையங்களுக்காக நியமிக்கப்படக்கூடிய முகவர்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அறிவிக்கப் பட்டது. அஞ்சல் வாக்கு விநியோகிப்பதற்குரிய தகவல்கள் **09 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

ix. கடந்த அண்மித்த தேர்தல்களின் போது அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை அடையாளமிடுவதற்காக வரை யறுக்கப்பட்ட சில நாட்கள் மாத்திரம் குறித் தொதுக்கப்பட்டன. அஞ்சல் வாக்கு விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, முதல் தடவையாக அஞ்சல் வாக்கினை அடையாள மிடவுள்ள சுகாதாரப் பணியாட்தொகுதி உறுப்பினர் களின் எண்ணிக்கையை அதிகரித்தமை அஞ்சல் வாக்கு அடையாளமிடும் போது சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றதாவென மேற் பார்வை செய்ய வேண்டியேற்பட்டமை மற்றும் கொவிட் தொற்று நோய் காரணமாக சில பகுதிகள் தற்காலிகமாக மூடப்பட்டமை ஆகிய காரணங்களால் இந்தத் தேர்தலின் போது அஞ்சல் வாக்குகளை அடையாளமிடல் பத்து (10) தினங்களில் இடம்பெற்றன. அவ்விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- அனைத்து சுகாதார மருத்துவர்களின் அலுவலகங் களில் அஞ்சல் வாக்கு அடையாளமிடல் - 2020.07.13
- அனைத்து அரச அலுவலகங்கள், பாடசாலைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் அஞ்சல் வாக்கு அடையாளமிடுதல் - 2020.07.14 மற்றும் 15
- பாதுகாப்புப் பிரிவுகள், பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப் படையணி, சிவில் பாதுகாப்பு திணைக்களம், மாவட்டச் செயலாளர் அலுவல கங்கள், சுகாதாரப் பிரிவின் அலுவலகங்கள்/ வைத்தியசாலைகள், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழு பணியாட்குழுவினரை அஞ்சல் வாக்குகளை அடையாளமிடல் - 2020.07.16 மற்றும் 17 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டன.
- மேலே குறிப்பிடப்பட்ட தினங்களில் வாக்கினை அடையாளமிட முடியாது போனவர்களுக்காக வழங்கப்பட்டிருந்த திகதிகள் 20.07.20, 21, 24 மற்றும் 25
- ராஜாங்கனை பிரதேசத்தில் அஞ்சல் வாக்கு அடையாளமிடுதல் - 2020.07.29

x. முன்னைய தேர்தல்களைப் போன்று அஞ்சல் வாக்குகள் அடையாளமிடத் திட்டமிடப்பட்டிருந்த தினங்களில் அஞ்சல் வாக்கை அடையாளமிட முடியாது போன அஞ்சல் வாக்காளர்களுக்குரிய காப்புறுதி பக்கற்றுக்களை, அஞ்சல் வாக்கு அடையாளமிடல் கண்காணிப்புப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாக அல்லது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் ஊடாக தாமதமின்றி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்குக் வரவழைத்துக் கொள்ளப் பட்டது. தமது அஞ்சல் வாக்கை அடையாளமிட முடியாது போன அஞ்சல் வாக்காளர்களுக்கு 2020.07.20, 21, 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் அந்தந்த மாவட்டங்களின் தேர்தல்கள் அலுவலகங் களில் வாக்கினை அடையாளமிடுவதற்காக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இப்பணி களைக் கண்காணிப்பதற்காக, முகவர்களை பெயர்குறிக்குமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப் பட்டிருந்ததுடன் இந்த மேலதிக அடையாளமிடும் தினங்கள் தொடர்பாக குறித்த அஞ்சல் வாக்காளர்கள், அவர்களின் அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்கள் ஊடாகவும் மற்றும் விசேட ஊடக அறிவித்தல் ஊடாகவும் அறிவுறுத்தப்பட்டனர். இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட திகதிகளிலும் வாக்களிப்பதற்காக வருகைதராத அஞ்சல் மூல வாக்காளர்களின் காப்புறுதிப் பக்கற்றுக்கள் வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் காப்புறுதி அஞ்சல் மூலம் குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

xi. அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த நாட்களில் எதிர்பாராதவிதமாக கொவிட் நோயாளிகள் இனங்காணப்பட்ட காரணத்தால் அனுராதபுர மாவட்டத்தில் ராஜாங்கனைப் பிரதேசத்தை தற்காலிகமாக மூடுவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந் நிலைமை காரணமாக அடையாளமிடுவதற்கு முடியாது போன அஞ்சல் வாக்குகளின் எண்ணிக்கை முன்னூற்று தொன்னூறு (390) ஆகும். இந்த வாக்குகளுக்கு மேலதிகமாக ராஜாங்கனைப் பிரேதசத்தில் வசிக்கின்ற, இருப்பினும் பிரேதசத்துக்கு வெளியேயுள்ள நிறுவனங்களில் சேவையாற்றிய அஞ்சல் வாக்காளர்கள் 101 பேரும் உள்ளடங்கும். அதன் பிரகாரம், பயணத்தடை மற்றும் தனிமைப் படுத்தல் நடவடிக்கைகள் காரணமாக ராஜாங்கனை பிரதேசத்தில் உரிய தினங்களில் அடையாளமிட முடியாது போன மொத்த அஞ்சல் வாக்குகளின் எண்ணிக்கை நானூற்று தொன்னூற் றொன்று (491) ஆகும். எவ்வாறாயினும், யூலை மாத இறுதி வாரத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பி பிரதேசம் வழமையான செயற்பாடு களுக்காகத் திறக்கப்பட்டதன் பின்னர் ராஜாங்கனை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் உட்பட பணியாட்குழுவினரின் முழுமையான மேற் பார்வையின் கீழ் கொவிட் தொற்றுநோய் கட்டுப் பாட்டிற்காக வழங்கப்பட்ட வழிகாட்டல்களை உரியவாறு பின்பற்றி 2020.07.29 ஆம் திகதி ஐந்து (05) நிலையங்களில் அஞ்சல் வாக்குகளை

அடையாளமிடுவதற்கான வசதிகள் செய்யப் பட்டிருந்ததோடு அத்திகதியில் நானூற்று அறுபத்தி ரெண்டு (462) அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப் பட்டன.

xii. அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் உத்தி யோகத்தர்களில் அலுவலகங்களில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடுவதற்கு உத்தேசிக்கப் பட்டிருந்த நாட்களில் அச் செயற்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவின் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இடம்பெறுவதனை உறுதிப்படுத்திக் கொள்வ தற்காக அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் களினதும் அலுவலகங்களுக்கு உதவித் தெரிவத் தாட்சி அலுவலர் ஒருவர் அல்லது அனுபவம் கொண்ட சமமான சேவையொன்றின் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டனர். பொதுவாக அஞ்சல் வாக்குகள் முப்பது (30) இற்கு குறைவாக அடையாளமிடப்படுகின்ற அலுவலகங் களுக்கு நடமாடும் கண்காணிப்பாளர் ஒருவரையும் அதற்கு மேற்பட்ட அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படுகின்ற அலுவலகங்களுக்கு நிலையான (தரித்திருந்து) கண்காணிப்பாளர் ஒருவரையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும், முப்பது (30) அஞ்சல் வாக்குகளிற்குக் குறைவாக இருப்பினும் இபோச டிப்போக்கள், சிவில் பாதுகாப்பு முகாம்கள், அதிவேகப் பாதை அலுவலகங்கள் மற்றும் சுகாதாரப் பிரிவு அலுவலகங்கள், நியதிச் சட்ட சபைகள், பொலிஸ் நிலையங்கள் போன்ற இனங்காணப்பட்ட விசேட இடங்களுக்காக ஒரு நிலையான கண்காணிப்பாளரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

xiii. அஞ்சல் வாக்கு வசதிகள் கோரியிருந்த விண்ணப்ப தாரர்களில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த அனைவருக்கும் அஞ்சல் வாக்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றை அடையாளமிடுவ தற்காக பத்து (10) நாட்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நிலவிய அசாதாரண சூழ்நிலை மற்றும் ஏனைய சமயோசித விடயங்கள் காரணமாக கணிசமான எண்ணிக்கையினர் அதாவது 18,301 பேர் வரையில் அஞ்சல் வாக்கினை அடையாள மிட்டிருக்கவில்லை. அவ்வாறு அடையாளப்படுத்தப் படாத அஞ்சல் வாக்குகள் உள்ளடங்கிய பக்கற்றுக்கள் (D உறைகள்) தொடர்பான தகவல்கள் 10 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில் காட்டப் பட்டுள்ளது.

xiv. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 26 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு மேலதிகமாக, சேவையின் தேவைப்பாடு காரணமாக வாக்கெடுப்புத் தினத்தில் அவர்களின் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கு முடியாமல் போகின்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த நபர்களால் அஞ்சல் மூலம் வாக்களிப் பதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு வாக்கெடுப்புக் காலப்பகுதியில் தொடர்ந்து கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. ஆகையினால், வாக்கெடுப்புத் தினத்தில் அவசியமான சேவைகளை தொடர்ச்சி யாகப் பேணிச் செல்வதற்காக தேர்தல் ஆணைக்குழு இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

## 16. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்

i. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவிற்கமைய வாக்கைப் பிரயோகிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலரினால் தேருநர் இடாப்பில் பெயர் காணப்படுகின்ற ஒவ்வொரு வாக்காளருக்கும் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படுகின்ற மாதிரியிலான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை அனுப்பி வைத்தல் வேண்டும். அந்த வாக்காளர் அடடையில்,

(அ) தேர்தல்கள் மாவட்டத்தின் பெயர் மற்றும் இலக்கம்:

(ஆ) தேருநர் இடாப்பில் காணப்படுகின்றவாறு வாக்காளரின் பெயர், தகைமையளிக்கும் முகவரி மற்றும் பதிவு இலக்கம்:

(இ) வாக்கெடுப்புப் பிரிவு:

(ஈ) தேர்தல் மாவட்டம்:

(உ) தேருநருக்காக குறித்தொதுக்கப்பட்ட வாக் கெடுப்பு நிலையம் மற்றும்

(ஊ) வாக்கெடுப்புத் திகதியும் மற்றும் நேரங்களும்: குறிக்கப்படல் வேண்டும்.

ii. இத்தகவல்களை அறிவிப்பதற்கான தேவைப்பாடு 1946 இன் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) கட்டளைச் சட்டத்திற்கு 1959 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தினால் தேர்தல்கள் சட்டத்திற்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

iii. இருப்பினும், அஞ்சல் வாக்காளரொருவராகக் கணிக்கப்படுவதற்கு உரித்துப்பெற்ற வாக்காளர் களுக்கும் மற்றும் சட்டத்தின் 127 (ஆ) ஆம் பிரிவின் கீழ் வேறு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கைப் பிரயோகிக்கும் அனுமதியைப் பெற்றுள்ள தேருநர்களுக்கும் அவ்வாறான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அனுப்பப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று வாக்கெடுப்பு நடாத்தப்படும் திகதிக்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களிற்கு முன்னர் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறக்கூடியவாறு அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். இந்த பாராளுமன்றத் தேர்தலுக்காக விநியோகிக் கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் எண்ணிக்கை சுமார் 7,087,400 ஆகும்.

iv. தேருநர் இடாப்பு கணினிமயப்படுத்தப்பட்டுள்ளதால் தகவல் தொழில்நுட்ப முறைகளினூடாக உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுகின்ற வசதிகள் வரையான மூலோபாயங்கள் ஏற்கனவே

தாபிக்கப்பட்டுள்ளது. இந்த வாக்காளர் அட்டை களை அச்சிடுகின்ற தற்போதைய நடைமுறையை தேர்தல் செயன்முறையின் புதியதோர் நடைமுறை யாகக் குறிப்பிட முடியும். முன்னர் காணப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடும் போது கணினிப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதன் காரணமாக மிகவும் சரியாகவும் வினைத்திறன் கொண்ட தாகவும் குறுகிய காலப்பகுதியினுள் உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் அச்சிடப்படுகின்றன.

v. அவ்வாறே உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்படு கின்றன. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை களின் உரிய மாதிரிகளை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொண்டு, தேர்தல்கள் செயலகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனுபவம் கொண்ட தரவு அச்சிடல் நிறுவனங் களிலிருந்து அச்சிடப்பட்டு, வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு கையளிக்கப்படுகின்றது. மாவட்டம் தேர்தல்கள் அலுவலகங்களின் பதவிநிலை அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அலுவலர்களினால் அந்த உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் ஒவ்வொன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டு இறப் பெய்தியுள்ளதாக அறிக்கையிடப்பட்ட அல்லது வெளிநாட்டில் உள்ள அல்லது அஞ்சல் வாக்காளர்கள் ஆகியவர்களுக்குரிய வாக்காளர் அட்டையை இனங்காண்பதற்காக இறப்பர் முத்திரையொன்றின் மூலம் உரிய குறிப்புக்களைப் பொறித்து ஒவ்வொரு வீட்டிற்கும் ஏற்புடையதானவாறு வேறுபிரிக்கப்பட்டு தேருநர்களுக்கு விநியோ கிப்பதற்காக பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் களுக்கு கையளிக்கப்பட்டன.

vi. இப்பாராளுமன்றத் தேர்தலில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சலுக்குக் கையளித்தல் 2020.07.07, 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளிலும் அவற்றை விநியோகித்தல் 2020.07.19 ஆம் திகதி ஆரம்பித்து 2020.07.29 ஆம் திகதியுடன் முடிவுறுத்துவதற்கும் திட்டமிடப் பட்டிருந்தது. இவ் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளுடன் வாக்காளர்களின் பயன்பாட்டிற்காக குறித்த தேர்தல் மாவட்டத்திற்காகப் போட்டியிடு கின்ற அரசியல் கட்சிகளின் பெயர்கள், வேட்பாளர்களது பெயர்கள் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட விருப்பு இலக்கங்கள் என்பன உள்ளடக்கப்பட்ட அறிவித்தல் பத்திரமொன்றும் இணைக்கப்பட்டது.

vii. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகம் செய்து முடிப்பதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்த 2020.07.29 ஆம் திகதிக்குப் பின்னர், விநியோகிக்கப்படாமல் அஞ்சல் அலுவலகங்களில் எஞ்சுகின்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் அஞ்சல் அலுவலகங் களிலிருந்து பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் வாக்காளர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டது. இது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் மற்றும் ஊடக அறிவித்தல் மூலம் பரந்தளவிலான பிரச்சாரத்தை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக் குழுவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 17. வாக்குப் பெட்டிகள்

i. 1931 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேர்தல் தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்ட சகல தேர்தல்களிலும் மரப்பலகைகளால் தயாரிக்கப் பட்ட வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. இந்த வாக்குப் பெட்டிகளைத் தயாரித்தல் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் அரச கைத்தொழிற் சாலையினால் மேற்கொள்ளப்பட்டன. வாக்கெடுப் புக்காக பயன்படுத்தப்பட்ட மரப்பலகை வாக்குப் பெட்டிகள் உண்மையாகத் தேர்தல்கள் திணைக் களம் மற்றும் ஆணைக்குழு என்பவற்றின் அடையாளமொன்றாகக் காணப்பட்டது. இருப்பினும், போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் அதிகரிப்பு காரணமாக வாக்குச் சீட்டுக்களின் அளவு நீண்டமை காரணமாக பயன்பாட்டில் உள்ள பெட்டிகளினுள் போடக்கூடிய வாக்குச் சீட்டுக்களின் தொகை வரையறுக்கப்பட்டமை, அதற்காக பெட்டிகள் போதுமானதாக இல்லாமை, பெட்டிகள் பாரம் அதிகரித்தமை, தயாரித்தல் மற்றும் பழுது பார்த்தல் செலவுகள் அதிகரித்தமை, உலகின் ஏனைய நாடுகளில் பலகைப் பெட்டிகளுக்குப் பதிலாக சுற்றாடல் நட்புறவான மாற்றுப் பொருட்களினால் வடிவமைப்புச் செய்யப்பட்ட பெட்டிகள் பயன்படுத்துதல், அந்த மாற்றீடாகப் பயன்படுத்தப்பட்ட பெட்டிகளை கையாள்வது எளிதாகவுள்ளமை தொடர்பாக பெரிதும் பேசப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நீண்டகால ஆய்வின் பெறுபேறாக, 2014 இல் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தலுக்காக மரப்பலகைப் பெட்டியுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு பாரியளவிலான பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகள் சில இறக்குமதி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன. அதே போன்று முதற்தடவையாக இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் வாக்குப் பெட்டியில் உட்பகுதி ஓரளவு வெளிப்படையாகத் தெரிகின்ற தன்மை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்ட காரணத்தால், இரண்டாவது தடவையாக உட்பகுதி தெளிவாகத் தெரியாத கடும் மண்நிறத்திலான பிளாஸ்ரிக் பெட்டிகள் ஒரு சில மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்டன.

ii. எனினும், ஆரம்ப காலத்தோடு ஒப்பிடும் போது தேர்தல்களுக்காகப் போட்டியிடுகின்ற வேட்பாளர் களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால், வாக்குப் பெட்டிகளிற்காக வேறு மாற்றீடுகளுக்கு செல்லவேண்டிய கட்டாயத் தேவைப்பாடு தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்டது. கடந்த சனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டமை காரணமாக வாக்குச் சீட்டின் நீளம் 24 அங்குலமாக அமைந்தமையால் வாக்கெடுப்புப் பணிகளுக்காக தேர்தல் ஆணைக்குழு வசமுள்ள

மரப்பலகை வாக்குப் பெட்டிகள் மற்றும் பிளாஸ்டிக் வாக்குப் பெட்டிகள் போதுமானதாக இருக்க வில்லை. அதன் காரணமாக மேலதிகமாக 14500 பலகை வாக்குப் பெட்டிகள் வரையில் பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டது. பலகை வாக்குப் பெட்டிகளை இவ்வளவு தொகையொன்றை தேர்தலை நடாத்துவதற்காக இருந்த நாட்களின் எண்ணிக்கையின் பிரகாரம் எவ்விதத்திலும் உற்பத்தி செய்துகொள்ள அரசாங்க கைத்தொழிற் சாலைக்கு இயலாமல் போவதோடு பிளாஸ்டிக் பெட்டிகளைக்கூட அதற்கான கட்டளையை சமர்ப்பித்து அவற்றை இறக்குமதி செய்து கொள்வதற்கான காலம் போதுமானதாக இருக்க வில்லை. இதற்கான மாற்றீடாக தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி அது தொடர்பாக அரசியல் கட்சிகளின் வேட்பாளர் களுடன் கலந்துரையாடி அவர்களின் இணக்கப் பாட்டுடன் கார்ட்போட் வாக்குப் பெட்டிகளை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது. அதற்கிணங்க, இத்தேர்தலின் போது முழு நாட்டிலும் வாக்கெடுப்பு நிலையங்களில் கார்ட்போட் வாக்குப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டதோடு, அந்தத் தகவல்கள் 11 **ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

iii. கடந்த சனாதிபதித் தேர்தலின் போது கார்ட்போட் வாக்கெண்ணல் பெட்டிகளை அறிமுகம் செய்தமை தொடர்பாக அனைத்து தரப்பினர்களும் விருப்பம் தெரிவித்திருந்தமை, அவற்றின் பாரம் குறைவு, துரிதமாகத் தயாரித்துக் கொள்ள முடிதல், பயன்பாடு மற்றும் போக்குவரத்து எளிதாக வுள்ளமை, அதனூடாக உதவிப் பதவியணியைக் குறைத்துக் கொள்வதற்கு முடிந்தமை ஆகிய காரணத்தினால் இந்தத் தேர்தலின் போதும் அவற்றை உற்பத்தி செய்து கொள்வனவு செய்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 3 அளவுகளில், அதாவது, 14"x14"x24" (சிறிய அளவு) 18"x15 1/2"x24" (நடுத்தர அளவு) மற்றும் 21"x18 1/2"x27" (பெரிய அளவு) வாக்குபெட்டிகளைக் கொள்வனவு செய்து வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் வாக்குச் சீட்டின் நீளத்தின் அடிப்படையில் பெட்டியில் போடக்கூடிய வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை கவனத்தில் எடுத்த பின்னர் மாவட்டங்களின் தேவைப்பாட்டுக்கமைய அவை விநியோகிக்கப் பட்டன. இந்த கார்ட்போட் வாக்குப் பெட்டிகள் மாவட்டத் தேர்தல்கள் அலுவலக களஞ்சியங் களுக்கு கொண்டு செல்வதற்காக (போக்குவரத்து செய்வதற்காகப்) முழுமையான பெட்டிகளாகத் தயாரிக்காமல் பெற்றுக் கொண்டு அனுப்பியதன் பின்னர் எழுத்து மூலமும், செவிப்புல ரீதியாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு ஒவ்வொரு மாவட்ட அலுவலகங்களிலும் அவற்றைப் பெட்டிகளாகத் தயாரித்துக் கொள்ளப்பட்டது. இம் முறைமை காரணமாக அந்தந்த விநியோக மையங்கள் அமைந்துள்ள வளாகங்களில் பெட்டிகள் தயாரிக்கப் பட்டு (பொருத்தி) லேபள் ஒட்டப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டது. அதேபோன்று, இப் பெட்டிகள் ஈரலிப்புடைய காலநிலைக்குத் தாக்குப்பிடிப்பதற் காகவும் அதன் மேலதிகப் பாதுகாப்புக்காகவும் பெட்டியின் உட்பகுதியில் விசேடமாக உற்பத்தி செய்யப்பட்ட BOPP ஒட்டிகளை (டேப்) ஒட்டுவ தற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. வாக்கெடுப்பின் நிறைவில் முன்னைய தேர்தல்களின் போது மேற்கொள்ளப்பட்ட விதத்திலேயே வாக்குப் பெட்டிகள் முழுமையாக உள்ளடங்கும் விதத்தில் தெளிவாகத் தெரிகின்ற பொலித்தீன் உறை யிலிட்டு இனங்காணக்கூடிய இலக்கம் கொண்ட பிளாஸ்டிக் பூட்டக்களால் முத்திரை பொறிக்கப் பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் இப்புதிய அறிமுகப்படுத்தல் 2020 ஆம் ஆண்டு இலங்கை பொதியிடல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட (இலங்கை பொதியிடல் விருது) விழாவில் 02 தங்கப் பதக்கங்கள் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் ஆகிய விருது களையும் மற்றும் திறமை விருதையும் பெற்றுக் கொண்டதோடு பாராட்டுக்கும் உள்ளாகியிருந்தது.

## 18. வாக்காளர்களை இனங்காண்பதற்காக வாக்கெடுப்பு நிலையத்தில் ஆளடையாள ஆவணங்களைப் பயன்படுத்தல்.

i. 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டை வழங்குவதற்கு முன்னர், தேசிய அடையாள அட்டையின் பிரகாரம் வாக்காளரை அடையாளம் காண்பதற்கான சட்டத் தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், ஆட் பதிவுத் திணைக்களத்தினூடாக வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டையொன்று அனைத்து வாக்காளர் களுக்கும் வழங்கப்படாததைக் கவனத்திற்கொண்டு, நாட்டின் அனைத்து வாக்காளர்களுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கும் பணி நிறைவடையும் வரை, வாக்காளரை அடையாளம் காண்பதற்கு வேறு ஆளடையாள ஆவணங்களையும் கவனத்திற் கொள்வதற்கு இது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கையொன்றின் போது தேர்தல்கள் ஆணையாளர் இணங்கம் தெரிவித்துள்ளார். அந்த இணக்கப்பாட்டுக்கிணங்க தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக

- ❖ செல்லுபடியான வெளிநாட்டு பயணக் கடவுச் சீட்டு;
- ❖ செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்;
- ❖ அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை;
- ❖ முதியோர் அடையாள அட்டை;
- ❖ ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத் தினால் வெளியிடப்படுகின்ற மதகுரு அடையாள அட்டை;

- ❖ தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக் கப்படுகின்ற வாக்கெடுப்புப் நோக்கத்திற்காக மாத்திரம் வழங்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை;
- ❖ ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்ற "தேசிய அடையாள அட்டை தகவல்களை உறுதிப்படுத்தப்படுகின்ற கடிதம்." செல்லுபடியான ஆளடையாள ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ii. தேசிய அடையாள அட்டைகள் இல்லாத ஆனால் 2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆட்களுக்காக பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு தேவையான ஆளடை யாளத்தை உறுதி செய்யக்கூடிய செல்லுபடியான ஆவணமொன்றை வழங்குதல் தொடர்பாக 2020.03.12 ஆம் திகதி மற்றும் 2020.06.22 ஆம் திகதிகளில் ஆட் பதிவு ஆணையாளர் நாயகம் உட்பட அத்திணைக்களத்தின் உத்தியோகத்தர் களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

iii. இப் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கான அறிவித்தலை வெளியிடும் போது, தேசிய அடை யாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பல விண்ணப்பங்கள் திணைக்களத்திற்குச் சமர்ப் பிக்கப்பட்டிருந்தன.எவ்வாறாயினும், தேசிய அடை யாள அட்டைகளுக்கான அச்சிடல் கடதாசிகள் பற்றாக்குறையாகக் காணப்பட்டமை அவற்றை இறக்குமதி செய்தல் செயற்பாடுகள் தாமதமடைந்த மையினால் உரிய காலப்பகுதியினுள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த பலருக்கு அதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை. அது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கும் ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்திற்குமிடையில் இடம்பெற்ற கலந்துரை யாடலில் இணக்கம் காணப்பட்டவாறு தேர்தல் ஆணைக்குழுவின் ஒதுக்கீடுகளின் கீழ் ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்திற்கு வழங்கப் பட்டுள்ள இயந்திரத்தைப் பயன்படுத்தி அவ் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடங்கியதாக பாதுகாப்பான அச்சிடல் கடதாசியில் அச்சிடப்பட்ட தேசிய அடையாள அட்டையின் தகவல்கள் அடங்கிய கடிதம் இத்தேர்தல்களுக்காகவும் விநியோகிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு 2020.07.16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கும், 2020.07.17 ஆம் திகதி தொடக்கம் 2020.07.29 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பப் படிவங்களுக்காக உறுதிப்படுத்தல் கடிதங்களை விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு அச்சிட்ட உறுதிப் படுத்தல் கடிதங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் தலையீட்டுடன் ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டு உரிய கிராம அலுவலர் ஊடாக விண்ணப்பித்தோருக்கு விநியோகிப் பதற்கான வேலைத்திட்டமொன்று ஒழுங்கமைக்கப் பட்டது. இது தொடர்பாக எழுத்து மூலமான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அவர்களால் 2020.07.30 ஆம் திகதி அனைத்துத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர் களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. திட்டமிடப் பட்டிருந்த இந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம், 2020.07.30 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களுக்கு மாத்திரம் தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

iv. அதே போன்று, நாட்டிற்குள் நிலவிய நிலைமையின் கீழ் வாக்கெடுப்புத் தினமாகும் போது காலாவதியாக விருந்த சாரதி மற்றும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக் களின் செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்காக உதவிக்காலமொன்றை வழங்க அவற்றை விநியோகித்த நிறுவனங்கள் நடவடிக்கையெடுத் திருந்ததோடு, அத்தகைய சலுகை வாக்கினைப் பிரயோகிப்பதற்காகவும் செல்லுபடியானதாகும் என்ற அறிவித்தலொன்றை வெளியிடுவற்கும் தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததோடு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் அது தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

v. எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட வகையான எந்தவோர் ஆளடையாள ஆவணமொன்றும் இல்லாத வாக்காளர் களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்கும் வேலைத்திட்டம் தேர்தல் ஆணைக்குழு வினால் பரந்தளவிலான பிரச்சாரங்கள் செய்யப் பட்டு மாவட்ட மட்டத்திலும் நடைமுறைப் படுத்தப்பட்டன. பெருந்தோட்டக் குடியேற்றங்களில் வசிக்கின்றவர்களில் பெரும்பாலானோர் இப்பிரிவில் உள்ளடங்குவதால் இப்பிரதேசங்களை இலக்காகக் கொண்டு பிரதேச செயலாளர்களின் தலைமையில் கிராம சேவகர்கள் ஊடாக தற்காலிக அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஒழுங்கமைக்கப்பட்டது. முந்தைய தேர்தல்களின் போது இத் தற்காலிக அடையாள அட்டைகள் வழங்குதல் தேர்தல்களுக்கு முன்னர் நிறைவு செய்யப்பட்ட போதும் நாட்டிலே நிலவிய இந்நிலை மையின் காரணமாக வாக்கெடுப்பு நடாத்தப்படும் திகதியும் அதற்குத் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டமை என்பது ஒரு விசேடமாக ஓர் அம்சம் என்பதுடன் மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் ஒரு மூலோபாயமாகவும் காணப் பட்டது. தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்கான அறிவுறுத்தல் 2020.06.27 ஆம் திகதி ஆணையாளர் நாயகத்தினால் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மாவட்டப் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, ஆட்கள் பதிவு செய்தல் திணைக்களத்தினால் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் உதவி

மற்றும் அனுசரணையுடன் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடமாடும் வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தன. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத் தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் தொடர்பான விபரங்கள் மற்றும் ஆட்களைப் பதிவு செய்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்கள் பற்றிய விபரங்கள் என்பன முறையே **12 மற்றும் 13 ஆம் இலக்க புள்ளி விபரக் குறிப்புக்களில்** காட்டப்பட்டுள்ளன. இதற்கமைய இத்தேர்தலின் போது 102,877 தற்காலிக அடையாள அட்டைகளும், 35,539 தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்களும் வழங்கப்பட்டன.

## 19. வாக்காளர்களைப் பரிசோதித்தலும் தோதான குறியீட்டை இடுதலும்.

பாராளுமன்றம் தேர்தல்கள் சட்டத்தின் 38 (1) (அ) மற்றும் (ஆ) உப பிரிவுகளின் பிரகாரம் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் அல்லது அவரின் கீழ் செயலாற்றுகின்ற ஓர் ஆள், வாக்கெடுப்பு நிலை யத்தில் வாக்குச் சீட்டொன்றை கோருகின்ற வாக்காளர் ஒருவரின் தோதான குறியீட்டை பரிசீலனை செய்யவும் அல்லது செல்லுபடியான அடையாள ஆவணத்தை பரிசீலனை செய்யவும் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டத்தின் 38 (3) தோதான குறியீடு என்ற சொல்லமைப் பானது, துடைத்தழிக்க முடியாத மையினால் இடப்பட்ட குறியீடொன்று எனப் பொருள்படும். அப்பிரிவின் (ஆ) உப பிரிவின் பிரகாரம் வாக்காளர் ஒருவரின் இடது கையில் சிறுவிரலை துடைத்தழிக்க இயலாத மையினால் குறியீடு இடுதல் தோதான குறியீடு இடுதல் எனப் பொருள்படும். ஒரு வாக்காளர் ஒரு தடவைக்கு மேற்பட்ட தடவைகள் வாக்களிப்பதைத் தடுத்தல். மோசடியான அல்லது ஆள்மாறாட்ட வாக்களிப் பைத் தடுத்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படு கின்றது. இலங்கைத் தேர்தல் வரலாறுக் கமைய, இந்த முறைமை முதற்றடவையாக 1965 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின் போது ஆரம்பிக்கப்பட்டது. இருந்த போதிலும் 2004 ஆம் ஆண்டின் பின்னர், வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்களிப்பதற்காக வருகை தருகின்ற அனைத்து வாக்காளர்களும் புகைப்படமொன்றைக் கொண்டதான அங்கீகரிக்கப் பட்ட அடையாள ஆவணங்களின் அடிப்படையில் முறையாக ஆளடையாளம் காணப்படுகின்ற காரணத்தினால் இவ்வாறான செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டுமா என்பது தொடர்பாக விமர்சன ரீதியாக ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டியுள்ளது. இத்தேர்தலில் கொவிட் தொற்றுநோய் கட்டுப்பாட்டு சுகாதார வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றுவதற்காக மற்றும் இந்த தோதான குறியீட்டினால் அடை யாளமிடும் இந்தப் பாரம்பரிய முறைமை சுகாதார வழிகாட்டல்களுக்கு முரணானதொன்பதால், அதற் காக வாக்காளர்கள் காட்டிய அச்சத்தை இல்லாதொழிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய முறைமைக்காகக் குறிப்பிடத்தக்க செலவின மொன்றைச் செய்வதற்கு தேர்தல் ஆணைக் குழுவிற்கு நேரிட்டது என்பதை குறிப்பிடுதல் வேண்டும். எனவே, தோதான குறியீட்டினால் அடையாளமிடல் பணி மீண்டும் ஒரு முறை மீளாய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. எவ்வாறாயினும், வாக்காளர் களை அடையாளம் காண்பதற்காக இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற ஆளடையாள ஆவணங் களை விடவும் விருத்தியடைந்த மற்றும் விஞ்ஞான முறைகளும் பயன்படுத்தப்படுகின்ற சில அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட இன்னும் இந்த துடைத்தழிக்க முடியாத மையினால் குறியீடு இடுவதை மேற்கொள்வதால் நீதியானதும் சுதந்திர மானதுமான தேர்தலொன்று தொடர்பான மக்கள் நம்பிக்கை ஏற்படுத்துகின்ற ஒரு சந்தர்ப்பமாகக் கருதி இதனை அகற்றுவது பொருத்தமற்றது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 20. இறப்பெய்தியுள்ளதாக மற்றும் வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்படுகின்ற வாக்காளர்கள்.

இறந்த அல்லது வெளிநாடுகளிலுள்ள வாக்காளர் களுக்காக வேறு நபர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிப்பதாகச் சமூகத்தினுள் நிலவிய அபிப்பிராயத்தை இல்லா தொழிப்பதற்காக கடந்த தேர்தல்களின் போது, நடைமுறைப்படுத்தப்பட்ட நடைமுறையான வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு வழங்கப்படுகின்ற தேருநர் இடாப்பில் மரணமடைந்துள்ளதாக மற்றும் வெளிநாடு களிலுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ள நபர்களின் விபரங்களைக் குறிப்பிடுவதை இத் தேர்தலின் போதும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தல்களுக்காக செல்லுபடியான தேருநர் இடாப்பான 2019 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பைத் தயாரிக்கும் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட திகதி மற்றும் சான்றுறுதிப்படுத்தப்பட்ட திகதி என்ப வற்றிற்குள்ளாக மரணித்த நபர்களின் எண்ணிக்கை யொன்று தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்க முடியும். அதேபோன்று அத்தாட்சிப்படுத்தல் தினத்தின் பின்னர் வாக்கெடுப்புத் திகதி வரை தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வர்களில் சில ஆட்கள் மரணிக்கின்றமை பொதுவான நிலைமையாகும். அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2020.08.05 ஆம் திகதி வரை மரணித்த வா்களின் பெயர்களும் தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கலாம் என்பதைக் கவனத்திற் கொண்டு வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் அதாவது 2020.03.10 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் இறப்பெய்தியுள்ள மற்றும் வெளிநாட்டில் வசிப்பதாக கிராம அலுவலர் களினால் அறிக்கையிடப்படுகின்ற வாக்காளர்களின் தகவல்களுக்கமைய தேருநர் இடாப்பில் குறித்த வாக்காளரின் பெயருக்கு எதிரில் இறப்பெய்தியுள்ள போது (D) எழுத்தும் வெளிநாடு சென்றிருப்பின் (A) எழுத்தும் குறிப்பிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக அஞ்சல் வாக்காளர் ஒருவர் எனில் அது

தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டது. அவ்வாறே வாக்காளர்களுக்கு அனுப்பப்படுகின்ற உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டையிலும் "மரணமடைந் துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது," "வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது". "அஞ்சல் வாக்காளர் ஒருவராவர்" என இறப்பர் முத்திரை பொறித்து கையளிக்குமாறு தெரிவத் தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இவ்வாறான குறிப்பு இடப்பட்டுள்ள வாக்காளர் ஒருவர் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தந்து வாக்குச் சீட்டொன்றைக் கோரும்போது அத்தகையவரை வாக்கெடுப்பு நிலை யத்திற்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் அழைக்கப்பட்டு ஆளடையா ளத்தைப் பரீட்சித்து அவருக்கு வாக்குச் சீட்டொன்றை வழங்குவதற்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தீர்மானிப்பாராயின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் காட்டப் பட்டுள்ள வெளிப்படுத்துகையில் கையொப்பம் பெற்றுக் கொள்வது கட்டாயமான தேவைப் பாடொன்றென சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் அடிப்படையில் மரணமடைந்துள்ளார்கள் என மற்றும் வெளிநாடு சென்றுள்ளார்கள் என அறிக்கையிடப்பட்ட வாக்காளர்கள் தொடர்பான விபரங்கள் **14 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது. இதற்கமைய இத்தேர்தலில் 113,799 வாக்காளர் மரணமடைந்துள்ளதாகவும், 219,173 பேர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் தகவல்கள் அறிக்கையிடப் பட்டிருந்தது.

## 21. உடல் வலிமையிழப்பொன்றிட்கு உட்பட்ட நபரொருவருக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்த கொடுத்தல்.

i. வாக்காளர் ஒருவருக்கு வாக்கெடுப்பு நிலையத் துக்குச் சென்றுவருவதற்காக வாகனமொன்றைப் பயன்படுத்த சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ள போதும், தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரிடமிருந்து அதற்காக முன் கூட்டிப் பெற்றுக் கொண்ட அனுமதியுடன் வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வ தற்கு பொதுப் போக்குவரத்து சேவைகளுக்குப் பதிலாக தனியார் வாகனங்களைப் பயன்படுத்துவ தற்கு உடல் வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்ட நபர்களுக்கு அனுமதியை வழங்குவதற்கு பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 83 (4) (ஈ) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் உடல் வலிமையிழப்பொன்றிட்கு உட்பட்ட நபரொருவரினால் அல்லது அத்தகைய நபர்களுக்காக ஒரு வேட்பாளரொருவரல்லாத வேறு எவரேனும் ஆளொருவரினால் வாக்கெடுப்பு நிலை யத்திற்குச் சென்று மற்றும் திரும்பி வருவதற்காக ஏதேனும் போக்குவரத்துச் சேவையைப் பயன் படுத்துவதற்கு அனுமதி கோரி வாக்கெடுப்புத் தினத்திற்கு ஏழு (7) நாட்களுக்கு முன்னர் தொடர் புடைய தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவருக்கு வைத்திய சிபாரிசுகளுடன் கோரிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். இது தொடர்பாக 2020.07.01 ஆம் திகதிய கடிதம் மூலம் அனைத்துத் தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. மேலும், இவ் விசேட போக்குவரத்து வசதிக்கான கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக மும்மொழிமூல தேசிய பத்திரிகைகளில் அறிவித்தலொன்று வெளியிடப் பட்டதோடு அனைத்து அச்சு மற்றும் இலத்திர னியல் ஊடகங்களுக்கும் **(அட்டவணை இலக்கம் 15)** ஊடக அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது.

ii. அவ்வாறே தேர்தல் ஆணைக்குழுவின் 2017 - 2020 மூலோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவ்வாறான தேவைகளைக் கொண்ட நபர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல்வேறு நிறுவனங் களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் எழுத்து மூலமான கோரிக்கைகளின் அடிப்படையில் உடல் வலிமையிழப்பிற்கு உட்பட்டுள்ள வாக்காளர் களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக சாத்தியமான அனைத்து சந்தர்ப் பங்களிலும் வாக்கெடுப்பு நிலையங்களுக்காகப் பயன்படுத்துவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட கட்டிடங்கள் வலதுகுறைந்தோர் பிரவேசிக்கத்தக்க வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களிற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

## 22. வலிமையிழப்புக்குற்பட்ட வாக்காளரொரு வருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாள ரொருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை செய்தல்.

i. 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 40 (2) ஆம் பிரிவிற்கமைய முற்றாக அல்லது பகுதியளவிலான கட்புலப்பாதிப்பு நிலைமையொன்று அல்லது உடல் வலிமையிழப்பொன்று காரணமாக தனது வாக்குச் சீட்டை செல்லுபடியாகும் விதத்தில் குறியீடு செய்வதிலிருந்து தடை செய்கின்ற வாக்காளர் ஒருவருக்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் அவரது தேர்தல் கடமை பணியாட்குழுவின் மற்றொரு அங்கத்தவரின் முன்னிலையில் அவ்வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக எவரேனும் ஆளொருவரைத் அழைத்துச் செல்வ தற்கான சட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ii. இது பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 5 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க, அனுமதி கோரப்படல் வேண்டும். மேலும், இப்பிரிவின் கீழ் உடனழைத்துச் செல்கின்ற ஆள் 18 வயதுக்குக் குறையாத வராகவும், இயைபான தேர்தலில் வேட்பாளர் ஒருவராகப் போட்டியிடாதவராகவும், இத்தேர்தலின் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரொருவரல்லாத,

அங்கீகரிக்கப்பட்ட முகவரொருவரல்லாத, வாக்கெடுப்பு நிலைய முகவரொருவரல்லாத, மற்றும் ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்டிராத ஆளொருவராக இருக்க வேண்டுமென ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது தொடர்பாக தேசிய பத்திரிகைகளில் அறிவித்தல்களை வெளியிடுவதற்கும் மற்றும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களுக்கு ஊடக அறிவித்தல்கள் ஆகியவற்றை வெளியிட்டும் பரந்தளவிலான பிரச்சாரமொன்றை வழங்குவதற்குத் தேர்தல் ஆணைக் குழுவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அது **16 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

## 23. தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்கு இயலக்கூடியவாறு லீவு வழங்குதல்.

i. பாராளுமன்றம் தேர்தல்கள் சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவிற்கமைய தேர்தலொன்றில் நேரடியாக வாக்களிப்பதற்கு உரித்துடைய வேறு எவரேனும் ஆளின் தொழில் தருநரான (வழங்குநரான) எவரேனும் ஆள் அத்தகைய வேறு ஆளொருவரால் அதற்கென எழுத்து மூலம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் அத்தகைய வேறு ஆள் நேரடியாக வாக்களிப்பதை இயலச் செய்வதற்காக போதுமானது என அந்த ஆளினால் கருதக்கூடிய நான்கு (04) மணித்தியாலங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான காலத்தையுடைய சம்பள இழப்பற்ற லீவை வழங்குதல் வேண்டும். அதேபோன்று, வாக்களிப்பதற்கு வசதியளிப்பதற்காக ஊழியர்களுக்கு லீவு வழங்குவது தொழில்தருநர்களின் கடமைப் பொறுப்பொன்றெனக் குறிப்பிடப் பட்டுள்ளது. 122 (1) (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் ஒவ்வொரு தொழில் தருநரும் அவ்வாறு லீவு விண்ணப்பிக்கின்ற ஆட்களின் பெயர்கள், லீவு வழங்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் லீவு வழங்கப்பட்ட காலப்பகுதி பற்றிய கூற்றொன்றை தயாரித்து தொழிலிடத்தில் துலாம்பரமாக வெளிக் காட்டி வைத்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இது தொடர்பாக தேர்தல் ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்ட ஊடக அறிவித்தல் **17 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப் பட்டுள்ளது. இவ்வேற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவ்வேற்பாடுகளுக்கு இணங்கியெழுகத் தவறுகின்ற ஆளொருவருக்கு எதிராக நீதவானொருவரின் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டால் ஐந்நூறு ரூபாவை (500.00) விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஒரு மாத காலத்திற்கு மேற்படாத மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டுமென இச்சட்டத்தின் 122 (2) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ii. எவ்வாறாயினும், கடந்த அனைத்துத் தேர்தல்களின் போதும் இப்பிரிவின் விடயங்களிற்கமைய முதலாளிமார்கள் அல்லது தொழில் வழங்குநர்கள் செயற்படுவதில்லையென்ற பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. தோன்றியிருந்த இந்நிலைமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி ஏற்புடையதான விண்ணப்பதாரர்களின் தொழில் நிலையம் மற்றும் வாக்களிப்பு நிலையம் ஆகியவற்றுக்கிடையிலுள்ள தூர அளவைக் கவனத்திற் கொண்டு அனுமதிக்கக் கூடியதான விடுமுறை தினங்களின் எண்ணிக்கை தொடர்பான நிபந்தனைகள் தொழில் ஆணையாளர் நாயகத்தின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்பட்டதோடு, அனைத்து தொழில் வழங்குநர்களும் அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்க செயற்படுதல் வேண்டுமென அறிவுறுத்துவதற்காக தேசிய பத்திரிகைகளில் 2020.07.15 ஆம் திகதி மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிட்டதோடு மற்றும் ஊடக அறிவித்தலும் வெளியிடப்பட்டு விரிவான அடிப்படையில் பிரச்சாரம் செய்யப்பட்டது.

## 24. பணியாட்குழுவினர் தேவைப்பாடு.

i. இந்தத் தேர்தல் வெற்றிகரமான விதத்தில் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்கள் மற்றும் பெயர்குறித்த நியமனம், அஞ்சல் மூல வாக்கு, வாக்கெடுப்பு, வாக்கெண்ணல், ஒருங்கிணைப்பு, குழுக் கடமைகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் ஆகிய பணிகள் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் தலைமை அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இதன் போது மாவட்ட மட்டத்திலான பூர்வாங்க ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக தனித்தனியாகக் கலந்துரையாடி தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஐந்து (05) மாதங்களுக்கு முன்னர் சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடாத்தப்பட்டமையினால் அந்நிறுவனக் கட்டமைப்பை சிறு சிறு திருத்தங்களுடன் நடைமுறைப்படுத்துவது மிகவும் வசதியாக அமைந்தது.

ii. சனாதிபதித் தேர்தல் போன்றே இத்தேர்தலும் நாடளாவிய ரீதியிலான தேர்தலொன்று என்பதாலும் மற்றும் தேர்தல் மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுவதாலும் அதற்காக அதிகளவான பணியாற்றொகுதியினரை ஈடுபடுத்திக் கொள்வதற்கு நேரிட்டது. ஆதலால் தேர்தல் ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் சனாதிபதியின் செயலாளர் அவர்களால் அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் நியதிச் சட்டசபைகளின் தலைவர்களுக்கு வாக்கெடுப்பை வினைத்திறனாகவும் பயனுறுதிவாய்ந்ததாகவும் ஒழுங்கமைத்துக் கொள்வதற்காக அலுவலர்களை விடுவிப்புச் செய்வதற்காகவும், வாகனங்கள் மற்றும் ஏனையவை தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் ஆணைக்குழுவினால் அரசியலமைப்பின் 104 ஊ (1), (2), 104 எ

மற்றும் 104 ஏ ஆகிய உறுப்புரைகளின்படி தேர்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் பிற நியதிச்சட்ட ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், ஆளுநர்களின் செயலாளர்கள், மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள், அனைத்து மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுக்களின் செயலாளர்கள், அனைத்துத் திணைக்களத் தலைவர்கள், அனைத்து மாவட்ட செயலாளர்கள், அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர்களுக்கு 2020.02.20 ஆம் திகதிய EC/ADM/EL/2020/ST ஆம் இலக்கம் கொண்ட "தேர்தல்கள் நோக்கத்திற்காக அரச சேவையிலுள்ள அலுவலர்களின் தகவல் களைச் சேகரித்தல்" என்ற தலைப்பிலான சுற்றறிக்கை வெளியிடப்பட்டு, உத்தியோகத்தர்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. அதேபோன்று அந்தச் சுற்றறிக்கைகளின் பிரதிகள் சனாதிபதியின் செயலாளர், பிரதமரின் செயலாளர், அமைச்சரவையின் செயலாளர், மத்திய வங்கி ஆளுநர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

iii. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குத் தேவையான பணியாட்குழுவினரை இயன்றவரை மாவட்டத்திற்கு உள்ளேயே பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு, அந்தந்த மாவட்டத்தின் அரச மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் அலுவலர் தரவுப் பத்திரங்களை அந்தந்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்திற்கு வரவழைத்துக் கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், கொழும்பு மாவட்டத்தின் அரச பாடசாலைகள் தவிர்ந்த, கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசம் மற்றும் பத்தரமுல்லை பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள செத்சிரிபாய I மற்றும் II ஆம் கட்டம், சுஹுருபாய, சம்பத்பாய, கொவிஜன மந்திரய, இசுருபாய, ரன்மகாபாய மாகாண சபைக் கட்டிடத் தொகுதி உள்ளடங்கலாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலுள்ள நிறுவனங்களின் உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் மற்றும் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் பதவிக்கான அலுவலர்களின் தரவுப் படிவங்கள் தேர்தல்கள் செயலக அலுவலகத்திற்கும், அவ்வனைத்து நிறுவனங்களின் ஏனைய அலுவலர்களினதும் மற்றும் ஊழியர்களினதும் தரவுப் படிவங்கள் கொழும்பு நகரத் தேர்தல்கள் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கப்படல் வேண்டுமெனத் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

iv. வாக்குகளின் எண்ணிக்கை, வாக்கெடுப்பு நிலையங் களின் எண்ணிக்கை விநியோகித்தல், கையேற்றல் நிலையங்களின் எண்ணிக்கை, வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை தொடர்பாக அவதானம் மற்றும் கவனம் செலுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் அலுவலர் தேவைப்பாடு, அந்த மாவட்டத்திலிருந்து அல்லது அருகிலுள்ள மாவட்டங் களிலிருந்து மற்றும் கொழும்பு அலுவலர் ஒதுக்கிலிருந்து பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்ற எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு வரவழைத்துக் கொள்ளப்பட்டது. இத்தகவல்களின் பிரகாரம் மாவட்டத்தின் உத்தியோகத்தர்களின் தேவைப் பாட்டை குறித்த மாவட்டத்திலிருந்து பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில், அருகிலுள்ள மாவட்டத்திலிருந்து அல்லது கொழும்பு ஒதுக்குக் குழாத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டமொன்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் நடைமுறைப் படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அலுவலர்களின் தேவைப்பாடு **15 ஆம் இலக்க புள்ளிவிபரக்** குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

v. வாக்குச் சீட்டுக்களைப் பரிசோதித்தல், வாக்குச் சீட்டுகள், வாக்குப் பெட்டிகள், நியதிச்சட்ட ரீதியான கடித ஆவணங்களை விநியோகித்தல் மற்றும் கையேற்றல், வாக்கெடுப்பு, வாக்கெண்ணல், ஒருங்கிணைப்பு அலுவலகங்கள், பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல், நலன்புரி, போக்குவரத்து, பொது வசதிகள், வழிநடாத்தல் கூடங்களின் கடமை களுக்காக அமையப் பணியாளர்கள் தொடக்கம் அரச சேவையின் சிரேட்ட நிறைவேற்று அலுவலர்கள் வரையிலான பல்வேறு குழுக்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேரிட்டது. பூர்வாங்க ஒழுங்கமைப்பு நடவடிக்கை களுக்காக தாபிக்கப்பட வேண்டிய குழுக்கள், அவற்றின் செயலாற்றுகை மற்றும் கடமைக் காலப்பகுதிகள், அவற்றிட்கு இணைப்புச் செய்ய வேண்டிய அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் நிர்வாகப் பணிகள் தொடர்பாக அனைத்துத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு 2020.03.08 ஆம் திகதி முழுமையான ஆலோசனை யுடன் கூடிய கடிதமொன்று அனுப்பப்பட்டது. இத்தேர்தல் பணிகளுக்காக மொத்தமாக நிரந்தர மற்றும் அமய பணியாட்குழுவினர் 235,800 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த உத்தி யோகத்தர்களைத் தெரிவு செய்யும் கணக்கெடுப்பு அலுவல்களும் உத்தியோகத்தர்களைப் பயிற்று விக்கும் நடவடிக்கைகளும் கொழும்பு தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

vi. கொவிட் தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்கான சுகாதார வழிகாட்டல்களை அமுல்படுத்தும் பணிகளை மிகவும் ஒழுங்கான தன்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதற்காக சுகாதார சேவை உத்தியோகத் தர்களின் உதவி பெறப்பட்டுள்ளது. இந்த உத்தி யோகத்தர்கள் வாக்கெடுப்பு நிலைய கடமைகள், வலய மட்டக் கடமைகள் மற்றும் விநியோகித்தல், கையேற்றல் மற்றும் வாக்கெண்ணல் நிலையங் களின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன்,

எதிர்பார்க்கப்பட்ட பணிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தப்படல் தொடர்பாக உயர்ந்த தரத்திலான ஒத்துழைப்பு அவர்களால் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, இந்தத் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட சுகாதார சேவை பணியாளர்களின் தகவல்கள் **16 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

## 25. போக்குவரத்துத் தேவைப்பாடுகள்.

i. தேர்தல் பணிகளை முகாமைத்துவம் செய்யும் போது போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டம் கவனமாக ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகளின் ஆரம்பத்திலேயே இதற்காக உதவி தெரிவத்தாட்சி அலுவலரொரு வரின் தலைமையில் குழுவொன்று தாபிக்கப்பட்டு அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் வாக் கெடுப்பின் போது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் உள்ளடங்கலாக சட்டரீதியான எழுத்தாவணங்கள் மற்றும் பொருட்களாதியவற்றை போக்குவரத்துச் செய்தல், வாக்கெடுப்புச் சந்தர்ப்பத்தின் போது அவற்றைக் கணக்கெடுப்புக் வளாகங்களுக்கு மீளக் கொண்டு செல்லல், வாக்கெடுப்புத் தினம் வாக்காளர்களுக்கு இலகுவாக வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கும் மற்றும் திரும்பி வருவதற்கும் தேவையான பொதுப் போக்குவரத்து வசதிகள் போன்றே தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களை போக்குவரத்துச் செய்வதற்கும் ஏற்றவாறு போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும். வாக்கெடுப்பை முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் ஒரு நாளில் நடாத்துவதற்கு நேரிடுகின்றமை காரணமாக அதிகளவு எண்ணிக்கையான வாகனங்களை இதற்காகப் பயன்படுத்த வேண்டியுள்ளமையானது ஒரு சவால் நிறைந்தது போன்றே அசௌகரியமான பணியொன்றாகவும் உள்ளது. எனவே இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்காக ஏனைய அரச நிறுவனங்களிலிருந்து வாகனங்களை விடுவிப்ப தற்காகத் தேர்தல் ஆணைக்குழுவினால் PE/2020/TR-01 ஆம் இலக்க 2020.02.24 ஆம் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம், மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் அனைத்து அரச மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் வசமுள்ள உத்தியோகத்தர்களுக்கு குறித் தொதுக்கப்பட்ட வாகனங்கள் தவிர்ந்த ஏனைய பயன்படுத்தக்கூடிய அனைத்து வாகனங்கள் தொடர்பாக பெறப்பட்ட விபரங்களின் பிரகாரம் தேவைப்பாட்டின் மீது அத்தகைய வாகனங்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு தற்காலிகமாக விடுவிப்புச் செய்து கொள்ளப்பட்டன. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்வண்டிகள் மற்றும் தனியார் பஸ்வண்டி உரிமையாளர்களின் பஸ் வண்டிகள் மற்றும் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக இலங்கை புகையிரத சேவை யின் உதவியும் பெறப்பட்டுள்ளது. வாகனங்கள் தொடர்பாக நிலவுகின்ற கட்டாயத் தேவைப் பாட்டைக் கருத்தில் கொண்டு வாக்கெடுப்பின் பூர்வாங்க அலுவல்களின் ஒழுங்கமைப்பின் போதே தேர்தல்கள் செயலகத்திற்கு அரச நிறுவனங்களின் போக்குவரத்து விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள சிரேட்ட பதவிநிலை அலுவலர்கள் போன்றே இலங்கை போக்குவரத்துச் சபை இலங்கைப் புகையிரத சேவை, பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, தனியார் பஸ்வண்டி உரிமையாளர் சங்கத் தலைவர்கள் அழைக்கப்பட்டு கலந்துரை யாடல் ஒன்று நடாத்தப்பட்டதோடு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களின் தலைமையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் மாவட்டத் தலைவர்களும் அழைக்கப்பட்டு கலந்துரையாடப் பட்டது. அதேபோன்று வாடகை வண்டி உரிமை யாளர்களுடன் கலந்துரையாடி தேர்தல் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தின் கீழ் அவர்களின் வாகனங்களும் ஈடுபடுத்தப்பட்டன. குறிப்பாக வாடகை வாகனங்கள் மூலம் தேர்தல் பணிகளுக்காக போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் போது வாகனச் சாரதி களுக்கும் வாக்களிக்கக்கூடிய வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல் அல்லது அவ்வாறு முடியாமற் போகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்காக அஞ்சல் மூலம் வாக்களித்தல் வசதிகளை வழங்குவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ii. அதற்கமைய, நிலவுகின்ற வாகன பற்றாக்குறைக்கு மாற்றீடொன்றாக வாக்கெடுப்பு நிலையங்களிற்குப் பொறுப்பாக கடமையாற்றுகின்ற சிரேட்ட தலைமை அலுவலர்களுக்கு அவர்களது சொந்த வாகனத்தை தேர்தல் கடமைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அதற்காக அவர்களை ஊக்குவிப்பதற்கும், பயிற்சி வகுப்புக்களிலும் ஆலோசனை வழங்கப்பட்டது. இவ்வாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் வாகனங்களை வாக்கெடுப்பு நிலையக் கடமைக்களுக்காகப் பயன்படுத்துவதாயின் அவ் வாகனத்தில் வாக்கெடுப்பு நிலைய பொருட்களுடன் உதவியாளர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரும் பயணிக்கக் கூடிய சிறந்த தொழிற்பாட்டு நிலைமையிலுள்ள வான் வண்டி அல்லது ஜீப் வண்டிகளை மாத்திரம் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறே வாக்களிப்பு நிலைய மேற்பார்வை அலுவல்களில் ஈடுபடுகின்ற வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் தமது தனிப்பட்ட மோட்டார் வண்டிகளை தேர்தல் கடமைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்போது நிலவும் வாகனங்களின் பற்றாக்குறைக்கு தீர்வாக இவ்வேலைத்திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதோடு, தேர்தல் கடமை களுக்காகத் தமது தனிப்பட்ட வாகனங்களைப் ஈடுபடுத்திய அரச உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களுக்குப் பதிலாக கவர்ச்சிகரமான அதிக கட்டண முறைமையொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டிருந்தது.

iii. வாக்கெடுப்பு நிலையங்களுக்காக அலுவலர்கள் உள்ளடங்கலாகப் பொருட்களாதியவற்றை போக்கு வரத்துச் செய்வதற்கும், அவற்றை மீண்டும் வாக்கெண்ணல் நிலையங்களுக்குக் கொண்டு செல்வதற்காகவும், தரைவழி வசதிகள் மாத்திரம் போதுமானதாக அமையாத வாக்கெடுப்பு நிலையங்கள் உள்ள சில மாவட்டங்களும் உள்ளன, இலங்கையில் மக்கள் நிரந்தரமாக வதிந்திருக்கின்ற ஆறுகள் போன்றே கடல் சார்ந்த தீவுகளில் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களும் காணப்படுகின்றன. அவ்வாறான வாக்கெடுப்பு நிலையங்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் போது இலங்கை விமானப் படை, இலங்கை கடற்படை மற்றும் சந்தர்ப் பத்திற்கேற்றவாறு உள்ளூராட்சி அதிகார சபை களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பாக கவனம் செலுத்திய தேர்தல் ஆணைக்குழு இலங்கை விமானப் படை மற்றும் இலங்கை கடற்படை ஆகியயவற்றின் தலைவர்களை அழைத்து, அந்த இடங்களிற்கான போக்குவரத்து அலுவல்களுக்காக உதவி கோரப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவின் மேற்படி கோரிக்கைக்கு மிகவும் உயர்வான பதிலளிப்பு கிடைக்கப்பெற்றிருந்தது. அதேபோன்று இக்கலந்துரையாடலின் போது ஏதேனும் திடீர் வெள்ளம், மண் சரிவு போன்ற நிலைமைகள் ஏற்படுமாயின் அந்த பிரதேசங்களில் தேர்தல்களை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்குவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. இடர் நிலைமையொன்று ஏற்படுமாயின் அதற்குத் தீர்வு வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையங்களின் அலுவலர் களின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

iv. வாக்கெடுப்பொன்றின் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்யும் போது அலுவலர்களுக்கு போன்றே வாக்காளர்களுக்கும் போக்குவரத்து வசதிகளை வழங்குவது ஒரே விதத்தில் முக்கியத் துவம் கொண்டதாகும். வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதற்காக தனியார் வாகனங்களைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதால், பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்தி வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு வாக்காளர்களுக்கு நேரிடுகின்றது. அதேபோன்று வாக்கெடுப்பு நிலையங் களுக்கு பொருட்களாதியவற்றைக் கொண்ட செல்வதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகள் மற்றும் தனியார் பஸ் வண்டிகள் ஆகியன அதிக எண்ணிக்கையொன்று பயன்படுத்தியிருந்தமை மீது, வாக்கெடுப்புத்தினம் அன்றாடப் போக்குவரத்துச் சேவைகளை நடாத்திச் செல்வது அந்நிறுவனங்களுக்கு அசௌகரிய மாகியுள்ளது. இந்நிலைமையை இரு தரப்பினருக்கும் பொருந்தக் கூடியவாறும் மற்றும் அசௌகரியங்கள் ஏற்படாதவாறும் பொதுப் போக்குவரத்துச் சேவை களை வழங்குவதற்கு ஒழுங்கமைத்து, வாக்கெடுப்பு போன்றே பொது மக்களின் இயல்பு வாழ்க்கை நிலையும் தடைப்படாதவாறு நடாத்திச் செல்வ தற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதே போன்று பஸ்வண்டிகள் பயணிக்காத பாதைகளில் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங் களுக்காகவும், கணிசமானளவு வாக்காளர்களுக்கு செல்வதற்கு தேவைப்படுமென முன்கூட்டியே தீர்மானிக்கப்ட்ட வீதிகள் ஊடாகவும் கட்டணங் களைச் செலுத்தி பயணம் செய்வதற்கான பொதுப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

v. வாக்கெடுப்பின் ஆரம்பம் தொடக்கம் இலங்கை பொலிஸாருக்கு மற்றும் அஞ்சல் திணைக்களத் திற்கு கையளிக்கப்படுகின்ற வாக்கெடுப்புக்குரிய கடமைகளை உரிய விதத்தில் குறித்த காலப் பகுதிகளில் ஆற்றிக்கொள்வதற்கும், அத்திணைக் களங்களின் அன்றாடக் கடமைகளை தடைப்படாத விதத்தில் பேணிச் செல்வதற்கும் அத்திணைக் களங்கள் வசம் காணப்படுகின்ற வாகனங்கள் மாத்திரம் போதுமானதல்ல. அவ்வாறான சந்தர்ப் பங்களில் மாற்றுவழித் தீர்வாகத் தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காகத் தேர்தல் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கட்டணத்தின் கீழ் வாடகை அடிப்படையில் வாகனங்களைக் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

vi. பாராளுமன்றத் தேர்தல் ஒரு தினத்தினுள் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் நடாத்தப் படுவதால் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் போது காணப்படுகின்ற எரிபொருள் கையிருப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வாக்கெடுப்புக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பை சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டியதன் தேவைப்பாடு தேர்தல் ஆணைக்குழு வினால் அறிவிக்கப்பட்டதோடு ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் மாவட்டத் தெரிவத் தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களும் போக்குவரத்து விடயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் இணைந்து எரிபொருள் கையிருப்பை சேகரித்து வைத்துக் கொள்வதன் தேவைப்பாடு தொடர்பாக கலந்துரை யாடியதுடன் அது தொடர்பான அறிவுறுத்தல்களை உரிய நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

## 26. பாதுகாப்பு அலுவல்கள்.

i. அரசியலமைப்பின் 104 (இ) ஆம் உறுப்புரைக் கமைய தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு வார காலம் கழிவடையும் வரையில், தேர்தல்

சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்வதற்குத் தேவையான வசதிகள் மற்றும் பொலிஸ் உத்தி யோகத்தர்களில் சில எண்ணிக்கை அலுவலர்களை தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம் இணைப்புச் செய்தல் பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அச் சட்டத்தின் (ஈ) உறுப்புரையின் கீழ் சுதந்திரமானதும் நியாய மானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குப் பாதகமாக அமையக்கூடிய ஏதேனும் செயற்பாடுகள் அல்லது நிகழ்வுகளை தடுப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் அரசின் ஆயுதப் படைகளை ஈடுபடுத்துவது தொடர்பாகவும் சனாதிபதிக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் ஆணைக்குழுவிற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய பாராளுமன்றத் தேர்தலின் போது பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் மற்றும் தேர்தல்கள் பணிகளுக்குப் பொறுப்பான சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சிரேட்ட பொலிஸ் உத்தியோகத்தர் களுடன் தேர்தல்கள் செயலகத்தில் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இக்கலந்துரை யாடல்களின் போது எட்டப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களும் மாவட்டங்களின் சிரேட்ட காவல்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுடன் கலந்துரை யாடல்களை நடாத்தி வாக்கெடுப்பை சுதந்திர மாகவும் நியாயமாகவும் நடாத்தத் தேவையான பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப் பட்டு முன்னெடுக்கப்பட்டது. மாவட்டங்களின் நிலமை, பாதுகாப்புப் பணிகள் மற்றும் தேர்தல் சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக தேர்தல்கள் செயலகத்தின் சட்ட விசாரணை மற்றும் தேர்தல் பிணக்கு முகாமைத்துவப் பிரிவின் உத்தியோகத்தர் களும் கலந்து கொண்டனர். அதே போன்று தேர்தலுக்குத் தேவையான பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் போது பாதுகாப்பு அமைச்சின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

ii. தேர்தல் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினம் தொடக்கம் தேர்தல்கள் செயலகம் போன்றே அனைத்துத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்கள் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் காரியாலயங்களுக்குப் போதியளவு பொலீஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸ் மா அதிபர் அவர்களால் நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்தது. இந்தப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்யும் அலுவல்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக, இலங்கை பொலீஸார் நாட்டின் சகல பொலீஸ் நிலையங்களிலும் பொலீஸ் தேர்தல் பிரிவொன்றை தாபித்து தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவ தற்காக தேர்தல் ஆணைக்குழு மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுடன் நேரடியான தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருதது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவ தற்குத் தேவையான சூழலை உருவாக்குதல் தேர்தல் ஆணைக்குழு மற்றும் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் சிவில் நிறுவனங்களின் எதிர்பார்ப்பாக காணப்படுவதால் அரசியல் கட்சிகளின் செயலா ளர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுடன் தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான சிரேட்ட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## 27. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம்.

i. இந்த பாராளுமன்றத் தேர்தலை நடாத்தும் தேவைப்பாட்டை பிரகடனப்படுத்தி அதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான பின்னணியொன்றை உருவாக்கும் பொறுப்பு, தேர்தல் சட்டத்தை செயல்வலுவாக்கம் செய்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் புதிதாக தாபிக்கப்பட்ட தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவப் பிரிவுக்குக் கையளிக்கப்பட்டது. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், பொது மக்கள், சிவில் அமைப்புக்கள், தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றால் தேர்தல் காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட மீறல்கள் சம்பந்தமாக முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாகச் செயற்பட்டு சட்டத்தை செயல் வலுப்படுத்துதல் தொடர்பில் இதுவரை காலமும் காணப்பட்ட நடைமுறையை மேலும் வலுப்படுத்தும் நோக்கம் போன்றே தேர்தல்களை சுதந்திரமாகவும் நியாய மாகவும் நடாத்துதல் தொடர்பான நம்பகத் தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. பெயர் குறித்த நியமனங்கள் கையேற்றல் முடிவடையும் தினத்திற்கு அடுத்த தினம் நாட்டில் தனிமைப் படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டப் போதிலும் தேர்தல்களின் பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்காகத் தேர்தல் அலுவலகங்களை ஆகக் குறைந்தளவிலான மற்றும் கட்டாயமாகத் தேவைப்படுகின்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் திறந்து பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவத்திற்காக தாபிக்கப்பட்ட மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களைத் தற்காலிகமாக மூடுவதற்கு நேரிட்ட போதிலும் தலைமை அலுவலகத்தில் தாபிக்கப்பட்டிருந்த தேசிய தேர்தல்கள் பிணக்கு கள் முகாமைத்துவப் பிரிவினால் பெயர் குறித்த நியமனக் காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்து வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு முடிவடைந்த 2020.08.07 ஆம் திகதி வரையான காலப்பகுதி யினுள் தொடர்ச்சியாக தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இத்தேர்தலின் போது தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவப் பிரிவினால்

மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகளை பின்வருமாறு பொழிப்புப்படுத்தி குறிப்பிட்டுக்காட்ட முடியும்.

- ❖ பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 66 ஆம் பிரிவு தொடக்கம் 76 ஆம் பிரிவு வரையான "தவறுகள்", 77 ஆம் பிரிவு தொடக்கம் 82 ஆம் பிரிவு வரையான "ஊழல் பழக்கங்கள்", மற்றும் 83 ஆம் பிரிவு தொடக்கம் 88 வரையான "சட்டமுரணான பழக்கங்கள்" தொடர்பான சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்வ தற்கான சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத் தல்களை வெளியிடுதல்.

- ❖ இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 5 (ஆ) உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு பணிப்புரைகள், வழி காட்டு நெறிகள் மற்றும் ஒழுக்க நெறிகள் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அவற்றைப் பிரசுரித்தல்.

- ❖ தேசிய, மாவட்ட, பிரதேச தேர்தல் முறைப் பாட்டு முகாமைத்துவ அலகுகளைத் தாபித்தல் அலுவல்கள் மற்றும் அவற்றுடன் இணைப்புச் செய்யப்படுகின்ற அலுவலர்களுக்குப் பயிற்சி யளித்தல், முறைப்பாட்டு அலகின் செயற்பாடு களை மேற்பார்வை செய்தல், முறைப்பாடுகளின் அறிக்கையை வைத்திருத்தல் மற்றும் அது தொடர்பிலான நாளாந்த அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அதன் மீளாய்வு அறிக்கை களை பொருத்தமான அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்காக ஆணைக் குழுவிற்குச் சமர்ப்பித்தல்.

- ❖ அரசாங்க சொத்துக்கள், அலுவலர்கள் உள்ளடங்கலாக ஏனைய வளங்களை அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களின் ஊக்கு விப்புக்காக பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்குத் தேவையான விதிகளை அடையாளம் காணுதல், அரச வளங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் துஷ்பியோகம் செய்யப்படாமல் பொது மக்களின் நலன்களுக்காக மாத்திரம் பயன் படுத்துவதன் தேவைப்பாடு தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்குதல்.

- ❖ சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான தேர்தலொன்றுக்கான சூழலை உருவாக்குதல் மற்றும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான களச்சூழலை உருவாக்கும் பொருட்டு தொடர்ச்சியாக ஆராய்தல் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளை முன்வைத்தல்.

- ❖ தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவுகளுக்குக் கிடைக்கப்பெறுகின்ற முறைப் பாடுகள் தொடர்பாக தாமதமின்றி ஆராய்ந்து பார்த்து தலையிடுதல் மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் தமது அவதானிப்புக்களை சமர்ப்பித்தல், ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் மேற்கொண்டு அறிக்கையிடுதல் போன்றே உடனடி செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைத்து விடயங்களை விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.

- ❖ சமூக ஊடகங்கள் ஊடாகத் தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்றமை தொடர்பாகக் கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக சமூக ஊடக நிருவாகிகளுடன் இணக்கப்பாடுகளுக்கு வருதல் மற்றும் அவ்வாறான செயற்பாடுகளைக் குறைத்தல் தொடர்பாக சமூக ஊடக வலையமைப்பு செயற்பாட்டாளர்களுடன் ஒருங்கிணைப்பை பேணி வருதல்.

- ❖ அனைத்து அரச மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள், இலங்கை பொலீஸ், உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், போட்டி யிடுகின்றன அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியவர்களுடன் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணி வருதல்.

- ❖ தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்யும் போது தோன்றுகின்ற சட்டப் பிரச்சினைகள் மற்றும் தொடர்புடைய நடை முறைப் பயன்பாடு தொடர்பில் தேவையான பின்னாய்வை மேற்கொள்ளல் மற்றும் அது தொடர்பாக மாவட்டத் தேர்தல்கள் உத்தி யோகத்தர்களுக்கும் மற்றும் தேர்தல் பிணக்கு முகாமைத்து அலகிற்கும் அறிவித்தல்.

ii. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ அலகினால் மேற்கூறப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பொறிமுறை 18 **ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

அந்த நிறுவனக் குறிப்புக்கமைய மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் தாபிக்கப்படுகின்ற முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்கள் தொடர்பாக பொருத்தமான சிவில் அலுவலர்கள் முற்கூட்டியே இனங்காணப்பட்டு அவர்களுக்காக விசேடமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நடாத்தப்பட்டன. அத்துடன் அனைத்து முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக் காகவும் பொலீஸ் அலுவலர்கள் குழுவொன்றை நியமிக்கவும் பொலிஸ் மா அதிபர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு இப்பணி களில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சிரேட்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பொலீஸ் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், தேர்தல்கள் பணிகளுக்குப் பொறுப்பான பொலீஸ் அலுவலர்கள் ஆகியோருக் காகவும் தேர்தல் சட்டங்கள் மற்றும் முறைப்பாட்டு

முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்தத் தேசிய மற்றும் மாவட்ட முறைப்பாட்டு நிலையங்களுக்கு மேலதிகமாக மாவட்டத்தின் விசாலம், நிலத்தின் சுபாவம், போக்குவரத்து நெருக்கடிகள் மற்றும் முன் அனுபவத்தின் அடிப்படையில் இனங்காணப் பட்ட விசேட பிரதேசங்களிலும் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன. அவ்வாறே, வாக்கெடுப்புத் தினத்தில் அனைத்துப் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கருகிலும் தாபிக்கப்பட்ட பிராந்திய ஒருங்கிணைப்பு நிலை யங்கள் மூலமும் தேர்தல் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் விசாரணைகள் மேற்கொள்ளல் இடம்பெற்றன. அனைத்து தேர்தல் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவுகளுக்கு எழுத்து மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும், தொலைநகல், மின்னஞ்சல் மற்றும் வட்ஸ்அப், வைபர் மற்றும் பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியுமான அடிப்படையில் வசதிகள் செய்யப் பட்டிருந்ததுடன் அவற்றைப் பயன்படுத்தும் போது தேவையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட ஊடக அறிவித்தல் ஒன்றைத் தயாரித்து அதனை அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஊடாக விரிவான அடிப்படையில் பிரச்சாரம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

iii. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவத்தில் நேரடியாகத் தொடர்பு படுகின்ற தரப்பினராக அரசியல் கட்சிகளின் செயற்பாட்டாளர்கள் மற்றும் வேட்பாளர்களை குறிப்பிட முடியும். இடம்பெறு கின்ற சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையிடுவதன் மூலம் தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களினால் நிறை வேற்றப்படும் பணிகளை மறந்துவிட முடியாது ஆகையினால், தேர்தல் காலப்பகுதியின் போது இந்தத் தரப்பினர்களுடன் நேரடியான தொடர் பினைப் பேணி தேர்தல் பிணக்குகளை முகாமை செய்வது சவால்மிக்கதாயினும், தொடர்ச்சியான சந்திப்புக்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தி பொதுவான இணக்கப்பாடுகளுக்கு வந்து தேர்தல் சட்டங்கள் மீறப்படாத வகையில், பிரச்சாரம் செய்தல் செயற்பாடுகள், கூட்டங்களை நடாத்துதல் போன்ற பணிகளுக்காக உரிய தரப்பினரை ஊக்குவிக்க தேர்தல் ஆணைக் குழுவுக்கு முடிந்தது. கட்டுப்பாட்டு கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் கீழ் நடை பெற்ற இந்தத் தேர்தலின் பல செயற்பாடுகளும் தேர்தல் முறைப்பாட்டு அலகின் செயற்பாடுகளும் சம்பிரதாய முறைமைகளுக்கு புறம்பான தீர்வுகள் மற்றும் புதிய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டதுடன் இதற்காக அரசியல் கட்சிகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆதரவு பாராட்டத்தக்கதாகும்.

iv. கட்டுப்பாட்டு 19 கொவிட் நிலைமையின் கீழ் 2020.08.05 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின் வாக்கெடுப்புக் காலப்பகுதி 158 நாட்கள் என்பதுடன் இது இதுவரை நடாத்தப்பட்ட தேர்த லொன்றுக்கான நீண்ட காலப்பகுதியாக தேர்தல் வரலாற்றில் இடம் பிடித்துக் கொள்ளும். பாராளு மன்றத் தேர்தலொன்றின் விருப்பு வாக்கிற்காக மேற்கொள்ளப்படுகின்ற தவிர்க்க முடியாத போட்டிக்கு மத்தியில் இடம் பெறுகின்ற தேர்தல் சட்ட மீறல்களுக்கு மேலதிகமாக, கொவிட் 19 நிலைமையின் கீழ் இருந்த பிரச்சார வரையறை காரணமாக, தேர்தல் போட்டிக் களம், நடைமுறை சமநிலை கொண்டதாக பேணிச் செல்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கடும் முயற்சிகளை மேற்கொள்ளநேரிட்டது. தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல், தேர்தல் காலப்பகுதியினுள் அனைத்து ஊடகங்களையும் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக சட்ட ரீதியான ஏற்பாடுகள் இன்மை மற்றும் அரச அதிகாரமுள்ள மற்றும் இல்லாத வேட்பாளர்கள் (ஒரு கட்சியாயினும்) இடையில் உள்ள அதிகாரம் மற்றும் நிதி நிலைமை தொடர்பில் காணப்படுகின்ற முரண்பாடுகள் காரணமாக மேற்கூறப்பட்ட நிலைமை மிகவும் சிக்கலானதாக அமைத்தமை அவதானிக்கப்பட்டது. தேர்தல் முறைப்பாடுகள் முகாமைத்துவ நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான பாரம்பரிய அவதானிப்புக்கமைய ஒட்டுமொத்த தேர்தல் செயற்பாடுகளும் சுதந்திர மானதும் மற்றும் அமைதியானதுமான ஒரு சுற்றுச்சூழலினுள் நடாத்தப்பட்டது. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதியன்று ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் தேர்தல் பிணக்கு களைத் தீர்ப்பதற்கான பிரிவு மற்றும் மாவட்ட தேர்தல் முறைப்பாடுகள் முகாமைத்துவ நிலையங் களுக்கு கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகளின் பிரகாரம் தேர்தல் சட்ட மீறல்களின் எண்ணிக்கை 8600 ஆகும். அதேபோன்று சமூக ஊடகங்களின் துஷ்பிரயோகம் தொடர்பாக 5236 முறைப்பாடு களும், வன்முறைச் சம்பவங்கள் 83 மற்றும் 1503 விசாரணைகள் என்பன இதில் உள்ளடக்கியிருந்த தோடு, இந்த அனைத்து முறைப்பாடுகள் தொடர் பாகவும் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவின் தலையீடு இடம்பெற்றது. அந்த முறைப்பாடுகள் மற்றும் அவற்றின் வகையீடு தொடர்பான விபரங்கள் **17 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

v. 2019 சனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான தேர்தல் காலப்பகுதியில் எதிர்வு கூறப்பட்டவாறு பிரச்சாரங்கள் தொடர்பான தேர்தல் சட்டங்கள் மீறப்படுவது தொடர்பாக பிரதானமாக தோன்றிய சில விடயங்களை இனங்காண முடிந்தது. அதாவது, கொவிட் 19 நிலைமையின் கீழ் இடம் பெற்ற பிரச்சார வரையறைகளை மீறுதல், சமய நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும் தோரணையில் ஊடாக கட்சி மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிக்க அதனைப் பயன்படுத்தல் அல்லது ஈடுபடுதல் வெகுசன ஊடகங்களின் பக்கச்சார்பான நடத்தை மற்றும் சமமின்றிச் செயற்படல் மற்றும்

சமூக ஊடகங்களின் சட்ட விரோதமான பிரச்சாரம் போன்றவை பிரதானமான விடயங்களாக அவதானிக்கப்பட்டதோடு அரச சொத்துக்களின் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளில் அதிகரிப்பும் முக்கியமானதாக காணப்பட்டது. இதற்கு மேலதிகமாக கிடைக்கப்பெற்றிருந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை ஒரு கட்சி அல்லது குழுவொன்றின் வேட்பாளர்களினால் தமது கட்சியின் வேறு வேட்பாளர்களுக்கெதிராக செய்யப் பட்ட முறைப்பாடுகளாகும். அதற்கமைய கிடைக்கப் பெற்றிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன் முறைப்பாடு களின் நம்பகத்தன்மை மற்றும் உறுதிப்படுத்தும் ஆற்றலும்ஒப்பீட்டு ரீதியில், உயர்ந்த பெறுமதி யொன்றில் காணப்பட்டது. கையடக்கத் தொலை பேசியைப் பயன்படுத்திப் பெறப்பட்ட முறைப்பாடு களுக்குரிய புகைப்படங்கள் மற்றும் காணொளிச் சான்றுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் பெரும்பாலான முறைப்பாடுகளின் தகவல்கள் உறுதிப்படுத்தப் பட்டிருந்ததோடு, அந்த ஒவ்வொரு முறைப்பாடுகள் தொடர்பிலும் குறித்த தரப்பினர்களின் தராதரங் களைக் பார்க்காமல் எதுவும் விடுபடாமல் செயலாற்றுவதற்கு தேர்தல் முறைப்பாடுகள் முகாமைத்துவ அலுவலர்களும் பொலிசாரும் செயற்பட்டிருந்தனர்.

## 28. அரச வளங்கள் துஷ்பிரயோகத்தை தவிர்த்தல்.

i. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிய லமைப்பின் 104 (ஆ) (4) (அ) உறுப்புரைக்கமைய தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரை அல்லது ஏதேனும் அரசியற் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தேர்ந்தெடுத்தலை ஊக்கப் படுத்துகின்ற அல்லது தடுக்கின்ற நோக்கத்திற்காக அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்க கூட்டுத் தாபனத்துக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையா ஆதனம் பயன்படுத்தப்படுவதைத் தடை செய்வதற்கான தத்துவம் தேர்தல் ஆணைக் குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக் குழுவினால் விதிக்கப்படுகின்ற பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு அரச ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் கட்டுப்பட்டுள்ளனர். இந்தப் பணிப்புக்கள் அனைத்து அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபன நியதிச்சட்ட சபைகள், அரசாங்கப் பாடசாலைகள், அரச பல்கலைக் கழகங்கள் போன்ற அனைத்து அரச நிறுவனங்கள், அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள கம்பனி களுக்கும் ஏற்புடையதாகும். இவ்விடயம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்திய தேர்தல் ஆணைக் குழுவினால் அரசியலமைப்பின் மேற்குறித்த ஏற்பாடுகளை வெளிக்கொணர்ந்து, 2165/70 ஆம் இலக்க மற்றும் 2020.03.06 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதற்குச் செய்யப்பட்ட திருத்தம் உள்ளடக்கப்பட்ட 2172/2 ஆம் இலக்க 2020.04.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு மேலதிகமாக அரசாங் கத்திற்கும் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றுக்குரிய சொத்துக்களை தேர்தல் காலப்பகுதிக்குள் முறை யற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அந்நிறுவனங்களிற்கு அலுவலர்கள்/ ஊழியர்களை புதிதாக ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி உயர்வு வழங்குதல், இடமாற்றம் செய்தல் என்பன வரையறுக்கப்பட்டுள்ளதாக அறிவித்து அனைத்து அமைச்சுக்களின் செயலா ளர்கள், அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர், அனைத்து மாகாண பிரதம செயலா ளர்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர், அனைத்து மாவட்ட செயலாளர்கள், அனைத்து மாகாண ஆளுநர்கள், மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர்கள் மற்றும் அனைத்துத் திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபன நியதிச்சட்ட சபைகளின் தலை வர்கள், நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் பொது முகாமையாளர்கள் ஆகியோரை அறிவுறுத்தும் சுற்றறிக்கையொன்று 2020.03.03 ஆம் திகதி வெளியிடப்பட்டது. கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக தேர்தல் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டமையினால் மேற் குறிப்பிடப்பட்ட விடயங்களடங்கிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் 2020.06.06 ஆம் திகதிய 2178/29 ஆம் இலக்கம் கொண்டதாக மீண்டும் பிரசுரிக்கப்பட்டது. இது **அட்டவணை இலக்கம் 19 இல்** காட்டப் பட்டுள்ளது.

ii. இதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி நிறுவனங் களின் தலைவர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களை அரசியல் பிரச்சார கூட்டங்களுக்குச் சென்று வருவதற்காக பயன்படுத்தல் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள், தளபாடங்கள், ஊழியர்கள், போஸ்டர்கள் ஆகியவற்றை போக்கு வரத்துச் செய்தல், கூட்டங்களை ஒழுங்கு செய்தல் போன்ற கட்சிகள்/ வேட்பாளர்களின் ஊக்கு விப்பிற்குப் பயன்படுத்தல் தடை செய்யப்பட்டது. இந்தத்தடை தொடர்பாக மற்றும் அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்களின் கூட்டங்கள், பிரச்சாரப் பதாகைகள், பாதயாத்திரை, துண்டுப்பிரசுரங்கள பகிருதல்,போன்ற தொடர்புடைய சட்ட மீறல் களிலிருந்து தவிர்ந்திருப்பதன் தேவைப்பாடடை வலியுறுத்தி 41 ஆம் இலக்க ஊடக அறிக்கை வெளியிடப்பட்டது. இதனை தேர்தல்கள் சட்டங்களை முறைப்படி அமுல்படுத்துவதற்குத் தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்ட ஒரு நடவடிக்கை யாகக் குறிப்பிட முடியும்.

iii. அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தல்கள் ஊடக அறிவித்தல்கள், பத்திரிகை அறிவித்தல்கள்,

சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமாக, அரசு மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் மனித வளங்கள் மற்றும் பொதுச் சொத்துக்களின் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளதாக முன்கூட்டியே இனங் காணப்பட்ட சிரேட்ட பதவிநிலை உத்தியோகத் தர்கள் தேர்தல் செயலகத்திற்கு அழைக்கப் பட்டு இச்சட்டத்தின் தேவைப்பாடுகள், அச் சட்ட திட்டங்களை அமுலாக்கம் செய்தல் மற்றும் அதற்கமைய செயற்படும் பொறுப்பு தொடர்பாகவும் அது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகள் தொடர்பாகவும் விரிவாக அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டன.

iv. தேர்தல் பற்றிய அறிவித்தல் அல்லது பிரகடனம் வெளியிடப்பட்ட பின்னர், அரசாங்க நிதியைப் பயன்படுத்தி விழா ஏற்பாடுகள், பொருட்கள் மற்றும் பண்டங்களை வழங்குதல் போன்ற நிவாரணங்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்க மைத்தல், ஊழியர் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் முன்னைய அனுபவம் எனினும், அரசியலமைப்பினால் கையளிக்கப் பட்டுள்ள இந்த பணிப்புக்களை வெளியிடுவ தற்குரிய அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டமை, இது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அறிவுறுத்தல், முந்தைய தேர்தல்களின் போது அவ்வாறான நடவடிக்கைகளை ஒழுங்கமைக்க பங்களிப்புச் செய்த அலுவலர்களுக்கு தாபன விதிக்கோவையின் பிரகாரம் தண்டனை வழங்குதல் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருத்தல் ஆகிய காரணங்களினால், இத்தேர் தலின் போது இந்நிலைமை கணிசமானளவு சமநிலையடைந்து சாதகமாக சூழ்நிலையொன்று காணப்பட்டதெனக் குறிப்பிடுதல் வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டிருந்த இத்தகைய முன்னெடுப்புக்களின் விளைவாக அலுவலர்கள், ஊழியர்கள் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றங்கள் மாத்திரமன்றி, உத்தியோகபூர்வ அலுவல்கள் அல்லது சமய கருமங்களுக்காக வெளிநாடு செல்லும் போது கூட தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியின் பேரில் இதர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்த தலைவர்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியதாகும். மேலும், ஆட்சேர்ப்பு, இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக கோரிக்கை சமர்ப்பித்த நிறுவனத் தலைவர்களின் பரிந்துரை கடிதங்கள் தொடர்பாக எந்தவொரு தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாதென திருப்தியடைந்த சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவ்வாறான கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 29. அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் மற்றும் தேர்தல் பிரச்சார அலுவல்கள்.

i. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73 (1) ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காகவும் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராக அல்லது சுயேச்சை குழுவொன்றின் தலைவராக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத் தலைவரின் முகவராக உள்ள ஆளொரு வருக்கு, அத் தேர்தல் மாவட்டத்தில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு மத்திய தேர்தல் அலுவல கத்தையும் மற்றும் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திலும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு கிளைத் தேர்தல் அலுவலகத்தையும் தாபித்துக் கொள்வதற்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், மேற்படி அதிகாரமளிக்கப்பட்ட முகவரின்/ குழுத் தலைவரின் அல்லது வேட்பாளரின் சாதாரண வதிவிடத்தை தேர்தல் அலுவலகமொன்றாகப் பயன்படுத்துவதற்கு சட்டத்தின் 73 (2) ஆம் பிரிவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் 6 ஆம் உட் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அலுவலகத்தை தாபிப்பதற்கு முன்னர் அலுவலகம் தாபிக்கப்படவுள்ள பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் மற்றும் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவருக்கும் அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும். இவ்வாறு தாபிக்கப்படுகின்ற அலுவலகங்கள், அனுமதி யளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களாகக் கருதப்படும். இந்த அலுவலகங்களைத் தாபித்தல் தொடர்பாக வேட்புமனுக் கையேற்கப்படுவதற்கு முன்னர் மற்றும் அதன் பின்னர் நடாத்தப்பட்ட கட்சிச் செயலா ளர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் களின் கூட்டங்களிலும், போட்டியிடுவதாக அறிவித் திருந்த கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுடன் இடம் பெற்ற கலந்துரையாடல்களிலும் கலந்துரையாடப் பட்டு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டிருந்தன. தேர்தல் ஆணைக்குழுவினால் 2020.06.18 ஆம் திகதி அனைத்துக் கட்சிகளின் செயலாளர்கள்/ அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் அனைவருக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவல கங்களின் வகைகள், அவற்றோடு தொடர்புடைய சட்ட நிலைமைகள், தாபித்தல் சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் அதற்குரிய படிவங்கள் அடங்கிய முழுமையான விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த அறிவுறுத்தல் கடிதங்களின் பிரதிகள் பொலிஸ் மா அதிபர், அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், தேர்தல்கள் பிணக்கு முகாமைத்துவப் பிரிவுகளின் தலைவர்கள், முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான நிலையியற் குழுவின் நிரந்தர முகவர்கள், கண்காணிப்பு அமைப்புக்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

ii. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய அறிவித்தல் கொடுக்கப்பட்ட 4 வகையான தேர்தல் அலுவலகங்களைப் பேணிச்செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆகையினால், அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவல கங்களை அமைத்தல், அதிகாரம் கையளிக்கப் பட்ட நபர்கள், அலுவலகத்தை நடாத்திச் செல்ல முடியுமான கால எல்லை, அலுவலகங்களைத் தாபிக்க முடியுமான அதிகாரப் பிரதேசம்,தாபிக்க முடியுமான அலுவலகங்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு அலுவலக வகைக்கமைய தாபித்தல் தொடர்பில் இனங்காண்பதற்கு இலகுவான விதத்தில் படிவங்கள் நான்கு நிறங்களில் அச்சிடப் பட்டிருந்தன. இது தொடர்பான முழுமையான தகவல்கள் **20 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, 2020.07.12 ஆம் திகதி இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு அருகில் செய்யப்படுகின்ற சோடனைகள், உருவப் படங்கள் மற்றும் வேட்பாளர்களின் பெயர்ப் பலகைகள் காட்சிப்படுத்துவதை மட்டுப்படுத்தல் என்ற தலைப்பில் சுற்றறிக்கையொன்றின் மூலம் அனைத்துக் கட்சிகளின் செயலாளர்கள்/ அதிகார மளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

iii. அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங் களைத் தாபித்தல் மற்றும் அவற்றின் பிரச்சார அலுவல்கள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் குழுத் தலைவர் களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட "இணக்கப் பாடுகள்" மீது செயற்படுதல் ஒரு தசாப்தத்திற்கு முன்பிருந்தே காணப்படுகின்ற சம்பிரதாய மொன்றாகக் காணப்பட்ட போதிலும், இம்முறை அனைத்து தொழிற்பாடுகளையும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு மாத்திரமே மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தீர்மானத்திற்கமைய முன்னைய சம்பிரதாயம் இத்தேர்தலின் போது முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன் அதன் மூலம் அலுவலகங்களை அமைத்தல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் என்பன வரையறுக்கப்பட்டிருந்தன. சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் கடிதங்கள் மூலம் அறிவுறுத்தப் பட்டவாறு பிரச்சார அலுவலகங்கள் மற்றும் அவற்றில் பிரச்சாரப் பணிகளை மேற்கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகள் மீது மாத்திரமே இடம் பெற்றதுடன் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீறப்படு கின்ற சகல சந்தர்ப்பங்களிலும் கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளுக்கு அமைய செயற்பட்டு சட்ட முரணான அலுவலகங்கள் மற்றும் பிரச்சாரப் பலகைகள் அனைத்தும் அகற்றப்பட்டன. அதே போன்று அரசாங்க அல்லது நியதிச்சட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான காணி, கட்டிடம், உத்தியோகபூர்வ வாசஸ்தலமொன்றில், ஒதுக்கு இடமொன்றில் (காப்பிடம்) எந்தவோர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களும் தாபிக்கப்படலாகாது எனவும் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாதெனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததோடு, ஆணைக்குழு வின் கட்டளைகளுக்கு முரணாகச் செயற்படுகின்ற போது சட்டத்தை முறையாகச் செயற்படுத்துவ தற்கு மற்றும் பரிசீலனை செய்தற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களின் முகவர்கள், தேர்தல் பிணக்கு முகாமைத்துவப் பிரிவுகளின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் நடமாடும் காவல் கடமைகளில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் ஆகியோரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

iv. மேலும் நேரடியாக வாக்கெடுப்புடன் தொடர்புடைய அரசாங்க நிறுவனமொன்றிற்கு அண்மித்ததாக அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலக மொன்றை அமைக்கும் போது அவற்றுக்கிடையில் இருக்க வேண்டிய குறைந்தளவிலான தூரத்தை தீர்மானித்தல், விசேடமாக வைத்தியசாலைகள், நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,பிரதேச செயலாளர் அலுவலகம், உள்ளூராட்சி நிறுவனங்கள், தபால் அலுவலகங்கள் போன்ற பொது மக்கள் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக அடிக்கடி வருகைதருகின்ற இடங்களுக்கு அண்மையில் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அரச பாடசாலைகளுக்கு அருகாமையில் அலுவலகங்கள் அமைத்தல் அல்லது பிரச்சாரம் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது. பெரும்பாலும் இத்தகைய அறிவித்தல் மற்றும் இணக்கப்பாடு மூலம் பொதுமக்களுக்கு ஏற்படு கின்ற இடையூறுகளை குறைப்பதற்கும், சட்ட ஒழுங்கு விதிகள் உரிய முறையில் அமுல் படுத்தப்படல் ஊடாகவும் நீதியானதும் சுதந்திர மானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான சூழலை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கப் பட்டிருந்தது.

v. அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகமொன்று தாபிக்கப்படுகின்ற கட்டிடமொன்றில் ஆகக் குறைந்தது காணப்பட வேண்டிய இடத்தின் அளவு (நீளம், அகலம், உயரம் போன்றன) அதேபோன்று அதில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த வசதிகளை முன்கூட்டியே சுட்டிக்காட்டுவதால், தகடுகளால் தற்காலிகமாக நிருமாணிக்கப்படுகின்ற சிறிய கொட்டில்கள், கைவிடப்பட்டுள்ளன உடைந்த கட்டிடங்கள், கூடாரங்கள் போன்றவற்றில் தாபிக்கப் படுகின்ற இடங்களாக முன்வைத்து அவற்றில் அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக காட்டி சட்டவிரோதமான பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ள எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தவிர்க்கப்பட்டது. மேலும், இந்த அலுவலகங்களில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒலி எழுப்பிகள் பயன்பாடு, சத்த விரிவாக்கல் உபகரணங்கள்,

எதிரொலிக்கின்ற உபகரணங்கள் பயன்பாடு என்பன தடைசெய்யப்பட்டன. அலுவலகத்தைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த காலப்பகுதிக்கு அப்பால் அலுவலகங்களைத் திறந்து வைத்திருத்தல், ஆதரவாளர்கள் பெருமளவிலானவர்கள் ஒன்று கூட்டித் திரிதல், அலுவலகத்தின் முன்பக்க நடை பாதைகள் அல்லது அலுவலகத்திற்குச் சொந்த மான அல்லது வருகை தருகின்ற நபர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதால் பொது மக்களுக்கு இடையூரானவாறு அல்லது வாகன நெரிசல் ஏற்படுகின்றவாறு வீதியின் இருபக்கங் களிலும் நிறுத்தி வைப்பதிலிருந்து தவிர்ந் திருக்குமாறு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரி யங்களை குறைப்பதற்கு நடவடிக்கையெடுக்கப் பட்டது.

vi. முன்னைய தேர்தல்களின் போதும் மற்றும் அவற்றுக்குப் பின்னரான காலப்பகுதியினுள்ளும் ஒவ்வோர் அரசியல் கட்சிகளினாலும் தமது அலுவலகங்களாக நீண்ட காலம் பேணிவரப்படு கின்ற இடங்களில், அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை தாபிப்பதற்கான அனுமதி கோரப்பட்ட சந்தர்ப்பங்களின் போது, தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இது பற்றி நேரடியாக ஆராய்ந்து பார்த்து எந்தவொரு தரப்பினருக்கும் பாதிப்போ அல்லது ஊக்குவிப்போ ஏற்படாதவாறு அலுவலகங்களை அமைக்க அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, வேட்பாளர்களின் வீடுகளில் பேணிவரப்படுகின்ற அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களுக்கும், அரசியல் கட்சிகளின் அலுவலகங்களுக்கும், அருகில் மற்றும் மிக அண்மையில் அவற்றை தாபிப்பதற்கு பல எதிர்தரப்பினர் அனுமதிக் கோரிக்கை விடுத்திருந்த சந்தர்ப்பங்களின் போது இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மாத்திரம் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

vii. வாக்கெடுப்புகளுக்கு உரித்தான “அமைதிக்காலப் பகுதியினுள்” அதாவது வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் 48 மணித்தியால காலப் பகுதியினுள் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங் களை அகற்றிக் கொள்ளும் தேவைப்பாடு மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை மட்டுப்படுத்தல் தொடர்பாக போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து வேட்பாளர் களையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, அவை தொடர்பில் ஊடக நிறுவனங்களில் நடைபெற்ற நேர்காணல் களின் போது விடயங்களைத் தெரிவித்தல் மற்றும் ஊடக அறிவித்தல் மூலமும் பரந்தள விலான பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்டவாறு, அனைத்து முன்னுபாயங்கள் மற்றும் சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் வரையறைகளை ஏற்படுத்துதல் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டமைக்குக் காரணம், தேர்தல்களுடன் தொடர்புடைய மோதல்கள், தாக்குதல்கள், காயங்கள் ஏற்படல், மனித கொலைகள், அரசியல் பழிவாங்கல் போன்ற துன்புறுத்தலான சட்டமுறையற்ற நடவடிக்கை களைத் தடுத்தல் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய இடையூறுகளை நீக்குதல் மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான சூழலை தாபிப்பதால் என்பதற்காகவேயாகும். தேர்தல் ஆணைக்குழு இந்த முயற்சிகளை மதித்து மற்றும் அவற்றிட்கு கீழ்பணிந்து, குறிப்பாக கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார வழிகாட்டல் களுக்கு அமைவாக செயற்பட்டு அனைத்து அரசியற் கட்சிகள்/குழுக்களின் வேட்பாளர்கள் அனுசரணை வழங்கியமையை நன்றி உணர்வோடு குறிப்பிடுதல் வேண்டும்.

## 30. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகள்.

i. தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற சந்தர்ப்ப மொன்றின் போது பொதுமக்களுக்கு அது தொடர்பான அநேகமான தகவல்களை வழங்குவ தற்காக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பயன்படுத்த நேரிடுகின்றது. தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் வெற்றி பெற்றதன் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்துவ தற்கு எதிர்பார்த்துள்ள செயற்றிட்டங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்தலும் ஊடகங்கள் ஊடாகவே இடம் பெறுகின்றது. இத்தகைய தகவல்களை பக்கச் சார்பின்றியும் / நடுநிலையாகவும் அறிக்கையிடல் போன்று கட்சிகள், குழுக்களின் பிரச்சார நடவடிக்கைகளும் சமமான சந்தர்ப்பங்களின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டுமென வெகுசன ஊடகங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதோடு அவ்வாறு இல்லாமல் பக்கச்சார்பாக செயற்படுதல் மற்றொரு தரப்பினருக்குச் செய்யப்படுகின்ற பாரிய அநீதியாகும். அரச ஊடகங்கள் போன்று தனியார்துறை ஊடகங்களும் தேர்தல் தொடர்பான செய்திகளை அறிக்கையிடும் போது நடுநிலையாக செயலாற்றுவது சுதந்திரமானதும் மற்றும் நீதியான துமான தேர்தல் செயற்பாட்டிற்கு அவசியமான தென்பதோடு, இந்த நிலைமையையும் கருத்திற் கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 104 ஆ (5) (அ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு அவர்களின் இணக்கப்பாடு மற்றும் சட்டவரைஞர் திணைக் களத்தின் உதவியுடன் ஊடக வழிகாட்டு நெறிகள் தயாரிக்கப்பட்டு 2165/71 ஆம் இலக்க 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பின்னர்,

அவ்வப்போது எழுந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் நோக்கில் குறித்த வர்த்தமானியில் செய்யப்பட்ட சிற்சில திருத்தங்களை உள்ளடக்கி மீண்டும் 2178/24 ஆம் இலக்க மற்றும் 2020.06.03 ஆம் திகதிய மற்றும் அதற்கு மேலதிகமாக வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டு நெறிகள் உள்ளடக்கப்பட்ட 2184/51 ஆம் இலக்க மற்றும் 2020.07.17 ஆம் திகதிய திருத்தம் செய்யப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப் பட்டன. அந்த வர்த்தமானி அறிவித்தல்கள் **21 மற்றும் 22 ஆம் இலக்க அட்டவணைகளில்** காட்டப்பட்டுள்ளன.

ii. பாராளுமன்றத் தேர்தல்கள் வாக்கெடுப்பு காலப்பகுதியினுள் ஊடகங்களின் பயன்பாடு தொடர்பாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டல்களை வெளியிடுவதற்கு மேலதிகமாக, அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள், பத்திரிகை ஆசியர் சங்க உத்தியோகத் தர்கள், இலத்திரனியல் ஒளிபரப்பாளர்களின் சங்க உத்தியோகத்தர்கள், சந்தர்ப்பத்திற்கேற்ப செய்தி ஆசிரியர்கள், தொகுப்பாளர்கள், தேர்தல் ஆணைக் குழுவின் செய்திகளை சேகரிக்கின்ற ஊடகவிய லாளர்கள் சமூக ஊடக உரிமையாளர்கள் மற்றும் அதனைப் பயன்படுத்துவோர் 07 சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடல்களை நடாத்தி சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவ தற்காக ஊடகங்களின் பொறுப்பு மற்றும் பயன்பாடு பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இவ்வாறான கலந்துரையாடல்களை நடாத்துவதனூடாகத் தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்ப்பது யாதெனில், வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படாதவாறு சுயகட்டுப்பாடொன்றை ஊடக நிறுவனங்களினால் ஏற்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பின்னணியை ஏற்படுத்துவதாகும். இதற்கு மேலதிகமாக, ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுதல் தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பாகவும் அவர்களுடன் கலந்துரையாடி தேர்தல் காலப்பகுதியினுள் ஊடகப் பயன்பாட்டை நீதியாகவும் மற்றும் சுதந்திரமாகவும் பேணிச் செல்வதற்குத் தேவையான சூழல் உருவாக்கப்பட்டது.

iii. எவ்வாறாயினும், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக ஊடகங்களின் பொறுப்பை குறைத்து மதிப்பிட முடியாது. அரசியலமைப்பின்படி ஊடக வழிகாட்டு நெறிகளை மீறும் போது தண்டனை விதிக்க முடிவது, அது அரச ஊடக நிறுவனங்களுக்கு மாத்திரமாகும். ஊடக விதிமுறைகளை மீறுகின்ற போது அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அரச அல்லது தனியார் ஊடகம் என்பது முக்கியமல்ல என்பதுடன் அலைவரிசை மக்கள் வசமுள்ள சொத்தொன்று என்பதால் கருதப் படுவதனால் அரசியலமைப்பில் குறித்துரைக்கப் பட்டுள்ள அத்தகைய, சட்டங்கள் அனைத்து ஊடகங்களுக்கும் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும். ஊடக வழிகாட்டல்கள் மீறப்படுகின்ற முதலாவது சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக் குழுவினால் உரிய ஊடக நிறுவனங்களுக்கு அவ்வாறு செய்ய வேண்டாமெனவும் மற்றும் ஊடக வழிகாட்டல்களுக்கு இணங்கி நடக்கும் படியும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. தேர்தல் ஆணைக்குழு கருதுகின்றவாறு ஊடக வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப செயற்படாத சந்தர்ப்பங் களில் அது அரச ஊடகம் அல்லது தனியார் ஊடகமாயினும் வாக்கெடுப்பு நிறைவடையும் வரை வாக்கெடுப்பு தொடர்பான செய்திகளை அறிக்கையிடல், அரசியல் சுபாவமான செய்திகள்/ நிகழ்ச்சிகள் / விவாதங்களை ஒளிபரப்புச் செய்வதை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

iv. ஊடக நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோளின் பேரில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உட்பட ஏனைய அலுவலர்கள் நேர்முகக் கலந்துரையாடல்களில் பங்குபற்றி பாராளுமன்றத் தேர்தலுக்குரியதாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டல்கள் மற்றும் அதன் பிரகாரம் ஊடக நிறுவனங்கள் செயல்படுவது எவ்வாறு என்பது தொடர்பாகவும்,ஊடக வழிகாட்டல்களை வெளியிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது, நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக ஊடகங்களின் பயன்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாகவும், தேர்தல் மற்றும் தொடர்புடைய நியதிச்சட்ட விடயங்கள் மற்றும் சட்டதிட்டங்கள் பற்றியும் பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டனர். அதேபோன்று, தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட அமைதிக்காலப் பகுதியினுள் பல ஊடகங் களிலிருந்து கிடைக்கப் பெற்ற வேண்டுகோளின் அடிப்படையில் ஊடக வழிகாட்டல்கள் தொடர்பாக பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப் பட்டன. மேலும் சமூக ஊடக வலைப்புக்கள் மூலமும் ஏற்பாடு செய்யப்பட்ட பல நேர்முகக் கலந்துரையாடல்களில் தவிசாளர் அவர்கள் கலந்து கொண்டு மேற்படி தலைப்பின் கீழ் விடயங்களை முன்வைத்ததோடு இவ்வனைத்து நேர்முகக் கலந்துரையாடல்களும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ முகநூலில் வெளியிடப் பட்டன.

## 31. சமூக ஊடகங்கள்

i. தற்கால சமூகத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு பொதுவானதாகக் காணப்படுகின்றது. அதற்கான தொழில்நுட்பக் கருவிகளும் பரவலாகக் இக்காலப்பகுதியில் காணப்படுகின்றன. குறிப்பாக இளைஞர் யுவதிகளிடையே பாரம்பரிய ஊடகப் பயன்பாட்டுக்குப் பதிலாக சமூக ஊடகப் பயன் பாட்டின் போக்கில் அதிக ஆர்வம் காணப்படுவது

அனைவரும் அறிந்த விடயமாகும். எனவே, தேர்தல் சட்ட மீறல்களை அறிவித்தல் மற்றும் முறைப்பாடுகளை முன்வைத்தல், வேட்பாளர் ஊக்குவிப்பு போன்று வேட்பாளர்களை பாதிப்புக்கு உட்படுத்தல், விசாரணைகளை நடாத்துதல் போன்ற சமூக ஊடகச் செயற்பாடுகளின் போது அவற்றின் கட்டுப்பாட்டாளர்களின் நடத்தை மிகவும் பேசப்பட்டது. எனவே, தேர்தல் காலப்பகுதிக்குள் சமூக ஊடக பயன்பாட்டை ஒழுங்குபடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். சமூக ஊடகங்கள் மூலம் உடனடியாக தகவல் களைச் சமூகமயப்படுத்தல் சாத்தியப்பாட்டின் மீது மற்றும் சமூக ஊடக பயன்பாடு மக்களிடத்தில் ஆழமாகக் காணப்படல், குறிப்பாக இளம் சமுதாயத்தினரின் அதிகரித்த பயன்பாடு என்பன காரணமாக தேர்தல் ஆணைக்குழுவும் மக்களை அறிவுறுத்தல், விளக்களித்தல் என்பன தொடர்பாக விரிவான பிரச்சாரத்தை வழங்குவதற்காக உத்தியோகபூர்வ சமூக ஊடகக் கணக்குகளைத் திறந்து பயன்படுத்தப்பட்டன.

ii. சம்பிரதாய ரீதியான அவதானிப்புக்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு அப்பால் சென்று தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் தொடர்பாகவும் சட்டவிரோதமான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பாகவும் விசேடமாக சட்டவிரோதமாக ஊர்வலங்கள், வாக்கு இரந்து கேட்டல், உபசாரங்கள், சட்ட விரோதமான மக்கள் ஒன்றுகூடல்கள் போன்ற விசாரணைகளுக்கு கடினமான விடயங்கள் தொடர்பில் சான்றுகளுடன் கூடியதாக ஆணைக் குழுவுக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கின்ற ஊடகங்களாக சமூக ஊடகங்கள் விசேடமான வகிபாகமொன்றை ஆற்றியிருந்தன.

iii. தேர்தல் காலப்பகுதியினுள் சமூக ஊடகங்கள் மற்றும் வலையமைப்புத் தகவல் பயன்பாட்டினால் அடையாளம் காணப்பட்ட மற்றும் அவற்றினூடாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 5236 ஆகும். பொதுவான சமூக இடமொன்று என்பதால் நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளினூடாக சமூக ஊடக முறைகேடுகளைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்தல் மிகவும் அசௌகரியமான பணியொன்றாகக் காணப்பட்டது. விசேடமாக போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, அவர்கள் மற்றும் ஆதரவாளர்களின் சமூக ஊடகப் பயன்பாடுகள் அதிகரித்தமை காரணமாக எதிர் வேட்பாளர்கள் பாதிக்கப்படும் விதத்தில் செயற் படும் சந்தர்ப்பங்கள் அதிகளவில் அறிக்கையிடப் பட்டுள்ளன. இது தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்த தோடு, இது தொடர்பில் செயற்படுவதற்கான சட்டப் பின்னணி மற்றும் தொழில்நுட்பப் பற்றாக்குறை காரணமாக இந்த முறைப்பாடுகளை தீர்ப்பது கடினமானதாகக் காணப்பட்டது. இருந்தபோதிலும் காணப்பட்ட இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவ தற்காக தேர்தல் ஆணைக்குழு மற்றும் பிணக்கு முகாமைத்துவ அலகின் பிரதிநிதிகளால் அரசியல் கட்சி முகவர்கள் மற்றும் வேட்பாளர்களை விழிப்புணர்வூட்டும் கலந்துரையாடலொன்று நடாத்தப் பட்டது. இதற்கு மேலதிகமாக, சமூக ஊடக நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் உரிமையாளர்களை அழைத்து கலந்துரையாடி தேர்தல் சட்டங்கள் மீறப்படுவதை குறைப்பதற்காக பொதுவான இணக்கப்பாடொன்று ஏற்படுத்தப் பட்டதுடன் அவ்வாறான வழிமுறைமையும் இது தொடர்பான சிறந்த மூலோபாயமாகக் காணப்பட்டது.

## 32. பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் ஊடக அறிக்கைகள்.

i. பாராளுமன்றத் தேர்தலின் நியதிச் சட்டரீதியான மற்றும் பொது மக்களுக்கு கட்டாயமாக அறிவுறுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்துவதற்காக தயாரிக்கப் பட்ட 14 பகிரங்க அறிவித்தல்களில் ஒவ்வொரு அறிவித்தலும் மூன்று மொழிகளிலும் அமையுமாறு லங்காதீப, தினமின, தினகரன், டெய்லி நிவுஸ், திவயின, த ஐலெண்ட், வீரகேசரி, டெய்லி மிரர் மற்றும் உதயன் அகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதோடு ஒவ்வொரு அறிவித்தலும் வெளியிடப்பட்ட திகதி மற்றும் அது தொடர்பான விபரங்கள் **18 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

ii. மேலும், மேற்குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் களுக்கு மேலதிகமாக, இத் தகவல்களுடன் தொடர்புடைய 95 ஊடக அறிக்கைகள் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டதோடு இந்த ஊடக அறிவித்தல்கள் அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு அதன் மூலம் பொதுமக்களை விழிப்புணர்வூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. அதே போன்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் மற்றும் ஊடக அறிவித்தல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப் பட்டது. அத்தகவல்கள் **19 ஆம் இலக்க புள்ளி விபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

## 33. அரசியல் வானலை ஒலிபரப்புகளுக்காகத் தொலைக்காட்சி மற்றும் வானொலி வசதிகளை வழங்குதல்.

i. 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய அரசியல் வானலை ஒலிபரப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்காக வேட்புமனுக் காலப்பகுதியின் இறுதித் தினத்திலிருந்து ஒரு வாரத்தினுள் கோரிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். அந்தக் கோரிக்கையின் பிரகாரம் ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்காக வேட்புமனுக் கையளித்துள்ள அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் அல்லது சுயேச்சைக் குழுக் களுக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தவிசாளர் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் ஆகியவர்களால்

தீர்மானிக்கப்படுகின்றவாறான நிபந்தனைகளுக் கமைவாக அந்தக் கோரிக்கைகளைச் சமர்ப்பிப் பதற்காக நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளின் பின்னரான நாளில் தொடங்குவதும், வாக்கெடுப்பு தொடங்குவதற்கு எழுபத்திரண்டு மணித்தியாலங் களுக்கு முன்னர் முடிவதுமான காலப்பகுதிக்குள் ஒலிபரப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ii. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் இப்பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்வந்துள்ள அங்கீகரிக்கப் பட்ட 40 அரசியல் கட்சிகளுக்கும் மற்றும் 313 சுயேச்சைக் குழுக்களுக்கு, தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக வானலை ஒலிபரப்பு வசதிகள், இலங்கை வானொலி மற்றும் இலங்கை ரூபவாஹினி ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஒளிபரப்பு சந்தர்ப்பத்திலும் காலம் அதிகபட்சம் 15 நிமிடங்கள் என்பதுடன், போட்டியிடுகின்ற தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை 02 இலிருந்து 14 வரை மற்றும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 132 இற்கு மேற்படுகின்ற போது 60 நிமிடங்களும், தேர்தல் மாவட்டங்கள் 14 இற்கும் அதிகமான எண்ணிக்கையில் போட்டியிடுகின்ற மற்றும் 132 இற்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடு கின்ற போது ஆகக் கூடியது 90 நிமிடங்களுக்கும் வரையறுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சுயேச்சைக் குழுவுக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் திலிருந்து 30 நிமிடத்திற்கு உரித்தாவதோடு அதனை ஒரே தடவையில் அல்லது 15 நிமிடங்கள் வீதம் இரண்டு தடவையில் பயன்படுத்த முடியும். வானலைக் கால ஒதுக்கீடு தொடர்பான தரவுகள் **புள்ளிவிபரக் குறிப்பு இலக்கம் 20 (i) மற்றும் (ii) இல்** காட்டப்பட்டுள்ளது.

iii. போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்தமை காரணமாக இந்த ஒளிபரப்பு நேரங்களை ஒதுக்குவ தற்காக திருவுளச் சீட்டிழுப்பொன்றை நடாத்த வேண்டியும் ஏற்பட்டது. அதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் ஏற்பாடு களை மேற்கொண்டு தருமாறு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனங்களின் தவிசாளர்களால் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கமைய தேர்தல் ஆணைக்குழுவினால் 2020.06.20 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேல் மாகாண அழகியற் கலை நிறுவனத்திற்கு அனைத்து போட்டியிட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/பிரதிநிதிகள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டு திருவுளச் சீட்டிழுப்பொன்று நடாத்தப்பட்டு ஒளிபரப்புக் காலங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டன. இச்சந்தர்ப் பத்திற்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உட்பட ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு மேலதிகமாக இலங்கை ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

iv. அதன்படி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப னத்தின் சிங்கள சுதேசிய சேவையினூடாக 28 அரசியல் கட்சிகளிற்காக 15 நிமிடங்கள் வீதம் 124 நிகழ்ச்சிகளும், 201 சுயேச்சைக் குழுக் களுக்காக 15 நிமிடங்கள் வீதம் 402 நிகழ்ச்சித் திட்டங்களும், தமிழ் தேசிய சேவை ஊடாக 12 அரசியல் கட்சிகளுக்காக 15 நிமிடங்கள் வீதம் 40 நிகழ்ச்சிகளும் 112 சுயேச்சைக் குழுக்களுக்காக 15 நிமிடங்கள் வீதம் 224 நிகழ்ச்சித் திட்டங்களும் வழங்கப்பட்டன. அதேபோன்று இலங்கை ரூபவா ஹினிக் கூட்டுத்தாபனத்தினால் 15 நிமிடங்கள் கொண்ட 285 நிகழ்ச்சிகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. ஒரு சுயேச்சை குழுவுக்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினால் 30 நிமிடங்கள் வீதம் வானலைக் காலங்கள் வழங்கப் பட்டன.

v. வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட இந்த வானலைக் கால வசதிகளின் கீழ் உரையாற்றும் போது அதற்கான ஒழுக்க நெறிமுறை ஒன்றினை அரசியல் கட்சிகள் மற்றும் குழுத் தலைவர்கள் ஆகியவர்களுடன் கலந்துரையாடி தேர்தல் ஆணைக்குழுவினால் குறித்த நிறுவனங்கள் போன்றே போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டது. இந்த ஒழுக்க நெறிமுறைக்கு உட்பட்டு எந்த வொரு கட்சிக்கு/ குழுவுக்கு ஏனைய கட்சிகள் அல்லது குழுக்கள் சார்பாக உரையாற்றுதல், கருத்துக்கள், கட்சிகள்/ குழுக்களின் கொள்கை களுக்குரிய விடயங்கள் தவிர ஆத்திரமூட்டும், துவேசமான, வெறுப்புப் பேச்சுக்கள் அல்லது ஏனைய ஒரு தரப்பினருக்குப் பாதிப்பான விதத்தில் உரையாற்றுதல் கூடாது என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டது. இந்த அறிவுறுத்தல்கள் 20.06.2020 ஆம் திகதி இடம்பெற்ற ஒளிபரப்பு நேரத்தை ஒதுக்கும் சந்தர்ப்பத்திலும் கலந்து கொண்ட முகவர்களின் முன்னிலையில் தெளிவாக வாசித்து காட்டி விளக்கமளிக்கப்பட்டது. இந்த அறிவுறுத்தல் **23 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

## 34. அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்க நெறிகள்.

i. 1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் கள் சட்டத்தின் 8 (8) ஆம் பிரிவுக்கமைய அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் தேர்தல் காலப்பகுதியில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறிக் கோப்பொன்றை தேர்தல் ஆணைக் குழுவினால் வெளியிடுவதற்கான சாத்தியம் கிட்டியது. முன்னைய தேர்தல்களின் போது தோன்றிய விடயங்கள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றுக்கமைவாக சுதந்திரமானதும் நீதி யானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான சூழல் அல்லது போட்டியிடுகின்றவர் களுக்கு சமகளமொன்றை உருவாக்குவது அது

சனநாயகத்தை மதிக்கின்ற அநேகமான மக்களின் ஒரே நோக்கமாக இருப்பதனையும் குறிக்கோளாகக் கொண்டு அப்போதைய தேர்தல்கள் ஆணையாளர் அவர்களால் 2012 ஆம் ஆண்டு செப்தெம்பர் 08 ஆம் திகதி நடைபெற்ற வட மத்திய, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல் களுக்காக முதற் தடவையாக வேட்பாளர் களுக்கான ஒழுக்க நெறிமுறைகள் பிரகடனப் படுத்தப்பட்டன. இந்த நோக்கத்திற்காக அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/ நிரந்தர பிரதிநிதிகள் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களின் இணக்கப் பாட்டையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ii. அதன் பின்னர் நடைபெற்ற சகல தேர்தல்களிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்காக ஒழுக்க நெறிமுறையொன்று பிரகடனப்படுத்தப்பட்டதோடு, இத்தேர்தலுக்காக இரண்டு சந்தர்ப்பங்களில் அதாவது, 2165/70 இலக்க 2020.03.06 ஆம் திகதிய மற்றும் 2178/25 இலக்க 2020.06.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம் அந்த ஒழுக்க நெறிகள் பிரசுரிக்கப்பட்டன. மேலும், இது தொடர்பாக செய்தித்தாள்களில் அறிவித்தல்கள் மற்றும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமும் பரந்தளவிலான பிரச்சாரத்தை வழங்குவ தற்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஒழுக்க நெறிகள் தொடர்பாக தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றிய கூட்டங் களிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டு இணக்கப் பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த ஒழுக்க நெறிக் கோவையின் ஏற்பாடுகள் நேரடியாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள். உள்ளடங்கலான கட்சிகளின் பிரதான பதவி தாங்குநர்கள், போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அரசியல்வாதிகள் அனைத்துக் கட்சிகளின் தொழில்படுநர்கள் மற்றும் வேட்பாளர் களின் ஆதரவாளர்கள் மற்றும் போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும் ஏற்புடையதாகும் விதத்தில் வெளியிடப்பட்டது. 2178/25 இலக்க 2020.06.03 ஆம் திகதி வெளியிடப்பட்ட போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் உள்ளடக்கப் பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதற்கு மேலதிகமாக வெளியிடப்பட்ட ஒழுக்க நெறிகள் உள்ளடக்கப்பட்ட 2184/52 ஆம் இலக்க 2020.07.17 ஆந் திகதிய திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் **24 மற்றும் 25 ஆம் இலக்க அட்டவணைகளில்** காட்டப்பட்டுள்ளன.

iii. போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் ஒழுக்க நெறிகள் முறைகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றைப் பின்பற்றுதல் என்பன தேர்தல் பணிகளின் ஒழுங்கமைப்பு போன்றே தேர்தல் முறைப்பாடுகளை குறைப்பதற்கும் இதனூடாக நியாயமான தேர்தலொன்றை நடாத்துவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. ஒழுக்க நெறி முறைமை களினூடாகத் தேர்தல் சட்டத்தின் அதிகாரம், வேட்பாளர்களின் நடத்தைகள் மற்றும் செயற் பாடுகள் தேர்தல் பிரச்சார அலுவல்கள், வெறுப்புப் பேச்சுக்கள் அல்லது தேசிய ஒற்றுமைக்கு எதிரான வெளியீடுகள், பொது விடயங்கள், வாக்கெடுப்புத் திகதி, அஞ்சல் வாக்குகள் உள்ளடங்கலாக விருப்பு வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் ஆகிய விடயங்களின் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆட்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இந்த ஒழுக்கநெறிக் கட்டமைப்பில் உள்ளடக்கப் பட்ட விடயங்களுக்கமைவாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிய அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், தமது ஆதரவாளர்கள் மற்றும் தொழில்படுநர்கள் ஆகியவர்களுடன் கலந்துரையாடி பொறிமுறையொன்று வடிவமைக் கப்படுமென எதிர்பார்க்கப்பட்டதுடன், பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுந்த முறைப்பாடுகள் மற்றும் ஒழுக்க நெறிகள் மீறப்பட்ட நிகழ்வுகளை ஆய்வு செய்து கட்சிச் செயலாளர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் கூட்டங்களில் விடயங்கள் தெளிவுபடுத்தி அதனைத் திருத்திக் கொள்வதன் முக்கியத்துவம், அதற்கான நடவடிக்கைகள் என்பவற்றை, தேர்தல் ஆணைக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது இந்த ஒழுக்க நெறிகள் தொடர்பாக பரந்த பிரச்சாரத்தை வழங்குவதன் மூலம் பொது மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள், தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் என்பனவும் அதிக கவனத்தோடிருந்து ஒழுக்க நெறிகளுக்கு அப்பால் தொடர்புடைய நபர்கள் செயற்படுகின்ற சந்தர்ப் பங்களில் முறைப்பாடு செய்தல் மற்றும் பல்வேறு ஊடகங்கள் ஊடாக அவ்வாறான சந்தர்ப்பங்களை வெளிப்படுத்தல் மூலம் இவ்வாறான சூழ்நிலை களைக் கட்டுப்படுத்தி சிறந்த நிலைமையொன்றைப் பேணக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 35. போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு தேர்தல் மற்றும் தொடர்புடைய பொருட்களை இலவச அஞ்சலில் அனுப்புவதற்கான உரிமை.

i. 1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் கள் சட்டத்தின் 125 ஆம் பிரிவிற்கமைய ஏதேனும் தேர்தல் மாவட்டமொன்றில் தேர்தலில் போட்டியிடு கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிச் செயலாளர் அல்லது சுயேச்சைக் குழுத் தலைவர் நியமனக் காலப்பகுதியின் கடைசி நாளுக்கும் அத்தகைய தேர்தலின் வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு முன்னைய பத்தாம் நாளுக்கும் இடையிலான ஏதேனும் நேரத்தில், அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு தேருநருக்கும் எவ்வித அஞ்சல் கட்டணமுமின்றி, அத்தகைய தேர்தல் தொடர்பான விடயத்தை மட்டும்

கொண்டுள்ள ஓர் அஞ்சல் செய்தியொன்றை சாதாரண அஞ்சலில் அனுப்புவதற்கு உரிமை உண்டு. சட்டத்தின் இந்த ஒழுங்குவிதிகள் தொடர்பாக 2020.03.12 ஆம் திகதி அஞ்சல் மா அதிபருக்கு அறிவுறுத்துவதற்குத் தேர்தல் ஆணைக் குழு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அதேபோன்று வாக்காளர்களுக்கு அனுப்பப்படுகின்ற அஞ்சல் செய்தியை அஞ்சலுக்குக் கையளிக்கும் போது அவற்றைப் பரிசீலனை செய்து பார்க்கும் பொருட்டு திறந்து வைக்கப்படல் வேண்டு மென்பதோடு அதன் நிறை, நீள அகலம், அதற்கு பொறியிடும் முறை, அது தயாரிக்கப்படுகின்ற முறை, அது சமர்ப்பிக்கப்பட வேண்டிய அஞ்சல் அலுவலகம் மற்றும் அதற்காக அதிகாரமளிக்கப் பட்டுள்ள ஆட்கள் மற்றும் அது தொடர்பாக செயற்படுகின்ற முறையும் அஞ்சல் மா அதிபரி னால் தீர்மானிக்கப்பட்ட பின்னர், அந்த அறிவுறுத் தல்கள் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கு 2020.03.12 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

ii. அஞ்சல் மா அதிபரின் மேற்படி சுற்றறிக்கை தேர்தல் ஆணைக்குழுவால் 2020.06.15 ஆம் திகதி அனைத்து பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணை யாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மாவட்டத்திலிருந்து போட்டியிடுகின்ற அனைத்துக் கட்சிகளினதும் அங்கீகாரம் பெற்ற முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களை அறிவுறுத்துவதற்கும் அந்த உரிமையாண்மையினூடாக ஏனைய கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் ஆகியோரை மேம்படுத்தா திருக்க வேண்டுமென வலியுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 36. தேர்தல் கண்காணிப்பு அலுவல்கள்.

i. தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகத் தேர்தல்கள் சட்டத்தினால் அனுமதி வழங்கப்படாத போதும், தேர்தல் செயற்பாடுகளை அதிக வெளிப்படைத்தன்மையுடன் கூடியதாக அனைத்து தரப்பினர்களினதும் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியுமானவாறு நடாத்துவதற்கான முக்கிய காரணியாக மாறியுள்ளது. கடந்த தேர்தல்களின் போது கண்காணிப்பு நடவடிக்கை களை மேற்கொண்டு அனுபவம் கொண்ட சில கண்காணிப்பு நிறுவனங்களுக்கு அவர்களின் வேண்டுகோள்களைக் கருத்தில் கொண்டு இந்தத் தேர்தலின் போது கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது. அதன் பிரகாரம், பின்வரும் உள்நாட்டுக் கண்காணிப்பு நிறுவனங்கள் இந்தத் தேர்தலின் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டன.

1. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன் றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)
2. தேர்தல் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV)
3. ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TI-SL)
4. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக் கான மக்கள் இயக்கம் (CaFFE)
5. தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் (NPOC)
6. இலங்கையின் அன்னையரும் புதல்வியரும் அமைப்பு (MDL)
7. நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தல் களுக்கான இயக்கம் (MFFE)
8. தேர்தல் விசாரணைக்கான தன்னார்வ முன்னெடுப்பு (VIEW)

ii. தேர்தல்கள் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV) மற்றும் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) என்பவற்றின் நிறுவனத் தலைவர்கள் கொவிட் சுகாதார வழிகாட்டலின் பிரகாரம் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது தொடர்பாக கலந்துரை யாடுவதற்காக சந்தர்ப்பமொன்றை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தன. அதன் பிரகாரம், அனைத்துக் கண்காணிப்பு அமைப்புகளும் 2020.06.30 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டு தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களின் பணிப் பொறுப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனுமதி கோரிய நிறுவனங்களினால் அந்த கண்காணிப்பு அமைப்பின் தகவல்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற விதம் பற்றிய முழுத் தகவல்களும் உள்ளடங்கிய விண்ணப்பமொன்றை தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக தேர்தல் காலப்பகுதியினுள் நடாத்தப்பட்ட அனைத்து அரசியற் கட்சிச் செயலாளர்களின் கலந்துரையாடல் களுக்கும் கண்காணிப்பு நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டன. மேலும் தேர்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் அறிக்கைகளை கண்காணிப்பு அமைப்புக்களுக்கு வழங்குவதற்கும் ஆணைக்குழுவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

iii. வாக்கெடுப்பு நிலையங்களினுள் தரித்திருந்து கண்காணிப்புச் செய்வதற்கு போன்றே நடமாடும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்கான அனுமதி, நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல்கள் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய நிறுவனங் களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது. அந்நிறுவனங் களுக்கு 2020.07.20 ஆம் திகதி அதற்கான அனுமதி தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப் பட்டது. இந்த அமைப்புக்களால் ஒவ்வொரு

வாக்கெடுப்பு நிலையங்களுக்காகவும் நியமனம் செய்யப்படவுள்ள கண்காணிப்பாளர்கள் பற்றிய தகவல்கள், வழங்கப்பட்டிருந்த படிவத்தின் 2 இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அதில் ஒரு பிரதி வாக்கெடுப்புத் தினத்திற்கு 5 தினங்களுக்கு முன்னர் குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அல்லது மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கும் மற்றைய பிரதியை வாக்கெடுப்பு தினம் கண்காணிப்பாளரால் வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கும் கையளிக்குமாறு 2020.07.23 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஏனைய கண்காணிப்பு நிறுவனங்களான நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் இயக்கம் (CaFFE) இலங்கையின் அன்னையரும் புதல்வியரும் அமைப்பு (MDL), தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் (NPOC), மற்றும் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தல் களுக்கான இயக்கம் (MFFE) மற்றும் தேர்தல் விசாரணைக்கான தன்னார்வ முன்னெடுப்பு (VIEW) ஆகிய நிறுவனங்களுக்கு வாக்கெடுப்பு வளாக நுழைவாயில் பகுதி வரை மாத்திரம் நடமாடும் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

iv. அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படப்படுகின்ற அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங் களில் ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் ஒரு கண்காணிப்பாளர் வீதம் கண்காணிப்பு நடவடிக்கை களுக்காக, தேர்தல்கள் வன்முறைச் செயல்கள் கண்காணிப்பு நிலையம் (CMEV) மற்றும் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அனைத்துக் கண்காணிப்பு அமைப்புக் களுக்கும் மற்றும் கண்காணிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற நபர்களுக்கும் கண்காணிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் அங்கு கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த வழிகாட்டு நெறிகள் **26 ஆம் இலக்க அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

v. கடந்த தேர்தல்களைப் போன்று இவ்வருடமும் வாக்கெண்ணல் நிலையங்கள், வாக்கெண்ணல் வளாகங்கள்,பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் நிலையங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப் பதற்கும் உள்ளூர் கண்காணிப்பு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. கொவிட் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டி யிருந்தமையால் பதவியணியைக் குறைத்தல், வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பின் காரணமாக வாக்கெண்ணல் நிலைய வளாகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் நேரிட்டது. தேர்தல் ஆணைக்குழுவினால் கண்காணிப்பு அமைப்புக்களுக்கு அனுப்பப்பட்ட 2020.07.24 ஆம் திகதிய கடிதத்திற்கமைய பொருட்களாதியவற்றை கையளிக்கும் வளாகங்களின் ஒரு வாக்கெடுப்பு பிரதேசத்திற்கு ஒரு கண்காணிப்பு அமைப்பிலி ருந்து இருவர் வீதம் ஆகக் கூடியது நான்கு பேரை ஈடுபடுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த கண்காணிப்பாளர்களுக்கு வாக்குப் பெட்டிகள் மற்றும் பொருட்கள் என்பவற்றைக் கையேற்றல் மற்றும் பாதுகாப்பாக வைத்திருப்பதை கண்காணிக்க முடிவதோடு, உரிய நிலையத்திலிருந்து வேறு ஒரு நிலையத்திற்குச் சென்று கண்காணிப்பு நடவடிக்கை களை மேற்கொள்வது தடைசெய்யப்பட்டிருந்தது. அதே கண்காணிப்பாளர்களுக்கு அவர்களது விருப்பின் பிரகாரம் வாக்கெடுப்புத் தினம் பி.ப. 5.00 மணி தொடக்கம் மறுநாள் அதாவது 2020.08.06 ஆம் திகதி வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படும் வரை அந்த வளாகத்தில் தரித்திருக்க முடியுமெனவும் அறிவிக்கப் பட்டிருந்தது.

vi. ஒவ்வொரு வாக்கெண்ணல் வளாகத்திற்கும் ஒரு கண்காணிப்பு அமைப்பிலிருந்து ஒரு கண்காணிப் பாளர் வீதம் இரண்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தலாம். ஆகக்கூடியது 6 ஆகும். இந்த கண்காணிப்பாளர்களை வாக்கெடுப்புப் பிரிவு ஒன்றுக்கு அல்லது இரண்டு பிரதேசங்களின் கண்காணிப்புக்காக பெயர் குறிக்க முடியுமென்ப தோடு அவர்களுக்கு குறித்த வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குரிய எந்தவொரு வாக்கெண்ணல் நிலையத்தையும் கண்காணிக்க முடியுமென்ற போதிலும் அடிக்கடி மாறிமாறி வாக்கெண்ணல் தொழிற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

vii. அதேபோன்று தேர்தல்கள் செயலகம் மற்றும் அந்தந்த மாவட்டங்களில் அமைந்துள்ள பெறுபேறு களை அட்டவணைப்படுத்தல் மற்றும் பெறுபேறு களை வெளியிடும் நிலையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு கண்காணிப்பு அமைப் பிலிருந்து ஒரு கண்காணிப்பாளர் வீதம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது இவ்விடங்களில் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்கின்ற கண்காணிப்பாளர்கள் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் முறைமை ஒன்றும் அறிமுகம் செய்யப்பட்டது. வாக்கெடுப்புத் தினம் தேர்தல்கள் செயலகத்தில் பேணப்பட்டு வருகின்ற தேசிய முறைப்பாடுகள் முகாமைத்துவ நிலையத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற அலுவல் களை கண்காணிப்பதற்காகவும் கண்காணிப்பு முகவர்களை நியமிக்குமாறு அனைத்து கண்காணிப்பு அமைப்புக்களுக்கும் 2020.07.27 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதோடு சகல கண்காணிப்பு அமைப்புக் களாலும் அந்த அலுவல்களின் கண்காணிப்புக்காக முகவர்கள் நியமனம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

## 37. வாக்கெடுப்பு

i. தேர்தலொன்றை நடாத்துவதை தேவைப்படுத்துகின்ற பிரகடனம் வெளியிடப்பட்ட பின்னர் வருகின்ற வாக்கெடுப்புத் திகதி மற்றும் வாக்கெண்ணலை மேற்கொண்டு பெறுபேறுகளை வெளியிடல் என்பன தேர்தலொன்றின் முக்கியமான சந்தர்ப்பங்களாகக் கருதப்படுகின்றது. இதற்கமைவாக, மேற்கூறப்பட்டதன் பிரகாரம், இத்தேர்தல் கட்டுப்படுத்தப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் கீழ் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றி மிகச் சரியான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேடமான ஒரு தேர்தலாகும். வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்து ஒழுங்கமைப்புப் பணிகளும் 2020.08.04 ஆம் திகதி காலையாகும் போது உரியவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னைய தினம் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அலுவலர்கள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் உள்ளடங்கலாக நியதிச் சட்ட ஆவணங்கள் மற்றும் பொருட்களாதியவற்றை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்கள் பிரதானமான பொறுப்பாகும். அதன் பிரகாரம், வாக்கெடுப்புக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையங்களுக்கும். இணைப்புச் செய்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், வாக்கெடுப்பு நிலைய எழுதுவினைஞர்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களின் கடமைகள் தொடர்பான எழுத்து மூல அறிவுறுத்தல்கள் சகிதம் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்கான பயணப்பாதைகளின் விபரங்களோடு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததோடு, வாக்கெடுப்புக்கு முந்தைய தினம் பி.ப. 02.00 மணிக்கு உரிய வாக்கெடுப்பு நிலையத்திற்கு அறிக்கையிட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரால் நடாத்தப்படுகின்ற ஒத்திகையில் கட்டாயமாக கலந்துகொள்ளல் வேண்டும் எனவும் அடுத்தநாள் கடமைகளுக்காக அறிக்கையிடுவதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டுமெனவும் அதன் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கடமைக்காகச் செல்வதற்கு சொந்த அல்லது பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாண தீவுப்பகுதிகளின் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வருவதற்காக கடற்படையினரின் உதவியை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெண் அலுவலர்கள் முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் வதிந்துள்ள பிரதேசத்தினுள் அவர் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் தவிர்ந்த ஏனைய அண்மித்த வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்ததோடு ஆண் அலுவலர்கள் தேவைக்கேற்ப மாவட்டத்தினுள் அல்லது விருப்பத்தின் பேரில் வேறு மாவட்டங்களின் கடமைகளுக்காக இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

ii. ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களின் வாக்கெடுப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் உள்ளடங்கலாக பொருட்களாதியவற்றை வழங்கும் மற்றும் கையேற்கும் நிலையங்கள் ஒரு வளாகத்தில் அல்லது தேவைக்கேற்ப பல வளாகங்களில் அமைக்கப்பட்டிருந்தன. இந்த விநியோகித்தல், கையேற்றல் நிலையமொன்றுக்காக பணிப்பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது இரண்டு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், இரண்டு சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் / கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் சிலரும் அலுவலகப் பணியாளரொருவரும் முன்னைய தேர்தல்களில் இணைப்புச் செய்யப்பட்டவாறு இணைப்புச் செய்யப்பட்ட போதிலும் சுகாதார வழிகாட்டலுக்கு ஏற்ப செயற்படுவதற்காக அந்தந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டத்திற்கு பொருத்தமானவாறு பதவியணியினரின் உள்ளடக்கம் தெரிவத்தாட்சி அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. விநியோகித்தல் நிலையங்கள், கையேற்றல் நிலையங்களுக்கு நியமிக்கப்படவுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் விதித்துரைக்கப்பட்ட கடமைகள் மற்றும் மாவட்டத்தின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தும் வகுப்புகள் நடாத்தப்பட்டன. வாக்கெடுப்பு நிலையங்களிற்குப் பொறுப்பாக செயற்படுகின்ற அனைத்து சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களும் வாக்கெடுப்பு நிலையங்கள் பலவற்றில் அதாவது வலயமொன்றை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்படவுள்ள வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் வாக்கெடுப்புக்கு முந்திய தினத்தில் சேவைக்கு அறிக்கையிட வேண்டிய இடங்கள் எவையென்பது முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் தேர்தல் நடைமுறைகள், தேர்தல் சட்டங்கள், வாக்கெடுப்பு நிலைய நிர்வாகம், தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்தல் போன்று மாவட்டத்திற்கான தேர்தல் ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக அறிவுறுத்தல் அமர்வுகள் நடாத்தப்பட்டதோடு, அவர்களில் அதிகமானவர்கள் முன்னைய தேர்தல்களின் போது பணியாற்றி அனுபவம் கொண்ட அலுவலர்கள் என்பது விசேட அம்சமாகும். அதேபோன்று சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களில் பெரும்பான்மையானவர்கள் அவர்கள் வதிந்துள்ள அல்லது கடமையாற்றுகின்ற மாவட்டத்திற்கு வெளியில் வேறு மாவட்டங்களுக்கு இணைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏனையவர்களை கடமையாற்றும் அலுவலகம் அமையப்பெற்றுள்ள பிரதேசம் மற்றும் வதிந்துள்ள பிரதேசம் ஆகியவற்றுக்கு வெளியேயுள்ள வாக்கெடுப்பு

அதிகாரப் பிரதேசங்களிற்காக அவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

iii. இந்த ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கேற்ப சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அவர்கள் இணைப்புச் செய்யப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் அல்லது வலயங்கள் குறிப்பிடப்பட்ட ஒழுங்குமுறையான நியமனக் கடிதங்கள் வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினத்திலேயே கையளிக்கப்பட்டது. எனவே அரசியல்வாதிகள் அல்லது வேட்பாளர்கள் தமது பிரதேசத்தில் பணிபுரிகின்ற அலுவலர்கள் சம்பந்தமாக முன்கூட்டியே அறிந்திராமையால் அழுத்தங்களை செலுத்தும் சாத்தியப்பாடு குறைவாகக் காணப்பட்டது. இது தேர்தல்களில் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற வழி முறையொன்றென்பதோடு அரச உத்தியோகத்தர் களும் தேர்தல் ஆணைக்குழுவினால் அவர்களுக்கு கையளிக்கப்படுகின்ற எந்தவொரு கடமையையும் எந்தவொரு பிரதேசத்திலும் வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் மற்றும் நேர்மையாகவும் ஆற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளார்கள் என்பதை அவர்களுக்கு கௌரவமாகக் குறிப்பிடுதல் வேண்டும். முன்னர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தவாறு வாக்கெடுப்புக்கு முந்திய தினம் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திற்கு அல்லது வேறு வளாகமொன்றுக்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் அறிக்கையிட்டதன் பின்னர் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் விசேட கலந்துரையாடல் அமர்வொன்று நடாத்தப் பட்டது. முன்னைய அறிவுறுத்தல் அமர்வுகளின் போது தெளிவுபடுத்தப்பட்ட விடயங்களை மீண்டும் நினைவூட்டுதல், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதன் தேவைப்பாடு, அங்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் களுக்கு கையளிக்கப்படுகின்ற கடமை ரீதியான பொறுப்புக்கள் தொடர்பாகவும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அவ்வாறே, தேர்தல் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட விசேட ஆலோசனை களும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. பின்னர் அவர்களின் ஆளடையாளம் மற்றும் சேவையாற்றும் நிறுவனத் தலைவரினால் சான்றுறுதிப் படுத்தப்பட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் அறிமுக அட்டையும் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு அலுவலர் சரியான முறையில் அடையாளம் கணப்பட்டு முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. அந்த நியமனத்தை பெற்றுக்கொண்ட பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் அவர்களுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்குரிய வாக்குச் சீட்டுகள், வாக்குப் பெட்டிகள் என்பன உள்ளடங்கலான பொருட்களாதியவை விநியோகிக்கப்படும் இடத்திற்கு அறிக்கையிட்டதன் பின்னர், அவற்றை விநியோகிக்கும் நிலையத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத் தாட்சி அலுவலரும் மீண்டும் நியமனக் கடிதம் மற்றும் ஆளடையாளம் பரிசீலனைக்குட்படுத்தி தகவல்கள் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் வாக்கெடுப்பு நிலையங்களுக்குரிய வாக்குச் சீட்டுக்கள், வாக்குப் பெட்டிகள் மற்றம் நியதிச் சட்ட ஆவணங்கள் என்பன உள்ளிட்ட ஏனைய பொருட்களாதியவை விநியோகிக்கப்பட்டன.

iv. வாக்கெடுப்பு நிலையக் கடமைக்காகத் தன்னுடன் உதவியாளரொருவரை அழைத்துவருமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு அறிவிக்கப் பட்டிருந்ததுடன் அவ்வாறு அழைத்துவரப்பட்ட உதவியாளரும் இச் சந்தர்ப்பத்தில் அதாவது, விநியோகித்தல், கையேற்றல் நிலையத்தில் வைத்து நியமனக் கடிதமொன்று வழங்கப்பட்டது. உதவியாளர் ஒருவரை அழைத்துவர முடியாமல் போன சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களின் குழாத் திலிருந்து உதவியாளர் ஒருவரும் நியமிக்கப் பட்டார். அதேபோன்று, வாக்கெடுப்பு நிலையத்தின் பாதுகாப்புக்காக நியமனம் செய்யப்பட்ட ஆயுதம் தரித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவருக்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவல ருடன் வாக்கெடுப்பு நிலையத்திற்கான பொருட்களா தியவை விநியோகிக்கும் நிலையத்திலிருந்து பாதுகாப்பு வழங்கி பயணித்தல் வேண்டும் என கட்டளையிடப்பட்டிருந்தது. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய பொருட்களாதியவற்றை விநியோகித்தல் நிலையத் திலிருந்து பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலிருந்து வாக்கெடுப்பை நிறைவு செய்து அவற்றை மீளக் கையளித்தல் வரையிலான காலத்தினுள் இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருடன் இணைந்திருத்தல் வேண்டும். வாக்கெடுப்பு நிலையப் பாதுகாப் புக்காக இணைப்புச் செய்யப்பட்ட மற்றைய பொலிஸ் உத்தியோகத்தரை வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பகுதியின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் நேரடியாக வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இணைப்புச் செய்வதற்குப் பொலிஸ் மா அதிபர் அவர்களால் நிகழ்சித்திட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

v. சில மாவட்டங்களில் வாக்கெடுப்பு நிலையத் திற்கு இணைக்கப்படவுள்ள கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் விநியோகித்தல் நிலையத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப் பட்டிருந்ததோடு, வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய பொருட்களாதியவற்றை கையேற்பதற்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு உதவி செய்து சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருடன் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்லுமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தது.

vi. வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்வதற்குத் தேவையான போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டதின் கீழ் தனது சொந்த வாகனம் அல்லது உத்தியோக பூர்வ வாகனம் பயன்படுத்தப்படுமாயின் மற்றும் அதற்காக முன் அனுமதி பெற்றுக் கொண்டிருப்பின்,

அவ்வாகனத்தின் தகவல்களை போக்குவரத்து பிரிவில் பதிவு செய்து உரிய பயணவழி விபரங்களுக்கமைய வாக்கெடுப்பு நிலையத்தை நோக்கிச் செல்வதற்கான சாத்தியம் காணப்பட்ட தோடு, அவ்வாறான போக்குவரத்து வசதியற்ற சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு தெரிவத்தாட்சி அலுவலர்களின் போக்குவரத்து வேலைத்திட்டங்களின் பிரகாரம் வாக்கெடுப்பு நிலையம் வரை போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன.

vii. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய பொருட்களாதியவை களை எடுத்துக்கொண்டு உரிய வாக்கெடுப்பு நிலையங்களைச் சென்றடையும் போது, அது அமைந்துள்ள வாக்கெடுப்புப் பிரிவின் கிராம அலுவலர் அல்லது அவரது பிரதிநிதிகளினால் வாக்கெடுப்பு நிலையங்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. சில கிராம உத்தியோகத்தர்களுக்கு, குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் தமது பிரிவுக்குள் பல வாக்கெடுப்பு நிலையங்களை ஆயத்தம் செய்வதற்கான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு ஆயத்தம் செய்ய வேண்டிய நிலையங்களின் எண்ணிக்கை 3 இற்கும் அதிகமான சந்தர்ப்பங் களில் வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்கமைப் பதற்காக அவரின் வாக்கெடுப்பு நிலையங்களில் பிரதிநிதியொருவரை நியமிப்பதற்கும் அத்தகைய உதவியாளரூடாக வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினருடன் ஒருங்கிணைப்பினைப் பேணுவ தற்குத் தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும், சாத்தியமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வாக்கெடுப்பு நிலையத்தில் முன் ஏற்பாடுகள் மற்றும் நலன்புரி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் தொடர்பில் கவனத்திற் கொள்ளும்படி சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பாக மாவட்டப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் நெருங்கிய மேற்பார்வையுடன் பணியாற்றுதல் வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே உரிய கட்டணங்களின் கீழ் வாக்கெடுப்பு நிலைய பணிக்குழுவினருக்கு தேவையான உணவு மற்றும் பானங்களை வழங்கும் பொறுப்பும் கிராம உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்பு நிலையங்களின் கடமைக்காக நியமிக்கப்பட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் உதவி யாளர், பொலிஸ் அலுவலர்கள் உள்ளடங்கலாக வாக்கெடுப்பு நிலையத்தில் இரவு தங்குவதற்கு நியமிக்கப்பட்டிருந்த ஆண் அலுவலர்கள் தங்குவ தற்குத் தேவையான வசதிகளை வழங்குவதும் கிராம அலுவலர்களின் பொறுப்பாகும். நிரந்தரக் கட்டிடங்களற்ற தற்காலிக கொட்டில்களில் பேணப்படு கின்ற வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட அலுவலர்களுக்கு இனங்காணப்பட்ட பொருத்தமான அண்மித்த இடங்களில் பாதுகாப்பாக அவர்களின் பொருட்களாதியவற்றை வைத்திருக்கக் கூடிய வகையில் தங்குமிட வசதிகளை வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. கிராம உத்தி யோகத்தரினால் வழங்கப்படுகின்ற இந்த வசதிகள் தொடர்பாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் அவரது பரிந்துரைகளை உள்ளடக்கிய இரண்டு பிரதிகளைக் கொண்ட அறிக்கையின் ஒரு பிரதியை கிராம உத்தியோகத்தருக்கு வழங்குமாறு பணிக்கப்பட்டமைக்கு காரணம், கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் மிகவும் வினைத் திறனான சேவையொன்றை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடனாகும். வாக்கெடுப்பு நிலைய அலுவலர்கள் எதிர்பார்த்தவாறு வசதிகள் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவது அந்தப் பகுதிகளில் காணப்படுகின்ற நடைமுறை நிலைமை களுக்கு ஏற்ப கடினமான மற்றும் சிரமமான பணியொன்றாக இருக்கின்ற போதிலும், அரச உத்தியோகத்தர்கள் சனநாயகத்தை மதிப்பீடு செய்யும் முகமாக, நாட்டிற்காக சேவையாற்றும் மனநிலையில் அத்தகைய குறைபாடுகள் தொடர்பாக தேவையற்ற மோதல்களை அல்லது முரண்பாடு களை ஏற்படுத்தாது அவற்றை மகிழ்வுடன் சகித்துக் கொள்வதைப் பாராட்டுதல் வேண்டும்.

viii. வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் உள்ளடங்கலான நியதிச் சட்டரீதியான பொருட்களை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லல் தொடக்கம் வாக்கெண்ணலை ஆரம்பித்தல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு பணிகளை நிறைவு செய்தல் வரையான காலத்தினுள் அத்தகைய நடைமுறைகளை வழிநடாத்தும் வழிமுறை தேர்தல் ஆணைக்குழு வசமுள்ளது. இது வரையில் அதற்காக தொலைபேசி மற்றும் தொலைநகல் செய்திகள் பயன்படுத்தப்பட்டன. ஆயினும், 2020 பாராளுமன்றம் தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் இதன் ஆரம்பப் பணிகளின் வழிநடாத்தல் மற்றும் மேர்பார்வை அலுவல்கள் தொடர்பாக தகவல் தொழில்நுட்ப வழிமுறையான குறுந்தகவல் (SMS) சேவை யொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. குறிப்பாக வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் அவர்களால் வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத் தாட்சி அலுவலர் ஊடாகத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கு வழங்க வேண்டிய செய்தி முன்னர் தயாரிக்கப்பட்ட குறுந்தகவல் சேவையினூ டாக இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் குறுந்தகவல் தொலை பேசி சேவையூடாக தேர்தல் ஆணைக்குழுவின் கணினி முறைமைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் அச்செய்திகளின் தகவல்களின் அடிப்படையில் வாக்கெடுப்பு நிலையங்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து மற்றும் வழிநடாத்தி கண்காணிப்பு அறிக்கை தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

தொலைபேசி மற்றும் தொலைநகல் ஊடாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இதன் மூலம் மிக இலகுவான மற்றும் ஒழுங்கான முறையொன்று அறிமுகப்படுத்தப் பட்டிருந்தபோதிலும், இலங்கையின் சில பிரதேசங்களில் கையடக்க தொலைபேசி சமிக்ஞை காணப்படாமை அல்லது பலவீனம், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களின் ஒப்படைக்கப்பட்டிருந்த கடமைகள் அதிகரிப்பு, தகவல்கள் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்துவதில் இருந்த சில சிரமங்கள் காரணமாக இச்செயற்றிட்டத்தின் மூலம் வாக்கெடுப்பு நிலையங்களை 100% உள்ளடக்க முடியவில்லை. எவ்வாறாயினும், அறிமுகப்படுத்தப் பட்டிருந்த இந்த வழிமுறையை எதிர்வரும் தேர்தல்களில் பயன்படுத்தும் போது திறமையான மற்றும் வினைத்திறனான தொடர்பாடலின் ஊடாக வாக்கெடுப்பு நிலையங்களில் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை செய்தல் செயற்பாட்டை துரிதப்படுத்த முடியும்.

ix. வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் கடமைகளுக்காக அறிக்கையிட்ட நிலையங்களில் குறுகிய கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் களால் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. சுதந்திர மானதும் நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக ஏற்புடைய கடமைகள் முன்கூட்டியே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் சட்டதிட்டங்களின் பிரகாரம் உரிய முறையில் செயற்படுத்துவதன் தேவைப்பாடு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து கிடைக்கப் பெற்ற விசேட அறிவுறுத்தல்கள் தொடர்பாகவும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. அதன்பின்னர், வலயத்துக்குப் பொறுப்பான உதவித் தெரிவத் தாட்சி அலுவலர்களாக முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் வரையில் அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வலயம் எது என்பது தொடர்பாக அவர்கள் அறிந்திருக்கவில்லை. நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ள வலயத்திற்கான விநியோகித்தல் நிலையங்களுக்குச் சென்று தமது மேற்பார்வைக் குரிய வாக்கெடுப்பு நிலையங்களின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் பொருட்களாதிய வற்றைப் பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார்கள் என்பதை உறுதிசெய்து கொண்ட பின்னர் நியமனம் வழங்கப்பட்டுள்ள வலயத்தின் மேற்பார்வைக்காக செல்ல வேண்டியிருந்ததோடு, சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தொடர்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்த போக்குவரத்து வேலைத் திட்டத்தையொத்த போக்குவரத்து வேலைத்திட்ட மொன்று வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்காகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மேற்பார்வை செய்யும் வலயத்தில் வாக்கெடுப்பு நிலையங்கள் அமையப்பெற்றுள்ள பிரதேச செயலகத்திற்குச் சென்று அங்குள்ள இணைப்பு உதவி தெரிவத்தாட்சி அலுவலரிடம் அறிக்கை யிட்டதன் பின்னர் வாக்கெடுப்பு நிலையங்களின் மேற்பார்வைக்காகச் செல்ல வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

x. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்கு அறிக்கையிட்ட பின்னர் அதன் பொருத்தப்பாட்டைப் பரீட்சித்துப் பார்த்து தெரிவத்தாட்சி அலுவலரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நீதியாகவும் சுதந்திரமாகவும் வாக்கெடுப்பை மேற்கொள்வ தற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றதா என்பது தொடர்பாகவும், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான வசதிகள் உள்ளனவா என்பது தொடர்பாகவும் ஆராய்ந்து பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டு மென்பதோடு, பொருத்தமான வசதிகள் வழங்கப்பட வில்லையெனில் அல்லது ஏதாவது இடையூறுகள் இருப்பின், உடனடியாக வலயப் பொறுப்பு உதவி தெரிவத்தாட்சி அலுவருக்கு அறிவித்து அவர் ஊடாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கை யிடுமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.

xi. 2020.08.05 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணியளவில் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் உரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் அறிக்கையிடுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அவர்கள் அறிக்கையிட்டதன் பின்னர், அந்த உத்தியோகத் தர்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் நியமனக் கடிதத்துடன் ஆளடையாளத்தைப் பரிசீலனை செய்து பார்த்து வரவு இடாப்பில் கையொப்பம் பெறப்பட்டன. அதனைத் தொடர்ந்து அனைத்து அலுவலர்களும் இணைந்து அவரவர்களை அறிமுகம் செய்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலைய ஒத்திகைகளை நடாத்துதல் வேண்டுமென்பதோடு இந்த ஒத்திகைக்காக எந்தவொரு காரணங்களிற்காகவும் வாக்குச்சீட்டு, உத்தியோகபூர்வ முத்திரை, துடைத்தழிக்க முடியாத மை என்பன திறக்கப்படக் கூடாதென அறிவுறுத்தல் அமர்வுகளின் போது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் வலியுறுத்தப் பட்டிருந்தனர். ஒத்திகையின் போது ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் இயலுமையைக் இனங்கண்டு கொண்டு கடமைகளை ஒப்படைப்பதும் அதற்காக வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை படிப்பதன் மூலம் உரிய பணிகளை எளிதாக்குவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் பொறுப்பாகும். மேலும், இந்த ஒத்திகையினூடாக வாக்கெடுப்பு நிலையத்திற்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் வருகையை உறுதிப்படுத்துதல் மற்றும் நாளைய தினத்தில் எதுவித இடையூறு மின்றி வாக்கெடுப்பை ஆரம்பிக்க முடியும் என்ற முன்னோடி சமிக்ஞையுமாகும். வாக்கெடுப்பு

நிலையங்களுக்குப் போதியளவு அலுவலர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் ஏதேனும் காரணத்தால் நாளைய தினம் வாக்கெடுப்பை நடாத்த அவசியமான போதுமானளவு உத்தி யோகத்தர்கள் முதல் நாள் ஒத்திகைக்கு அறிக்கையிட்டிராவிடின் உடனடியாக வலய கண்காணிப்பிற்காக வருகை தருகின்ற தெரிவத் தாட்சி அலுவலர்களுக்கு அது பற்றி அறிக்கை யிட்டு பிரதேச செயலக மட்டத்தில் தாபிக்கப் பட்டுள்ள அலுவலர் ஒதுக்குக் குழாத்திலிருந்து அவசியமான அலுவலர்களை இணைப்புச் செய்வ தற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப் பட்டிருந்தன. ஒத்திகையின் பின்னர் பெண் உத்தியோகத்தர்களுக்கு நாளைய கடமை களுக்காக முற்கூட்டியே அதாவது மு.ப. 06.00 மணிக்கு முன்னர் வருகை தருமாறு அறிவித்து அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு ஆண் அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் இரவை கழித்தல் வேண்டும். ஏற்கனவே வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் வாக்கெடுப்பு நிலையக் கண்காணிப்பிற்கு வருகைதந்து, கையேற்கப்பட்ட பொருட்களாதியவை சரியானதாகவும் போதியதாகவும் இருக்கின்றதா என்பதைக் குறிப்பாக வாக்குச் சீட்டுக்கள், உத்தியோகபூர்வ சின்னங்கள், துடைத் தழிக்க முடியாதமை என்பனவற்றைத் திறக்காது தனிப்பட்ட முறையில் நேரடியாக பரிசீலனை செய்து பார்த்து ஐயமின்றி உறுதிப்படுத்திக் கொள்ளல் கட்டாயமாக மேற்கொள்ளப்படல் வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது, அதேபோன்று வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெடுப்பை நடாத்துவதற்காக இருக்க வேண்டிய வசதிகள் தொடர்பாகவும் ஆராய்ந்து பார்த்து ஒத்திகை நடாத்தப்படுவதை கண்காணித்தல் மற்றும் அதுவரை ஒத்திகை நடாத்தப் பட்டிராவிடின் அச் சந்தர்ப்பத்திலேயே ஒத்திகையை நடாத்துமாறு அறிவித்து அத்தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்தல் வேண்டும். தேவையானதெனக் கருது மிடத்து, மேலதிக ஆலோசனைகள் மற்றும் பொருத்தமான கட்டளைகளை வழங்குதல் வேண்டும். மேற்பார்வை செயற்பாடுகளின் பின்னர், அடுத்த தினத்திற்கு உரித்தான வாக்கெடுப்பை உரியவாறு மு.ப. 07.00 மணிக்கு ஆரம்பிக்க முடியுமானவாறு பணிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதென வலய உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் தனது முதலாவது செய்தியை தொலைபேசி அல்லது தொலைநகல் ஊடாக தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திற்கு அல்லது வழிநடாத்தல் அலுவலகத் திற்குத் அறிவித்தல் வேண்டும். பிரதேச செயலகம் அமைந்துள்ள இடத்தின் தூரத்தின் பிரகாரம் இதற்காக அஞ்சல் அலுவலகங்களிலிருந்தும் வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

xii. வாக்கெடுப்புத் தினம் மு.ப 06.00 மணியாகும் போது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் ஏனைய அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலைய கடமைகளுக்காகத் தயாராக இருத்தல் வேண்டுமெனவும், வாக்காளர்களை அறிவுறுத்தும் பொருட்டு அச்சிட்டு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத் தல்கள் மற்றும் அறிவித்தல் அட்டைகளை காட்சிப்படுத்தல், வாக்கெடுப்பு சிற்றறைகளைத் தாபித்தல் மற்றும் வாக்குப் பெட்டிகளை முத்திரை பொறிக்கத் தயாராக வைத்திருத்தல் போன்ற தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலர்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஒரு வாக்கெடுப்பு நிலையத் திற்காக இரண்டு முகவர்களை ஈடுபடுத்துவதற்கு சட்டத்தினால் அதிகாரம் கிடைத்துள்ள போதிலும் இம்முறை போட்டியிட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டமை, வாக்கெடுப்பு நிலையங்களின் இடவசதிகள் குறைவடைதல் மற்றும் சுகாதாரம் பாதுகாப்பு வழிகாட்டலின் பிரகாரம் ஆட்களின் இடைவெளியை பாதுகாக்க வேண்டியிருந்த காரணத்தினால் அரசியல் கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் ஆகியோரின் இணக்கத்துடன் ஒரு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் ஒரு முகவரை நியமிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. முகவர்களின் நியமனக் கடிதத்துடன் ஆளடையாளம் பரிசீலனை செய்ய வேண்டியமை மற்றும் வாக்குப் பெட்டிகளை முத்திரை பொறிக்கும் போது அவர்களின் பங்கேற்பு தேவையாக இருந்தமையினால் வாக்கெடுப்பு நிலையத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த முகவர்களுக்கு அன்றைய தினம் மு.ப. 06.30 மணியளவில் வருகைதந்திருக்குமாறு தெரிவத் தாட்சி அலுவலர்காளால் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். அதே போன்று வாக்கெடுப்புக்காகப் பயன்படுத்தப் படுகின்ற தேருநர் இடாப்புக்கள், வாக்குப் பெட்டிகள், வாக்குச்சீட்டுக்கள், உத்தியோகபூர்வ இலட்சிணைகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தல், விசேடமாக வாக்குச் சீட்டின் பின்புறம் பொறிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இலச்சிணையை எழுமாறாகத் தெரிவு செய்யும் போது அவர்களின் கண்காணிப்பு எதிர்பார்க்கப்படுதல் போன்றே தேர்தலை சுதந்திரமாகவும் நீதியான முறையிலும் நடத்தப்படல் தொடர்பில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்காக முகவர்களுக்கு இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. வாக்குப் பெட்டிகளை முத்திரை பொறிப்பதற்கு முன்னர் அவற்றை தெளிவாக வெளிப்பகுதி தெரியும் வண்ணம் காட்டி பெட்டியினுள் எதுவும் இல்லை யென்பதை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் முத்திரை பொறிப்பதற்கு முன்னர் அவசியமெனில் வாக்குப் பெட்டியின் உட்பகுதியில் அல்லது முத்திரை பொறிக்கப்பட்டதன் பின்னர் அதன் வெளியில் அரசியல் கட்சிகளின் சின்னம் அல்லது வாக்குச் சீட்டில் உள்ளடக்கப்பட்ட சின்னமல்லாத பொறியொன்றை அல்லது இனங்காணக்கூடிய சின்னமொன்றை அல்லது ஸ்ரிகர் ஒன்றை ஒட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவ்வாறு முத்திரை பொறிப்பதாயின் வாக்குப் பெட்டியில் ஒட்டப்படுவதற்கு முன்னர் அவற்றின் மாதிரிகளை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு வழங்கப்பட வேண்டியிருந்தது.

xiii. ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கேற்ற விடயங்களின் போது சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரால் பயன் படுத்த வேண்டியிருந்த 14 நியதிச்சட்ட படிவங்கள், தேவையான பிரதிகளின் எண்ணிக்கை கொண்டதாக புத்தகமாக ஒருங்கிணைக்கப்பட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு கையளிக்கப் பட்டது. இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல் களின் போது இப் படிவங்கள் தனித்தனியாக வழங்கப்பட்டிருந்ததுடன் விநியோகித்தல் நிலை யத்தில் அவற்றைக் கையேற்றல் மற்றும் வாக்கெடுப்பின் போது வேலைப்பளுமிக்க சந்தர்ப் பங்களில் அவற்றைச் சரியாக அடையாளங்கண்டு பூர்த்திசெய்வது கடினமான பணியென்றாக இருப்பதால், அது தொடர்பாக மாற்றுவழிகளை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கையெடுக்குமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களை கருத்தில் கொண்டு, கடந்த சனாதிபதித் தேர்தல்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழுவின் பதவிநிலை உத்தியோகத்தர் களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கிணங்க இம்முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வாறே, இவ்வழிமுறை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் கோவையைத் தயாரிக்கும் போது மாவட்ட அலுவலகங்களில் களஞ்சியத்திற்குப் பொறுப்பான அலுவலர்களுக்கும் இது மிகவும் உதவியாக இருந்தது. தேர்தல் ஒன்றின் போது அத்தியா வசியமான நியதிச்சட்ட படிவங்களை குறைபாடு களின்றி சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் கோவையில் உள்ளடக்கப்பட்டமையினால் இதனை மிகவும் சரியாக மேற்கொள்வதற்கான சாத்தியம் கிட்டியது. இந்த செயற்பாட்டின் காரணமாக முன்னர் காணப்பட்ட விதத்தில் வெவ்வேறாக படிவங்கள் தயாரித்தல் மற்றும் கையளிப்பதற்காக செலவாகிய காலம் போன்றே ஊழியக்கிரயமும் கணிசமான அளவில் குறைவடைந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது. மேலும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் உரிய சந்தர்ப்பங் களில் உரிய படிவத்தை சரியாக இனங்கண்டு பூரணப்படுத்தவும், பின்னர் அதனை இடவேண்டிய உறைகள் குறித்த படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ளமையூடாக வாக்கெடுப்புச் சந்தர்ப்பத்தில் பொருட்களாதியவற்றை கையளிக்கும் பணிகளை மிகவும் வினைத் திறனுடையதாகவும் மிகவும் குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு முடிந்தது. தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுகப் படுத்தப்பட்டிருந்த இந்த வழிமுறை தேர்தல் பணியாளர்கள் அனைவரினதும் பாராட்டுக்கு உட்பட்டதோடு எதிர்வரும் தேர்தல்களிலும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகின்ற அவ்வாறான ஆவணங்கள், அறிவித்தல்கள் மற்றும் உறைகளை இவ்வாறு ஒன்றிணைத்தல் தெடர்பாக மேலும் விடயங்களை ஆராய்ந்துபார்த்து பணிகளை ஒழுங்கமைத்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

xiv. இலங்கையின் 8 ஆவது பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 2020.08.05 ஆம் திகதி மு.ப. 07.00 மணிக்கு எவ்விதமான தடைகளுமின்றி ஆரம்பிக்கப்பட்டது. இந்த வாக்கெடுப்பிற்காக 2019 தேருநர் இடாப் பிற்கமைய 16,263,885 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததோடு மொத்த வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை 12,985 ஆகும். முன்னைய தேர்தல்களின் போது போன்று இம்முறையும் தேர்தல் ஆணைக்குழுவின் வாக்கெடுப்பு தினம் காலையிலேயே சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வாக்கெடுப்பு நிலையத் திற்குச் சென்று தமது வாக்கினைப் பிரயோகிக் குமாறும், அதனைத் தொடர்ந்து வீடுகளுக்கு அல்லது அலுவலகங்களுக்குச் சென்று தத்தமது அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் வாக்காளர் களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. இந்த வேண்டுகோள்களுக்கு அமைவாக ஊடகக் கலந்துரையாடல்கள், செய்தித்தாள் அறிவித்தல் மற்றும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு விரிவான பிரச்சாரம் செய்ததன் பெறுபேறாக, தொற்று நோய் நிலைமைக்கு மத்தியிலும் உயர்ந்த வீதத்தில் வாக்களித்தமை மற்றும் அதன் பின்னர் அமைதியான சூழலொன்றை பேணிச்செல்ல முடிந்ததென அறிக்கையிடப்பட்டுள்ளது.

xv. வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர், வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், தெரிவத்தாட்சி அலுவலர்கள் அல்லது பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் உதவியுடன் நியமிக்கப்படுகின்ற, விசேட அல்லது பெரிய வலயப் பொறுப்பு உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் (Mega Zone) வாக்கெடுப்பு நிலையங்களின் கண்காணிப்புக்காக அவ்வப்போது வருகை தந்திருந்தனர். இந்த உத்தியோகத்தர்கள் வாக்கெடுப்பு நிலையக்கடமைகளைக் கண்காணித்தல் மாத்திரமின்றி அதற்கப்பால் உள்ள பிரதேசங் களிலும் தேர்தல் சட்டதிட்டங்களை அமுல்படுத் துவதற்குத் தேவையான மேற்பார்வை நடவடிக்கை களும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதேபோன்று ஏதேனும் சட்ட விரோதமான விடயமொன்று அல்லது தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்றமை அவதானிக்கப்பட்டவுடன் உடனடியாக பொலிசாரின் உதவியுடன் அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை களை எடுப்பதும் அவர்களின் பிரதான கடமை யொன்றாகும். வலயப் பொறுப்பு உதவித் தெரிவத் தாட்சி அலுவலர்கள் கட்டாயமாகவும் மற்றும் குறைந்தபட்சம் மூன்று தடவைகளும் தனது வலயத்திற்குரிய நிலையங்கள் கண்காணிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செய்வதற்கு சாத்தியமான முறையில் அவர்களுக்கு நிலை யங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. மேலும் இந்த உத்தியோகத்தர்கள் வாக்கெடுப்பு ஆரம்பிக்கும் மற்றும் வாக்கெடுப்பு முடிவடையும் சந்தர்ப்பங் களில் வாக்கெடுப்பு நிலையமொன்றில் தரித்திருத்தல் கட்டாயமான தாகுமெனத் தெரிவத்தாட்சி அலுவலர் களினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

xvi. வாக்கெடுப்பு பி.ப. 05.00 மணிக்கு நிறைவடைந்த பின்னர் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் வாக்கெடுப்புப் பெட்டிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட உறைகள் பொறியிடப்பட்டது. வாக்கெடுப்புப் பெட்டிகள் பொறியிடப்பட்ட பின்னர், முகவர்கள் கோரினால் முத்திரைகள் மற்றும் ஸ்டிக்கர்களை ஒட்டுவதற்கு அனுமதி வழங்கப் பட்டிருந்ததோடு, அவற்றின் மாதிரிகளை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென முகவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் ஆறு (6) பிரதிகளைக் கொண்ட காபன் கடதாசியில் அச்சிடப்பட்ட படிவமொன்று சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்கெடுப்பு நிலைய கண்காணிப் பாளர்கள், வாக்கெடுப்பு நிலைய பணிக்குழு வினர்கள் ஆகியவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங் களைக் குறிப்பிட்டு அதில் கையொப்பமிட்டு மூலப் பிரதியை வாக்குப் பெட்டியின் மூடி மற்றும் நடுப்பகுதி உள்ளடக்கும் வகையில் ஒட்டிய பின்னர், வெளிப்படையாக தெரிகின்ற கணமான பொலித்தீன் உறையொன்றில் வாக்கெடுப்புப் பெட்டியை இட்டு குறியீட்டு இலக்கமொன்று குறிப்பிடப்பட்டுள்ள பிளாஸ்ரிக் பூட்டினால் முத்திரை பொறிக்கப்பட்டது. அந்த பூட்டின் இலக்கங்களைப் முகவர்களுக்கு குறித்துக் கொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட காபன் படிவத்தின் இரண்டாம் பிரதியை வாக்குச் சீட்டுக் கணக்கோடு அந்த உறையிலிட்டு பொறியிடல், எஞ்சிய பிரதிகள் ஆவணத்தில் கையொப்பமிடுகின்ற வாக்களிப்பு நிலைய முகவர்களுக்கு கையளிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வாக்கெடுப்பு நிலையங்களுக்குரிய வாக்கெடுப்புப் பெட்டி உரிய வாக்கெண்ணல் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது என்பதை முகவர்கள் சந்தேகமின்றி உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கூறப்பட்ட உபாயம் பயன்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக, 3 பிரதிகள் வீதம் தயாரிக்கப்படுகின்ற வாக்குச் சீட்டு கணக்கின் பிரதியொன்றை வாக்கெடுப்பு நிலையங்களின் முகவர்களுக்கு வழங்குமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் அறிவுறுத்தப் பட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து, வாக்கெடுப்பு நிலையங்களுடன் தொடர்புடைய பொருட்களாதிய வற்றை மீளக்கையளிக்கும் நிலையம் வரை முன்னைய தினம் பயன்படுத்திய போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் அதே பாதையால் கொண்டு செல்வதற்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். வாக்குச் சீட்டுக்கள் உள்ளடக்கிய வாக்குப் பெட்டிகளை மீளக் கொண்டு செல்லும் போது முறைகேடுகள் இடம்பெறுவதாக வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் மூடநம்பிக்கை சமூகமயப்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால், வாக் கெடுப்பின் பின்னர் வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய வாக்குப் பெட்டிகளை மீள வாக்கெண்ணல் நிலை யங்களுக்கு கொண்டு செல்வதை கண்காணிப் பதற்காக ஒவ்வொரு கட்சியிலிருந்தும் குழுவொன் றிலிருந்தும் வாக்கெடுப்பு நிலைய பிரதிநிதி ஒருவருக்கு அனுமதி வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் வேண்டுகோள் விடுத்துவாக் கெண்ணல் நிலைய வளாக நுழைவாயில் வரை தமது வாகனத்தில் பயணம் செய்து கண்காணிப்புச் செய்வதற்குத் தேவையான அனுமதிப் பத்திரங் களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

xvii. வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் தமது கண்காணிப்புக்குட்படுத்தப் பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் இறுதி அறிவித்தலை தொலைநகல் மூலம் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி, தொலைபேசியூடாவும் அது பற்றி அறிவித்து பிரதேச ஒருங்கிணைப்பு நிலையத்திற்கும் அறிக்கையிட்ட பின்னர், தெரிவத்தாட்சி உத்தியோகத்தரிடம் வருகைதரும் வாக்கெடுப்பு வலயக் கண்காணிப்புப் பணிகளுக் குரிய குறிப்பேட்டைக் கையளித்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப் பெற்றிருந்த அவ் அறிக்கையின் பிரகாரம் நாடுபூராகவும் வாக்கெடுப்பு மிக அமைதியான முறையில் நடாத்தி நிறைவு செய்யப்பட்டிருந்தது. வாக்கெடுப்பை தடைசெய்வதற்கு அல்லது இடைநிறுத்துவதற்குரிய எந்தவொரு பாரதூரமான நிகழ்வும் இடம்பெறாதிருந்தமை பாராட்டப்படல் வேண்டும். வாக்கெடுப்புத் தினம் நாட்டின் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பை அமைதியாக நடாத்தி எந்தவித இடையூறுகள் அல்லது தடைகளின்றி வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய வாக்குப் பெட்டிகள் அனைத்தும் அன்றைய தினம் இரவு 10.30 மணியளவில் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவத்தாட்சி அலுவலர் களினால் தேர்தல்கள் செயலகத்திற்கு அறிக்கை யிடப்பட்டிருந்தது.

## 38. கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக பொலன்னறுவை மாவட்டத்தில் லங்காபுர பிரதேச செயலகப் பிரிவில் வாக்கெடுப்பை நடாத்துவதற்காக எடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகள்.

i. மேலே 37 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கெடுப்பு செயற்பாடுகள் எதிர்பாராதவாறு கொவிட் நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டதைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட பயணக்கட்டுப்பாடு காரணமாக பொலன்னறுவை மாவட்டத்தில் லங்காபுர பிரதேச செயலகப் பிரிவில் வழமையான விதத்தில் வாக்கெடுப்பை நடாத்த முடியவில்லை. 2020.07.27 ஆம் திகதி லங்காபுர பிரதேச செயலகத்தின் அலுவலரொருவர் கொவிட் 19 தொற்று நோய் ஏற்பட்ட நோயாளராக கண்டறியப் பட்டதைத் தொடர்ந்து அண்மையில் அமையப்

பெற்றிருந்த பிரதேச சபை அலுவலகமும் தற்காலிகமாக மூடப்பட்டதுடன், லங்காபுர பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து கிராம அலுவலர்கள் உள்ளிட்ட மேலும் பல அலுவலர்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அதற்கமைய அந்த பிரதேச செயலகப் பிரிவின் 26 வாக்கெடுப்பு நிலையங்களைச் சேர்ந்த 29,139 வாக்காளர் களுக்காக உரியவாறு வாக்கெடுப்பை நடாத்துவ தற்காக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவ தற்கு மேலதிகமாக தேர்தல் ஆணைக்குழுவினால் கிடைக்கப்பெற்ற விசேட அறிவுறுத்தல்களின் பிரகாரமும் செயற்பட நேரிட்டது.

ii. இந்த நிலைமை காரணமாக முதலாவதாக ஏற்பட்ட பிரச்சினை யாதெனில், தற்காலிக அடையாள அட்டை வழங்கும் செயற்பாடாகும். 2020.07.31 ஆம் திகதியாகும் போதும் குறித்த அலுவலர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருந்த காரணத்தால் அந்த கிராம அலுவலர்கள் வசம் காணப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளுக்காக அத்தாட்சிப்படுத்துவது சிக்கலாகக் காணப்பட்டது. அதற்குத் தீர்வாக 2020.07.31 மற்றும் 2020.08.01 ஆகிய இரண்டு தினங்களினுள் தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்களால் விசேட சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி பிரதேச கிராம அலுவலர்களைச் சந்தித்து அவர்களுக்கு கிடைக்கப்பெற்றிருந்த தற்காலிக அடையாள அட்டை விண்ணப்ப படிவங்களை சேகரித்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அந்த அடையாள அட்டைகள் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பின்னர் குறித்த நபர்களிடம் சென்று அவற்றை விநியோகிப்பதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டது. இருந்த போதிலும் சில கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர்களுக்கு சேகரிக்க முடியாமல் போன விண்ணப்பப் படிவங்களுக்காக 2020.08.02 மற்றும் 2020.08.03 ஆகிய தினங்களில் பூர்வாங்க ஒழுங்கமைப்பு பணிகளுக்காக இணைப்புச் செய்யப்பட்டிருந்த இரண்டு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் குறித்த பிரதேசங்களுக்குச் சென்று அந்த இடங்களிலேயே தற்காலிக அடையாள அட்டை களை அத்தாட்சிப்படுத்தி வழங்கப்பட்டது. அதனோடு இணைந்ததாக தேர்தல் அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை களும் வீடுகளுக்குச் சென்று உரியவர்களிடம் கையளிப்பதற்கு தேர்தல்கள் அலுவலக அலுவலர் களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

iii. இந்த தேர்தலின் போது பொலன்னறுவை மாவட்டத் தில் வாக்குப் பெட்டிகள்,வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட பொருட்களாதியவற்றை விநியோகித்தல், கையேற்றல் மற்றும் வாக்கெண்ணல் பணிகளுக் காக பொலன்னறுவை றோயல் கல்லூரி தெரிவு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்த நிலைமைக்கு தீர்வாக தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் லங்காபுர பிரதேச செயலகப்பிரிவின் வாக்கெடுப்பு நிலையங்களுக்காக வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுக்கள் மற்றும் நியதிச்சட்ட எழுத்தாவணங்கள் உள்ளிட்ட பொருட்களாதியவற்றை விநியோகிப்பதற்காக விஜித ஆரம்பப் பிரிவு பாடசாலை பயன்படுத்தப்பட்டது. முன்னாயத்தமின்றி அவசரமாக ஏற்பட்ட நிலை மையின் கீழ் இவ்விடம் தெரிவு செய்யப்பட்டமை, விநியோகித்தல் பணிகளுக்காக பொருத்தமானவாறு தயாரிப்பதற்கும் மற்றும் அதற்குத் தேவையான அடிப்படைவசதிகளை வழங்குவதற்கும் மேலதிகமான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டியிருந்ததோடு, 2020.08.01, 02, மற்றும் 03 ஆம் திகதிகளில் மேலதிக அலுவலர்களைக் கொண்டு இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

iv. காணப்பட்ட நிலைமையின் கீழ் பிரதேசத்தின் வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்கு செய்வ தற்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலர்களின் மற்றும் ஊழியர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளத்தீர்மானித்த போதிலும் அந்த அலுவலர்களில் சிலருக்கும் வைரஸ் தொற்றுநோய் ஏற்பட்டிருந்த காரணத்தால் அவர்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இதன் காரணமாக அலுவலகத்தின் அலுவலர்கள், களஞ்சியக்குழுவின் அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலரின் முகவர்கள் ஆகியோரின் ஒத்துழைப் புடன் வாக்கெடுப்பு நிலையங்களை ஒழுங்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதே போன்று வாக்கெடுப்பு நிலையத்தினுள் பின்பற்ற வேண்டியிருந்த கொவிட் கட்டுப்பாட்டு சுகாதார அறிவுறுத்தல் தொடர்பாக அறிவுறுத்துவதற்காக குறும் காணொளி திரைப்படமொன்றும் தயாரிக்கப் பட்டு விநியோகித்தல் நிலையத்தில் தொடர்ச்சியாக காட்சிப்படுத்தப்பட்டு அலுவலர்கள் அறிவுறுத்தப் பட்டனர்.

v. ஏற்கனவே மாவட்டத்தின் தேர்தல் கடமைகளுக்காக அலுவலர்கள் நியமனம் செய்தல் அலுவல்கள் நிறைவடைந்து காணப்பட்டதோடு தொற்றுநோய் நிலைமையின் கீழ் அலுவலர்களை அந்த நிலை யங்களில் கடமைக்கு அமர்த்துவது ஆபத்தான பணியாகத் தென்பட்டது. இதற்கான மாற்றீடாக விநியோகித்தல்/கையேற்றல், வாக்கெடுப்பு நிலை யக் கடமைகளுக்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் உள்ளிட்ட ஏனைய பணிக்குழு வுக்காக தேவையான அலுவலர்களை இயன்றவரை அப்பிரிவில் வதிந்துள்ளவர்களில் இருந்து நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் பிரிவில் வதிந்துள்ளவர்களில் அதிகமான அலுவலர்கள் தனிமைப்படுத்தப் பட்டிருந்தமை, பிரிவின் வாக்கெடுப்பு நிலையங் களுக்குத் தேவையான அலுவலர் எண்ணிக்கை யோடு ஒப்பீட்டளவில் அப்பிரிவில் எஞ்சியிருந்த அலுவலர்களின் எண்ணிக்கை எவ்விதத்திலும் போதுமானதாகக் காணப்படவில்லை. இப்பிரிவில் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் குறைந்த எண்ணிக்கை அமையப் பெற்றுள்ளமை இந்த அலுவலர் குறைபாட்டுக்கு காரணமாகும்.

ஆதலால் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பை நடாத்திச் செல்லத் தக்கவாறு ஆகக்குறைந்த பணியாட்குழுவினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் இருபத்தாறு (26) பேரின் தேவைப்பாட்டை அப்பிரிவிலிருந்து பூரணப்படுத்துவது அசௌகரிய மானதாக காணப்பட்டதால் இதற்கு முன்னர் வாக்கெடுப்பு நிலைய கடமைகளில் ஈடுபட்டு அனுபவம் கொண்ட கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் சிலரும் அதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்காக அறிவுறுத்தல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு நிறைவு பெற்றிருந்த காரணத்தினால் எஞ்சியிருந்த காலப்பகுதிக்கமைய புதிதாக தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வகுப்புக்களை நடாத்துவது சிக்கல்மிக்கதாகக் காணப்பட்டது. அதற்குத் தீர்வாக 2020.08.04 ஆம் திகதி விநியோகித்தல் பணிகள் நிறைவடைந்த பின்னர் தேர்தல் அலுவலக அலுவலர்கள் மற்றும் தாமாக அந்தப்பிரிவின் கடமைக்காக முன்வந்த அலுவலர்களும் அந்த நிலையங்களுக்குச் சென்று வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்புக்களை நடாத்தியிருந்தனர். காணப்பட்ட நிலைமையின் கீழ் மேற்கொள்ள முடியுமான ஒரேயொரு மாற்றுத் தீர்வு அதுவாகும். அதே போன்று தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ள அலுவலர்கள் தவிர்ந்த அப்பிரிவில் வதிந்திருந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் எண்ணிக்கை ஆறு (06) ஆகும். அந்த நிலையங்களின் வலயக் கடமை, சட்டத்தை வலுவாக்கம் செய்தல் கடமைகளுக்கு அலுவலர்களின் எண்ணிக்கை எவ்விதத்திலும் போதுமானதாக காணப்படவில்லை. அதற்கான மாற்றுத் தீர்வாக தேர்தல் அலுவலகத்தில் பூர்வாங்க ஒழுங்கமைப்பு பணிகளுக்காக இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றிய பதவி நிலை அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் உள்ளிட்ட சுயமாக முன்வந்த அலுவலர்கள் அப்பிரிவில் தங்கியிருந்து அந்நிலையங்களுக்கு அடிக்கடி சென்று தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி கடமைகளை ஆற்றியுள்ளமை பாராட்டப்படுதல் வேண்டும்.

vi. லங்காபுர பிரதேச செயலகப் பிரிவின் விஜித ஆரம்பப்பிரிவு வித்தியாலயத்தில் வாக்கெடுப்பு நிலையங்களுக்கான பொருட்களாதியவை விநியோகிக்கப்பட்ட போதிலும் வாக்கெண்ணல் பணிகளுக்காக பொலன்னறுவை ரோயல் கல்லூரியில் ஏனைய வாக்கெண்ணல் மண்டபங்களுக்கு தொலைவிலுள்ள கட்டிடமொன்றில் நான்கு மண்டபங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. மெதிரிகிரியா வாக்கெடுப்புப் பிரிவில் லங்காபுர பிரதேச செயலக பிரிவிற்குரிய வாக்கெடுப்பு நிலையங்கள் வேறாக்கப்பட்டு, வாக்கெண்ணல் மண்டபங்கள் மீள ஒழுங்கமைத்தல் மற்றும் காணப்பட்ட நிலைமையின் கீழ் சுயமாக விருப்பம் தெரிவித்த ஆகக் குறைந்த அலுவலர்களை ஈடுபடுத்தி இந்த வாக்கெண்ணலை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் விருப்பம் தெரிவித்த அலுவலர்களின் எண்ணிக்கை பேதாத காரணத்தால் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றிய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இருபது (20) பேர் கொண்ட மேலதிகப் பணிக்குழுவொன்றும் அதற்காக ஈடுபடுத்தப்பட்டது. வாக்கெண்ணல் பணிகளின் போது உரிய சுகாதார வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல் தமன்கடுவை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. முன் ஒழுங்கமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்த தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பதிலாக தேர்தல் அலுவல்களில் தேர்தல் அலுவலகங்களுடன் நெருங்கிச் செயலாற்றுகின்ற பதவி நிலை அலுவலர்கள் அதற்காக சுயமாக முன்வந்தனர். இந்த மண்டபங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நீர்ப்பாசன பொறியியலாளர்கள் மூவரும், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சிலரும் மற்றும் முறைப்பாட்டு குழுப்பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும் சுயமாக முன்வந்தனர்.

vii. லங்காபுர பிரதேச செயலகப் பிரிவினுள் மேற்கொள்ள நேரிட்ட இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்றதாக அலுவலர்களுக்கான நலனோம்பல் வசதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தையும் திருத்தம் செய்யவேண்டியேற்பட்டது. அலுவலர்களுக்காக அப்பிரிவிலிருந்து உணவு மற்றும் பானங்களை பெற்றுக்கொள்வது சுகாதாரப் பாதுகாப்பற்றது என உணரப்பட்டதால் 2020.08.04. மற்றும் 05 ஆம் திகதிகளில் வாக்கெடுப்பு நிலையம் மற்றும் வலயக் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்காக தேர்தல்கள் அலுவலகத்தினால் உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதற்காக வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டதோடு விஜித ஆரம்பப் பிரிவு பாடசாலையில் தாபிக்கப்பட்டிருந்த தற்காலிக இணைப்பு நிலையத்தின் அலுவலர்கள் இப்பணிகளை மிகச் சிறப்பாக ஒருங்கிணைப்புச் செய்திருந்தனர். அன்றைய தினம் லங்காபுர பிரதேச செயலகப்பிரிவில் கடமையாற்றிய அலுவலர்கள் கட்டுப்பாட்டுடனும் மற்றும் புரிந்துணர்வுடனும் ஆகக் குறைந்த வசதிகளுடன் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள அலுவல்களை வெற்றிகரமாக நிறைவேற்றிய அவர்கள் அனைவருக்கும் தெரிவிக்கின்ற ஒரு நன்றியறிதலாகக் குறிப்பிடல் வேண்டும்.

viii. காணப்பட்ட அனைத்து சவால்களுக்கும் சிறப்பாக தீர்வுகளை வழங்கி இப்பிரதேச செயலாளர் பிரிவில் வாக்கெடுப்பை உரியவாறு 2020.08.05 ஆம் திகதி நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் உரியவாறு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறான பின்னணியில் பிரிவில் தனிமைப்படுத்தலுக்கு

உட்பட்டிருந்த சிலர் வாக்கெடுப்புத் தினம் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க வுள்ளதாக தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் தேர்தல் அலுவலகத்திற்கு தகவல் அறிக்கையிடப் பட்டிருந்ததோடு, அது எவ்விதத்திலும் எதிர்பார்க்கப் பட்ட நிலைமை அல்லது எதிர்வுகூறப்பட்ட ஒரு நிலைமையல்ல. ஏதேனும் ஒரு விதத்தில் அவ்வாறான நிகழ்வொன்று இடம்பெறுமாயின் அது பிரதேசத்தின் பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்கு பாரியதோர் அச்சுருத்தல் போன்றே வாக்கெடுப்பு அலுவல்களை உரியவாறு பேணிச் செல்வதற்கும் தடையொன்றாக அமைய முடியு மென்பதால் முழுப்பிரதேசத்தையும் தனிமைப்படுத்தி தனிமைப்படுத்தல் ஊரங்குச் சட்டத்தை அமுலாக்க நேரிடுமென பிரதேச சுகாதாரப் சேவைப் பணிப்பாளர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலைமை அறிக்கையிடப்பட்ட பின்னர் தேர்தல் ஆணைக்குழு விடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத் தல்களின் பிரகாரம் தெரிவத்தாட்சி அலுவலரினால் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட்டது. அதற்கமைய 2020.08.05 ஆம் திகதி தனிமைப் படுத்தப்பட்டுள்ளோர் தங்கியுள்ள வீடுகள் அமையப் பெற்றுள்ள இடங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு அவர்கள் வெளியில் வருவது தவிர்க்கப்பட்டிருந்தது. அதற்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் முப்பத்தைந்து பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்களின் வீடு மற்றும் வாக்கெடுப்பு நிலைய மேற்பார்வையில் ஈடுபடுத்தப்பட்டதோடு, அவ்வலுவர்கள் போதுமான தல்லவென உணரப்பட்டதால் சிவில் பாதுகாப்பு படையணியின் நூற்றியிருபது பேரின் உதவியும் அதற்காகப் பெறப்பட்டது. அதே போன்று பாதுகாப்பு பிரிவினரை அழைக்காமல் சிவில் அலுவலர்களைக் கொண்டு மாத்திரம் இந்நிலைமையைக் கட்டுப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவத் தாட்சி அலுவலரினால் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தமையால் அப்பணிகள் சுகாதாரப் பணிப்பாளர் தலைமை யிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இவ்வாறான பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் லங்காபுர பிரதேச செயலகப் பிரிவில் பௌதார்தகம வாக்கெடுப்பு நிலையத்தில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருந்த இரண்டு நபர்கள் வாக்கை பிரயோகித்துள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றிருந்ததோடு, அது தொடர்பாக மேற்கொண்ட விசாரணையில் உண்மையென அறிக்கையிடப்பட்டது. தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவுறுத்தலின் பேரில் உடனடியாகச் செயற்பட்ட சுகாதார அலுவலர்கள் அந்த இரு நபர்களையும் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் பூனானை தனிமைப் படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

ix. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட இந்த நிலைமையை சிறப்பாக கட்டுப்படுத்திக் கொண்டு மற்றும் வெற்றிகரமாக மாற்றுத் தீர்வுகளை வழங்கி வாக்கெடுப்பை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொலன்னறுவை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்,பொலன்னறுவை உதவித் தேர்தல்கள் ஆணையாளர் உள்ளிட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் மற்றும் மாவட்டச் செயலகத்தின் அலுவலர்களின் மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் லங்காபுர பிரிவில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்காக சுயமாக முன்வந்த அனைத்து அரச அலுவலர்களும் வழங்கிய ஒத்துழைப்பை பெரிதும் மெச்சுதல் வேண்டும். அதே போன்று தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் தேவையான ஒருங்கிணைப்பு அலுவல்களுக்காக தலைமை அலுவலகத்தின் மேலதிகத் தேர்தல்கள் ஆணை யாளர் (உள்ளூராட்சி) உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம் மற்றும் தேர்தல் பிணக்கு முகாமைத்துவம்) பொலன்னறுவை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்குச் சென்று அப்பிரதே சத்தில் தங்கியிருந்து வாக்கெடுப்பை உரியவாறு நடாத்துவதற்கு வழங்கிய ஒத்துழைப்பை பாராட்டுதல் வேண்டும்.

### 39. வாக்கெண்ணல்

i. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 49 ஆம் பிரிவு முதல் 56 ஆம் பிரிவு வரையான பிரிவுகளால் வாக்கெண்ணல் தொடர்பாகவும், அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் 18 முதல் 28 வரையான பிரிவுகள் வரை அஞ்சல் வாக்கெண்ணல் தொடர் பாகவும் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 49 ஆம் பிரிவுக்கமைய தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத் திலும் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெண்ணல் தொடர்பாக அலுவலர்களை நியமிக்க வேண்டியதுடன், ஏற்புடைய சட்ட ஏற்பாடுகளுக்கமைய, அப்பணிகளை நிறைவு செய்து பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் பெறுபேறுகளை வெளியிடு கின்ற பொறுப்பும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ii. இந்தத் தேர்தலில் வாக்கெண்ணல் நிலையங் களைத் தாபித்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் என்ற தலைப்பில் அறிவுறுத்தல் கோப்பொன்று 2020.03.13 மற்றும் 2020.06.28 ஆம் திகதிகளில் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டது.

iii. நாட்டினுள் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் கீழ் வாக்கெண்ணல் அலுவல்களை முன்னைய தேர்தல்களில் போது மேற்கொள்ளப் பட்டவாறு மேற்கொள்ள முடியவில்லை. தொற்று நோய் கட்டுப்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட

சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு தெரிவத்தாட்சி அலுவலர், பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், சுகாதாரத் துறை ஊழியர்கள், அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள், தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதோடு, மாவட்ட மட்டத்தில் மாதிரி வாக்கெண்ணல் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் நடைமுறை நிலைமை ஆய்வு செய்யப்பட்டது. வாக்கெண்ணல் நடவடிக்கைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் 2020.07.17 ஆம் திகதி நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது சுகாதாரக் காரணங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இறுதி இணக்கப்பாட்டுடன் வாக்கெண்ணல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

- 2020.08.05 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள வாக்கெடுப்பின் வாக்கெண்ணல் தொடர்பாக அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களை உரிய முறையில் அறிவுறுத்தி 2020.08.06 ஆம் திகதி மு.ப. 07.00 மணிக்கு அல்லது 08.00 மணிக்கு அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்களால் தீர்மானிக்கப்படுகின்றவாறு வாக்கெண்ணலை ஆரம்பித்தல்.
- 2020.08.05 ஆம் திகதி வாக்குப் பெட்டிகளை மீளக் கையேற்கின்ற பணிகளை கண்காணிப்பதற்காக ஒரு கையேற்றல் நிலையத்திற்காக ஓர் அரசியல் கட்சி அல்லது ஒரு சுயேச்சைக் குழுவால் இரண்டு முகவர்களை நியமனம் செய்தல்.
- 2020.08.05 ஆம் திகதி இரவு நேரத்தில் வாக்கெண்ணல் வளாகத்தில் தரித்திருந்து கண்காணிப்பதற்காக ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவு சார்பாகவும் ஒரு கட்சியிலிருந்து அல்லது குழுவொன்றிலிருந்து இரண்டு முகவர்களை நியமித்தல்.
- வாக்கெண்ணல் முதலாம் கட்டம் - 02, இரண்டாம் கட்டம் மற்றும் மூன்றாம் கட்டக் கண்காணிப்புக்காக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் சாதாரண வாக்கெண்ணல் நிலையமொன்றிற்காக ஒரு கட்சியிலிருந்து அல்லது குழுவொன்றிலிருந்து நியமிக்கக்கூடிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை.
- விருப்பு வாக்கெண்ணப்படுகின்ற மூன்றாம் கட்டத்தில், முறையே அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்ற கட்சியிலிருந்து அல்லது குழுவிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றமையினால், அந்தக் கட்சி அல்லது குழுவின் முகவர்களுக்கு மட்டும் குறித்த நேரத்தில் வாக்கெண்ணல் மண்டபத்தில் தரித்திருப்பதற்கு அனுமதி வழங்குதல்.
- தேர்தல் மாவட்டத்தில் கட்சியொன்றிலிருந்து அல்லது குழுவொன்றிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படாதவிடத்து அந்த வேட்பாளர்களின் விருப்பு வாக்குகள் எண்ணப்பட மாட்டாதெனவும், தெரிவத்தாட்சி அலுவலரால் உறுப்பினர் பதவிகள் உரித்துடைய கட்சிகள் மற்றும் குழுக்கள் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் உறுப்பினர் பதவிகளைப் பெறுவதற்கான உரித்தற்ற கட்சிகள் மற்றும் குழுக்களின் முகவர்கள் வாக்கெண்ணல் வளாகங்களிலிருந்து வெளியேறுதல்.

iv. வாக்கெண்ணல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் சம்பந்தமாக விரிவான அடிப்படையில் விடயங்களைத் தெளிவுபடுத்தி தேவையான புள்ளிவிபரக் குறிப்புக்கள், மாதிரிக் கடிதங்கள் மற்றும் கட்சிச் செயலாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் இணக்கப்பாடுகள் தொடர்பாக 2020.07.19 ஆம் திகதி அனைத்துத் தெரிவத்தாட்சி அலுவலர்கள்/ பிரதி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சுற்றுநிருபமொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டது. வாக்கெண்ணல் மற்றும் தொடர்புடைய தகவல்கள் 2186/7 ஆம் இலக்க 2020.07.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. மேலும், இது தொடர்பில் மேலதிக ஆலோசனைகளை வழங்குவதற்காக அனைத்துப் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் 2020.07.26 ஆம் திகதி தேர்தல்கள் செயலகத்திற்கும் அன்றைய தினம் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் ராஜகிரிய மத்திய வங்கி கேட்போர் கூடத்திற்கு அழைக்கப்பட்டனர்.

v. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 50 ஆம் பிரிவின் பிரகாரம் போட்டியிடுகின்ற ஒவ்வோர் அரசியல் கட்சியின் செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு, சுயேச்சைக் குழுத் தலைவர்களுக்கு,

- ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்தின் அமைவிடம்
- வாக்கெண்ணல் தொடங்கும் திகதி மற்றும் நேரம்
- ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திற்கும் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள்

காட்டுவதான கூற்றொன்றை உள்ளடக்கிய வாக்கெண்ணல் அறிவித்தலொன்றை அனுப்பி வைத்தல் வேண்டும். இந்தப் பணிகளை மேலும் இலகுபடுத்துவதற்காக இந்த அறிவித்தல் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு 2020.07.21 ஆம் திகதிக்கு முன்னர் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்/ அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததோடு, அதற்கான மாதிரிக் கடிதமொன்றும் சுற்றறிக்கையில் இணைக்கப்பட்டிருந்தது.

vi. கட்டுப்படுத்தப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் சூழ்நிலைக்கு மத்தியில் தேர்தலொன்றை நடாத்துதல் மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களைக் கவனத்திற் கொண்டு வாக்கெண்ணல் வளாகங்கள்

மற்றும் நிலையங்களைத் தீர்மானித்துக் கொள்ளல் அவைகளை பொறுத்தமானவாறு ஒழுங்கமைத்தல் பணிகளை துரிதமாக முடிவுறுத்த வேண்டிக் காணப்பட்டது. அதன்படி மாவட்டத்தின் தெரிவத் தாட்சி அலுவலர்களின் ஆலோசனைப் படி பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் தனிப்பட்ட மேற்பார்வையின் கீழ் வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் அவை அமைக்கப்படவுள்ள வளாகங்களை தேர்ந்தெடுப்பதும், வாக்கெண்ணல் பணியாட்குழு மற்றும் முகவர்களுக்கு ஆட்கள் இடைவெளியை பேணிக்கொள்ளக் கூடியவாறு வாக்கெண்ணல் மண்டபங்களை அமைத்துக் கொள்ளும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறான திட்டத்தின் கீழ் வாக்கெண்ணல் நிலையங்களில் காணப்பட்ட இடவசதி மற்றும் ஈடுபடுத்த வேண்டிய ஆகக்குறைந்த அலுவலர் களின் எண்ணிக்கையும் மற்றும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் கருத்திற் கொள்ளப்பட்டு, சாதாரண வாக்கெண்ணல் நிலையமொன்றுக்காக 5000 – 6000 வாக்குகள் என்றவாறு வாக்கெடுப்பு நிலையங்கள் வேறுபிரிக்கப்பட்டன. இங்கு ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரதேசத்திலும் அமைந்துள்ள ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்தின் இலக்க தொடரொழுங் கிற்குப் பதிலாக எழுமாறாகத் தெரிவு செய்து வாக்கெண்ணல் நிலையத்தின் கனிட்ட தலைமை தாங்கும் அலுவலரை இணைப்புச் செய்வதற்கும் அஞ்சல் வாக்கெண்ணல் நிலையத்திற்காக 1600 முதல் 2000 வரையிலான அஞ்சல் வாக்குப் பக்கற்றுக்களை குறித்தொதுக்குவதற்கும் அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டன. கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது சில மாவட்டங்களின் வாக்கெண்ணல் வளவுகள் மற்றும் நிலையங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட மூன்று மடங்காக அதிகரித்திருந்தது. இந்த வாக்கெண்ணல் வளவு களின் எண்ணிக்கை 54 ஆகக் காணப்பட்டது. அவற்றுள், சாதாரண வாக்கெண்ணல் நிலையங் களின் எண்ணிக்கை 2353 ஆகக் காணப்பட்டதோடு அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை 441 ஆகும். அதன்படி மொத்த வாக்கெண்ணல் நிலையங்கள் 2794 ஆகும். வாக்கெண்ணல் நிலையமொன்றுக்குப் பொறுப்பாக பிரதான வாக்கெண்ணல் உத்தியோகத்தர் இருத்தல் வேண்டும் என்பதோடு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் எழுதுவினைஞர்கள் மற்றும் உதவியாளர்கள் உள்ளடங்கலாக பணியாட் தொகுதியொன்றை நியமித்தல் வேண்டும். அந்த உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கெண்ணல் நிலையங்களில் தேவைப்பாடுகளையும் வசதிகளையும் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களையும் கவனத்திற்கொண்டு எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைவாகத் தாபிக்கப்பட்ட வாக்கெண்ணல் வளாகங்கள் மற்றும் வாக்கெண்ணல் நிலையங்கள் தொடர்பான தகவல்கள் **21 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

vii. வாக்குச் சீட்டுக்கள், வாக்குப்புப் பெட்டிகள் உள்ளடங்கலாக பொருட்களாதியவற்றை விநியோ கித்தல் மற்றும் வாக்கெண்ணல்களுக்காகப் பயன் படுத்தப்பட்ட கட்டிடங்கள் மற்றும் வாக்கெண்ணல் வளாகங்கள் அனைத்தும் அரச நிறுவனங்களாகும். அவற்றுள் மாவட்டச் செயலகக் கட்டிடங்கள், அரச பாடசாலைகள் மற்றும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்கள், தொழிநுட்பக் கல்லூரிகள், கல்விக் கல்லூரிகள் மற்றும் திறந்த பல்கலைக்கழகக் கல்லூரியின் கல்வி நிலையங்கள் என்பன பயன்படுத்தப் பட்டிருந்தன. வாக்கெண்ணல் நிலையங்களை ஒழுங்கமைத்தல் ஆரம்பமானது தொடக்கம் வாக்கெண்ணல் முடிவுறுத்தப்பட்டு பொருட்களாதியவை தேர்தல் களஞ்சியசாலைகளுக்கு போக்குவரத்துச் செய்தல் வரையான முழுமையான காலப் பகுதியினுள் தேவையான பாதுகாப்பு வழங்கப் பட்டது. வாக்கெண்ணல் நிலையமொன்றிற்காக ஆயுதம்தாங்கிய இரண்டு பொலிஸ் உத்தியோகத் தர்களும், வாக்குப் பெட்டிகள் மீளப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்திலிருந்து அனைத்து வளாகங் களது பாதுகாப்பிற்காக விசேட பொலிஸ் பிரிவுகளினாலும் மற்றும் தேவைக்கேற்ப வளாகங் களுக்கு வெளி இடங்களிலும் விசேட பொலிஸ் படையணி மூலமும் பாதுகாப்பு வழங்கப் பட்டிருந்தது. இறுதி பெறுபேறுகள் தயாரிக்கும் நிலையம் வாக்கெண்ணல் நிலையம் அமையப் பெற்றுள்ள வளாகத்திற்கு வெளியேயுள்ள இடத்தில் நிறுவப்பட்டுள்ள போது ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையங்களின் பெறுபேறுகள் ஆவணங்கள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பிப் பதற்காக இறுதிப் பெறுபேறுகள் தயாரிக்கப்படு கின்ற நிலையத்திற்கு எடுத்துச் செல்கின்ற தலைமை வாக்கெண்ணல் அலுவலர் அல்லது உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோருக்கு பொலிஸ் பாதுகாப்புடன் இடையூறுகளின்றி வருகை தருவதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒழுங்கு செய்யுமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

viii. ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திற்கும் உரிய வாக்குப் பெட்டிகள் மற்றும் பொருட்களாதியவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்காக கையேற்றல் மற்றும் விநியோகித்தல் பணியாட்குழுவினருக்கு 2020.08.05 ஆம் திகதி பி.ப. 03.30 மணியாகும் போது உரிய நிலையங்களுக்கு அறிக்கையிடுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. வாக்கெண்ணல் பணிகளை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு அந்த நிலையத்தின் தலைமை வாக்கெண்ணல் உத்தியோகத்தரும் பொருட்களாதியவற்றை கையேற்றலுக்குப் பொறுப்பான அலுவலர்களுடன் இணைந்து மேற்படி நடவடிக்கைகளை மேற் கொள்வது பொருத்தமாதென தேவையான அறிவுறுத்தல்கள் அறிவித்து அனுப்பப்பட்டிருந்தன. பொருட்களாதியவற்றை கையேற்கும் நிலையத்தின் பிரதம உதவித் தெரிவத்தாட்சி அலுவலரை வாக்கெண்ணல் பணியின் போது பிரதி பிரதம வாக்கெண்ணல் உத்தியோகத்தராக நியமிக்கவும்

நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த காரணத்தினால் பொருட்களாதியவற்றை பெற்றுக்கொள்ளல் மற்றும் வாக்கெண்ணல் என்பனவற்றுடன் தொடர்புடைய பொருட்களை பிரதம வாக்கெண்ணல் அலுவலருக்கு கையளித்தலை சிறந்த ஒருங் கிணைப்புடன் பேணிச்செல்வதற்கு முடிந்தது. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடமிருந்து பொருட்களாதியவை மீளப்பெற்றுக் கொள்ளப் பட்டவுடன், வாக்கெண்ணத் தேவையான வாக்குப் பெட்டிகள் மற்றும் நியதிச்சட்ட உறைகள் என்பனவற்றை தலைமை வாக்கெண்ணல் அலுவலரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப் பட்டிருந்தது. தலைமை வாக்கெண்ணல் அலுவல ரினால் அடுத்த நாள் வாக்கெண்ணலை உரிய நேரத்தில் ஆரம்பிக்கக் கூடியவாறு தேவையான அறிக்கை அடிப்படையில் ZCCO அறிக்கை பூரணப்படுத்தப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலர் களிடமிருந்து வாக்கெண்ணல் அனுமதி பெறப்படல் வேண்டுமெனவும் கட்டளையிடப்பட்டிருந்தது.

ix. வாக்கெடுப்பு நிலையப்பொறுப்பு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் "Z" உறையில் இடப்பட்டு வழங்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்களின் குழப்பங்கள் தொடர்பான "Z" அறிக்கைகளைத் திறந்து அத்தகவல்களை ZCCO அறிக்கையில் குறித்துக் கொண்டதன் பின்னர் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது வளாகத்தின் பிரதான ஒருங்கிணைப்பு உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ள உத்தி யோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த ZCCO அறிக்கை அல்லது அந்தத் துறையில் பணிபுரிந்த வலயப் பொறுப்பு உதவித் தெரிவத் தாட்சி அலுவலர்கள், ஒருங்கிணைப்பு உதவி தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களினால் குழப்பமொன்று அல்லது சம்பவமொன்று அறிக்கையிடப்படவில்லை என்பது உறுதி செய்யப்படுமாயின், தெரிவத்தாட்சி அலுவலர்களால் அல்லது வளாகத்திற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட பிரதான ஒருங் கிணைப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் களினால் வாக்கெண்ணல் ஆரம்பித்தல் கட்டளை தலைமை வாக்கெண்ணல் உத்தியோகத்தருக்கு வழங்கப்படும். அவ்வாறே ஏதேனும் குழப்பங்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் அல்லது சில வாக்கெடுப்பு நிலையங்களில் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப் பட்டிருப்பின் அவரினால் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் அறிக்கை (ZARO), தேர்தல் கண்காணிப்பாளர்கள் பேணிவருகின்ற அறிக்கை (ZLOB) சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தின் பொலீஸ் உத்தியோகத்தர்களின் வாக்குமூலங் களைப் பெற்றுக் கொண்டு மேலதிக அறிவுரை களுக்காகத் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்து வாக்கெண்ணல் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 48 (அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக் குத் தடை ஏற்படும் ஏதேனும் விடயங்கள் ஏற்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுமாயின் அந்த வாக்கெடுப்பை வறிதாக்குவதற்கும் அவ்வாறு வறிதாக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான தேர்தல் முடிவுகளைத் தயாரித்தல் மற்றும் மீண்டும் வாக்கெடுப்பை நடாத்தல் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்படுமென தேர்தல் ஆணைக்குழுவினால் 2020.07.15 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனைத்துத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், பிரதி மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணை யாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

x. வாக்கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் கையளிக்கப் படுகின்ற வாக்குப் பெட்டிகள் உள்ளடங்கலாக ஏதேனும் ஆவணமொன்று அல்லது பொருளொன்று வாக்கெண்ணல் நிலையத்திற்கு வெளியில் எடுத்துச் செல்லப்படாமல் முத்திரை பொறிக்கு மாறும், கிடைக்கப்பெற்றிருந்த வாக்குப் பெட்டி களை மேலும் பெரியளவிலான கார்ட்போட் பெட்டிகளில் இட்டு வாக்கெண்ணல் பிரதான மேசையின் மீது பொதி செய்து வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்ததோடு, தேவைப்படின், முகவர் களுக்கும் அத்தகைய பாரிய பெட்டிக்கு முத்திரை பொறிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், வாக்கெண்ணல் நிலையங்களைப் பூட்டி முத்திரை பொறித்து அவை அமையப் பெற்றுள்ள கட்டிடத்திற்கு பிரவேசிக்கும் பிரதான கதவுகளையும் பொறியிடுவதற்கு மற்றும் அவற்றில் கதவுகள் இல்லையெனில் தற்காலிகக் கதவு களைத் தயாரித்து பொறியிட்டு அவசியமெனில் முகவர்களுக்கும் மீண்டும் பொறியிடுவதற்கு அனுமதிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு முத்திரையிடப்பட்டதன் பின்னர் கதவுக்கு வெளியில் ஆயுதம் தரித்த பொலீஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பணிகள் சரியான முறையில் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பாக உறுதி செய்துகொள்வதற்காக பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுடன் தேர்தல்கள் அலுவலகத்தில் பணியாற்றுகின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரும் மேற்பார்வைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. வளாகங் களிற்குப் வெளிப் பிரதேசத்திலும் விசேட பொலீஸ் பாதுகாப்பை வழங்குவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. தேர்தலொன்றை நடாத்துதல், வாக்கெண்ணலை மேற்கொண்டு பெறுபேறுகளை வெளியிட்ட பின்னர், சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான தேர்தலுக்கு தடை ஏற்படும் ஏதேனும் வகையான செயற்பாடுகள் இடம்பெறா திருப்பதையும் அது தொடர்பான அனைத்து

விடயங்களும் மிகவும் நம்பகமாகவும் வெளிப்படைத் தன்மையுடன் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவ தற்காக அனைத்து முன்னேற்பாடுகளும் எடுக்கப் பட்டிருந்ததோடு வாக்கெண்ணல் நிலையங்களை ஒழுங்குபடுத்தல், வாக்கெண்ணல் மற்றும் வாக்கெண்ணப்பட்ட வாக்குச் சீட்டுகள் என்பன உள்ளடங்கலாக பொருட்கள் பாதுகாப்பறைகளில் வைக்கப்படும் வரையான அனைத்து தொழிற்பாடு களையும் மிகவும் சரியானதாகவும் வினைத் திறனானதாகவும் நிறைவேற்றுவதற்கான அறிவுறுத் தல்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் 2020.07.22 ஆம் திகதி தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், பிரதி மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

xi. வாக்கெண்ணல் பணிக்காக நியமிக்கப்பட்ட உத்தி யோகத்தர்களுக்கு முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்ததோடு அனைத்து உத்தியோகத் தர்களும் தேசிய அடையாள அட்டை மற்றும் அலுவலக அடையாள அட்டை ஆகியவற்றை கடமை நேரத்தில் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். அதேபோன்று அவர்களை இனங்காண்பதற்காக இலச்சினைகளும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்த தோடு அதனை அனைவருக்கும் தெரியும் வண்ணம் அணிந்திருக்குமாறும் அறிவுரை வழங்கப் பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, முகவர் களுக்கும் அதற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்களை அணிந்திருக்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டிருந்ததோடு, அவர்களிற்காக ஒவ்வொரு நிலையத்திலும் வரவு இடாப்பொன்றும் பேணப் பட்டது. வாக்கெண்ணல் மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, ஆயுதங்கள், கெமரா பயன்படுத்தல் தடைசெய்யப்பட்டிருந்ததோடு, தடைசெய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்வதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு அறிவித்தல்களும் காட்சிப் படுத்தப்பட்டன. அதேபோன்று அலுவலர்களுக்கும் மற்றும் முகவர்களிற்கும் அடிக்கடி மண்டபத்திற்கு வெளியே செல்வதற்கும் மற்றும் உள்ளே வருவதற்கும் தடைசெய்யப்பட்டுள்ளதெனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

xii. ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திற்குமுரிய அனைத்து வாக்குப் பெட்டிகளும் கிடைக்கப்பெற்ற பின்னர் வாக்கெண்ணல் கட்டளையைப் பெற்றுக் கொண்டுள்ள வாக்கெண்ணல் நிலையங்களில் 2020.08.06 ஆம் திகதி மு.ப. 07.00/08.00 மணிக்கு வாக்கெண்ணல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. போட்டியிட்ட கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த வாக்கெண்ணல் ஆரம்பிக்கும் நேரம் வரையிலும் வாக்கெண்ணல் நிலையங் களுக்கு முகவர்கள் வருகை தரவில்லையெனில் உடனடியாக ஒலிபெருக்கி மூலம் வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளதால் உரிய நிலையத்திற்கு அறிக்கையிடுமாறு முகவர் களிற்கு கேட்கக் கூடியவாறு பிரச்சாரம் செய்வ தற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது.

xiii. வாக்கெண்ணல் நிலையங்களுக்குப் போதியளவு மின்சாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், சந்தர்ப் பத்திற்கேற்றவாறு மாற்று சக்தி மூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பூர்வாங்க நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே வேலைத் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இத்தேர் தலின் போது சில மாவட்டங்களில் மின்சார வசதிகள் முழுமையாக தனியார் மின்பிறப் பாக்கி இயந்திரங்கள் (ஜெனரேட்டர்கள்) மூலம் வழங்கப்பட்டிருந்தன. மின்சார சபை அல்லது மின்சக்தி தனியார் கம்பனிகளின் செலவின மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகவும் இலாபகரமானதாகக் காணப்பட்டமை, தொடர்ச் சியான சேவை வழங்கல் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டமையைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் தேர்தல்களிலும் அவ்வாறு செயற்படுதல் காலோசிதமானதென்ற கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டிருந்தன. அனைத்து வளாகங்களுக்கும் குடிநீர் வசதிகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் போதியளவில் வழங்கப்பட்டிருந்தன. கடந்த தேர்தல் களைப் போன்று இம்முறையும் நலனோம்பல் வசதிகள் இரண்டு முறைகளின் கீழ் ஒழுங்கமைக் கப்பட்டிருந்தன. வாக்கெண்ணல் பணிகளுக்காக அழைக்கப்படுகின்ற பதவியணியின் உறுப்பினர் களின் பிரதான உணவு வேளைகளை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் அதற்காக கொடுப்பனவொன்று வழங்கப்படும். வெளியிலிருந்து வருகைதருகின்ற, அதே போன்று தூர இடங்களில் வசித்தல் மற்றும் போக்குவரத்து கஷ்டங்கள் காரணமாக உணவுகளை எடுத்துவருவது அசௌகரியமான அலுவலர்களுக்கு நியாயமான விலையில் தூய்மையான உணவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு உணவகங்களை அமைப் பதற்குத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், பிரதான உணவு வேளைகளுக்கு மேலதிகமாக தேநீர்,குளிர்பானம் மற்றும் சிற்றுண்டிகளை நிலை யத்தினுள் சென்று விநியோகிக்கும் முன்னைய தேர்தல்களின் போது மேற்கொள்ளப்பட்ட நலனோம்பல் வேலைத்திட்டம் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய சிறிய மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

xiv. வாக்கெண்ணல் மூன்று கட்டங்களில் மேற்கொள் ளப்படும். அதன் முதலாவது கட்டத்தின் கீழ் ஒவ்வொரு வாக்குப்பெட்டியிலும் உள்ள வாக்கு களின் எண்ணிக்கை வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள வாக்குச் சீட்டுக் கணக்குடன் இணங்குகின்றதா என்பது பரிசீலனை செய்யப்படும். இங்கு முதலாவதாக தலைமை வாக்கெண்ணல் அலுவலரினால் வாக்குச் சீட்டுக் கணக்கு உள்ளடக்கப்பட்ட உறையை திறந்து பார்த்து, எவரொருவருக்கும் தென்படாதவாறு முன்பக்கம் கீழ் நோக்கியிருக்குமாறு மேசை மீது வைத்துக் கொண்டு, அதற்குரிய வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்குப் பெட்டியின் முத்திரையைப் பரிசீலனை செய்து திறக்குமாறு கட்டளையிடப்படும். பின்னர்,

வாக்குப் பெட்டியில் உள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை வாக்குச் சீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு சமமானதாக இருப்பின், அடுத்த கட்ட வாக்கெண்ணலுக்காக பெரிய தட்டுக்கு மாற்றம் செய்வதற்குக் கட்டளை யிடப்படும். அவ்வாறே இந்த வாக்குச் சீட்டுக் கணக்கு மற்றும் வாக்குப் பெட்டியிலுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கைக்கு இணங்காத விடத்து, இரண்டு தடவைகள் அவற்றைக் எண்ணிப்பார்த்து வாக்குப் பெட்டியிலுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை சரியான வாக்குச் சீட்டு எண்ணிக்கையாகக் கருதி தட்டுக்கு மாற்றப்படும். அதன் பிரகாரம், வாக்கெண்ணல் நிலையத்திற்குரிய வாக்கெடுப்பு நிலையங்கள் தொடரொழுங்கில், அனைத்து வாக்குப் பெட்டிகளில் உள்ள வாக்குச் சீட்டுகளும் வாக்கெண்ணல் முதலாம் கட்டத்தினுள் மேற்கொள்ளப்படும்.

xv. வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டம் இரண்டு உப கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும். அதன் முதலாவது உப கட்டத்தின் கீழ் ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவுக்கும் வாக்களிக்கப் பட்டுள்ள விதம் கருத்திற் கொள்ளப்படும். இந்த கட்டத்தில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் களின் நெருங்கிய நேரடி மேற்பார்வையின் கீழ் முழு அலுவலர்களும் ஒன்றிணைந்து வாக்குச் சீட்டுக்களைத் தெரிதல் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு கட்சிகளின், குழுக்களின் சின்னம் மற்றும் இலக்கங்கள் குறிப்பிடப்பட்ட பெட்டிகளை மேசையின் மீது வைத்து, தெரியப்படுகின்ற வாக்குச்சீட்டுக்கள் அந்தந்தப் பெட்டிகளுக்குள் இடப்படுவதுடன், தீர்மானமொன்றை எடுக்கமுடியாத அல்லது நிச்சயமற்ற வாக்குச்சீட்டுக்கள் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஊடாக தலைமை வாக்கெண்ணல் அலுவலருக்கு ஆற்றுப்படுத்தப் படும். தலைமை வாக்கெண்ணல் அலுவலரால் நிச்சயமற்ற வாக்குச் சீட்டுக்கள் தொடர்பாக முகவர்களையும் அறிவுறுத்தி முடிவை வழங்கி, நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களில் "நிராகரிக்கப் பட்டது" என்ற முத்திரையொன்றைப் பொறித்து தலைமை வாக்கெண்ணல் அலுவலர் புறக்கை யெழுத்திட வேண்டுமென்பதோடு நிராகரிக்கப்பட்டமைக் குரிய காரணத்தினைக் குறிப்பிடுதலும் வேண்டும். இரண்டாம் உபகட்டத்தில் கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு அமைய தெரிந்து வேறாக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளில் அதிக எண்ணிக்கையான வாக்குச் சீட்டுக்களை பெற்றுக் கொண்ட கட்சியின் அல்லது குழுவிலிருந்து வாக்குச் சீட்டுக்கள் அடங்கிய பெட்டிகளை "மீளத் தெரிதல்" எனப்படும் பிழையற்றதன்மை பரிசீலனை செய்யப்பட்டு, அவை வாக்கெண்ணப்பட்டு 50 கொண்ட கட்டுக்களாக தயாரித்தல், அவ்வாறு தயாரிக்கப்பட்ட கட்டொன்றில் சரியாக 50 வாக்குச் சீட்டுக்கள் காணப்படுகின்றனதா என்பதை மீண்டும் பரிசோ தித்தல் மற்றும் அதன் பின்னர் "சிறப்பு பரிசோதனை" மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரினால் அனைத்து விடயங்களும் முழுமை பெற்றுள்ளதா என்பது தொடர்பான - "எழுமாற்றுப் பரிசீலனை" மேற்கொள்ளப்படும். இறுதியாக, தலைமை வாக்கெண்ணல் அலுவலரினால் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும்" இறுதிப் பரிசீலனை" நடாத்தப்பட்டு அவை 500 கொண்ட கட்டுக்களாக தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு கட்சி அல்லது குழுக் களின் பெயர்கள் மற்றும் இலக்கம் குறிக்கப் பட்டுள்ள பெட்டிகளில் இடப்படும். இந்தப் பணிகளின் நிறைவில் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 53 (7) ஆம் பிரிவின் பிரகாரமான கூற்று (PE 27) 5 பிரதிகளைக் கொண்ட காபன் கடதாசியிலான படிவத்தில் குறித்துக் கொள்ளப் பட்டு அதன் முதற் பிரதியைத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் இரண்டாவது மற்றும் மூன்றாம் பிரதிகள் வாக்கெண்ணல் நிலையத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக் கொண்ட கட்சி அல்லது குழுவின் முகவர்களுக்கு வழங்குதல். நான்காம் பிரதியை தலைமை வாக்கெண்ணல் அலுவலரின் குறிப்பேட்டுடன் இணைத்து வைக்குமாறும் மற்றும் ஐந்தாம் பிரதியை வாக்கெண்ணல் மண்டபத்தின் நுழைவாயிலில் காட்சிப்படுத்துவதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

xvi. வாக்கெண்ணலின் மூன்றாம் கட்டத்தின் போது ஒவ்வொரு கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகள் எண்ணப்படும். இரண்டாம் கட்டத்தின் கீழ் கிடைக்கின்ற கட்சிகள் மற்றும் குழுக்களின் பெறுபேறுகளின் பிரகாரம் உறுப்பினர் பதவி யொன்றுக்கு உரித்தொன்று இருப்பதால், விருப்பு வாக்கெண்ணலினை மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து கட்டளை கிடைக்கப்பெற்றுள்ள கட்சிகள் மற்றும் குழுக்களின் மாத்திரம் விருப்பு வாக்கெண்ணல், அதிக எண்ணிக்கையான வாக்குகள் பெற்றுக் கொண்ட கட்சி அல்லது குழுவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு தொடரொழுங்கில் மேற்கொள்ளப்படும். இந்த கட்டத்தில் ஒவ்வொரு கட்சிகள்/ குழுக்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் பிரகாரம் ஒரு விருப்பு அடையாளப் படுத்தப்பட்ட, இரண்டு விருப்பு வாக்குகள் அடையாளப்படுத்தப்பட்ட, மூன்று விருப்பு வாக்குகள் அடையாளப்படுத்தப்பட்ட, விருப்பு வாக்கு எதுவும் அடையாளப்படுத்தப்படாத, விருப்பு நிச்சயமற்ற மற்றும் மூன்றுக்கு அதிகமான விருப்பு வாக்குகள் அடையாளப்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அடிப்படையில் வேறாக்குதல், அது தொடர்பாக உறுதிப்படுத்தல் மற்றும் சரியாக வகையீடு செய்தல், சிறப்புப் பரிசீலனை செய்து விருப்பு ஒப்பீட்டுப் பத்திரத்தில் அடையாளமிட ஆரம்பிக்கப்படும். மிகக் கடினமான இந்தப் பணியை, மிக நெருங்கிய மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதும், மீண்டும் பரிசோதித்தல் ஊடாக அவற்றின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதும், தலைமை வாக்கெண்ணல் உத்தியோகத்தர் களின் பொறுப்பாகும். உத்தியோகத்தர்களுக்கு

இடையிலான கடமைகளை மாற்றம் செய்து இந்த விருப்பு ஒப்பீட்டு எண்ணிக்கையை இரண்டாம் மற்றும் மூன்றாவது பொழிப்பு படிவத்தை ஒழுங்கு முறையாகவும் சரியான முறையிலும் மேற்கொள்ளுமாறு தலைமை வாக்கெண்ணல் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஒவ்வொரு கட்சியின் மற்றும் குழுவின் வாக்குச் சீட்டுகளில் உள்ள ஒவ்வொரு வேட்பாளர் சார்பாக அடையாளமிடப்பட்ட மொத்த விருப்புகளின் எண்ணிக்கை சரியாக குறிப்பிடப்பட்ட எழுத்து மூலக் கூற்று தலைமை வாக்கெண்ணல் அலுவலரினால் தயாரித்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கையளிக்கப்படும். வாக்கெண்ணல் முடிவடைந்த பின்னர் தலைமை வாக்கெண்ணல் அலுவலரினால் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் கீழ் செயற்பட்டு தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்குச் சீட்டுகள் உட்பட ஏற்புடைய எழுத்தாவணங்கள் மற்றும் பொருட்களாதியவைகள் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கமைய தேர்தல்கள் அலுவலக அலுவலர்களுக்கு கையளிக்கப்படல் வேண்டும். வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கிணங்க ஒருங்கிணைப்புக்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் இந்தப் பணிகளை ஒழுங்குமுறையாக மேற்கொள்ளுகின்றனரா என்பதை தனிப்பட்ட முறையில் நேரடியாக பரிசோதனை செய்து உறுதிசெய்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அவை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் அல்லது தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்தில் காணப்படுகின்ற பாதுகாப்பறைகளில் வைப்புச் செய்யப்படும்.

## 40. இறுதி முடிவுகளைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்.

i. 1928 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 15 ஆம் மற்றும் 16 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 57 முதல் 62 பிரிவுகள் வரையான மற்றும் அரசியலமைப்பின் 98 மற்றும் 99 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பாராளுமன்றத் தேர்தலின் பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமான ஏற்பாடுகள் மற்றும் சட்ட நிலைமைகள் தெளிவுபடுத்தப்படுகின்றது. இந்தப் பாராளுமன்றத் தேர்தலின் பெறுபேறுகள் அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளியிடல் தொடர்பான முழுமையான அறிவுறுத்தல்கள் 2020.07.24 திகதியிடப்பட்டு அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அதேபோன்று பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 57 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற நேரம் மற்றும் இடம் பற்றிய அறிவித்தலொன்று தெரிவத்தாட்சி அலுவலர்களினால் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ii. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய பெறுபேறுகள் தயாரிக்கப்படுகின்ற மற்றும் பெறுபேறுகள் பிரகடனப் படுத்தப்படுகின்ற இடங்களைத் தெரிவு செய்யும் பொழுது, விஷேடமாகக் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்துத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் போது மற்றும் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. பெறுபேறுகளைத் தயாரித்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுகின்ற இடம், அனுமதி பெற்ற அனைவரும் எவ்விதமான இடையூறுகளுமின்றி இலகுவாக பிரவேசிக்கக் கூடிய இடமொன்றாக இருத்தல், இதற்கான போக்குவரத்து இலகுவானதாகவிருத்தல், மின்னொளி மற்றும் மாற்று மின்சக்தி வழங்கலொன்றைப் பெற்றுக்கொள்ளல், பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தல், தொலைபேசி, தொலைநகல் மற்றும் நிழற்பிரதிகளைப் பெற்றுக் கொள்ளல் வசதிகளைப் ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல், அதற்கு அண்மித்ததாக கணினி மூலம் பெறுபேறுகளைத் தயாரிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

iii. இந்த வேலைத்திட்டம் மாவட்டத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் நேரடி கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. வாக்கெண்ணல் நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த வளாகங்களில், தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களின் அலுவலகங்களின் பிரதான மண்டபங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட வசதிகளைக் கொண்ட ஏனைய இடங்கள் என்பன இறுதிப் பெறுபேறுகளைத் தயாரிக்கும் நிலையங்களாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களால் பயன்படுத்தப் பட்டிருந்ததோடு, அந்த இடங்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இந்தப் பணிகளின் நம்பகத் தன்மையை உச்ச அளவில் பாதுகாக்கும் வகையில் கையால் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் இடங்கள் போன்று கணினி மூலம் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் இடங்களில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை நன்றாகக் கண்காணிப்பதற்கு முடியுமான வகையில் முகவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. தேர்தல் ஆணைக் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெறுபேறுகளைத் தயாரித்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக சிரேட்ட பதவி நிலை அலுவலரொருவரின் தலைமையின் கீழ் குழு

வொன்று நியமிக்கப்பட்டிருந்ததோடு, கொழும்பு தேர்தல்கள் செயலகத்திற்கு இந்த உத்தியோகத் தர்கள் அழைக்கப்பட்டு கையால் பெறுபேறுகளைத் தயாரித்தல் சம்பந்தமாகவும், கணினி மென்பொருள் மூலம் பெறுபேறுகளைத் தயாரித்தல் தொடர் பாகவும் பயிற்சி அமர்வுகள் நடாத்தப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இறுதிப் பெறுபேறுகளின் 100% பிழையற்ற தன்மையை அடைந்துகொள்ளும் நோக்கில் இந்த வேலைத் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

iv. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 58 ஆம் பிரிவிற்கமைய பெயர்குறித்த நியமனங்கயைச் சமர்ப்பித்த ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவினால் பெறுபேறுகளை வெளியிடுகின்ற நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக இரண்டு முகவர்கள் வீதம் நியமனம் செய்யலாம் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஒவ்வோர் அரசியல் கட்சிகளினதும் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் அல்லது சுயேச்சைக் குழுத் தலைவரினால் நியமிக்கப்படவுள்ள முகவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் பெறுபேறுகள் வெளியிடப் படுகின்ற அலுவல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவித்தல் வேண்டும். இந்தப் பிரிவிற்கு மேலதிகமாக 59 ஆம் பிரிவின் பிரகாரம் தெரிவத் தாட்சி அலுவலர் மற்றும் அவரது உதவிக்கு நியமிக்கப்படுகின்ற நபர்களுக்கும் பெறுபேறுகள் அட்டவணைப்படுத்தப்படுகின்ற இடத்திற்கு சமூக மளிப்பதற்கான உரிமையுண்டு.

v. அதற்கமைய சட்டத்தின் 58 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வோர் அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகளை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை யெடுக்குமாறு, போட்டியிடுகின்ற அனைத்துக் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களால் அறிவிக்கப் பட்டிருந்தது. பெறுபேறுகளைத் தயாரிக்கும் மண்டபத்திற்குள் அனுமதிப்பதற்கு முன்னர் இந்த முகவர்களின் நியமனக் கடிதங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகளைப் பரிசீலனை செய்தல், வரவு இடாப்பில் மற்றும் இரகசியம் பேணல் வெளிப்படுத்துகையில் கையொப்பம் பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. மேலும், முகவர்கள் அணிந்திருப்பதற்கான பொருத்தமான அனுமதிப்பத்திரமும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. வாக்கெண்ணல் நிலையங் களில் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் நிலையத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறு அட்டவணையைப் பரிசீலனை செய்து கையேற்றல், வாக்கெடுப்புப் பிரிவு அடிப்படையில் பெறுபேறுகள் அட்டவணைப்படுத்துகின்ற விதத்தை, அவை கணினி மயப்படுத்தப்படுகின்ற விதத்தை நன்றாகத் தெரியும் வகையில், ஆனால் அப்பணி களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு முகவர்களுக்கு அமர்வதற்கான ஆசன வசதிகளை செய்யுமாறும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப் பட்டிருந்தது. அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் அதிக எண்ணிக்கை போட்டியிடுவதால் வருகை தருவார்களென எதிர்பார்க்கப்பட்ட பாரியளவு எண்ணிக்கையான முகவர்கள் தொடர் பாகவும் கவனத்திற் கொண்டு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுவின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் உறுப்பினர் பதவி உரித்துடைய அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எந்தவொரு வேட்பாளருக்கும் இந்த இடத்தில் தரித்திருப்பதற்கு அனுமதி வழங்குமாறும் மற்றும் உறுப்பினர் பதவிகள் கிடைக்கப்பெறாத கட்சிகள் மற்றும் குழுக்களின் முகவர்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்றுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

vi. ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திலும் தயாரிக்கப்படுகின்ற பெறுபேறுகள் தலைமை வாக்கெண்ணல் அலுவலரால் அல்லது உதவி தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரினால் கொண்டு வரப்பட்டு இறுதி முடிவுகள் தயாரிக்கப்படுகின்ற நிலையத்தில் தெரிவத்தாட்சி அலுவலர், பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அல்லது வேறு அதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிரேட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டது. சில மாவட்டங்களில் இப்பணிகள் வளாகங்களை ஒருங்கிணைக்கும் அலுவலகங்களின் அலுவலர் களினாலும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு வளாக ஒருங்கிணைப்பு அலுவலகங்களில் பெறுபேறு ஆவணங்கள் சரிபார்த்து கையளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இறுதிப் பெறுபேறுகள் தயாரிக்கும் நிலையத்தில் மீண்டும் பரீட்சித்துப் பார்த்து சரியானது என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பொறுப்பேற்கப் பட்டது. அதேபோன்று அதற்காக பற்றுச் சீட்டொன்றை வழங்குமாறும் மேலும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

vii. பெறுபேறுகள் அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளியிடல் நிலையங்களில்,

- ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திலிருந்தும் கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகளைப் கையேற்றல்.
- வாக்கெண்ணல் படிவங்களின் தகவல்கள் மற்றும் புள்ளிவிபர பிழையற்றதன்மையைப் பரிசீலனை செய்தல்.
- அந்த பெறுபேறுகள் ஆவணங்களை வாக்கெடுப்பு பிரிவு மற்றும் தேர்தல் மாவட்ட அடிப்படையில் அஞ்சல் வாக்கு என்றவாறு அட்டவணைப்படுத்தல்.
- ஒவ்வோர் அரசியற் கட்சி சுயேச்சைக் குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக் கையைத் தீர்மானித்தல்.
- ஒவ்வோர் அரசியல் கட்சி/ சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதா சாரமாக உரித்துடையதாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

- உறுப்பினர் பதவி உரித்துடைய ஒவ்வோர் அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவின் கீழ் போட்டியிட்ட வேட்பாளர்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை எண்ணுதல் மேற்கொள்ளப்படும்.

இங்கு, சாதாரண வாக்கெண்ணல் நிலையங்கள், அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்கள் மற்றும் ஏற்புடையதாயின் வேறு வாக்கெடுப்பு நிலைய மொன்றில் வாக்களித்த வாக்காளர்களின் வாக் கெண்ணல் நிலையங்கள் போன்ற அனைத்து வாக்கெண்ணல் நிலையங்களின் வாக்கெண்ணல் பொறுப்பு தலைமை வாக்கெண்ணல் அலுவலர் களினால் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 53(7) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற எழுத்து மூலக் கூற்று பெறுபேறுகள் நிலையத் திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதனடிப் படையில் வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்தில் பெறுபேறுகள் மற்றும் தேர்தல் மாவட்ட மட்டத்தில் இறுதி பெறுபேறுகள் கணிப்பீடு செய்தல் மற்றும் வெளியிடல் தெரிவத்தாட்சி அலுவலர்களால் நிறை வேற்றப்பட்டன.

viii. ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்தும் கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகள் ஆவணம் (PE 27 படிவம்) தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் அல்லது பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணை யாளர்கள் அல்லது பெறுபேறுகளை அட்டவணைப் படுத்தல் பொறுப்பு பிரதம தெரிவத்தாட்சி அலுவலரினால் கையேற்றுக்கொண்டு ஆரம்ப பரிசீலனை மேற்கொள்கின்ற உதவித் தெரிவத் தாட்சி அலுவலருக்கு வழங்கப்பட்து. இந்த நோக்கத் திற்கு முன்னர் வாக்கெண்ணல் கடமைகளில் ஈடுபட்டு அனுபவம் மற்றும் ஆற்றல் கொண்ட அலுவலர் குழுவொன்றை ஈடுபடுத்துவது மிகவும் பொருத்தமானதென அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது. அதன்போது பெறுபேறுகள் ஆவணம் பாதுகாப்பாக பொறியிடப்பட்டுள்ளதா, சரியான படிவம் பயன்படுத்தப்பட்டுள்ளதா, நிலையத்தின் குறியீட்டு இலக்கம் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளதா, எண்ணிக்கைகளின் மொத்தக் கூட்டுத் தொகை சரியானதா, எண்ணிக்கை எழுத்திலும் மற்றும் இலக்கத்திலும் சரியாக எழுதப்பட்டுள்ளதா, தயாரிக்கப்பட்ட மற்றும் பரிசீலனை செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அவர்களின். தகவல்களை அதில் குறிப்பிடப்பட்டு கையொப்பமிடப் பட்டுள்ளார்களா என்பதும் மற்றும் தலைமை வாக்கெண்ணல் உத்தியோகத்தரால் அதனை சான்றுறுதிப்படுத்துவதற்காக கையொப்பமிட்டு, திகதியைக் குறிப்பிட்டு உத்தியோகபூர்வ பதவி முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சித்து அவை சரியானதெனில் பெறுபேறுகள் ஆவணம் கையேற்றுக்கொள்ளப்பட்டு பற்றுச் சீட்டொன்று வழங்கப்படும். அவ்வாறே பெறுபேறுகள் ஆவணத்தில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின், அவற்றை மீளத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டு தலைமை வாக் கெண்ணல் அலுவலருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

ix. இவ்வாறு தலைமை வாக்கெண்ணல் உத்தியோகத் தரினால் சமர்ப்பிக்கப்பட்ட பெறுபேறுகள் சரியான தெனில், அதன் நிழற்பிரதிகள் எடுக்கப்பட்டு மூலப் பிரதி தெரிவத்தாட்சி அலுவலரிடம் கோப்பிலிடப் பட்டு வைத்துக்கொள்ளப்படும். நிழற்பிரதியெடுக்கப் பட்ட பின்னர் ஒரு பிரதி, தேர்தல்கள் செயல கத்தில் தாபிக்கப்பட்டுள்ள தேசிய பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் நிலையத்திற்கும் மேலும் இரண்டு பிரதிகள் மாவட்டப் பெறுபேறுகளைத் தயாரிக்கும் நிலையத்தில் பெறுபேறுகளைக் கைகளால் தயாரிக்கப்படுகின்ற மேசைக்கும் மற்றும் கணினி மூலம் பெறுபேறுகள் தயாரிக்கப் படுகின்ற நிலையத்திற்கு ஒரு பிரதியையும், மற்று மொரு பிரதியை காட்சிப்படுத்துவதற்காக அறிவித்தல் பலகைக்கும் அனுப்பி வைக்கப்படும். இந்தப் பணிகளுக்குப் பொறுப்பாக உதவி தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவரை நியமனம் செய்வதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

x. மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் மாவட்ட பெறுபேறு களைத் தயாரிக்கும் நிலையங்களில் வாக்கெடுப்புப் பிரிவுகள் மட்டத்தில் பெறுபேறுகள் மற்றும் தேர்தல் மாவட்டத்தின் அஞ்சல் வாக்குப் பெறுபேறுகள் உள்ளடங்கலாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் மொத்த பெறுபேறு, ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அந்த வாக்குகளின் எண்ணிக்கைக்கேற்ப உரித்துடைய தாகும் உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கையும் கணக்கிடப்படும். வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக பெறுபேறு களைக் குறிப்பதற்கு அதிக எண்ணிக்கையான படிவங்களைப் பயன்படுத்த நேரிட்டது. ஆடையாள மிடப்பட்ட ஒவ்வொரு படிவத்திலிருந்து மற்றைய படிவத்திற்கு குறிப்புகளை மாற்றும் போது அதிக கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமெனவும், அது சம்பந்தமாக அலுவலர் களை அறிவுறுத்துமாறு தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்புப் பிரிவுகள் மட்டத்தில் பெறுபேறு களை வெளியிடும் போது, கையினால் பெறுபேறு களைத் தயாரித்தல் மற்றும் தகவல்களைக் கணினியில் பதிதல் ஆகிய இருவழிகளினூடாகவும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பெறுபேறுகள் ஆவணங் களுடன் ஒப்பிடப்பட்டுப்பார்த்து அவை ஒன்றுக் கொன்று சரியாக பொருந்துகின்றதென திருப்தி யடைந்ததன் பின்னர் மாத்திரம், இறுதிப் பெறு பேறுகள் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டு தேர்தல்கள் செயலகத்தின் பிரதான பெறுபேறுகள் தயாரிக்கும் நிலையத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைத்தல் மற்றும் அது தொடர்பாக தொலைபேசியில் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை யெடுக்கப்பட்டது. தேர்தல்கள் செயலகத்தில் அத்தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்கள் தொடர்பாகவும் மற்றும் அதற்காக குறித்தொதுக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தொலைநகல் இலக்கங்கள்,

தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இரகசியமாக வழங்கப்பட்டமை ஊடாக இத்தகவல்களை பரிமாறிக் கொள்ளக் கூடிய வகையில் இரகசியத்தன்மை யுடனும், பாதுகாப்பானதாகவும் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதன் பிரகாரம், தலைமை அலுவலகத்திற்கு மாவட்டங்களிலிருந்து தொலை நகல் ஊடாகப் கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகள் ஆவணங்களின் பிழையற்றதன்மையைப் பரிசீலனை செய்தல், அவற்றை ஆவணப்படுத்தல் மற்றும் அட்டவணைப்படுத்தல், அனுபவமும் கொண்ட அலுவலர் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பெறுபேறுகள் ஆவணத்தில் ஏதாவது குறைபாடுகள் அல்லது பிழைகள் காணப்படின் அவை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தொலை நகல் மூலம் அனுப்பிவைத்தது தொலைபேசியில் அது பற்றி அறிவித்து அந்தக் குறைபாடுகளைத் திருத்தி சரியான பெறுபேறுகளை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

xi. தேர்தல்கள் செயலகத்தில் கணினி முறைமை ஊடாகப் பெறுபேறுகளைத் தயாரிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற்றும் இலங்கை மென்பொருள் மன்றத்தினால் விருத்தி செய்யப்பட்ட இந்த விசேட கணினி நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலதிகமாக ஒரு துணை நடவடிக்கையாக (backup) தேர்தல் ஆணைக்குழு வினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வேறு கணினி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினூடகவும் பெறுபேறுகள் தயாரிக்கப்பட்டன. அதன் போது, மாவட்டங் களிலிருந்து ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையங் களிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகள் ஆவணம் மாவட்டப் பெறுபேறுகள் நிலையத்தின் உத்தியோகத்தர்களினால் ஸ்கேன் (scan) செய்யப் பட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென்பதோடு, அந்தப் பெறுபேறுகளின் தகவல்களுக்கமைய கணினியூடாக பெறுபேறுகள் ஆவணம் தயார் செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம், இறுதியாகக் கையால் தயாரிக்கப் பட்ட பெறுபேறுகள், கணினி முறைமையூடாக தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் மற்றும் ஸ்கேன் செய்து அனுப்பப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் என்ற மூன்று வகைகளிலும் பெறுபேறுகளைத் தயா ரித்தல், அவற்றை ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார்த்தல் மற்றும் அனுபவம் கொண்ட உத்தி யோகத்தர்களால் மீள்பரிசீலனை செய்யப்பட்டு இறுதிப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முன்னர் அது தொடர்பாக 100% பிழையற்ற தன்மையை உறுதி செய்துகொள்வதற்கும், அதனூடாக போட்டி யிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் நம்பிக்கை யைப் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு வுக்கு சாத்தியம் கிட்டியது.

xii. மேற்குறிப்பிட்டவாறு தலைமை அலுவலகத்தில் மூன்று முறைகளில் பெறுபேறுகள் தயாரிக்கப்பட்டு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், செயலாளர், ஆலோசகர்களாக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகங்கள் உள்ளிட்ட சிரேட்ட அரச அலுவலர்கள் சிலரினால் அவற்றின் பிழையற்ற தன்மை மீண்டும் பரீட்சித்துப் பார்த்து உறுதிப்படுத்திய பின்னர், அந்த ஆவணம் சான்றுறுதிப்படுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழு விற்கு அனுப்பிவைக்கப்படும். தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களால் பெறுபேறு ஆவணம் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

xiii. தேர்தல் ஆணைக்குழுவினால் அத்தாட்சிப்படுத்தப் படுகின்ற பெறுபேறுகள் ஆவணங்கள் மாவட் டத்தின் தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கு தொலைநகல் மூலம் அனுப்பப்பட்ட பின்னர் பிரிவு மட்டப் பெறுபேறுகளையும் தேர்தல்கள் மாவட்ட அஞ்சல் வாக்குப் பெறுபேறுகளையும் வெளியிடு வதற்குத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதேபோன்று இந்த அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுபேறுகள், பெறுபேறுகள் தயாரிக்கப்படுகின்ற மண்டபத்தின் உட்பகுதியிலும், வளாகத்தின் வெளியிலும் உள்ளவர்கள் அறிந்து கொள்ளத்தக்கவாறு விரிவான திரையொன்றில் காட்சிப்படுத்துவதற்கும் மாவட்ட ஊடக உத்தியோகத்தரினால் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு வழங்க வேண்டியது அவசியமானதாகும் எனவும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பெறு பேறுகளை ஊடகங்களுக்கு வழங்குவதற்காக அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் தலை மையில் அந்த திணைக்களத்தின் அலுவலர்கள் உட்பட ஊழியர்களை உள்ளடக்கிய தனியான ஊடகப் பிரிவு தேர்தல்கள் செயலகத்தில் நிறுவப்பட்டிருந்ததோடு, சான்றுறுதிப்படுத்தப்படு கின்ற பெறுபேறுகளை அப்பிரிவிற்கு வழங்கியதை தொடர்ந்து அனைத்து ஊடக நிறுவனத்திற்கும் துரிதமாக பெறுபேறுகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

xiv. அதேபோன்று தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவால் தேர்தல்கள் செயலகத்தில் நிறுவப்பட்டிருந்த பிரதான பெறுபேறுகளைத் தயாரிக்கும் நிலையத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற பெறுபேறுகள் தகவல் தொழில்நுட்ப முறைகளினூ டாக தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங் களில் ஒலி/ஒளிபரப்புச் செய்தல், செய்தித்தாள் களில் வெளியிடல் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடுவதற்காக அந்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்குரிய வேலைத்திட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2020.07.04 ஆம் திகதி தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளரினால் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணைக்கமைய, தேர்தல்கள் செயலகத்தில் தயாரிக்கப்படும் மற்றும் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுபேறுகள் தொடர்பான கணினித் தரவுகள் மற்றும் ஸ்கேன் செய்யப்பட்ட பெறுபேறு ஆவணங்களை பொறுத்தமானவாறு ஒளிபரப்புவதற்காக இணையவழியூடாக ஊடக நிறுவனங்களுக்கு வழங்கவும், அதற்காக ரூபவாஹினி அலைவரிசை ஒன்றிற்காக ரூபா 100,000.00 உம்,

மற்றும் அந்த அலைவரிசையின் மேலதிக ஒரு அலைவரிசைக்காக ரூபா 50,000.00 வீதமும், வானொலி அலைவரிசை ஒன்றிற்காக 70,000.00 வீதமும் அந்த ஒலிபரப்பு அலைவரிசையின் மேலதிக அலைவரிசைக்காக ரூபா 35,000.00 வீதமும் மற்றும் இணையத்தில் காட்சிப்படுத்துவ தற்காக மற்றும் சமூக ஊடக நிறுவனங்களுக்கு ரூபா 50,000.00 உம், அவற்றின் மேலதிக ஒரு நிறுவனத்திற்காக ரூபா. 25,000.00 வீதம் அறவிடு வதற்காக முன்மொழியப்பட்டிருந்ததோடு, அதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. இந்த பெறுபேறுகளுடன் தொடர் புடைய கணினி தரவுகளை ஊடகங்களுக்கு வழங்குவதனூடாக எதிர்பார்க்கப்பட்டது யாதெனில், ஒவ்வொரு ஊடகத்தினாலும் பெறுபேறுகளை ஒளி/ ஒலி பரப்புச் செய்வதற்காக அவர்கள் தயாரித் திருந்த ஒளி/ஒலி பரப்பு மாதிரிக்கு விரைவாகத் தகவல்களை கிடைக்கப்பெறச் செய்யும் எதிர் பார்ப்பிலாகும். தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் அனைத்து இலத்திர னியல் மற்றும் சமூக ஊடகங்களுக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டிருந்ததோடு, இந்த வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக 28 நிறுவனங்கள் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்திருந்தன. அவ்வாறு பதிவு செய்திருந்த நிறுவனங்களுக்கு மிகவும் பாதுகாப்பானவாறு கணினிப் பிரயோகங்களினூடாக பெறுபேறுகள் வழங்கப்பட்டது இதற்காக தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA), இலங்கை கணினி அவசர தயார்நிலை அணி, (SLCERT), மற்றும் இலங்கை மென்பொருட்கள் மன்றம் (LSF) ஆகிய நிறுவனங்களின் தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக் கொண்டதுடன் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கணினி விஞ்ஞானக் கல்லூரி (UCSC) மற்றும் பசுமை (ஹரித்த) பல்கலைக்கழகத்தின் (NSBM) நிபுணத்துவ ஆலோசனையும் அதற்கு கிடைக்கப்பெற்றிருந்தது. தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அனுமதியின்றி, அனைத்து இலத்திரனியல் ஊடகங்கள், சமூக ஊடக வலை யமைப்புக்களில் பெறுபேறுகள் ஒளிபரப்புச் செய்தல் தடை செய்யப்பட்டது என்ற ஊடக அறிக்கை யொன்றும் (இல. 79) வெளியிடப்பட்டிருந்தது.

## 41. தேர்தல் முடிவுகள்

i. இந்தப் பாராளுமன்றத் தேர்தலின் போது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் கீழும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உரித்துப் பெற்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை, செல்லுபடியான வாக்குகளின் சதவீதம் மற்றும் உரித்தான பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் உரித்துப்பெறாத ஏனைய அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்கு களின் எண்ணிக்கையும் அவற்றின் சதவீதம் தொடர்பான தகவல்கள் ஒவ்வோர் அரசியற் கட்சிக்கும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந் தும் உரித்துடைய உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் **22 ஆம் இலக்க புள்ளி விபரக் குறிப்பில்** காட்டப் பட்டுள்ளது. அதே போன்று 2020.08.05 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின் போது ஒவ்வோர் அரசியல் கட்சிகளினாலும் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையும் அவற்றின் சதவீதப் பெறுமதிகளும் அரசிய லமைப்பின் 96 (4) ஆம் மற்றும் 98 (8) ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை மற்றும் 99 (அ) உறுப்புரையின் கீழ் தயாரிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் (தேசிய பட்டியல்) எண்ணிக்கை **23 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப் பட்டுள்ளது.

ii. ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவிற்கு உரித்தான உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை வெளியிடப்பட்ட பின்னர் அந்தந்த அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களில் போட்டியிட்ட வேட்பாளர்களிலிருந்து எந்த வேட்பாளர்கள் உறுப்பினர் பதவிகளுக்காக தகைமை பெறுகின்றார்கள் என்பது ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்டுள்ள விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையைக் கூட்டி தீர்மானித்தல் வேண்டும். அனைத்து தேர்தல் மாவட்டங் களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் மற்றும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கிடையில் அந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை பகிரப்படுகின்ற முறை தொடர்பாக முழுமையான ஏற்பாடுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 98 ஆம் உறுப்புயையில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாக்காளர்களும் தாம் விரும்புகின்ற கட்சிக்கு வாக்களிப்பதற்கும், அக்கட்சியின் மூன்று வேட்பாளர்களுக்கு மேற்படாத எண்ணிக்கையானவர் களுக்கு தமது விருப்பை தெரிவிப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வாக்கெடுப்புப் பிரிவு ரீதியாகவும் மற்றும் கட்சிகள்/ குழுக்கள் ரீதியாகவும் விருப்பு வாக்கு பெறுபேறுகள் பெருமளவு எண்ணிக்கையான ஆவணங்கள் பெறுபேறுகள் அட்டவணைப்படுத்தல் நிலையங் களுக்கு கிடைக்கின்றமையால் அந்த ஆவணங்கள் கலந்துவிடாதவாறு ஆவணப்படுத்துவதற்கான பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர் களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. விருப்பெண்ணும் போது பயன்படுத்தப்படுகின்ற மாதிரிப் படிவங்களை சரியான முறையில் விளங்கி மற்றும் அவதானமாக பிழைகளின்றி பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் விருப்பு பெறுபேறு அட்டவணைப் படுத்தும் போது ஏற்படக்கூடிய பிழைகளை தவிர்த்துக் கொள்ளமுடியும். விருப்பு வாக்குகள் தொடர்பான தேர்தல்கள் மாவட்ட பெறுபேறுகளை தயாரிப்பதற்கான படிவங்களை பரீட்சித்தல் மற்றும் அத்தாட்சிப்படுத்துவதற்காக இரண்டு உதவித்

தெரிவத்தாட்சி அலுவலர்களை நியமனம் செய்யு மாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்தும் கிடைக்கப்பெறுகின்ற இறுதி விருப்பு பெறுபேறுகள் ஆவணங்கள் மூலம் தேர்தல் மாவட்டத்திற்காக தீர்மானிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. ஒவ்வொரு கட்சிக்கும்/ குழுவுக்கும் உரித்தான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை ஒவ்வொரு கட்சி/ குழு சார்பில் போட்டியிட்டு அதிக எண்ணிக்கையான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட வேட்பாளர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களால் பிரகடனப்படுத்தப்படுதல் வேண்டும்.

iii. இந்தப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் களின் பெயர்கள் மற்றும் அவர்கள் பெயர் குறித்தநியமனம் செய்த கட்சி அல்லது குழு தொடர்பாக பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அதன் முதலாவது அட்டவணையின் "ஔ" படிவத்திற்கு அமைவாக அறிக்கையொன்றை தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதோடு தேர்தல் ஆணைக்குழுவினால் அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும். அதற்கமைய 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி நடாத்தப் பட்ட பாராளுமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களின் விபரங்கள் 2187/26 ஆம் இலக்க 2020.08.08 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது. அதேபோன்று, மேற்படி வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொரு கட்சி மற்றும் வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையின் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் **24 ஆம் இலக்க புள்ளிவிபரக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

iv. இலங்கைப் பாராளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 96(4) மற்றும் 98 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 196 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகப் பிரகடனம் செய்யப்பட்ட பின்னர், எஞ்சிய 29 உறுப்பினர் பதவிகள் அந்தத் தேர்தலில் போட்டியிட்ட ஒவ்வோர் அரசியற் கட்சிக்கும் சுயேச்சைக் குழுவுக்கும் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கும் அத்தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை கொண்டுள்ள விகிதாசாரத்திற்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவினால், ஒவ்வொரு கட்சி அல்லது குழுக்களுக்கிடையில் உடனடியாகப் பகிரப்படல் வேண்டுமென அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான அரசிய லமைப்பின் 99 அ ஆம் உறுப்புரையில் காட்டப் பட்டுள்ளவாறு உரிய உரித்துக்களைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு கட்சியினால் தேர்ந்தெடுத்து அனுப்பிவைக்கப்பட்ட உறுப்பினர்களின் பற்றிய விபரங்கள் 2188/2 ஆம் இலக்க 2020.08.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியிலும், 2188/46 ஆம் இலக்க 2020.08.14 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியிலும், 2206/22 ஆம் இலக்க 2020.12.18 ஆம் திகதிய மற்றும் 2232/34 ஆம் இலக்க 2021.06.18 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிகளிலும் வெளியிடப்பட்டதோடு, இந்த வர்த்தமானி அறிவித்தல்கள் **முறையே 27, 28, 29 மற்றும் 30 ஆம் இலக்க அட்டவணைகளில்** காட்டப்பட்டுள்ளன.

## 42. தேர்தலுக்காகச் செய்யப்பட்ட செலவுகள்.

i. வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்படாத வாறு இந்தத் தேர்தலை நடாத்தி முடிப்பதற்கு 05 மாதங்கள் வரையான காலமொன்று செலவாகியது. அதன் காரணமாக பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலம் கழிந்தமை, போட்டியிட்ட கட்சிகள்,சுயாதீனக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, பாதகமானதாக தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்காக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டியேற்பட்டமை போன்ற விடயங்கள் தேர்தல் ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியமை அனைவரும் அறிந்த விடயமாகும். அவ்வாறான பின்னணியில் தேர்தலை நடாத்துவ தற்காக 5727 மில்லியன் ரூபாவைச் செலவிட வேண்டி அரசுக்கு ஏற்பட்டது. கடந்த 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் செலவினத்துடன் ஒப்பிடுகையில் இது 2752 மில்லியன் ரூபா அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. அதன்படி தேர்தல் செலவினங்கள் அதிகரிப்பு சதவீதம் 48.05% ஆகும். 2019 தேருநர் இடாப்புக்கு அமைய இத்தேர்தலுக்காகப் பதிவு செய்யப் பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 16,263,885 ஆகுமென்பதோடு, ஒரு பதிவு செய்யப்பட்ட வாக்காளர் சார்பாக இத்தேர்தலில் 352.18 ரூபா தொகையொன்றைச் செலவிட வேண்டி யேற்பட்டது.

ii. நேரடியாக தேர்தல் மற்றும் தொடர்புடைய பணிகள் மற்றும் சேவைகள் வழங்கும் அரச நிறுவனங் களுக்கு அப்பணிகளை நிறைவேற்றுவதற்கான செலவுகளைச் செய்வதற்காகத் தேர்தல் ஆணைக் குழுவினால் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. அந்த நிறுவனங்களினால் வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளின் அடிப்படையில் செய்யப்பட்ட செலவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளது.

| | நிறுவனம் | செலவிடப் பட்ட தொகை (மி.ரூபா) | சதவீதம் |
|---|---|---|---|
| a. | பொலிஸ் திணைக்களம்/ விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு | 963 | 16.8% |
| b. | அஞ்சல் திணைக்களம் | 475 | 8.2% |
| c. | ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | 418 | 7.2% |
| d. | அரசாங்க அச்சகத் திணைக் களம் | 413 | 7.2% |
| e. | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் | 32 | 0.55% |
| f. | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனம் | 14 | 0.24% |
| g. | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் | 0.685 | 0.01% |
| h. | அரசாங்க தகவல் திணைக்களம் | 0.362 | 0.006% |
| | **மொத்தம்** | **2316** | **41%** |

அதற்கமைய சேவைகள் வழங்கப்பட்ட அனைத்து நிறுவனங்களினாலும் மொத்தம் 2316 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதோடு, இது தேர்தலின் மொத்த செலவினத்தில் 41% ஆகும். அதேபோன்று மொத்த ஒதுக்கீடுகளில் 3411 மில்லியன் ரூபா தேர்தல் ஆணைக்குழு நேரடியாகச் செலவு செய்யப்பட்டுள்ளதோடு, அது மொத்தச் செலவினத்தில் 59% ஆகும். தேர்தல் ஆணைக்குழு மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினால் செலவிடப்பட்டுள்ள இந்தச் செலவித்தினுள், பணியாட்குழுவினர் சம்பளம், மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு, வாகன வாடகை, எழுது பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், எரிபொருள், நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் உள்ளடங்கலாக அச்சிடல் செலவுகள், நலனோம்பல் செலவுகள், முத்திரை மற்றும். அஞ்சல் கட்டணம், தேர்தல் சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்தல், தற்காலிகமாக மின்சாரம் வழங்கல், வாக்கெடுப்பு நிலைய வசதிகள், விளம்பரச் செலவுகள், தங்குமிடம் மற்றும் வாடகை,நீர், தொலைபேசி வசதிகள் உள்ளிட்ட ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன. மேலும் இத்தேர்தலின் போது கொவிட் 19 தொற்று நோய்க் கட்டுப்பாட்டுக்கான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய வற்றுக்கான சுகாதார பணியாட்குழு அங்கத்த வர்களை பலர் பணியில் ஈடுபடுத்தப்பட்டமையும் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றுக்காகவும் தேர்தல் ஆணைக்குழுவினால் அதிக தொகைப்பணம் செலவிடப்பட்டுள்ளது.

iii. மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடு, தேர்தலின் பூர்வாங்கப் பணிகள் மற்றும் சேவைகளை ஆற்றுகின்ற பல்வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. கடந்த சில தேர்தல்களில் இடம்பெற்றது போலவே இந்தத் தேர்தலிலும் அதிகளவான செலவொன்றை பொலீஸ் திணைக்களத்திற்காகவே செய்யப்பட்டது. தேர்தலுக்கான பாதுகாப்பை வழங்குதல், சட்டங்களை செயல் வலுவாக்கம் செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்காக பொலீஸ் திணைக்களத்தினால் 843 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதில் 380 மில்லியன் ரூபா அதாவது 45% மேலதிக நேரம், பிரயாணச் செலவுகளுக்காகவும் மற்றும் வாகன வாடகைக்காக 136 மில்லியன் ரூபாவும், எரி பொருட்களுக்காக 108 மில்லியன் ரூபாவும், காகிதாதிகள் மற்றும் அலுவலகப் பொருட்களுக்காக 69.0 மில்லியன் ரூபாவும் நலனோம்பலுக்காக 41.0 மி. ரூபாவும் சட்டவிரோத பிரச்சாரப் பலகைகளை அகற்றுவ தற்காகவும் மற்றும் முறைப்பாட்டு முகாமைத்துவத் திற்காகவும் 51.0 மி. ரூபாவும் நீர், தொலை பேசிக்காக 51.0 மி. ரூபாவும் செலவு செய்யப்பட்டுள்ளன. பொலீஸ் திணைக்களத்திற்கு மேலதிகமாக அதனையொத்த கடமைகளை நிறைவேற்றுகின்ற பொலீஸ் விசேட அதிரடிப் படைக்காக 48 மில்லியன் ரூபாவும், உதவிச் சேவைகளை வழங்கியமைக்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்காக 63 மில்லியன் ரூபாவும், பாதுகாப்பு அமைச்சிற்காக 09 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டன. அதற்கமைய இந்தத் தேர்தலின் போது பாதுகாப்பு அலுவல்களுக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 963 மில்லியன் ரூபாவாகும். இது ஒட்டுமொத்தச் செலவில் 16.8% சதவீதப் பெறுமானமாகும்.

iv. அஞ்சல் வாக்கு, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம், தேர்தல் ஆவணங்களை விநியோகித்தல், போட்டியிடுகின்ற கட்சிகள்/ குழுக்களினால் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 125 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அரசியல் கட்சிகளின் செயலா ளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்களால் தேர்தல் பொருட்களை இலவசமாக அனுப்பி வைத்தல் போன்ற விசேடமான பணிகளுக்காக, அஞ்சல் திணைக்களத்தினால் செலவு செய்யப் பட்டுள்ள தொகை 475 மில்லியன் ரூபாவாகும் என்பதோடு. இதில் மேலதிக வேலை நேரம் மற்றும் பிரயாணச் செலவுக்களுக்காக 445 மில்லியன் ரூபாவும், நீர், தொலைபேசி மற்றும் இதர செலவுகளுக்காக 20.0 மி. ரூபாவும் காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்களிற்காக 5 மில்லியன் ரூபாவும், எரிபொருட்களுக்காக 3 மில்லியன் ரூபாவும் உள்ளடங்கும். இது ஒட்டுமொத்த தேர்தல் செலவினத்தில் 8.2% ஆகும்.

v. வாக்குச் சீட்டுக்கள் உள்ளிட்ட நியதிச்சட்டரீதியான ஆவணங்கள் அனைத்தும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டன. இது பொறுப்புட னும் மற்றும் பாதுகாப்புடனும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பணியாகும். வாக்குச்சீட்டுகள்

மற்றும் சில நியதிச்சட்ட ஆவணங்களை அச்சிடும் பணிகளை கட்டாயமாக அரசாங்க அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்கின்ற காரணத்தினால் அதற்காக அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு செய்யப் பட்ட கொடுப்பனவு 413 மில்லியன் ரூபாவாகும். இது மொத்தத் தேர்தல் செலவினத்தில் 7.2% ஆகும்.

vi. வாக்கெடுப்பு நிலைய ஆளடையாளத்தைப் பரிசீலனை செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற அடையாள அட்டைகளுள் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டையின் தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதத்தை அச்சிடுதல் மற்றும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள நபர்களுக்கு, அவற்றைத் துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. அந்தப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக அத் திணைக்களத்திற்கு செலவாகியுள்ள தொகை 0.685 மில்லியன் ரூபா ஆகும். மேலும், தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத் தகவல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வசதிகளுக்காகவும் 0.362 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

vii. கட்டுப்படுத்தப்பட்ட கொவிட் 19 நிலைமையின் கீழ் தேர்தலை நடாத்தும் போது சுகாதாரப் பராமரிப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்ற சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையைப் பின்பற்றும் போது தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கொள் வனவு செய்ய வேண்டியிருந்தது. அதற்கமைய தொற்றுநீக்கித் திரவங்கள் மற்றும் உபகரணங்கள், முகக் கவசம் மற்றும் கைகளுக்கான பாதுகாப்பு கையுறைகள், பாதுகாப்புச் சீருடைகள் (PPE Kit), உடல் வெப்பநிலை அளவீட்டுக் கருவிகள், துடைத்தழிக்க முடியாத மை பூசுவதற்கான குச்சிகள், மேசைகளுக்கான மறைப்புக்கள், ரிசு கடதாசிகள், பொலிதீன் மறைப்புடன் கூடிய கார்ட் போட் சிற்றறைகள் போன்ற பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததோடு, அதற்காக 213,771,502.15 ரூபா செலவு செய்யப்பட்டிருந்தது.

viii. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களுக்கு இலவச ஒளிபரப்பு (வானலைக் கால) வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும். இத்தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள்/ வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை காரணமாக பெரும் எண்ணிக்கையான வானலைக் காலத்தை அதற்காக குறித்தொதுக்குவதற்கு அந்நிறுவனங்களிற்கு நேரிட்டது. இந்த ஒளிபரப்புக் காலத்தை குறித்தொதுக்கும் போது, அந்த நிறுவனங்களுக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக் கின்ற நிகழ்ச்சிகள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் பலவற்றை குறைக்க வேண்டியிருந்ததுடன் அதனூ டாக அந்த நிறுவனங்கள் ரீதியான நிதி நட்டங்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. ஏனெனில், தேர்தல் காலப்பகுதியினுள் ஊடக நிறுவனங்களில் நிலவுகின்ற பலத்த போட்டித் தன்மையின் கீழ் தேர்தல் பிரச்சார நடவடிக்கை களுக்காக உயர்ந்த விலைகளின் கீழ் விளம்பரங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை பிரச்சாரம் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதிலும், அரச ஊடக நிறுவனங்கள் இரண்டிற்கும் மாத்திரம் அத்தகைய வருமான வழிகளை இழந்து சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இலவசமாக ஒளிபரப்பு காலத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டி ஏற்பட்டமை மீது, தோற்றம் பெற்றிருந்த பிரச்சினைக்குரியதான இந்நிலைமைக்கு தீர்வாக இதற்காகச் செலவிடப்பட்ட தொகையை மீளளிப்புச் செய்யுமாறு குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் தவிசாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர். அந்தக் கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து பார்த்த தேர்தல் ஆணைக்குழு இது நியாயமானதொரு கோரிக்கை என்பதனால் அந்த நிறுவனங்களுக்கு ஒளிபரப்புக் காலங்களுக்காக பணம் செலுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொதுத்திறை சேரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. தற்போதுள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு பொதுத் திறைசேரியினால் தேர்தல் ஆணைக்குழு விற்கான தேர்தலை நடாத்துவதற்காக குறித் தொதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து அந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, இந்தத் தேர்தல் நடாத்த வேண்டியேற்பட்ட காலப்பகுதியின் போது நாட்டிற்குள் பரவிய நோய்த்தொற்று நிலைமை காரணமாக அந்த நிறுவனங்களுக்கு கிடைக்கவிருந்த வருமான வழிகள் தடைப்பட்டு நிதிக் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளமையையும் கருத்திற் கொண்டு இத்தேர்தலுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் அடிப்படையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 32 மில்லியன் ரூபாவும், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்திற்கு 14 மில்லியன் ரூபாவும் செலுத்தப் பட்டது.

**இந்த அனைத்து விடயங்களுக்கு அமைய இந்தத் தேர்தலின் போது ஏற்பட்ட மொத்த செலவுகளை பின்வருமாறு வகைப்படுத்திக் காட்ட முடியும்**

| | செலவின் தன்மை | செலவிடப் பட்ட தொகை | மொத்தச் செலவின் சதவீதம் |
|---|---|---|---|
| அ. | பணியாட்குழுவினர் சம்பளம், மேலதிக வேலை நேரம் மற்றும் படிகள் | 3,205,284,448.52 | 55.96% |
| ஆ. | வாகனங்கள் வாடகை | 263,464,532.40 | 4.59% |
| இ. | காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்கள் | 225,751,656.27 | 3.94% |
| ஈ. | சுகாதாரப் பாதுகாப்பு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 213,771,502.15 | 3.73% |
| உ. | எரிபொருட்கள் | 236,011,252.60 | 4.12% |
| ஊ. | நிருமாணித்தல் மற்றும் பழுதுபார்த்தல்கள் | 104,814,810.47 | 1.82% |
| எ. | நலனோம்பல் செலவுகள் | 302,869,916.80 | 5.28% |
| ஏ. | அச்சிடல் செலவுகள் | 463,369,408.87 | 8.08% |
| ஐ. | சட்டவிரோதமான காட்சிப்படுத்தல் பலகைகளை அகற்றுதல் மற்றும் தேர்தல் முறைப்பாடு முகாமைத்துவம் | 55,967,464.32 | 0.97% |
| ஒ. | முத்திரைகள் மற்றும் அஞ்சல் கட்டணங்கள் | 1,456,175.00 | 0.02% |
| ஓ. | தற்காலிக மின்சாரம் வழங்கல் மற்றும் கட்டணங்கள் | 187,988,304.07 | 3.28% |
| ஔ. | வாக்கொடுப்பு நிலைய வசதிகளை வழங்கல்கள் | 212,147,547.26 | 3.70% |
| க. | பிரச்சாரச் செலவுகள் (இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனம்/இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு, வானலைக் காலங்களுக்காகச் செலுத்தப்பட்ட பணம் உள்ளடங்கலாக) | 52,974,076.00 | 0.92% |
| ங. | தங்குமிடம், கட்டிட வாடகைகள் | 14,755,284.90 | 0.25% |
| ச. | நீர்,தொலைபேசி உட்பட ஏனைய செலவுகள் | 186,956,579.56 | 3.26% |
| **மொத்தம்** | | 5,727,955,792.31 | |

ix. மேற்படி புள்ளிவிபரத் தரவுகளின்படி, இப்பாராளு மன்றத் தேர்தலில் போது செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 55.96% சதவீதமான அதியுயர் தொகையை பணியாட்குழுவினர்களின் கொடுப்பனவுகளுக்காக செலவு செய்ய வேண்டி ஏற்பட்டது. அடுத்த உயர்ந்த சதவீதமான 8.08% அச்சிடுதல் செலவிற்காகவும், 5.28% நலனோம்பல் செலவுகளுக்காகவும், வாகன வாடகைகளுக்காக 4.59% உம், எரிபொருட்களுக்காக 4.12% உம், செலவிடப்பட்டுள்ளது. காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருட்களுக்காக 3.94% உம், கொவிட் கட்டுப்பாட்டுக்கான சுகாதார வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட சுகாதாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக 3.73% உம், வாக்கெடுப்பு நிலைய வசதிகளை வழங்குவதற்காக 3.70% உம், செலவு செய்யப்பட்டுள்ளதோடு, தற்காலிக மின்சாரம் வழங்கல் மற்றும் மின்சாரக் கட்டணங்களுக்காக 3.28% உம், நீர், தொலைபேசி மற்றும் ஏனைய செலவுகளுக்காக 3.25% உம் செலவிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கலாக பாராளுமன்றத் தேர்தலுக்குரிய முழுமையான செலவின அறிக்கை **25 ஆம் இலக்க புள்ளி விபரக் குறிப்பில்** காட்டப் பட்டுள்ளது.

## 43. அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற வருமானம்.

i. இந்த நூலின் 04 ஆம் இலக்க பெயர்குறித்த நியமனம் மற்றும் வைப்புப் பணங்கள் என்ற தலைப்பின் கீழ் ii பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு போட்டியிடுவதற்காக சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு வேட்பாளர் சார்பாக வும் தலா 2000.00 ரூபா வீதம் வைப்புப் பணம் வைப்பிலிடப்படல் வேண்டுமென்பதுடன், இந்தத் தேர்தலுக்காக 313 சுயேச்சைக் குழுக்களின் கீழ் போட்டியிட்ட மொத்த சுயேச்சை வேட்பாளர்களின் எண்ணிக்கை 3800 ஆகும். பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 17 (3) ஆம் பிரிவிற்கமைய ஏதேனும் சுயேச்சைக் குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை ஏதேனும் தேர்தல் மாவட்டத்தின் தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குகளின் மொத்த எண்ணிக்கையின் எட்டிலொரு பங்கை விஞ்சாததாயுள்ளவிடத்து, அத்தகைய குழுவின் வேட்பாளர்கள் தொடர்பாகச் செலுத்தப்பட்ட வைப்புப் பணம் இழக்கப்பட்டதாக (அரசுடமை யாக்கப்பட்டதாக) வெளிப்படுத்தப்படல் வேண்டு மெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இத்தேர்தலில் போட்டியிட்ட அனைத்து சுயேச்சைக் குழுக்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவில் காட்டப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையை பெற்றுக்கொள்ளவில்லை என்பதால் அவர்களால் வைப்புச் செய்யப்பட்ட 7,600,000.00 ரூபா

வைப்புப்பணம் அரசுடமையாக்கப்பட்டதோடு, தெரிவத் தாட்சி அலுவலர்களினால் அத்தொகைகள் திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

ii. இந்த நூலின் 11 இலக்கத்தின் i ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போட்டியிட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு இந்த அறிக்கையின் 40 ஆம் இலக்கத்தில் XIV இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நேருநர் இடாப்புக்கள் உள்ளடக்கப்பட்ட இறு வட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அவற்றை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற வருமானம் 2,027,700.00 ஆகும்.

iii. பாராளுமன்றத் தேர்தலின் பெறுபேறுகளை கணினித் தொழில்நுட்ப வழிமுறைகள் ஊடாக ஊடகங்களுக்கு வழங்குவதற்காக அறிமுகப்படுத் தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 28 ஊடக நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. தேர்தல் ஆணைக்குழுவினால் குறித்த வசதிகளை வழங்குவதற்காக 4,425,000.00 ரூபா அறவிடப் பட்டிருந்தது

iv. அதன் பிரகாரம் மேலே i, ii மற்றும் iii ஆம் இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் கீழ் இந்தத் தேர்தலுக்காக அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த தொகை 14,052,700 ரூபா ஆகும்.

## 44. பாராளுமன்றத் தேர்தல்கள் மற்றும் தொடர் புடைய நீதிமன்ற நடவடிக்கைகள்.

இந்த பாராளுமன்றத் தேர்தலின் போது 2020.06.20 ஆம் திகதி வாக்கெடுப்பை நடாத்துவதற்குத் திகதி குறிக்கப்பட்டமைக்கு எதிராக எட்டு (08) வழக்குகளும் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக 10 வழக்குகளும் விருப்பு வாக்குகளை மீள எண்ணுமாறு கோரி மூன்று (03) வழக்குகளும் உறுப்பினர் பதவியொன்றின் உரித்துரிமைக்காக இரண்டு (02) வழக்குகளும் என்ற அடிப்படையில் இருபத்து மூன்று (23)வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்குகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### i. 2020.06.20 ஆம் திகதி வாக்கெடுப்பை நடாத்துவ தற்குத் திகதி குறிக்கப்பட்டமைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள்.

அ. திரு. சரித்த குணரத்ன அவர்களினால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/83/2020 ஆம் இலக்க வழக்கு.

ஆ. திரு. விக்டர் ஐவன் உள்ளிட்ட 08 பேரினால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/85/2020 ஆம் இலக்க வழக்கு.

இ. Center for Policy Alternatives (Guarantee) Limited மற்றும் கலாநிதி பாக்கியசோதி சரவனமுத்து அவர்களால் தாக்கல் செய்யப் பட்ட SC/FR/86/2020 ஆம் இலக்க வழக்கு.

ஈ. திரு. பாட்டலீ சம்பிக்க ரணவக்க மற்றும் திரு. குமார வெல்கம ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/88/2020 ஆம் இலக்க வழக்கு.

உ. திரு. ரஞ்சித் மத்தும பண்டார அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/87/2020 ஆம் இலக்க வழக்கு.

ஊ. திரு. எஸ்.அப்துல் சரூர் மற்றும் திரு. எஸ்.சி.சி. இலங்கோவன் ஆகியவர்களால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/89/2020 ஆம் இலக்க வழக்கு.

எ. திரு. ஆரியவங்ச திசாநாயக்க அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/115/2020 ஆம் இலக்க வழக்கு.

ஏ. திரு. ரவூப் ஹக்கீம் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/92/2020 ஆம் இலக்க வழக்கு.

இந்த அனைத்து வழக்குகளினூடாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட உறுப் பினர்கள் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப் பட்டிருந்தனர்.

மேற்படி மனுக்களுக்கு எதிராக 15 தரப்பினர் களினால் இடைக்கால மனுக்கள் தொடுக்கப் பட்டிருந்தன.

சனாதிபதி அவர்களால் 2020.03.02 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாராளு மன்றத்தைக் கலைத்து, வாக்கெடுப்புத் தினமாக 2020.04.25 ஆம் திகதி குறித்துரைக்கப்பட்டது. அப்போதைய கொவிட் நிலைமைகளின் கீழ் தேர்தலை நடாத்துவதன் அசௌகரியம் காரணமாக 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு வினால் அத்தினத்தை பிற்போடப்பட்டு 202.06.20 ஆம் திகதி தேர்தலை நடாத்த தீர்மானிக்கப் பட்டிருந்தது. தொடர்ந்தும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமை மீது சுகாதாரப் பிரிவு மற்றும் ஏனைய அதிகாரிகளை உசாவி அதற்கமைய தேவையான ஒழுங்கமைப்பு அலுவல்களை தயார் செய்து கொண்டிருக்கும் போது தேர்தல் நடாத்தப்படுவதை பிற்போடுமாறு கோரி உயர்நீதி மன்றில் பல்வேறு தரப்பினர்களால் 08 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதோடு,இடைத்தரப்பினர்களாக

அந்த வழக்குகளில் இணைந்து கொள்வதற்காக கோரி 15 தரப்புக்கள் உயர் நீதிமன்றில் தோற்றினர்.

வாக்கெடுப்புத் தினத்தை தீர்மானிப்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினுள் ஒருமித்தகருத்து காணப்படவில்லையென்பதோடு, அதன் மூன்று அங்கத்தவர்களில் பேராசிரியர் இரத்தின ஜீவன் ஹூல் அவர்கள் அதனை பிற்போட வேண்டுமென பகிரங்கமாக பத்திரிகை மூலம் கருத்து வெளியிட்டிருந்தார். அவரால் 2020.04.16 ஆம் திகதி "Colombo Telegraph" பத்திரிகைக்கு எழுதப் பட்ட கடிதமொன்னறின் மூலமும் அது உறுதி செய்யப்பட்டது. பொதுமக்களின் வாக்குரிமையை பாதுகாத்து இலங்கை அரசியலமைப்பிற்கமைய தமது பொறுப்புக்களை ஆற்றி பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட தேர்தல் ஆணைக்குழுவின் பெரும் பாண்மை அங்கத்தவர்கள் (ஏனைய இரண்டு உறுப்பினர்கள்) இந்த வழக்குகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவை பிரதிநிதித்துவம் செய்து ஆஜராகுமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர். இருந்த போதிலும் இது தொடர்பாக தேர்தல் ஆணைக் குழுவில் ஒருமித்த கருத்து காணப்படாமை, ஒரு உறுப்பினரான (பேராசிரியர் இரத்தினஜீவன் ஹூல் அவர்கள்) வேறு கருத்தொன்றைக் கொண்டு தனிப்பட்ட சட்டத்தரணி யொருவர் ஊடாகச் செல்கின்ற விடயங்களின் மீது தேர்தல் ஆணைக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த வழக்குகளில் ஆஜராக முடியாதென சட்டமாஅதிபர் அவர்களால் எழுத்து மூலம் தேர்தல் ஆணைக் குழுவிற்கு அறிவிக்கப் பட்டிருந்தது. இதற்கமைய அந்த வழக்குகளில் தேர்தல் ஆணைக்குழு சார்பாகத் தோற்றுவதற்காக தனிப்பட்ட சட்டத்தரணிகளின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டதோடு சனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், மற்றும் சனாதிபதி சட்டத்தரணி விஸ்தாப் ஷொக்சி ஆகியோர் தேர்தல் ஆணைக்குழு சார்பாக கௌரவ நீதிமன்றில் தோன்றி விடயங்களை முன்வைத்தனர்.

இந்த வழக்குகள் அனைத்தும் 2021.06.02 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டன.

**ii. பெயர் குறித்த நியமனங்கள் தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்குகள்.**

எங்கள் மக்கள் சக்தி கட்சியினால் குருநாகல் மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர்குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மேலும் 18 பேர் தாக்கல் செய்த SC/Writ/03/2020 ஆம் இலக்க வழக்கின் மூலம் குருநாகல் தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், உட்பட உறுப்பினர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உட்பட 19 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி வழக்கு 2020.06.25 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

எங்கள் மக்கள் சக்தி கட்சியினால் கொழும்பு தேர்தல் மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மேலும் 22 பேர் தாக்கல் செய்த SC/Writ/04/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், உட்பட உறுப்பினர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உட்பட 25 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி வழக்கு 2020.06.25 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

எங்கள் மக்கள் சக்தி கட்சியினால் மொனராகலை தேர்தல் மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மேலும் 09 பேர் தாக்கல் செய்த SC/Writ/05/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் மொனராகலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளர், உட்பட உறுப்பினர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உட்பட 17 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப் பட்டிருந்தது. மேற்படி வழக்கு 2020.06.25 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப் பட்டது.

எங்கள் மக்கள் சக்தி கட்சியினால் களுத்துறை தேர்தல் மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர்குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப் பட்டமைக்கு எதிராக வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மேலும் 09 பேர் தாக்கல் செய்த SC/Writ/06/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் களுத்துறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், உட்பட உறுப்பினர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உட்பட 18 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப் பட்டிருந்தது. மேற்படி வழக்கு 2020.06.25 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப் பட்டது.

தேசிய காங்கிரஸ் கட்சியினால் திருகோணமலை தேர்தல் மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர்குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப் பட்டமைக்கு எதிராக ஏ.எல்.எம். அதாவுல்லா அவர்களால் தாக்கல் செய்த SC/Writ/07/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் திருகோணமலை

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், உறுப்பினர்கள் உட்பட 31 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். மேற்படி வழக்கு தொடர்பில் இதுவரை கட்டளையொன்று வழங்கப்படவில்லை யென்பதோடு வழக்கை விசாரணைக்காக எடுக்க வேண்டிய காலப்பகுதி கடந்துள்ளமையினால் இந்த வழக்கை விசாரணைக்கு எடுக்க முடியாதென கௌரவ நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக சட்டமாஅதிபர் திணைக்களத்தினால் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை தேர்தல் மாவட்டத்திற்காக சுயேச்சை குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக திரு. நிமலன் விஸ்வநாதன் அவர்களால் தாக்கல் செய்த SC/Writ/02/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் திருகோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், உறுப்பினர்கள் உட்பட 32 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். மேற்படி வழக்கு 2020.06.25 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

எங்கள் மக்கள் சக்தி கட்சியினால் களுத்துறை தேர்தல் மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மேலும் 14 பேர் தாக்கல் செய்த CA/Writ/89/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் களுத்துறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர், உட்பட 14 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். மேற்படி வழக்கு 2020.06.22 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

எங்கள் மக்கள் சக்தி கட்சியினால் கொழும்பு மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மேலும் 22 பேர் தாக்கல் செய்த CA/Writ/87/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர், உட்பட 19 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். மேற்படி வழக்கு 2020.06.22 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

எங்கள் மக்கள் சக்தி கட்சியினால் மொனராகலை மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மேலும் 09 பேர் தாக்கல் செய்த CA/Writ/88/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் மொனராகலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர்,உட்பட 14 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். மேற்படி வழக்கு 2020.06.22 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

எங்கள் மக்கள் சக்தி கட்சியினால் குருநாகல் மாவட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மேலும் 18 பேர் தாக்கல் செய்த CA/Writ/86/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் குருநாகல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தனர். மேற்படி வழக்கு 2020.06.25 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக் கப்பட்டது.

**iii. விருப்பு வாக்குகளை மீள வாக்கெண்ணல் செய்யுமாறு கோரி தெடுக்கப்பட்ட வழக்குகள்.**

(அ) வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்புகளை மீள வாக்கெண்ணல் செய்யுமாறு கோரி திரு. அலவத்தே கங்கானம்லாகே ஜனக நந்த குமார அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட SC/FR/266/2020 ஆம் இலக்க மனுவின்மூலம் தேர்தல் ஆணைக்குழு, அதன் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், செயலாளர், தேர்தல்கள் ஆணை யாளர் நாயகம், மேலதிக தேர்தல்கள் ஆணை யாளர் (தேசிய தேர்தல்கள்) உட்பட 21 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்தல் 2020.06.25 ஆம் திகதி கௌரவ நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

(ஆ) பாராளுமன்றத் தேர்தலில் இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்தின் கொலொன்ன வாக்கெடுப்புப் பிரிவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை மீண்டும் வாக்கெண்ணு மாறு கோரி திரு. சனி ரோஹன கொடிதுவக்கு அவர்கள் தாக்கல் செய்த CA/Writ/237/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள், இரத்தினபுரி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், மண்டப இலக்கம் 105 இன் தலைமை வாக்கெண்ணல் அலுவலர் உள்ளிட்ட 10 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிக்கப்பட்டிருந்ததோடு அவ்வழக்கு இதுவரை விசாரிக்கப்பட்டு வருகின்றது.

(இ) பாராளுமன்றத் தேர்தலில் மாத்தளை தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை மீண்டும் வாக்கெண்ணுமாறு கோரி திரு. அலுவிகார ரஞ்சித் ஜீனதிஸ்ஸ அவர்கள் தாக்கல் செய்த CA/Writ/317/2020 ஆம் இலக்க மனுவின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், கண்டி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் உள்ளிட்ட 11 பேர் பிரதிவாதிகளாகப் பெயர் குறிக்கப்பட்டிருந்ததோடு அவ்வழக்கு இதுவரை விசாரிக்கப்பட்டு வருகின்றது.

**iv. உறுப்பினர் பதவியொன்றின் உரித்துரிமை தொடர் பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.**

(அ) பாராளுமன்றத் தேர்தலின் எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி தொடர்பாக திரு. வெலிசரகே சமன் பிரசன்ன பெரேரா உள்ளிட்ட மேலும் இரண்டு பேரினால் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட 07 பேர்கள் பிரதிவாதிகளாகப் பெயர்குறிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட SC/Writ/09/2020 மற்றும் SC/FR/274/2020 இலக்கம் கொண்ட மனுக்கள் தொடர்பான நீதிமன்ற கட்டளையொன்று இதுவரை தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப் பெறவில்லை. இருந்த போதிலும் இந்த மனுக்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட முரண்பாடு அக் கட்சி உறுப்பினர்களின் இணக்கப்பாட்டின் மீது தற்போது தீர்க்கப்பட்டுள்ளது.

**45. கண்காணிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்.**

இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்குரிய பணிகளை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தும் போது தேர்தல் ஆணைக்குழு போன்று பங்குதாரக் குழுக்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைக் கவனத்திற் கொண்டு பின்வரும் கண்காணிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

**I. பெயர்குறித்த நியமன நடைமுறைகள் :**

அ. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கமைய பெயர்குறித்த நியமன கால எல்லை ஒரு வாரமாகும். அதேபோன்று பெயர்குறித்த நியமனங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன வாரத்தின் இறுதித் தினம் நண்பகல் 12.00 மணி வரை சுயேச்சைக் குழுக்களுக்கான வைப்புப் பணம் கையேற்பதற்கும் மற்றும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை கையேற் பதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதோடு, பின்னர் இச்சட்டத்தின் 19, 20, 21 மற்றும் 22 ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு தெரிவத்தாட்சி அலுவலர்கள் செயற்படுதல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்ற பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை பரிசீலனை செய்து அவற்றை அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல், போட்டியொன்று இல்லாதவிடத்து தேர்ந்தெடுக் கப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பாக அறிவித்தல், போட்டியுள்ள தேர்தலொன்றெனில் சுயேச்சைக் குழுக்களுக்கு சின்னங்களைக் குறித்தொதுக்குதல் மற்றும் இனங்காணல் இலக்கங்களைக் குறித்தொதுக்குதல் என்பன மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாக தெரிவத் தாட்சி அலுவலர்களால் பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்பதை நிறைவு செய்த நாளிலேயே தேர்தல் ஆணைக்குழு விற்கு அறிக்கையிடல் வேண்டும்.

ஆ. சட்டத்தில் குறித்துரைக்கப்படாத போதிலும், சம்பிரதாயத்தின் பிரகாரம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்கப்படுவ தில்லை. ஆதலால் இதற்காக ஒதுக்கப்படு கின்ற தினங்களின் எண்ணிக்கை பெரும்பாலும் ஐந்தரை நாட்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டிருக்கும். அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுக்கான முன் ஆயத்தமாவதற்காக மற்றும் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் பூர்த்தி செய்வதைக் கவனத்தில் கொள்ளும் போது இக்காலப்பகுதி போதுமானதல்ல என்பதால், பெயர் குறித்த நியமனக் காலப் பகுதிக்குட்பட்ட வாரஇறுதி விடுமுறை நாட்களிலும் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது.

இ. அதேபோன்று பெயர் குறித்த நியமனக் காலப்பகுதியினுள் கட்டாயமாக பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் ஆணை யாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்தது. தேர்தலுக்காக ஒதுக்கப்படும் காலப்பகுதியோடு ஒப்பிடும் போது பெயர் குறித்த நியமனங்களுக்காக ஒருவாரகாலத்தை ஒதுக்குவதற்கு நேரிட்டமை பெயர் குறித்த நியமனப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெயர்கள் சிங்கள மொழி அகர வரிசைக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி தொடரிலக்கங்களை வழங்குதல், பெயர் குறித்த நியமனப்பத்திரத் திற்குப் பின்னரான செயற்பாடுகளுக்காக அதிக காலத்தை எடுக்க வேண்டி ஏற்பட்டமை ஆகிய காரணங்களால் தேர்தல் பூர்வாங்க நடவடிக்கை களை ஒழுங்கமைத்தலுக்கு தடையாகக் காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது.

ஈ. இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் போது 22 தேர்தல் மாவட்டங்களுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றிடமிருந்து தெரிவத்தாட்சி அலுவலர் களுக்குக் கிடைக்கப்பெற்ற மொத்தப் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களின் எண்ணிக்கை 697 ஆகும். இதில் 82 அரசியல் கட்சிகள் மற்றும் 93 சுயேச்சைக் குழுக்களின் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் பெயர் குறித்த நியமன இறுதித் திகதிக்கு முன்னைய தினமான 2020.03.18 ஆம் திகதியும், பெயர் குறித்த நியமன இறுதித் தினமாகிய 2020.03.19 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரையாகும் போதும் 213 அரசியல் கட்சிகள் மற்றும் 234 சுயேச்சைக் குழுக்களின் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையளிக்கப் பட்டிருந்தது. அதற்கமைய பெயர் குறித்த நியமனக் காலப்பகுதியின் இறுதி இரண்டு

நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப் பத்திரங்களின் எண்ணிக்கை 622 ஆகும். அதாவது 91% ஆகும். இந்தத் தகவல்களின் படி தெளிவாவது யாதெனில், பெயர் குறித்த நியமனக்களைக் கையளிப் பதற்காக ஒரு வார காலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக் களின் அதிக எண்ணிக்கையான நியமனப் பத்திரங்கள் இறுதி இரு நாட்களுக்குள் கையளிக்கப்பட்டுள்ளன என்பதாகும். ஆகை யினால், இந்த இறுதித் தினத்தில் அதிக எண்ணிக்கையான பெயர் குறித்த நியமனங்கள் கையளிக்கப்பட்டமை காரணமாக தெரிவத் தாட்சி அலுவலர்களுக்கும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற் பட்டுள்ளது. ஒவ்வொரு பெயர் குறித்த நியமனப் பத்திரங்களையும் நிழற்பிரதியெடுத்து அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தல் கட்டாயமானதாக்கப்படல், அவை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலனை செய்தல் போன்ற நியதிச்சட்ட விடயங்கள் சரியானதாகவும், அதேபோன்று வினைத்திறனானதாகவும் குறுகிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டி யுள்ளது. மிகவும் குறுகிய காலப்பகுதியினுள் இந்த அலுவல்களை முடிப்பதற்கு அப்பணிகள் தொடர்பான முன் அனுபவம் கொண்ட மேலதிக உத்தியோகத்தர்கள் அதிகமானோரின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டுள்ளது. பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுக்கான ஆட்சேபனைகளைத் தெரிவிப் பதற்கு சட்டத்தின் மூலம் இடமளிக்கப் பட்டிருப்பது, பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் இறுதித் தினம் நன்பகல் 12.00 தொடக்கம் பி.ப. 1.30 வரையான 01 மணித்தியாலம் 30 நிமிடங்கள் கொண்ட காலப்பகுதியாகும். இறுதித் தினத்தில் அதிக எண்ணிக்கையான பெயர் குறித்த நியமனங்கள் கையளிக்கப்பட்டமை, அவற்றைப் நிழற்பிரதி செய்து அறிவித்தல் பலகைக்கு அதிகளவு காலம் செலவாகியமை மீது இதற்காக ஆட்சேபனைகளைத் தெரிவிப்பதற்கு இடமளிக்கப் பட்டுள்ள காலப்பகுதி போன்றே தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைப் பரிசீலனை செய்து அது தொடர்பான தீர்மானங்களை வெளியிடுவதற்காக வுள்ள காலப்பகுதியும் போதுமானதாக இல்லை யென்பதை அவதானிக்க முடிகின்றது. இந்த வேலைப்பளு மற்றும் துரிதமாக நிறை வேற்றப்படவேண்டிய தேவைப்பாட்டின் மீது சிற்சில தவறுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக் களை புறந்தள்ளிவிடவும் முடியாது. இவ்வாறான குறைபாடுகளினால் சில தரப்பினர்கள் சட்ட உதவியை நாடுவதற்கு நடவடிக்கையெடுத்தல் ஊடாக ஓய்வின்றியும் மற்றும் வேலைப்பளுக் களுக்கு மத்தியிலும் கடமைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் இவ் வழி முறைமை தொடர்பான பிழையான தோற்றப்பா டொன்று சமூகத்தில் சென்றடைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உ. இவ்வாறான பின்னணியினுள் பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றுக் கொள்ளல் மற்றும் அதன் பின்னர் ஆற்றப்படவேண்டியுள்ள நியதிச்சட்டக் கடமைகளுக்காக போதுமானளவு கால அவகாசமொன்றை வழங்குவது அத்தியா வசியமானதாகும். மறுபுரம் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளிப்பதற்காக கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வரையறைகளை விதிப்பதையும் எவ்விதத்திலும் செய்ய முடியாது. இருப்பினும் போட்டியிடு வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அறிவித்துள்ள அரசியல் கட்சிகள் போன்றே பல்வேறுபட்ட குழுக்கள் காணப்படின் அவர்களுக்கும் முன் கூட்டியே பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளிப்பதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் மற்றும் சிரமங்களைக் குறைத்துக் கொள்வதற்கான சாத்தியப்பாடு தொடர்பாக அறிவுறுத்தல் அமர்வுகள் மற்றும் பகிரங்க அறிவித்தல்களை வெளியிட வேண்டியுள்ளன. ஆதலால், பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையேற்பதற்காக விடுமுறை நாட்கள் உள்ளடங்கலாக மூன்றரை (3½) நாட்களைக் குறித்தொதுக்குவதும் ஆட்சேபனை தெரிவிப்பதற்காக வழங்கப் பட்டுள்ள காலப்பகுதியை அதிகரிப்பதற்கும் நான்காவது தினத்தை குறித்தொதுக்கி அன்றைய தினம் முழுவதும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு பெயர் குறித்த நியமனக் களைப் பரீட்சித்துப் பார்த்து அவர்களின் தீர்மானங்களை வழங்குவதற்காக குறித் தொதுக்குவதற்காக சட்டத்தில் ஏற்பாடுகளைச் செய்வதற்காக சட்டத்திருத்தங்களை மேற் கொள்வது அவசியமாகியுள்ளது.

ஊ. பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுடன் வேட்பாளர்கள் தகைமையீனங்களுக்கு உட்பட வில்லை என்ற சத்தியக் கடதாசியொன்றை பெற்றுக்கொள்வதற்கும், அந்த சத்தியக் கடதாசிக்கமைய தகைமையீனங்களுக்கு உட்படுவார்களாயின் அந்த பெயர் குறித்த நியமனங்களைப் (குறித்த நபரை மாத்திரம்) நிராகரிப்பதற்கும், சத்தியப் பிரமாணத்தில் பொய்யான தகவல்கள் உள்ளடக்கப்படுமாயின் சம்பந்தப்பட்ட ஆளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையெடுப்பதற்கும் மற்றும் உறுப்பின ரொருவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பின், அவரின் பதவி இல்லாதொழிவதாக சட்டத்தைத் தயாரிப்பதன் ஊடாகவும் மிகவும் தகுதியான ஆட்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் விரிவடையுமென அவதானிக்கப்பட்டுள்ளது.

**II. வைப்புப் பணம் வைப்புச் செய்தல்.**

அ. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளு மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 16 ஆம் பிரிவிற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் வைப்புப் பணம் வைப்பிலிடத் தேவை யில்லை என்பதோடு, சுயேச்சைக் குழுக்கள் சார்பாக ஒரு வேட்பாளருக்காக 2000.00 ரூபா வீதம் வைப்புப்பணம் வைப்பிலிடப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வைப்புப் பணத்தொகை 1981 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலைமைக்கு சமமானதாகும். இந்தத் தொகை தற்போதைய நிலைமையுடன் ஒப்பிடுகையில் எவ்விதத்திலும் போதுமானதாக இல்லையென்பதோடு, இது தொடர்பாக அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் இது குறித்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதேபோன்று, தேர்தலொன்றை நடாத்துவ தற்காக அரசாங்கத்தினால் செய்யப்படுகின்ற செலவினம் துரிதமாக அதிகரித்தல் தொடர்பிலும் முதன்மைக் கவனத்தை செலுத்த வேண்டியுள்ளது. கடந்த தேர்தல் களுடன் ஒப்பிடும் போது பெயர் குறித்த நியமனங்களைக் கையளிக்கின்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தொகை காரணங்களின்றி அதிகரித்தமையும் தேர்தல்கள் தொடர்பான ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளுக்கு தடையாக உள்ளது. சில கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் அதிகளவு முகவர்களை வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் வாக்கெண்ணல் நிலை யங்களிற்கு அவர்கள் சார்பாக பங்கேற்கச் செய்தல் காரணமாகவும், அலுவலகங்களை அதிக எண்ணிக்கையில் தாபித்து அவர்களின் ஊடாக பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடும் உள்நோக்கில் அவர்கள் அதிக எண்ணிக்கை யான சுயேச்சைக் குழுக்களை போட்டிக்காக முன்னிறுத்துவதாக தேர்தல் ஆணைக்குழு வினால் அவதானிக்கப்பட்டுள்ளது. என்ற போதிலும், தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வரையறைகளை விதித்தல், தேர்தல் ஆணைக்குழுவிற்கு இணங்க முடியாத ஒரு பணியாகும். எனினும், அசாதாரணமாக எந்த வகையான மக்கள் அடிப்படையுமின்றி அடுத்தவர்களுக்காக போட்டிக் களத்தில் பிரவேசித்தல் பாதகமான செயற்பாடொன்று என்ற கருத்தும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆ. ஆகையினால், தற்போது காணப்படுகின்ற இந்த நிலைமையை இயன்றளவு நிவர்த்தி செய்து கொள்வதற்காக போட்டியிடுகின்ற அனைத்து அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள், வைப்புப் பணம் வைப்புச் செய்தல் தேவைப்பாடு போன்றே, தற்போதைய வைப்புப் பணத்தொகையை உயர் பெறுமதியொன்றினால் திருத்தம் செய்தல் தொடர்பாகவும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

**III. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்குதல்.**

அ. வாக்கெடுப்புத் தினத்தில், தனக்கு குறித் தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று தமது வாக்கை பியோகிக்க முடியாது போகின்ற, சட்டத்தின் ஏற்பாடுகளில் காட்டப் பட்டுள்ளவாறு, அரச ஊழியர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு உரித்துக்கிடைக் கின்றது. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்கு ஏற்ப தேர்தல் பிரகடனப் படுத்தப்பட்ட தினத்திற்கு ஒரு வாரத்தின் பின்னர் மற்றும் இரண்டு வாரங்களுக்கு முன்னரான காலப்பகுதியினுள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான கோரிக்கையொன்றை உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இருப்பினும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு போட்டி யிடுகின்ற வேட்பாளர் ஒருவருக்கும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிக்க முடியுமெனச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவருக்கும் அஞ்சல் மூலம் வாக்களிப் பதற்காக விண்ணப்பிக்க முடியும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக் கமைய இணக்கமின்மை காணப்படுகின்றது. ஏனெனில், வேட்பாளரொருவரா இல்லையா என்பது தெரியவருவது பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையேற்கப் பட்ட இறுதித் தினத்தில் குறித்த நியமனப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்ற காரணத்தின் மீது என்பதினாலாகும். அவ்வாறு பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் மாத்திரம், பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்ட ஓர் ஆள் வேட்பாளரொருவராவ தோடு, அப்போது அவ்வாளின் விருப்பத்தின்படி அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப் பிக்க முடியும். இருப்பின் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அச்சந்தர்ப்பமாகும் போது. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கையேற்றுக் கொள்ளும் காலப்பகுதி முடிவடைந்துவிடும். ஆகையால், முன்னைய தேர்தல்களின் போது எல்லாச் சந்தர்ப்பத்திலும் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல் பல்வேறு சந்தர்ப்பத்திற்கேற்ற விடயங்கள் காரணமாக பல சந்தர்ப்பங்களில் ஒத்திவைக்கப்பட்டுள்ள பின்னணியில் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கையேற்கப்படும் காலப்பகுதி, பெயர் குறித்த நியமனக் கால எல்லை முடிவடையும் தினத்தின் பின்னரான தினம் வரையாகுமென திருத்தம் செய்வது மிகவும் பொருத்தமான தாகும்.

## IV. முன்கூட்டி வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல். (Advance Voting)

அ. கடந்த தேர்தல்கள் தொடர்பாக ஆராயும் போது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக தகைமை பெறாத, இருப்பினும் வாக்கெடுப்பு தினத்தில் அத்தியாவசியக் கடமைகளில் ஈடுபடுகின்ற சுகாதாரத் துறை உத்தியோகத்தர்கள், துறை முகங்கள், அதிவேகப்பாதைகள், விமான நிலையங்கள், நீர் வழங்கல், ஊடகங்கள், மின்சாரம் மற்றும் சுங்கம் போன்ற நிறுவனங் களின் ஊழியர்கள் பலருக்கு வாக்களிப் பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அவ்வாறே, அரச நிறுவனங்களில்லாத முதலீட்டு ஊக்கு விப்பு வலயங்களின் தொழிற்சாலைகள், புடவை உற்பத்தி நிறுவனங்கள், ஊடக நிறுவனங்கள், மருந்தகங்கள், மீன்பிடிப் படகுகள், சுற்றுலா மற்றும் உணவகங்கள், சிறப்பு விற்பனை நிலையங்கள் சார்ந்த இடங்களில் பணியில் ஈடுபட்டுள்ள பெரும் பாலான ஊழியர்களுக்கும் நேரடியாக இந்த நிலைமை செல்வாக்குச் செலுத்தியுள்ளது. வாக்கெடுப்புத் தினம் இவ்வாறான பல தரப்புக்களின் வேண்டுகோள்களுக்கு செவிசாய்ப் பதற்கு தேர்தல் அதிகாரிகள் போன்றே கொள்கை வகுப்பாளர்களுக்கும் நேரிட்டுள்ளது. தற்பொழுது காணப்படுகின்ற சட்ட நிலைமை யின்மையினுள் தெரிவத்தாட்சி உத்தியோகத் தர்கள் உட்பட தேர்தல் அதிகாரிகளுக்கு அது தொடர்பாக எவ்விதமான மாற்று வழியும் காணப்படவில்லையெனினும், அவ்வாறான வேண்டுகோள்களுக்கு செவிசாய்ப்பதற்காக நேரத்தை செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளது. எனவே இந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கும் வாக்களிப்பதற்கு இயலுமான வகையில் சட்டங்களைத் திருத்தம் செய்வது ஒரு சமகாலத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதாக அமையும். இது தொடர்பாக வெளிநாடுகளில் காணப்படுகின்ற வழி முறைகள் தொடர்பாகவும் சமூகத்தில் பரந்தளவிலான கருத்தாடல்கள் ஏற்பட்டுள்ளது. அதே போன்று தற்போது அஞ்சல் மூலம் வாக்களித்தல் நடைமுறையில் காணப்படுகின்ற சிக்கலானதன்மை, அதற்காகச் செலவாகும் காலம், ஊழியம் மற்றும் செலவுகள் அதிகரிப்பு ஆகிய விடயங்கள் போன்று வெளிநாட்டுத் தேர்தல்கள் நிறுவனங்கள் இத்தகைய நிலைமைகளுக்காக கடைப்பிடிக் கின்றன முறைமைகளை ஆராய்ந்து தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு வாக்களிப்பதற்கான அதிக வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் வாக்களிக்கின்ற எண்ணிக்கை உயர் பெறுமதியொன்று வரை அதிகரிப்பதற்காக வினைத்திறனான முன்மொழிவுகளை சமர்ப்பித்து நடைமுறைப்படுத்தப்பட முடியுமான அடிப்படை யில் சட்டங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது இந்த யுகத்தின் தேவைப்பாடாகும். எனவே, குறிப்பாக இனங் காணப்படுகின்ற அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்காக வாக்களிப்பு தினத்திற்கு முன்னர் வாக்களிப்பதற்காக (Advance Voting) சந்தர்ப்பம் வழங்குதல் அல்லது வாக்கெடுப்புத் தினத்தில் விசேட வாக்கெடுப்பு நிலையங்களைத் தாபித்து அந்த வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு வசதியளிப்பதற்காக நடை முறையிலுள்ள சட்டங்களின் திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆ. பங்குதாரக் குழுக்களிடமிருந்து கிடைக்கப்ப பெற்ற கருத்துக்கள் மற்றும் முன்மொழிவு களின் அடிப்படையில் வெளிநாடுகளில் அமையப்பெற்றுள்ள இலங்கைத் தூதரகங்களின் பணியாட் குழுவினர் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு வாக்களிப்பதற்குத் தேவையான சட்டங்களை வகுப்பதற்காக (Oversees Voting) சில காலத்திற்கு முன்பிருந்தே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுக் காணப்பட்டது. அதற்காக பாராளுமன்ற ஆலோசனை செயற்குழு வொன்றும் நியமிக்கப்பட்டிருந்ததோடு, பிற்பட்ட காலத்தில் அந்த நடவடிக்கைகள் கைவிடப் பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக சிறைச் சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு வாக்களிப்பதற்கு வசதிகளை வழங்குவது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே இந்த அனைத்துக் குழுக்களுக்கும் வாக்களிப்பதற்குத் தேவையான சட்டங்களைத் திருத்தம் செய்ய வேண்டி யுள்ளது.

## V. தேர்தல் கடமைகளுக்காக பணியாட்குழுவினரை ஈடுபடுத்தல் மற்றும் அரச வளங்கள்.

அ. தேர்தலை நடாத்துவதற்கான திகதி குறிக்கப் பட்டு வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து அது முடிவடையும் வரையான காலப் பகுதியினுள் அனைத்துப் பணிகளும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களால் நிறைவேற்றப்படுகின்றன. இதற்காக தேர்தல் ஆரம்பத்திலிருந்தே தமது நிறுவனங்களின் அனைத்து அலுவலர்களினதும் மற்றும் வாகனங்களினதும் தகவல்களை தெரிவத் தாட்சி அலுவலர்களுக்கு வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து நிறுவனத் தலைவர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இவ்வலுவலர் கணக்கெடுப்புத் தரவுப் படிவங்களை பூரணப்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கையளித்தல் அனைத்து அரச ஊழியர்களிற்கும் கட்டாயமாக்கப் பட்டிருந்ததோடு சில அலுவலர்கள் தகவல் களை வழங்குவதை வேண்டுமென்றே தவற விடுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளதால் ஒவ்வொறு நிறுவனங்களினதும் மாதாந்த சம்பளப்பட்டியலுக்கு அமைய ஒப்பிட்டுப் பார்த்து சகல அலுவலர்களும் கணக் கெடுப்புக்கான தகவல்களை வழங்கியுள்ளார் கள் என்பதை உறுதிசெய்து கொள்ளுமாறு அனைத்து நிறுவனத் தலைவர்களுக்கும்

அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் கடமைகளின் போது விசேடமாக வாக்கெடுப்பு நிலையக் கடமைகள் மற்றும் வாக்கெண்ணல் பணிகளில் நிலவுகின்ற சிக்கல் காரணமாக அலுவலர் களினால் தரவுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப் படுவதில்லையென்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக, தேர்தல் கடமைகளைக் கட்டாயமாக ஆற்ற வேண்டிய அரச உத்தியோகத்தர்களின் பங்கேற்பு இல்லாமை காரணமாக தேர்தலை உரிய முறையில் ஒழுங்கு செய்து நடாத்திச் செல்வதில் பிரதானமான பாதகமாகக் காணப்படுகின்றது. இதற்கான மாற்றுத் தீர்வாக அரச அலுவலர்களின் தரவுகளை ஒன்று திரட்டி வைத்திருக்கக் கூடிய மற்றும் அவற்றை அடிக்கடி இற்றைப்படுத்த முடியுமான கணினி நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒவ்வோர் அரசாங்க நிறுவனமும் தயாரித்து இற்றைப்படுத்தி பேணிச்செல்ல வேண்டியுள்ளது. அவ்வாறு இல்லையெனில் அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான கணக்கெடுப்பொன்றை நடாத்தி அந்த தரவுகளை உள்ளடக்கிய தரவுத் தொகுதியொன்றை தேர்தல் ஆணைக்குழு வினால் பேணி வரப்படல் வேண்டுமென்பதுடன், நிறுவனத் தலைவர்கள் அவர்களது ஆளணியினர் மாற்றங்களுடன் தொடர்புடைய கடிதங்களின் பிரதிகளைத் தேர்தல் ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைப்பதன் மூலம் தரவு முறைமையை இற்றைப்படுத்துவதற்கான வழி முறைமையொன்றைத் தயாரித்துக் கொள்ள வேண்டியுள்ளது.

ஆ. அவ்வாறே பெரும்பாலான அரச நிறுவனங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல் களுக்கு அமைவாகத் தேவையான தகவல் களை வழங்கியிருந்த போதிலும் சில நிறுவனங்கள் அவ்வாறு செயற்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தேர்தல் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்காக தேவையானளவு அரச வாகனங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தினால் தனியார் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நேரிட்டது. ஆகை யினால், அரச உத்தியோகத்தர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஒதுக்கு வாகனங்கள் மற்றும் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகள், வதிவிட வசதிகளுடன் கூடிய பயிற்சி நிலையங்கள் போன்ற கட்டிடங்களின் தகவல்களைத் தேர்தல் பணிகளுக்காகப் பயன்படுத்தக் கூடியவாறு தேர்தல் ஆணைக் குழுவின் வேண்டுகோளின் பிரகாரம் தெரிவத் தாட்சி அலுவலர்களுக்கு வழங்குவது தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல் ஆணைக்குழு வினால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்கள் பணிப்புகளுக்கு முரணாக செயற்படுகின்ற அரச அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது மற்றும் கட்சி, வேட்பாளர் ஊக்குவிப்புக்காக அரச வளங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக உறுதிசெய்யப்பட்ட எவரேனும் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெற்றால் அவரின் உறுப்பினர் பதவியை இடைநிறுத்துவதற்கு இயலுமானவாறு தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டி யுள்ளது.

## VI. ஊடக வழிகாட்டு நெறிகள் :

அ. தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற காலப்பகுதி யில் பொது மக்களின் அபிப்பிராயத்தை மாற்றியமைப்பதில் ஊடகங்களால் செய்யக் கூடிய தாக்கத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. குறிப்பாக பாராளுமன்றத் தேர்த லொன்று நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் காணப்படுகின்ற அரசாங்கத்தின் அமைச்சரவை செயற்படுகின்றமையினால் அரசாங்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், செயற் றிட்டங்கள் ஆரம்பித்தல் தொடர்பான நிகழ்ச்சிகள் அரசாங்க ஊடகங்கள் ஊடாக ஒளிபரப்பப்படுகின்றன. இதன்மூலம் ஒரு வகையில் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் ஊக்குவிப்பு ஏற்படுவதாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங் களில் எந்தவொரு கட்சி அல்லது வேட்பாளர் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு ஏற்படும் விதத்தில் செயற்படுவதிலிருந்து தவிர்ந்து செயற்படுமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும், கட்சிகள் அல்லது வேட்பாளர் களின் தனிப்பட்ட தொடர்புகளின் அடிப் படையில் ஒவ்வொரு தரப்பினரையும் வெளிக் கொண்டுவருவதற்காக ஊடக நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றமை கடந்த தேர்தல் சந்தர்ப்பங்களில், ஊடகங்களின் நடத்தையை அவதானிக்கும் போது தெளிவாகிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும். தேர்தல் காலப்பகுதியினுள் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தங்கள் அதிகாரத்தைப் பெற்றதன் பின்னர் நாட்டின் முன்னேற்றம் அல்லது அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள திட்டங்கள் மற்றும் செயற்றிட்டங்கள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்துதுல் ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்படுகின்றன. இங்கு சகலருக்கும் சமனற்ற விதத்தில் அரச ஊடக நிறுவனங்களில் காணப்படுகின்ற அரசாங்கத்தை ஊக்குவித்தல், தனியார் மற்றும் மாற்று ஊடகங்கள் தமது அறிமுகம் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் அல்லது அதிகாரிகளின் விருப்பமான கட்சிகளை மற்றும் வேட்பாளர்களை ஊக்குவித்தல் இடம்பெற்றால் தேர்தலுக்கான சமகளமொன்றை உருவாக்குவது கடினமானதாக அமையும்.

ஆ. இதற்கான மாற்றீடாக 19 ஆவது அரசிய லமைப்புத் திருத்தத்தினால் ஊடக வழிகாட்டு

நெறிகளை விதிப்பதற்கு தேர்தல் ஆணைக் குழுவுக்கு கிடைத்த அதிகாரம் காரணமாக காணப்பட்ட நிலைமையை ஓரளவு நல்லதொரு மட்டத்திற்கு கொண்டுவர முடிந்த போதிலும் அந்த நிலைமையை பேணிச்செல்வதற்காக தொடர்ச்சியான கலந்துரையாடல்கள், கூட்டங் களை நடாத்துவதற்கு அதிக காலத்தை செலவிட வேண்டி ஏற்பட்டது. அதே போன்று தேர்தல் ஆணைக்குழுவினால் விதிக்கப் பட்ட இப்பணிப்புரைகளை பின்பற்றுதல் மற்றும் அவற்றை மீறினால் தண்டனை வழங்கல் என்பன நேரடியாக அரச ஊடக நிறுவனங்கள் மீது மாத்திரமே தாக்கம் செலுத்தியிருந்தது. அதன் காரணமாக, அரச ஊடக நிறுவனங் களுக்கு மாத்திரம் ஊடக வழிகாட்டல்களை விதிப்பதன் மூலம் வரையறைக்குற்படுத்துவது போதுமானதாக இல்லை எனத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பங்குதாரக் குழுக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது அலைவரிசைகள் மக்களுக்குரியசொத்தாக தேர்தல் ஆணைக்குழு கருதுவதால் அரசியலமைப்பினால் விதிக்கப் பட்டுள்ள இந்தச் சட்டம் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் ஏற்புடையதாக விருத்தல் வேண்டும். காணப்பட்ட இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வெகுசன ஊடக அமைச்சும் ஊடக நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்கும் வழிமுறை மையை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக புதிய சட்ட வரைவொன்றை அறிமுகப் படுத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் தேர்தல் ஆணைக் குழுவை அழைத்து கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு வெகுசன ஊடக அமைச்சினால் நடவடிக்கை யெடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஊடக நிறுவனங்களுக்கு வருடாந்த அனுமதிப்பத் திரத்தை வழங்கும் போது அதில் ஒரு நிபந்தனையாக தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படு கின்ற ஊடக வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டுமென்ற நிபந்தனையை உட்சேர்க்குமாறு தேர்தல் ஆணைக்குழுவினால் வெகுசன ஊடக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்களைத் தயாரித்து வழங்குவதன் மூலம் ஊடக கட்டுப்பாடு அல்லது தடைசெய்தல் எதிர்பார்க்கப்படவில்லை என்பதோடு, தகவல் களை அறிவதற்கான மக்களுக்குள்ள உரிமை தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது இருப்பினும், அந்த முன்மொழிவுகள் மூலம் தேர்தல் காலப்பகுதி யினுள் ஊடகப் பயன்பாட்டின் போது அனைத்து கட்சிகளுக்கும் மற்றும் வேட்பாளர் களுக்கும் சமமான தேர்தல் களமொன்றை உருவாக்கும் வகையில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்தக் கூடிய சூழலை உருவாக்குவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சாத்தியம் கிடைக்கும்.

## VII. அரசியல் வானொலிப் பிரச்சாரம் மற்றும் தொலைக் காட்சிப் பிரசாரம்.

அ. 1981 இல் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் செயல்வலுவாக்கம் செய்யப்பட்ட காலப் பகுதியில் இலங்கையின் பிரதான இலத்திர னியல் ஊடக நிறுவங்களாக இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பன காணப்பட்டன. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் அரச ஊடக நிறுவனங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களால் வேட்பாளர்களுக்காக இந்தப் பிரச்சார வசதிகள் வழங்கப்படுவது, எவ்விதமான கட்டண அறவீகளும் இன்றியாகும். ஆனால் தற்போது நாட்டிலே பல இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் நாட்டினுள் செயற்படு கின்றன. காணப்படுகின்ற போட்டித்தன்மையின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் அரச ஊடக நிறுவனங்களை விட அதிக பிரபல்யத்தைக் கொண்ட தனியார் ஊடகங்கள் மூலமாகத் தமது பிரச்சார நடவடிக்கை மேற்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. திறைசேரி நிதியத்தின் மீது தங்கியுள்ள இந்த அரச ஊடகங்கள் நிறுவனங்களின் உயர்ந்த வர்த்தக பெறுமதிமிக்க வானலைக் காலத்தை இலவசமாக அரசியல் பிரச்சார வசதிகளை வழங்குவதற்கு நேரிட்டமை ஊடாக அந்த நிறுவனங்களைப் பராமரிப்பதற்காக அரசாங்கத் திற்கு மேலதிகமான செலவினமொன்றைச் செய்ய வேண்டியுள்ளது. போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை கிரமமாக அதிகரித் தமை மற்றும் அவர்கள் அனைவருக்கும் சம வாய்ப்புக்களை வழங்க வேண்டியேற்பட்டமை என்பவற்றினூடாக அதற்காக ஒதுக்கப்பட வேண்டிய ஒளிபரப்புக் காலஅளவு மற்றும் அதற்காக அரசாங்கம் செலவிட வேண்டிய செலவினத் தொகையும் மேலும் அதிகரித் துள்ளது. அதலால், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் அத்தகைய பிரிவுகள் இந்த அனைத்து நிலைமைகள் மற்றும் விடயங் களைக் கருத்திற் கொண்டு சந்தர்ப்பத்திற் கேற்ப இற்றைப்படுத்தப்படல் வேண்டுமென முன்மொழியப்படுகின்றது.

## VIII. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம் மற்றும் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்தல்.

அ. தேர்தலுக்கான திகதி குறிக்கப்பட்ட சந்தர்ப்பம் தொடக்கம் தேர்தல் பிணக்குகள் முகாமைத் துவத்திற்கான விசேட நிகழ்ச்சித் திட்ட மொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. தேசிய, மாவட்ட, மற்றும் பிரதேச அடிப்படையில் சிவில் மற்றும்

பொலிஸ் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பிரிவுகள் மூலம் இச்செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. தேர்தல் முறைப்பாடுகளைக் கையேற்றல், தாமதமின்றி அவை சம்பந்தமாகச் செயற்படுதல் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் என்பன அதன் முதன்மைப் பணிகளாகும். இதற்காக கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினதும் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளினதும் உதவி கிடைக்கப்பெற்றுள்ளது. இத்தேர்தலின் போது சட்டத்தின் ஏற்பாடுகள் உரிய அடிப்படையில் மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்ததன் மீது சட்டவிரோதமான கட்சி அலுவலகங்கள், பதாகைகள், பாரிய உருவப்படங்கள், கூட்டங்களை நடாத்துதல் என்பன வரையறுக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள நபர்களுக்கு மற்றும், தொழில் வாய்புக்களை இழந்துள்ளவர்களுக்கும் நிவாரணம் வழங்கும் தோரனையில் ஏற்பாடு செய்யப்பட்ட உதவிகளை வழங்குதல் ஊடாக கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்ற முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. ஆதலால், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேர்தல் சட்டங்களை அமுல்படுத்தல் தொடர்பாக அடிக்கடி அறிவுறுத்துதல் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி இணக்கப்பாட்டிற்கு வருதல் போன்ற நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டிருந்ததோடு அதன் மூலமாகவும் பெருமளவில் சட்டங்கள் மீறப்படுவதைத் தவிர்த்து சிறந்த நிலைமையொன்றைப் பேணிக்கொள்ள முடிந்தது.

ஆ. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 (இ) (1) உறுப்புரையில் காட்டப்பட்டுள்ளவாறு தேர்தலொன்று பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் மீது தேர்தல் ஆணைக்குழுவிற்குத் தேவையான வசதிகள் மற்றும் பொலீஸ் அலுவலர்கள் எண்ணிக்கையொன்றை இணைப்புச் செய்தல் பொலிஸ் மா அதிபர் அவர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று தேர்தல் சட்டங்களை அமுலாக்கம் செய்வற்கான தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குதல் சட்டத்தை அமுலாக்கம் செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள அனைத்து அலுவலர்களினதும் கடமையும் மற்றும் பொறுப்புமாகும் என அரசியலமைப்பின் 104 (இ) (4) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அரசியலமைப்பின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துதல் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். இருந்த போதிலும், சிற்சில காரணங்களினால் தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்தல் சிக்கலானதாக மாற்றமடைதல் கடந்த சில தேர்தல்களிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களின்படி தெளிவாகின்றது. சட்டத்தை அமுலாக்குவதற்காக தற்போதுள்ள சட்டத்தினுள் அதற்குத் தடைகள் ஏற்படுமாயின் அவற்றை அகற்றுவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆணைக்குழுவிற்கு ஆற்றுப் படுத்தப்படுதல் வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனையின் பிரகாரம் தேர்தல் காலப்பகுதியினுள் பொலிஸ் மா அதிபர் அவர்களால் தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஆணைக்குழுவிற்கு இணைப்புச் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் நிருவாகம் தொடர்பான முழுப் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட வேண்டுமென்பதோடு அந்த அலுவலர்களின் சேவைகளைப் பாதுகாக்கும் பொருட்டு தேர்தலின் பின்னர் மூன்று மாதங்கள் கழியும் வரை அந்த அலுவலர்களின் விருப்பமின்றி அவர்களை இடமாற்றம் செய்தல் தேர்தல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறான நிலைமைக்கமைய அந்த உத்தியோகத்தர்களுக்கு தொழில் நிச்சயமற்றதன்மையின்றி மற்றும் அரசியல் அழுத்தங்களுக்கு உட்படாமல் தேர்தல் சட்டங்களை அமுல்படுத்தும் கடமைகளை சளைக்காது ஆற்றுவதற்குச் சாத்தியம் கிடைக்கும்.

இ. அவ்வாறே முறைப்பாடுகள் முகாமைத்துவப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்ட பொலீஸ் அலுலர்களுக்கு தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அத்தகைய சந்தேக நபர்களையும் மற்றும் வழக்குப் பொருட்களையும் கைது செய்யக்கூடியவாறு அதிகாரம் வழங்குதல் வேண்டுமென்பதோடு, அந்த சந்தேக நபர்களை சட்டமா அதிபர் மூலம் நீதிமன்றத்திற்கு ஆஜர்செய்வதற்குப் பதிலாக தேர்தல் ஆணைக்குழுவினால் நேரடியாக நீதிமன்றத்திற்கு ஆஜர் படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். இந்த நடவடிக்கையின் மூலம் தேர்தல் குற்றங்களுக்காக நீதிமன்ற நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கான சாத்தியம் ஏற்படுவதோடு, அவ்வாறு நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் துரிதப்படுத்துதல், தேர்தல்களின் போது சட்டவிரோதமான செயற்பாடுகளுக்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவர்களைத் தூண்டுவதைக் குறைக்கவும் முடியும்.

ஈ. சட்டவிரோத பிரச்சாரப் பலகைகள் மற்றும் பதாகைகளை அகற்றும் பணிகளுக்காக இலங்கை பொலிஸிற்கு போன்றே தேர்தல் ஆணைக்குழுவிற்கும் அமய ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அதிக எண்ணிக்கையான வாகனங்களை ஈடுபடுத்துவ தற்கும் நேரிட்டதோடு, தேர்தல் செலவினங்கள் அதிகரிப்பதற்கும் அது காரணமாகியுள்ளது. முன்னைய தேர்தல்களின் போது போன்றே இத்தேர்தலின் போதும் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு தேர்தலின் போதும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் மற்றும் பொலிஸாருக்கும் இப்பணிகளில் ஈடுபடுத்துவ தற்கு அல்லது அதற்கு முன்னுரிமை வழங்குவதற்கு நேரிட்டதால் இந்நிறுவனங் களினால் நிறைவேற்றப்பட வேண்டிக்காணப்படு கின்ற நியதிச்சட்டரீதியான கடமைகளை நிறைவேற்றுவதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தினுள் பல்வேறு பணிகளை ஏற்பாடு செய்கின்ற அதே வேளை இச்செயற்பாட்டிலும் ஈடுபடுவதற்கு நேரிட்டமை தேர்தல் பணிகளை ஏற்பாடு செய்வதில் பாரிய சவாலாக அமைகின்றது. ஆதலால், உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசங் களில் காட்சிப்படுத்தப்படுகின்ற சட்ட விரோதமான மற்றும் சட்டமுரணான சுவரொட்டிகள், பிரச்சாரப் பதாகைகள் போன்ற காட்சிப்படுத்தல் பொருட்களை அகற்றும் பொறுப்பு உள்ளூராட்சி அதிகார சபை நிறுவனங்களில் அவை காட்சிப்படுத்தப்படு கின்ற இடங்கள் மற்றும் சொத்துக்கள் உரித்துடைய நிறுவனத் தலைவர்களுக்கு பொறுப்புக் கையளித்தல் வேண்டும். தேர்தல் காலப்பகுதியில் மட்டுமல்லாது பொதுவான சட்டத்தின் கீழும் அத்தகைய தலைவர் களுக்குரிய பொறுப்பொன்று போலவே அவ்வாறு செய்வோர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரமும் அந்நிறுவனங்களுக்கு உரியதாகும். ஆதலால் வாக்கெடுப்பின் ஆரம்ப சந்தர்ப்பத்தில் அல்லது அதற்கு முன்னர் உரிய நிறுவன அதிகாரிகளை வரவழைத்து இவ்விடயங்கள் சம்பந்தமாக சட்ட நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தி அந்நிறுவனங்களின் பொறுப்புக் களை நிறைவேற்றுதல் தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்யும் போது பெரும் உதவியாக அமையும் என்பது தொடர்பாக அவர்களை அறிவுறுத்தல் வேண்டும். காணப்படுகின்ற சட்டங்களுக்கு எதிராக செயற்படுகின்றவர்களுக்கு நீதிமன்ற நடவடிக்கை களை எடுப்பது அவசியமாகும் எனவும் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல் வேண்டும். குறித்த நிறுவனங்கள் அவ்வாறு செயற்படுவார்களாயின் தேர்தல் அலுவலர் களுக்கு அவர்களின் நியதிச்சட்ட கடமை களை மிகவும் வினைத்திறன் வாய்ந்த முறையில் மேற்கொள்ள முடிவதோடு தேர்தல் செலவுகளைக் குறைப்பதற்கும் இது பெரிதும் உதவுகின்றது.

## IX. தகவல் தொழில்நுட்ப வழிமுறைகள் பயன்பாடு.

அ. தற்கால உலகில் பல நாடுகளின் தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களினால் வாக்கெடுப்புப் பணிகளுக்காக தகவல் தொழில்நுட்ப முறைகள் உச்சளவில் பயன்படுத்தப்படு கின்றன. தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர் கள் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படு கின்ற இவ்வாறான வழிமுறைகளை கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்றிருந்தன. இலங்கையின் பெரும்பாலான அரச நிறுவனங் களினால் பொதுமக்களுக்கு உயர் தரமான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப முறைகள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதலால், தேர்தல் ஆணைக்குழுவுக்கும் தமது பணிகளை மிகவும் வினைத்திறனுடையதாகவும் பயனுறுதிமிக்க தாகவும் மேற்கொள்வதற்காக கடந்த சில தேர்தல்களின் போது தகவல் தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக தேருநர் இடாப்பைத் தயாரித்தல், அஞ்சல் வாக்குச் செயற்பாடுகள், அலுவலர் கணக் கெடுப்பு அலுவல்கள், தேர்தல் பிணக்குகள் கண்காணிப்பு, பெறுபேறுகளைத் தயாரித்தல். போன்ற பணிகளுக்காக தகவல் தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டன இருந்த போதிலும், இந்த வழிமுறையை மேலும் மிகவும் ஒழுங்கமைப்பு ரீதியாகவும் மேற் கொள்வதன் மூலம் காலம், உழைப்பு மற்றும் பணத்தை சேமிக்க முடியும்.

ஆ. இத்தேர்தலின் போது வாக்கெடுப்பு நிலையங் களின் பொறுப்பு சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுடன் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட குறுந் தகவல் சேவையை (SMS) ஒழுங்கு முறைப் படுத்தி தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் வாக்கெடுப்பு நிலையங்களின் அலுவல்களின் மையப்படுத்தப்பட்ட கட்டுப்படுத்தலை மிகவும் இலகுவாகவும் மற்றும் வினைத்திறன் கொண்ட தாகவும் மேற்கொள்ள முடியும். வாக்கெடுப்பு நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு ஒப்படைக்கப்படுகின்ற கடமைகள் மிகவும் பொறுப்புமிக்கதாகும். நியதிச் சட்டரீதியான மற்றும் நிருவாகம் போன்றே சட்ட அமுலாக்கத்திற்கான கடமைகளும் அவரிடம் ஒப்படைக்கப்படுவதோடு, அவற்றை நிறைவேற்றும் போது பல்வேறு படிவங்களை ஒரே நேரத்தில் பூரணப்படுத்த வேண்டி ஏற்படுதல் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு, கட்சி முகவர்களுக்கு தகவல்களை வழங்க வேண்டியும் உள்ளது. இது மிகவும் களைப்பு மிக்க ஒரு பணியாகும். வாக்கெடுப்பு நிலையங் களின் மேற்பார்வையின் போது வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு மற்றும் அதனூடாக தேர்தல் ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டிய

செய்திகளை அனுப்பும் போது பூரணப்படுத்தப் பட்ட மாதிரிப்படிவங்கள் மூலம், அந்தத் தகவல்களை தொலைநகல் மற்றும் தொலை பேசி ஊடாக அறிவித்தல் ஒரு சிக்கலான செயன்முறையாகும். அதற்கான மாற்றுவழி யொன்றாக அறிமுகப்படுத்தப்பட்ட குறுஞ் செய்திச் சேவையினை மேலும் எளிமைப் படுத்தி மற்றும் இலகுவானதாக்கி வெற்றிகரமாகப் பயன்படுத்துதற்காக தேவையான வழிமுறை களை அறிமுகப்படுத்தல் வேண்டும். தற்போதுள்ள அரச உத்தியோகத்தர்களில் பெரும்பாலானவர்கள் தகவல் தொழில்நுட்ப அறிவினைக் கொண்டிருத்தல் மற்றும் அது தொடர்பான உபகரணங்கள் அவர்களிடம் காணப்படுகின்றமையால் மிகவும் இலகுவாக நிறைவேற்றக்கூடிய பணியொன்றாகும். தேர்தல் பணிகளை வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறன்மிக்கதாகவும் ஆற்றிக்கொள்வதற்காக எந்தவொரு மட்டத்தின் உத்தியோகத்தருக்கும் இலகுவில் பயன்படுத்தக்கூடிய தகவல் தொழில்நுட்ப பிரயோகங்கள் (App) ஊடாக வாக்கெடுப்பு நிலையங்களுடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் செய்திகளை வழிநடாத்தல் நிலையங்களுக்கு சமர்ப்பிக்கும் முறைமைகள் கட்டாயமாக உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறான வழிமுறைகளினூடாக அலுவல்களை மேற்கொள்ளல் வழிநடாத்தல் பொறுப்பு உத்தியோகத்தர்கள் போன்றே அது தொடர்பாக தீர்மானமெடுக்கின்ற தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவிற்கும் அவர்களின் பணிகளை மிகவும் இலகுபடுத்தும் ஒன்றாக அமையும்.

இ. தற்காலத்தில் வாக்களிப்பதற்காக அச்சிடப் பட்ட வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்படு கின்றன. இந்த வாக்குச்சீட்டுகளைப் பாதுகாப் பாக வைத்திருத்தல் அது தொடர்பான பொறுப்புக்கள் ஆகியவற்றின் மீது அலுவலர்கள் வாக்கெடுப்பு நிலைய கடமை களுக்கு பெரிதும் விருப்பம் காட்டுவதில்லை யென்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அதே போன்று வாக்களிக்கப்பட்ட கடதாசி வாக்குச் சீட்டுக்கள் அதிக எண்ணிக்கையை எண்ணும் போதும் அதிகளவு உத்தியோகத்தர்களின் பங்குபற்றல் அவசியமாவதோடு, அதற்காக நீண்டதொரு காலம் செலவாவதையும் தவிர்க்க முடியாததாகும். இந்த நிலைமை தொடர்பாக முன்பிருந்தே கலந்துரையாடப் பட்டுள்ளது. வாக்குச் சீட்டுகளினூடாக வாக்களிப்பதற்குப் பதிலாக மாற்றீடாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தை (Electronic Voting Mechine) அறிமுகப்படுத்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டி யுள்ளது. எவ்வாறாயினும், இவ்வாறான உபகர ணங்களின் பாவனை மற்றும் அத்தகைய உபகரணங்களின் பேண்தகுதன்மை தொடர் பாகவும் தேர்தல்கள் நடைபெறாத காலப் பகுதியின் போது அவற்றை களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங் களில், அந்த உபகரணங்களின் இருப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பாகவும் அவற்றைப் பயன்படுத்துகின்ற ஏனைய நாடுகளின் நிலைமைகள் தொடர்பான உரிய ஆராய்ச்சி யின் பின்னர் அவ்வாறான முறைமைக்கு மாறவேண்டியுள்ளது. மேலும், தற்கால நிலைமையின் கீழ் இந்த இயந்திரங்களை வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளமை தொடர்பாகவும் இவ்வாறான இலத்திரனியல் உபகரணங்கள் தொடர்பில் பங்குதாரத் தரப்பினர் நம்பிக்கை யின்மையை வெளிப்படுத்தும் போக்கு தொடர் பாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், இதன் மூலம் அலுவலர்களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளல் கடதாசி மற்றும் அச்சிடல், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றுக்குச் செலவாகும் செலவுகளைக் குறைப்பதற்கு சாத்தியம் காணப்படுவதால் இவ்வாறான முறைமை யொன்று தொடர்பாக உரிய கவனத்தினைச் செலுத்தி செயற்படுதல் உசிதமானதாகும்.

### X. வேட்பாளர்களின் தேர்தல் செலவினக் கட்டுப்பாடு

அ. தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் மற்றும் அவற்றின் வேட்பாளர்கள், ஏனைய ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றினால் கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்பாளர் களை ஊக்குவிப்பதற்கான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பணிகளுக் காக அதிகளவில் செலவு செய்யப்படு கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் அதிகரிப்பும் இவ்வாறான செயற்பாடுகள் தாக்கம் செலுத்தியுள்ளன. தேர்தல் காலப்பகுதியில் தேவையற்ற விதத்திலான நிதிச் சுழற்சி நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்து கின்றது. மேலும் ஒரே கட்சி அல்லது குழு வேட்பாளர்களுக்கிடையில் உள்ளக மோதல்கள் ஏற்படுவதையும் தவிர்க்க முடியாது. இது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தடையாக அமைகின்ற ஒரு நிலைமை என்பதால் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் போட்டியிடுவதற்கான சமகளமொன்றை உருவாக்குவதற்காக கட்சிகளின் மற்றும் குழுக்களின், வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களைக் (Campaign Finance) கட்டுப் படுத்துவதற்காக சட்டங்கள் விதிக்கப்படல் வேண்டும்.

## 46. முடிவுரை மற்றும் பாராட்டுக்கள்.

i. சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தலொன்றை நடாத்துவதற்காகப் பொதுவாக ஒன்றுக்கொன்று மாறுபட்ட பல்வேறு பணிகளை ஒழுங்முறையாக வும், சரியான அடிப்படையிலும் மற்றும் அவற்றுக்குரிய காலப்பகுதியினுள்ளும் செயற்படுத்த வேண்டியுள்ளது. ஒட்டுமொத்தமான செயற்பாட்டிற்குள் சிறியளவிலான விடயங்கள் போன்று தெரிகின்ற

விடயங்கள் மீது அக்கறை செலுத்துவது தொடர்பாக சிந்திக்காது செயற்பட்டால் ஒட்டு மொத்தமான செயற்பாடுகளும் தடைப்பட்டு வாக்கெடுப்புத் தினத்தில் எதிர்பாராத பிரச்சினை களுக்கு முகம் கொடுக்க நேரிடும். அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவது தேர்தலின் நம்பகத்தன்மை மற்றும் தேர்தல் ஆணைக்குழு தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் காணப்படு கின்ற நற்பெயயறுக்கு பாதிப்பு ஏற்படக் காரணமாக அமையலாம். ஆகையினால், உரிய தினத்தில் தேர்தலை நடாத்துவது கட்டாயத் தேவைப் பாடொன்றென்பதால் மற்றும் அதற்கான வேறு மாற்றீடொன்று இல்லாமை மீது தேர்தலுக்காக பணிகள் சரியானதாகவும் ஒழுங்கு முறையிலும் ஒழுங்கமைத்துக் கொள்ளல் தேர்தல் ஆணைக்குழு வின் பிரதான நோக்கமாகும்.

ii. தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம் தொடக்கம் அப்பணிகள் நிறைவடையும் வரையான காலப்பகுதியினுள் மொத்த அரச பொறிமுறையும் தமது நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி பணி களையும் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாகவும் மற்றும் தேர்தல் செயற்பாடுகளுக்கு தடையொன்று ஏற்படாதவாறு ஒழுங்கமைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது முன்னரிருந்தே காணப்படுகின்ற ஒன்றாகும். ஆதலால், இந்தத் தேர்தலும் பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் ஆணைக்குழுவின் வேண்டு கோளின் பேரில் சனாதிபதியின் செயலாளர் அவர்களால் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்களுக்கு தேர்தல் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்காகத் தேர்தல் ஆணைக்குழு வினால் கோருகின்றவாறு தேவையான அனைத்து ஒத்துழைப்பினையும் வழங்குமாறு சுற்றறிக்கை யொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக சனாதிபதியின் செயலாளருக்குத் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். பூர்வாங்க ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளின் ஆரம்பத்திலிருந்து தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்கள், அறிவித்தல்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக உயர்ந்த முக்கியத் துவம் வழங்கி அமைச்சரவைச் செயலாளர், அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் உட்பட அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள், நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் வழங்கிய உயர்ந்த உதவியினை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

iii. எதிர்பாராதவிதமாக எதிர்கொள்வதற்கு நேரிட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமையின் மீது அரச பொறிமுறை மாத்திரமன்றி மக்களின் இயல்பு வாழ்க்கையும் தடைப்பட்டுக் காணப்பட்ட போதிலும், வெற்றிகரமாகத் தேர்தலை நடாத்தும் சவாலை வெற்றி கொள்வதற்காக இரவு, பகல் களைப்புப் பாராமல் பணியாற்றி தங்களது காலம் மற்றும் உழைப்பை அர்ப்பணித்த மாவட்டத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் மாவட்டப் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவல கத்தின் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக தேர்தல் ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலகங் களின் அலுவலர்கள் மற்றும் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களின் பணியாட்குழுவினர், பூர்வாங்க ஒழுங்கமைப்புப் பணிகளுக்கு மற்றும் குழுக் கடமைகளை ஆற்றிய அலுவலர்களும் தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோர் வழங்கிய பங்களிப்பை மிக உயர்வாகப் பாராட்டப்படல் வேண்டும். எனவே, அரச சேவையின் சிரேஷ்ட அலுவலர்கள் தொடக்கம் தற்காலிக/அமய உதவியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் கையளிக்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் அலுவல்களை நேரம் மற்றும் தனிப்பட்ட கஷ்டங்களைக் கூடக் கருத்திற் கொள்ளாது மற்றும் அந்தப் பணிகளைத் நன்றாகத் திட்டமிட்டு அரச சேவையில் கௌரவம் மற்றும் நன்மதிப்பு என்பவற்றை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு செல்லும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஆணைக்குழுவுக்கு தைரியத்தை ஏற்படுத்தியது.

iv. நாட்டினுள் பரவிய கொவிட் தொற்றுநோயிக்கு மத்தியில் தேர்தல் பணிகளை ஒழுங்கமைப்புச் செய்யும் போது சுகாதார வழிகாட்டல்களை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்துவதில் விசேட ஒத்துழைப்பு வழங்கிய சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம், மருத்துவ பீடங்களின் விரி வுரையாளர்கள், விசேட வைத்தியர்கள், பொது சுகாதார வைத்திய அலுவலர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட அனைத்து சுகாதார அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகள் உரித்தாகும்.

v. தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் அனைத்து வேட்பாளர்கள் தேர்தல் ஆணைக்குழு வின் வேண்டுகோள் மற்றும் அறிவித்தலின் பேரில் தேவையான ஒத்துழைப்பை வழங்கி நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு வழங்கிய ஆதரவு பாராட்டப்படுதல் வேண்டும்.

vi. தேர்தல்களை நடாத்துவதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்ட தினம் தொடக்கம் வாக்குச் சீட்டுகள் உள்ளிட்ட படிவங்கள் உட்பட அனைத்து நியதிச்சட்ட எழுத்தாவணங்கள் மற்றும்

பொருட்களையும் அச்சிடுதல் மற்றும் அவற்றைத் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்த அரசாங்க அச்சகத்தின் அழுத்தகர் உட்பட பணியாட்குழுவினர், தேர்தலின் அஞ்சல் வாக்குகள், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், அலுவலர்களின் நியமனக் கடிதங்கள் உள்ளடங்கலாக அனைத்து எழுத்தாவணங் களையும் தாமதமின்றி பகிர்ந்தளிப்புச் செய்வ தற்கான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்த அஞ்சல் மா அதிபர், பிரதி அஞ்சல் மா அதிபர்கள், அஞ்சல் அத்தியட்சகர்கள் தலைமையிலான அஞ்சல் திணைக்களத்தின் பணியாட்குழுவினர், தேர்தல்கள் சட்டங்களை அமுலாக்கம் செய்தல் மற்றும் தேவையான பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைத்த பொலிஸ் மா அதிபதி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபதி (தேர்தல்கள்) உட்பட பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கிய பொலிஸ் திணைக்களத்தின் அனைத்து பணியாட் குழுவினர், விசேட அதிரடிப்படை பிரதானி உள்ளிட்ட அலுவலர்கள், பொது வசதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்ட இலங்கை மின்சார சபை, மின்சக்தி தனியார் கம்பனி, சில சந்தர்ப்பங்களில் மின்சார வசதி வழங்கிய தனியார் நிறுவனங்கள், இலங்கை ரெலிகொம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தலைவர் உள்ளிட்ட பணியாட்குழுவினர், தேர்தலின் போது போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய இலங்கைப் போக்குவரத்துச் சபை, வீதிப்போக்குவரத்து அதிகார சபை, தனியார் பஸ் வண்டி உரிமையாளர் சங்கம், வாடகை வாகனங்கள் சம்மேளனங்கள் மற்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு சிறந்த பதில் நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவம், கடற்படை, விமானப் படைத் தலைவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு தேர்தல் ஆணைக்குழுவின் பாராட்டுக்கள் உரித்தாகும்.

vii. தேர்தலின் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்துவ தற்காக குறித்த கணினி மென்பொருளைத் தயாரித்து வழங்கிய இலங்கை மென்பொருள் மன்றத்தின் (LSF) பணியாட் குழுவினர், அவர் களுடன் தொண்டு அடிப்படையில் (சுயமாக) பணியாற்றிய தரப்பினர்கள் ஆகியோரால் விசேட மான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக வாக்கெடுப்பு நிலையங்களின் தகவல் களைப் பெற்றுக் கொள்வதற்காக குறுந்தகவல் சேவை (SMS) மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கு கின்ற இலங்கைத் தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA), பசுமை (ஹரித்த) பல்கலைக் கழகம் (NSBM), கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணினிக் கல்லூரி (UCSC) இலங்கை கணினி அவசரத் தயார்நிலை அணி (SLCERT) ஆகிய நிறுவனங்களின் அலுவலர்கள் அனைவருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகளைத் தெரிவித் துக்கொள்வதற்கு விரும்புகின்றோம்.

viii. தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல் ஆணைக்குழு வின் பணிகள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக ஊடகக் கலந்துரையாடல்களை நடாத்துதல், ஊடக அறிவித்தல்களை வெளியிடு தல் மற்றும் அன்றாட செய்தி அறிக்கைகளை பொழிப்புப்படுத்தல் மற்றும் பெறுபேறுகளை ஊடக நிறுவனங்களுக்கு வெளியிடுதல் போன்ற பணிகளை செவ்வனே ஒருங்கிணைப்புச் செய்த அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அத்திணைக்களத்தின் அனைத்துப் பணியாட் குழுவினரையும் மரியாதையுடன் நினைவு கூறுகின்றோம். அதே போன்று தேர்தல் ஆணைக் குழுவின் வேண்டுகோளின் பேரில் இலத்திரனியல் அலைவரிசைகளின் அன்றாட செய்தி ஒளி/ஒலி பரப்பு மற்றும் அரசியல் நிகழ்ச்சித்திட்டங்களைக் கண்காணித்து அது தொடர்பான அறிக்கைகளை வழங்கி ஊடக வழிகாட்டு நெறிகளை செயல் வலுவாக்கம் செய்வதற்காக பாரிய பங்களிப்பை வழங்கிய தகவல் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பணியாட் குழுவினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ix. தேர்தல் மற்றும் தொடர்புடைய நியதிச்சட்ட விடயங்கள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத் துவதற்காக நேர்முக கலந்துரையாடல்களை நடாத்துதல், செய்திகள் / பத்திரிகைக் கலந்துரை யாடல்களை நடாத்துதல், உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் மற்றும் அறிவித்தல்களை பிரச்சாரம் செய்தல், பெறுபேறுகளைப் பிரச்சாரம் செய்தல் ஆகியவற்றுக்காகப் பரந்தளவிலான பிரச்சாரத்தை வழங்குதல் போன்ற பணிகளில் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அரச, தனியார் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங் களின் தலைவர்கள், செய்தித் தொகுப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணிக் குழுவினருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றிகள் உரித்தாகும்.

x. நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்த லொன்றை நடாத்துவதற்காக பாராளுமன்றத் தேர்தலின் கண்காணிப்பு அலுவல்களுக்காக பங்களிப்பு வழங்கிய அனைத்து உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பணியாட்குழுக்களின் அனைவரும் வழங்கிய ஒத்துழைப்பை உயர்வாகப் பாராட்டுதல் வேண்டும்.

xi. தேர்தல் பணிகளை முறையாக ஒழுங்கமைத்து நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துதல் மற்றும் தேர்தல் ஆணைக்குழு தொடர்பாக இலங்கை மக்களிடத்தில் காணப்படு கின்ற நம்பிக்கையை மேலும் உறுதி செய்து கொள்வதற்கு மேலே குறிப்பாகக் குறிப்பிடப் படாத போதிலும் பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் பாராட்டுக்களையும், நன்றி களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

**உசாத்துணை ஆவணங்கள் மற்றும் கோப்புகள்**

- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு
- 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்
- தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இலங்கையின் பாராளுமன்றத் தேர்தல்கள் (1947 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை) தொடர்பான நூல்
- 2020 பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழுவினால் பேணப்பட்ட கோப்புகள், ஆவணங்கள் மற்றும் புள்ளிவிபரக் குறிப்புகள்
- புள்ளடியின் பலம் செய்திச் சஞ்சிகை (மலர் iv, இதழ் 1- 2 - 2020)
- முன்னைய தேர்தல்கள் அறிக்கைகள்

## 47. அட்டவணைகள்

**பக்க இலக்கம்**


01. 1931 - 2020 வரை இலங்கையில் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான தகவல்கள். 89

02. உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதி நடாத்தப்படும் என்ற 2165/8 ஆம் இலக்க மற்றும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 90

03. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவின் கீழான கட்டளைக்கமைய வாக்கெடுப்பு நடாத்தப்படும் திகதி 2020.06.20 ஆம் திகதியாகும் என்ற 2172/3 ஆம் இலக்க மற்றும் 2020.04.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 92

04. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவின் கீழான கட்டளைகளுக்கமைய வாக்கெடுப்பு நடாத்தப்படும் திகதி 2020.08.05 ஆம் திகதியாகும் என்ற 2179/17 ஆம் இலக்க மற்றும் 2020.06.10 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 94

05. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் பதவிப் பெயரில் பெயர் குறிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை ஒவ்வொரு தேர்தல்கள் மாவட்டங்களிற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் செய்வதற்காக வெளியிடப்பட்ட 2165/19 ஆம் இலக்க 2020.03.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 95

06. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் பதவிப் பெயரில் பெயர் குறிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை ஒவ்வொரு தேர்தல்கள் மாவட்டங்களிற்காக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் செய்தல் தொடர்பான 2165/20 ஆம் இலக்க மற்றும் 2020.03.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 97

07. பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில் உள்ளடக்கப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் சுயேச்சைக் குழுக்களால் வைப்புச் செய்யப்படவேண்டிய வைப்புப் பணத்தொகை குறிப்பிடப் பட்ட 2165/17 ஆம் இலக்க 2020.03.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 99

08. 2021.03.16 ஆம் திகதி அரசாங்க விசேட விடுமுறை தினத்திற்குரிய ஊடக அறிவித்தல் இலக்கம் 16. 101

09. பெயர் குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளித்தல் தொடர்பில் வெளியிடப்பட்ட PE/2020/INFO படிவம். 102

10. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலின் பிரகாரம் வாக்கெடுப்புக் காலத்தை மு.ப. 07.00 மணி தொடக்கம் பி.ப. 05.00 மணி வரை காலநீடிப்புச் செய்தல் தொடர்பான 2184/18 ஆம் இலக்க 2020.07.15 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 103

11. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தலுக்கு அமைய இறந்த வேட்பாளர் தொடர்பான 2180/18 ஆம் இலக்க 2020.06.16 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 105

12. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தலுக்கு அமைய இறந்த வேட்பாளர் தொடர்பான 2186/47 ஆம் இலக்க 2020.08.01 ஆம் திகதிய அதிவிசேடவர்த்தமானி அறிவித்தல். 106

13. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தலுக்கு அமைய இறந்த வேட்பாளர் தொடர்பான 2186/48 ஆம் இலக்க 2020.08.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 107

14. (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புக் கட்டளைச் சட்டத்திற்கமைய சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் உள்ளடக்கப்பட்ட 2184/34 ஆம் இலக்க 2020.07.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 108

15. உடல் வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்ட நபர்களுக்காக விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல் தொடர்பான ஊடக அறிவித்தல் மற்றும் மாதிரிப்படிவம். 111

**பக்க இலக்கம்**


16. வலிமையிழப்பொன்றிற்கு உட்பட்ட வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளரொருவரை உடனழைத்துச் செல்வதற்கான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல் தொடர்பான பத்திரிகை அறிவித்தல். 113

17 பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் கீழ் அரச மற்றும் தனியார் துறைகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விடுமுறை வழங்குதல் தொடர்பான பத்திரிகை அறிவித்தல். 115

18. தேர்தல் பிணக்கு முகாமைத்துவப் பொறிமுறை. 116

19. அரசியலமைப்பின் 104 ஆ(4)(அ) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க வளங்களின் துஷ்பிரயோகம் தொடர்பான பணிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட 2178/29 ஆம் இலக்க 2020.06.06 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 117

20. அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை அமைத்தல் தொடர்பான விபரங்கள். 124

21. அரசியலமைப்பின் 104 ஆ(5)(அ) ஆம் உறுப்புரைக்கமைய ஊடக வழிகாட்டு நெறிகள் உள்ளடக்கப் பட்ட 2178/24 ஆம் இலக்க 2020.06.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 125

22. அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2178/24 மற்றும் 2020.06.03 ஆம் திகதிய ஊடக வழிகாட்டு நெறிகளுக்கு மேலதிகமாக வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டு நெறிகள் உள்ளடக்கப் பட்ட 2184/51 ஆம் இலக்க 2020.07.17 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 131

23. பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கான தொலைக்காட்சி மற்றும் வானொலி அரசியல் வானலைப் பிரச்சாரத்தின் போது பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள். 132

24. போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க நெறிமுறைகள் உள்ளடக்கப்பட்ட 2178/25 ஆம் இலக்க 2020.06.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 134

25. 2184/52 ஆம் இலக்க 2020.07.17 ஆம் திகதி மேலதிகமாக வெளியிடப்பட்ட ஒழுக்க நெறிமுறைகள் உள்ளடக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 144

26. தேர்தல்கள் கண்காணிப்புக்காக அனுமதி பெற்ற கண்காணிப்பு நிறுவனங்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள். 145

27. அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழான வெளிப்படுத்துகைக்குரிய 2188/2 ஆம் இலக்க 2020.08.10 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 147

28. அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழான வெளிப்படுத்துகைக்குரிய 2188/46 ஆம் இலக்க 2020.08.14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 149

29. அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழான வெளிப்படுத்துகைக்குரிய 2206/22 ஆம் இலக்க மற்றும் 2020.12.18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 150

30. அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழான வெளிப்படுத்துகைக்குரிய 2232/34 ஆம் இலக்க 2021.06.18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 151

**1931 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கையில் நடாத்தப்பட்ட தேர்தல்கள் தொடர்பான தகவல்கள்**

| தேர்தலின் பெயர் | தேர்தல்கள் மாவட்டங்களின் எண்ணிக்கை | பாராளுமன்றம் கலைக்கப்பட்ட திகதி | பெயர் குறித்த நியமன காலப்பகுதி | தேர்தல் நடாத்தப்பட்ட திகதி | புதிய பாராளுமன்றம் கூடிய திகதி |
|---|---|---|---|---|---|
| முதலாவது அரசுப் பேரவைத் தேர்தல் | | | 1931.05.04 | 1931.06.13 | |
| இரண்டாவது அரசுப் பேரவைத் தேர்தல் | | | 1936.01.15 | 1936.02.22 தொடக்கம் 1936.03.07 திகதி வரை (14 நாட்கள்) | |
| பாராளுமன்றத் தேர்தல் (1) | 89 | 1947.07.07[1] | 1947.07.24 | 1947.08.23 தொடக்கம் 1947.09.20 திகதி வரை (19 நாட்கள்) | 1947.10.14 |
| பாராளுமன்றத் தேர்தல் (2) | 89 | 1952.04.08 | | 1952.05.24 தொடக்கம் 1952.05.30திகதி வரை (04 நாட்கள்) | 1952.06.10 |
| பாராளுமன்றத் தேர்தல் (3) | 89 | 1956.02.18 | | 1956.04.05 தொடக்கம் 1956.04.10 திகதி வரை (03 நாட்கள்) | 1956.04.19 |
| பாராளுமன்றத் தேர்தல் (4) | 145 | 1959.12.05 | | 1960.03.19 | 1960.03.30 |
| பாராளுமன்றத் தேர்தல் (5) | 145 | 1960.04.23 | | 1960.07.20 | 1960.08.05 |
| பாராளுமன்றத் தேர்தல் (6) | 145 | 1964.12.17 | | 1965.03.22 | 1965.04.05 |
| பாராளுமன்றத் தேர்தல் (7)[2] | 145 | 1970.03.25 | 1970.04.23 | 1970.05.27 | 1970.06.07 |
| பாராளுமன்றத் தேர்தல் (8)[3] | 160 | 1977.05.18 | 1977.06.06 | 1977.07.21 | 1977.08.04 |
| பாராளுமன்றத் தேர்தல் (9)[4] | 22[5] | 1988.12.20 | 1988.12.30 – 1989.01.06 | 1989.02.15 | 1989.03.09 |
| பாராளுமன்றத் தேர்தல் (10) | 22[5] | 1994.06.24 | 1994.07.04 – 1994.07.11 | 1994.08.16 | 1999.08.25 |
| பாராளுமன்றத் தேர்தல் (11) | 22[5] | 2000.08.18 | 2000.08.28 – 2000.09.04 | 2000.10.10 | 2000.10.18 |
| பாராளுமன்றத் தேர்தல் (12) | 22[5] | 2001.10.12 | 2001.10.20 – 2001.10.27 | 2001.12.05 | 2001.12.19 |
| பாராளுமன்றத் தேர்தல் (13) | 22[5] | 2004.02.07 | 2004.02.17 – 2004.02.24 | 2004.04.02 | 2004.04.22 |
| பாராளுமன்றத் தேர்தல் (14) | 22[5] | 2010.02.09 | 2010.02.19 – 2010.02.26 | 2010.04.08/201.04.20[6] | 2010.04.22 |
| பாராளுமன்றத் தேர்தல் (15) | 22[5] | 2015.06.26 | 2015.07.06 – 2015.07.13 | 2015.08.17 | 2015.09.01 |
| பாராளுமன்றத் தேர்தல் (16) | 22[5] | 2020.03.02 | 2020.03.12 – 2020.03.19 | 2020.08.05 | 2020.08.20 |

1. முதலாவது அரச பேரவைத் தேர்தலை நடாத்துவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்ட பிரகடனத்தின் திகதி (1947.07.09 ஆம் திகதிய 9/732 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்)
2. இலங்கை அரசியலமைப்பின் 42(1) ஆம் உறுப்புரையின் கீழ் ஏழாவது பாராளுமன்றம், 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி புதிய அரசியலமைப்பின் கீழ் முதலாவது தேசிய அரசபேரவையாக மாற்றப்பட்டது.
3. 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி கூடிய 8 ஆம் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை காலநீடிப்புச் செய்துகொள்வதற்காக மக்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டது.
4. 1978 ஆம் ஆண்டின் இலங்கைச் சனநாயக் சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் விகிதாசார பிரதிநிதித்துவமுறையின் கீழ் நடாத்தப்பட்ட முதலாவது பாராளுமன்றத் தேர்தல். 1982 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட நான்காவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் 161 (உ) உப உறுப்புரை திருத்தம் செய்யப்பட்டு தாபிக்கப்படுகின்ற முதலாவது பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 1989 ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி வரை இருக்குமெனக் கட்டளையிடப்பட்டது.
5. அரசியலமைப்பின் 96(4) ஆம் உறுப்புரைக்கமைய தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 160 ஆகும். அதேபோன்று அரசியலமைப்பின் 98 ஆம் உறுப்புரைக்கமைய ஒரு மாகாணத்திற்கு 04 உறுப்பினர்கள் வீதம் (9X4) 36 உறுப்பினர்களும், 99அ உறுப்புரைக்கமைய (தேசியபட்டியல்) 29 உறுப்பினர்களும் உள்ளடங்கலாக பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகும்.
6. நாவலப்பிட்டிய வாக்கெடுப்புப் பிரிவில் 34 வாக்கெடுப்பு நிலையங்களிலும் மற்றும் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் திருகோணமலை வாக்கெடுப்புப் பிரிவில் ஒரு வாக்கெடுப்பு நிலையத்திலும் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 48(2) பிரிவிற்கமைய வாக்கெடுப்பு மீண்டும் நடாத்தப்பட்ட தினம்.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/8 - 2020 මාර්තු මස 02 වැනි සඳුදා - 2020.03.02

2165/8 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

எனது இல.: PS/CSA/00/1/2/3

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 33 ஆம் உறுப்புரையின் பந்தி (2) இன் உப பந்தி (இ) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 70 ஆம் உறுப்புரையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமையவும், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான் -

(அ) இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதோடு, புதிய பாராளுமன்றத்தை இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு மே மாதம் பதினான்காம் திகதி கூடுமாறு அழைக்கின்றேன் என்றும் ;

(ஆ) இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் இருபத்தைந்தாம் திகதியை பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான திகதியாக நிர்ணயிக்கின்றேன் என்றும் ;

(இ) இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு மாச்சு மாதம் பன்னிரண்டாம் திகதி தொடங்கி, இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு மாச்சு மாதம் பத்தொன்பதாம் திகதி நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முடிவுறும் காலப்பகுதியைத் தெரிவு அத்தாட்சி அதிகாரிகளினால் வேட்புமனுப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் வேட்புமனுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய காலப்பகுதியாக குறித்துரைக்கின்றேன் என்றும் ; அத்துடன்

1A - G 31975 — 392 (2020/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஈ) இதற்கான அட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்தையும் அவ்வட்டவணையின் நிரல் I இல் அதற்கு நேரொத்ததாகவுள்ள குறிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப் படுவதை நாடிநிற்கும் வேட்பாளர்களுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டிய இடமாகக் குறித்துரைக்கின்றேன் என்றும் இத்தால் சகலரும் அறிக.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பீ. பி. ஜயசுந்தர,
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | வேட்புமனு தாக்கல் செய்யுமிடம் |
| இல. 1 - | கொழும்பு | மாவட்டச் செயலகம், கொழும்பு |
| இல. 2 - | கம்பஹா | மாவட்டச் செயலகம், கம்பஹா |
| இல. 3 - | களுத்துறை | மாவட்டச் செயலகம், களுத்துறை |
| இல. 4 - | கண்டி | மாவட்டச் செயலகம், கண்டி |
| இல. 5 - | மாத்தளை | மாவட்டச் செயலகம், மாத்தளை |
| இல. 6 - | நுவரெலியா | மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| இல. 7 - | காலி | மாவட்டச் செயலகம், காலி |
| இல. 8 - | மாத்தறை | மாவட்டச் செயலகம், மாத்தறை |
| இல. 9 - | அம்பாந்தோட்டை | மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை |
| இல. 10 - | யாழ்ப்பாணம் | மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் |
| இல. 11 - | வன்னி | மாவட்டச் செயலகம், வவுனியா |
| இல. 12 - | மட்டக்களப்பு | மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு |
| இல. 13 - | திகாமடுல்ல | மாவட்டச் செயலகம், அம்பாறை |
| இல. 14 - | திருகோணமலை | மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| இல. 15 - | குருநாகல் | மாவட்டச் செயலகம், குருநாகல் |
| இல. 16 - | புத்தளம் | மாவட்டச் செயலகம், புத்தளம் |
| இல. 17 - | அநுராதபுரம் | மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |
| இல. 18 - | பொலன்னறுவை | மாவட்டச் செயலகம், பொலன்னறுவை |
| இல. 19 - | பதுளை | மாவட்டச் செயலகம், பதுளை |
| இல. 20 - | மொனராகலை | மாவட்டச் செயலகம், மொனராகலை |
| இல. 21 - | இரத்தினபுரி | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி |
| இல. 22 - | கேகாலை | மாவட்டச் செயலகம், கேகாலை |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2172/3 - 2020 අප්‍රේල් මස 20 වැනි සඳුදා - 2020.04.20
2172/3 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

*24 (3) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(3) ஆம் உட்பிரிவின் கீழ் 2167/19 ஆம் இலக்க மற்றும் 2020.03.21 ஆந் திகதியன்ற, இதில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள தேர்தல் மாவட்டங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி நடைபெற மாட்டாதென வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பாக, அத்தேர்தல் மாவட்டங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 2020, யூன் மாதம் 20 ஆந் திகதி நடைபெறுமென இத்தால் அறியத் தரப்படுகின்றது.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தவிசாளர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*என். ஜே. அபேசேகர,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*தேர்தல் ஆணைக்குழு,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய,*
*2020, ஏப்பிறல் 20.*

1A - PG 4968 — 267 (2020/04)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

### தேர்தல் மாவட்டத்தின் இலக்கங்களும் பெயரும்

1. கொழும்பு
2. கம்பஹா
3. களுத்துறை
4. மஹநுவர
5. மாத்தளை
6. நுவரெலியா
7. காலி
8. மாத்தறை
9. அம்பாந்தோட்டை
10. யாழ்ப்பாணம்
11. வன்னி
12. மட்டக்களப்பு
13. திகாமடுல்ல
14. திருகோணமலை
15. குருநாகல்
16. புத்தளம்
17. அநுராதபுரம்
18. பொலன்னறுவை
19. பதுளை
20. மொணராகலை
21. இரத்தினபுரி
22. கேகாலை

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2179/17 - 2020 ජූනි මස 10 වැනි බදාදා - 2020.06.10

2179/17 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

24(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2020 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2020.03.02 ஆந் திகதிய 2165/8 ஆம் இலக்க, 2020.03.20 ஆந் திகதிய 2167/12 ஆம் இலக்க, 2020.03.21 ஆந் திகதிய 2167/19 ஆம் இலக்க, 2020.04.20 ஆந் திகதிய 2172/3 ஆம் இலக்க, 2020.06.09 ஆந் திகதிய 2179/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகள் தொடர்பானது.

மேற்குறித்த விடயம் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2020.04.20 ஆந் திகதிய 2172/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் இரண்டாம் பந்தி 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது :

"அத்தகைய தேர்தல் மாவட்டங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், 2020, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி நடாத்தப்படுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது."

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, யூன் 10.

1A - PG 4990 — 267 (2020/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/19 - 2020 මාර්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2020.03.03

*2165/19 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

*6(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் இவ்வறிவித்தல் வாயிலாக இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் பதவி வழியால் சொல்லப்படும் அலுவலர்களை இவ்வட்டவணையின் I ஆம் நிரலில் இயைந்த பதிவில் குறிக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.*

*தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளை மற்றும் ஆலோசனைகளுக்கமைய,*

*சமன் ஸ்ரீ ரத்நாயக்க,*
*தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.*

*தேர்தல் ஆணைக்குழு,*
*இராஜகிரிய,*
*2020, மாச்சு 03.*

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *இல. 01 - கொழும்பு* | *மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், கொழும்பு நிருவாக மாவட்டம்* |
| *இல. 02 - கம்பஹா* | *மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், கம்பஹா நிருவாக மாவட்டம்* |
| *இல. 03 - களுத்துறை* | *மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், களுத்துறை நிருவாக மாவட்டம்* |
| *இல. 04 - மஹநுவர* | *மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், கண்டி நிருவாக மாவட்டம்* |

1A - G 31978 — 92 (2020/03)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| இல. 05 - மாத்தளை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மாத்தளை நிருவாக மாவட்டம் |
| இல. 06 - நுவரெலியா | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், நுவரெலியா நிருவாக மாவட்டம் |
| இல. 07 - காலி | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், காலி நிருவாக மாவட்டம் |
| இல. 08 - மாத்தறை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மாத்தறை நிருவாக மாவட்டம் |
| இல. 09 - அம்பாந்தோட்டை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டம் |
| இல. 10 - யாழ்ப்பாணம் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், யாழ்ப்பாண நிருவாக மாவட்டம் |
| இல. 11 - வன்னி | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், வவுனியா நிருவாக மாவட்டம் |
| இல. 12 - மட்டக்களப்பு | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மட்டக்களப்பு நிருவாக மாவட்டம் |
| இல. 13 - திகாமடுல்ல | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், அம்பாறை நிருவாக மாவட்டம் |
| இல. 14 - திருகோணமலை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், திருகோணமலை நிருவாக மாவட்டம் |
| இல. 15 - குருநாகல் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், குருநாகல் நிருவாக மாவட்டம் |
| இல. 16 - புத்தளம் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், புத்தளம் நிருவாக மாவட்டம் |
| இல. 17 - அநுராதபுரம் | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், அநுராதபுர நிருவாக மாவட்டம் |
| இல. 18 - பொலன்னறுவை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், பொலன்னறுவை நிருவாக மாவட்டம் |
| இல. 19 - பதுளை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், பதுளை நிருவாக மாவட்டம் |
| இல. 20 - மொணராகலை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், மொணராகலை நிருவாக மாவட்டம் |
| இல. 21 - இரத்தினபுரி | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், இரத்தினபுரி நிருவாக மாவட்டம் |
| இல. 22 - கேகாலை | மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர், கேகாலை நிருவாக மாவட்டம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/20 - 2020 මාර්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2020.03.03

2165/20 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

6(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் இவ்வறிவித்தல் வாயிலாக இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் பதவி வழியால் சொல்லப்படும் அலுவலர்களை இவ்வட்டவணையின் I ஆம் நிரலில் இயைந்த பதிவில் குறிக்கப்பட்டுள்ள தேர்தல் மாவட்டங்களின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளை மற்றும் ஆலோசனைகளுக்கமைய,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
2020, மாச்சு 03.

1A - G 31979 — 92 (2020/03)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| இல. 01 - கொழும்பு | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், நகர தேர்தல்கள் அலுவலகம், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், நகர தேர்தல்கள் அலுவலகம், கொழும்பு நிருவாக மாவட்டம் |
| இல. 02 - கம்பஹா | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கம்பஹா மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கம்பஹா வடக்குத் தேர்தல்கள் அலுவலகம், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், கம்பஹா தேர்தல்கள் அலுவலகம், கம்பஹா நிருவாக மாவட்டம் |
| இல. 03 - களுத்துறை | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், களுத்துறை நிருவாக மாவட்டம் |
| இல. 04 - மஹநுவர | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், கண்டி நிருவாக மாவட்டம் |
| இல. 05 - மாத்தளை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மாத்தளை நிருவாக மாவட்டம் |
| இல. 06 - நுவரெலியா | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், நுவரெலியா நிருவாக மாவட்டம் |
| இல. 07 - காலி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், காலி நிருவாக மாவட்டம் |
| இல. 08 - மாத்தறை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மாத்தறை நிருவாக மாவட்டம் |
| இல. 09 - அம்பாந்தோட்டை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டம் |
| இல. 10 - யாழ்ப்பாணம் | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், யாழ்ப்பாண நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கிளிநொச்சி நிருவாக மாவட்டம் |
| இல. 11 - வன்னி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், வவுனியா நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மன்னார் நிருவாக மாவட்டம் |
| | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், முல்லைத்தீவு நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், வவுனியா தேர்தல்கள் அலுவலகம், வவுனியா நிருவாக மாவட்டம் |
| இல. 12 - மட்டக்களப்பு | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மட்டக்களப்பு நிருவாக மாவட்டம் |
| இல. 13 - திகாமடுல்ல | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அம்பாறை நிருவாக மாவட்டம் |
| இல. 14 - திருகோணமலை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், திருகோணமலை நிருவாக மாவட்டம் |
| இல. 15 - குருநாகல் | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், குருநாகல் நிருவாக மாவட்டம் |
| | நிருவாக அலுவலர், குருநாகல் தேர்தல்கள் அலுவலகம், குருநாகல் நிருவாக மாவட்டம் |
| இல. 16 - புத்தளம் | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், புத்தளம் நிருவாக மாவட்டம் |
| இல. 17 - அநுராதபுரம் | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அநுராதபுர நிருவாக மாவட்டம் |
| இல. 18 - பொலன்நறுவை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், பொலன்நறுவை நிருவாக மாவட்டம் |
| இல. 19 - பதுளை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், பதுளை நிருவாக மாவட்டம் |
| இல. 20 - மொணராகலை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், மொணராகலை நிருவாக மாவட்டம் |
| இல. 21 - இரத்தினபுரி | பிரதித் தேர்தல்கள் ஆணையாளர், இரத்தினபுரி நிருவாக மாவட்டம் |
| இல. 22 - கேகாலை | உதவித் தேர்தல்கள் ஆணையாளர், கேகாலை நிருவாக மாவட்டம் |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2165/17 - 2020 මාර්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2020.03.03
2165/17 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2020

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் சுயேச்சைக் குழுக்களினால் வைப்புப் பணம் வைப்பிலிடுதலும் அந்தந்த மாவட்டத்திற்கு அரசியற் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களினால் பெயர் குறிக்க வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும்*

மேற்கூறப்பட்ட தேர்தலில், தேர்தல் மாவட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, பெயர்குறித்த நியமனப்பத்திரம் ஒன்றின் மூலம் பெயர்குறிக்க வேண்டியுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்பிலிட வேண்டிய வைப்புப் பணம் என்பன கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினால் வைப்புப் பணம் வைப்பிலிட வேண்டியதில்லை.

**அட்டவணை**

| தேர்தல் மாவட்டத்தின் பெயர் | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | பெயர்குறித்த நியமனப்பத்திரமொன்றில் உட்சேர்க்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை | சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்பிலிட வேண்டிய வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1 - கொழும்பு | 19 | 22 | ரூபா 44,000/- |
| 2 - கம்பஹா | 18 | 21 | ரூபா 42,000/- |
| 3 - களுத்துறை | 10 | 13 | ரூபா 26,000/- |
| 4 - மஹநுவர | 12 | 15 | ரூபா 30,000/- |

1A - G 31976 — 92 (2020/03)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** (தொடர்ச்சி)

| தேர்தல் மாவட்டத்தின் பெயர் | தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை | பெயர்குறித்த நியமனப்பத்திரமொன்றில் உட்சேர்க்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை | சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்பிலிட வேண்டிய வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 5 - மாத்தளை | 05 | 08 | ரூபா 16,000/- |
| 6 - நுவரெலியா | 08 | 11 | ரூபா 22,000/- |
| 7 - காலி | 09 | 12 | ரூபா 24,000/- |
| 8 - மாத்தறை | 07 | 10 | ரூபா 20,000/- |
| 9 - அம்பாந்தோட்டை | 07 | 10 | ரூபா 20,000/- |
| 10 - யாழ்ப்பாணம் | 07 | 10 | ரூபா 20,000/- |
| 11 - வன்னி | 06 | 09 | ரூபா 18,000/- |
| 12 - மட்டக்களப்பு | 05 | 08 | ரூபா 16,000/- |
| 13 - திகாமடுல்ல | 07 | 10 | ரூபா 20,000/- |
| 14 - திருகோணமலை | 04 | 07 | ரூபா 14,000/- |
| 15 - குருநாகல் | 15 | 18 | ரூபா 36,000/- |
| 16 - புத்தளம் | 08 | 11 | ரூபா 22,000/- |
| 17 - அநுராதபுரம் | 09 | 12 | ரூபா 24,000/- |
| 18 - பொலன்னறுவை | 05 | 08 | ரூபா 16,000/- |
| 19 - பதுளை | 09 | 12 | ரூபா 24,000/- |
| 20 - மொனராகலை | 06 | 09 | ரூபா 18,000/- |
| 21 - இரத்தினபுரி | 11 | 14 | ரூபா 28,000/- |
| 22 - கேகாலை | 09 | 12 | ரூபா 24,000/- |

2. யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய நிருவாக மாவட்டங்களுக்குரிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், யாழ்ப்பாண அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளராவார். மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களுக்குரிய வன்னி தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், வவுனியா மாவட்டத்தின் அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர் ஆவார். திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர், அம்பாறை மாவட்டத்தின் அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர் ஆவார். ஏனைய அந்தந்த நிருவாக மாவட்டங்களுக்குரிய தேர்தல் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள்/ மாவட்டச் செயலாளர்கள் அந்த தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாவார்கள்.

3. வைப்புப் பணம் வைப்பிலிடுதல், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தேர்தலை நடாத்தும்படிக்கான நாட்கள் குறிக்கப்பட்ட கட்டளை வெளியிடப்பட்ட நாளிலிருந்து சுயேச்சைக் குழுக்களுக்கான பெயர்குறித்த நியமனப்பத்திரங்கள் குறித்த தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்க முன்னரான காலப்பகுதியினுள் அந்தந்தக் குழுவினால் பெயர்குறித்து நியமனம் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் இரண்டாயிரம் ரூபா வீதம் கணக்கிடப்பட்ட பணத் தொகையொன்றைச் செல்லுபடியான பணத்தால் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கிழமையின் கடமை நாட்களில் சாதாரண அலுவலகக் காலப்பகுதியினுள் வைப்பிலிடுதல் வேண்டும்.

4. வைப்புப் பணம் கையேற்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் குறிப்பிட்ட மாவட்டச் செயலகத்தில் அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளை மற்றும் ஆலோசனைகளுக்கமைய,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

தேர்தல் ஆணைக்குழு,
இராஜகிரிய,
2020, மாச்சு 03.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஊடக அறிவித்தல் 16

தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல்கள் - 2020.04.25

2020 மார்ச் மாதம் 16 ஆம் திகதி திங்கட் கிழமை அரச விடுமுறை தினமாக பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதால் பாராளுமன்றத் தேர்தலுக்கான வைப்புப் பணம் கையேற்றல் அல்லது பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல் மார்ச் மாதம் 16 ஆம் திகதி மேற்கொள்ளப்பட மாட்டாதெனத் தேர்தல் ஆணைக்குழு சார்பாக இத்தால் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

இதற்கு முன்னர் அறிவித்தல் கொடுக்கப்பட்டவாறு மார்ச் மாதம் 17, 18 ஆகிய இரு தினங்களில் அலுவலக நேரத்தினுள்ளும் மற்றும் மார்ச் 19 ஆம் திகதி முற்பகல் 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை வைப்புப் பணம் கையேற்றல் மற்றும் பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்றல் என்பன மேற்கொள்ளப்படுமெனவும் மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

மார்ச் மாதம் 19 ஆம் திகதி பெயர் குறித்த நியமனம் மற்றும் ஆட்சேபனை தெரிவித்தல் அலுவல்கள் நிறைவடைந்த பின்னர் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(1) ஆம் பிரிவின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் வாக்கெடுப்புப் பற்றிய அறிவித்தல் வெளியிடப்படும்.

மார்ச் மாதம் 16 ஆம் திகதி அரச விடுமுறை தினமொன்றெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை மார்ச் மாதம் 17 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை கையேற்பதற்கு அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய.
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு சார்பாக.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020.03.15.

## பாராளுமன்றத் தேர்தல் - 2020

**பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளிக்கவுள்ள அனைவரதும் கவனத்திற்கான தயவன்புடனான அறிவித்தல்.**

கையளிக்கப்பட்ட பெயர்குறித்த நியமனப் பத்திரங்கள் மீண்டும் பெற்றுக்கொள்வதற்குச் சட்டத்தில் அவகாசம் இல்லையென்பதால் உங்கள் பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளிப்பதற்கு முன்னர் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பரீட்சித்துப் பார்த்து திருப்தியடைந்ததன் பின்னர் மாத்திரம் அந்தப் பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைத் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

01. தேர்தல் மாவட்டத்தின் இலக்கம் மற்றும் பெயர் உரிய இடத்தில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதென்பது ☐

02. பெயர்குறித்த நியமனப் பத்திரம் கையளிக்கப்படுவது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று சார்பாக எனில் அந்தக்கட்சியின் பெயரும் சுயேச்சைக் குழுவொன்று சார்பாக எனில் அந்த சுயேச்சைக் குழுவின் தலைவரின் பெயரும் குறித்த இடத்தில் சரியாக உட்சேர்க்கப்பட்டுள்ள தென்பது மற்றும் தேவையற்ற சொற்கள் வெட்டிவிடப்பட்டுள்ளதென்பது ☐

03. குறித்த தேர்தல் மாவட்டம் சார்பாக பெயர்குறித்து நியமனஞ் செய்ய வேண்டி வேட்பாளர்கள் அனைவரதும் பெயர் (தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கப்பால் வேறு பெயர்கள் அல்லது எழுத்துக்கள் பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் உட்சேர்க்கப்பட்டுள்ளதென்பது (15(1) உட்பிரிவு) ☐

04. பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டள்ள வேட்பாளர்கள் அனைவரினாலும் பெயர் குறித்த நியமனப் பத்திரத்தில், போட்டியிடுவதற்கு தனது விருப்பத்தை தெரிவிக்கின்ற மற்றும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான எந்தவொரு தகைமையீனத்திற்கும் தாம் உட்படவில்லை என்பதற்கான கையொப்பம் தமது பெயரின் எதிரில் இடப்பட்டுள்ளதென்பது (15(2) உட்பிரிவு) ☐

05. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் பெயர் குறித்த நியமனம் பத்திரமொன்றெனில், அந்த அரசியல் கட்சியின் செயலாளர் அவர்களாலும், சுயேச்சைக் குழுவொன்றெனில் அந்தக் குழுவின் தலைவரினாலும் பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளதென்பது (15(3) உட்பிரிவு) ☐

06. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவரின் கையொப்பம் சமாதான நீதவான் ஒருவரினால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால் உரியவாறு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதென்பது (15(3) உட்பிரிவு) ☐

07. பெயர்குறித்த நியமனப் பத்திரம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளிக்கப்படுவது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் விடயத்தில், அக்கட்சியின் செயலாளர் அல்லது பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் (அதிகாரமளிக்கப்பட்ட முகவரினால்) மற்றும் சுயேச்சைக் குழுவொன்றின் விடயத்தில், அந்த பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் முதலாவ தாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சுயேச்சைக் குழுத்தலைவரினால் (பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் முதலாவதாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு) ஏதேனும் காரணமொன்றின் காரணமாக பெயர்குறித்த நியமனப் பத்திரத்தை கையளிப்பதற்கு கலந்துகொள்ள முடியாதபோது மாத்திரம் இரண்டாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபருக்கு கையளிக்க முடியுமென்பது (15(4) உட்பிரிவு) ☐

08. பெயர்குறித்த நியமனப் பத்திரம் கையளிக்கப்படுவது அலுவலக நேரத்தினுள் அல்லது பெயர்குறித்த நியமனக் காலப்பகுதி முடிவடையும் தினம் நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் என்பது (15(4) உட்பிரிவு) ☐

09. சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்படும் பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் 2000 ரூபா வீதம் வேட்பாளர்கள் அனைவருக்காகவும் கணக்கிடப்பட்ட தொகை வைப்புச் செய்தல் தொடர்பாக வழங்கப்பட்ட பற்றுச் சீட்டின் பிரதி பெயர்குறித்த நியமனப் பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ளதென்பது (வைப்புப் பணம் வைப்புச் செய்தல் பெயர்குறித்த நியமன இறுதித் தினம் நண்பகல் 12 மணிக்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும். (15 உட்பிரிவு) ☐

10. ஒவ்வொரு வேட்பானரினாலும் அரசியல் யாப்பின் ஏழாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு முறையான அத்தாட்சிப்படுத்தப்பட்ட சத்தியம் அல்லது உறுதியுரை பெயர்குறித்த நியமனப் பத்திரத்தோடு இணைக்கப்பட்டுள்ளதென்பது (15(2) உட்பிரிவு) ☐

11. அனைத்து வேட்பாளர்களினதும் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதியொன்று வீதம் பெறப்பட்டுள்ளதென்பது ☐

12. பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான படிவம் ☐

13. அனைத்து வேட்பாளர்களினதும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை வழங்கப்பட்டுள்ள தென்பது (பெயர்குறித்த நியமனம் கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கையளிப்பதில்லையெனில் மூன்று மாதங்களுக்குள் கையளிக்க முடியுமெனவும், மிகவும் பொருத்தமானது உடனடியாகக் கையளிப்பது எனவும் அறிவிக்கவும். ☐

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/18 - 2020 ජූලි මස 15 වැනි බදාදා - 2020.07.15

2184/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

33 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2020 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2165/8 ஆம் இலக்க, 2020.03.02 ஆந் திகதிய, 2167/12 ஆம் இலக்க, 2020.0320 ஆந் திகதிய, 2167/19 ஆம் இலக்க, 2020.03.21 ஆந் திகதிய, 2172/3 ஆம் இலக்க, 2020.04.20 ஆந் திகதிய, 2179/7 ஆம் இலக்க, 2020.06.09 ஆந் தகிதிய மற்றும் 2179/17 ஆம் இலக்க, 2020.06.10 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகைகள் தொடர்பானது.

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2167/ 12 ஆம் இலக்க, 2020.03.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "II. அந்த ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமான தேர்தல் 2020, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி சனிக்கிழமை மு. ப. 7.00 மணி முதல் பி. ப. 4.00 மணி வரை இடம்பெறுமெனவும் ; 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(i) (அ) மற்றும் (இ) ஆம் பிரிவுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது" எனும் கட்டளை, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவிற்கமைய 2020 ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிய, 2172/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலூடாக அந்தத் திகதி 2020.06.20 ஆந் திகதியென விதித்துரைக்கப்பட்டுள்ளது. அந்த விதித்துரைப்பும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 ஆம் மற்றும் 33 ஆம் பிரிவுகளின் அதிகாரங்களுக்கிணங்க கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் திருத்தம் செய்யப்படுகின்றது.

"II. அந்த ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் வாக்கெடுப்பு 2020 ஒகத்து மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 7.00 மணி முதல் பி. ப. 5.00 மணிவரை இடம்பெறுமெனவும் ;

1A - PG 5060 — 267 (2020/07)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(1)(அ) மற்றும் (இ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.".*

| | | |
|---|---|---|
| *மஹிந்த தேசப்பிரிய,* | *என். ஜே. அபேசேகர,* | *எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,* |
| *தவிசாளர்,* | *அங்கத்தவர்,* | *அங்கத்தவர்,* |
| *தேர்தல் ஆணைக்குழு.* | *தேர்தல் ஆணைக்குழு.* | *தேர்தல் ஆணைக்குழு.* |

*தேர்தல் ஆணைக்குழு,*
*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய,*
*2020, யூலை 15.*

*07-788*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2180/18 - 2020 ජූනි මස 16 වැනි අඟහරුවාදා - 2020.06.16

*2180/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

*25(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

இத்தால் பின்வருமாறு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

(அ) இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 6 ஆம் இலக்க நுவரெலியா தேர்தல் மாவட்டத்துக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண கட்சியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளராகவிருந்த திரு. ஆறுமுகன் தொண்டமான் என்பவரின் இறப்பு 2020, மே மாதம் 26 ஆந் திகதியன்று ஏற்பட்டது.

(ஆ) அத்தகைய இறப்பு எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட திரு. ஆறுமுகன் தொண்டமான் என்பவரின் பெயரை விட்டுவிட்டு, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண கட்சியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான திரு. ஜீவன் தொண்டமான் என்பவரை உள்ளடக்குவதாக, அந்தத் தேர்தல் மாவட்டத்திற்கென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுண கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப் பத்திரமானது, செல்லுபடியுடையதாகும் என்பதுடன், அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 24 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு 2020, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று நடைபெறுதல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேகர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, யூன் 16.

1A – G 32262–67 (2020/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2186/47 - 2020 අගෝස්තු මස 01 වැනි සෙනසුරාදා - 2020.08.01

2186/47 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகஸ்து மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

*25 (3) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

இத்தால் பின்வருமாறு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

(அ) இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 1 ஆம் இலக்க, கொழும்பு தேர்தல் மாவட்டத்துக்கு சுயேச்சைக் குழு 26 இன் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளராகவிருந்த திரு. ஜயவர்தனகே சுனில் பெரேரா என்பவரின் இறப்பு 2020, யூன் மாதம் 10 ஆந் திகதியன்று ஏற்பட்டது ;

(ஆ) அத்தகைய இறப்பு எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட திரு. ஜயவர்தனகே சுனில் பெரேரா என்பவரின் பெயரை விட்டுவிட்டு, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் சுயேச்சைக் குழு 26 இனால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான திருமதி அவிலொர கலப்பத்திகே பிரியந்தி அருணா கப்புகொட்டுவ என்பவரை உள்ளடக்குவதாக, அந்தத் தேர்தல் மாவட்டத்திற்கென சுயேச்சைக் குழு 26 இனால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப்பத்திரமானது, செல்லுபடியுடையதாகும் என்பதுடன், அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு 2020, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று நடைபெறுதல் வேண்டும்.

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**என். ஜே. அபேசேகர,**
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,**
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, ஓகத்து 01.

1A - PG 5007 — 267 (2020/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2186/48 - 2020 අගෝස්තු මස 01 වැනි සෙනසුරාදා - 2020.08.01

2186/48 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்**

*25(3) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

இத்தால் பின்வருமாறு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

(அ) இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 16 ஆம் இலக்க, புத்தளம் தேர்தல் மாவட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளராகவிருந்த திரு. அஷோக்க வடிகமங்காவ என்பவரின் இறப்பு 2020, யூலை மாதம் 05 ஆந் திகதியன்று ஏற்பட்டது ;

(ஆ) அத்தகைய இறப்பு எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட திரு. அஷோக்க வடிகமங்காவ என்பவரின் பெயரை விட்டுவிட்டு, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான திரு. அபேசிங்ஹ ஹேரத் முதியன்சேலாகே காமினி அஷோக்க வடிகமங்காவ என்பவரை உள்ளடக்குவதாக, அந்தத் தேர்தல் மாவட்டத்திற்கென ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் நியமனப்பத்திரமானது, செல்லுபடியுடையதாகும் என்பதுடன், அத்தகைய தேர்தல் மாவட்டத்திற்கான வாக்கெடுப்பு மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு 2020, ஓகத்து மாதம் 05 ஆந் திகதியன்று நடைபெறுதல் வேண்டும்.

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**என். ஜே. அபேசேகர,**
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,**
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, ஓகத்து 01.

1A - PG 5008 — 267 (2020/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/34 - 2020 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2020.07.17

2184/34 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 40/1973* (I)

**(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டம்**

(222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 2 ஆம், 3 ஆம் பிரிவுகளின்கீழ், சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பவித்ரா வன்னிஆராச்சி,**
சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2020, யூலை 17.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொரோனா வைரஸ் தொற்று நோய் 2019 (கோவிற் - 19) (தேர்தல்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஒரு தேர்தற் காலப்பகுதியின்போது தேர்தலொன்று தொடர்பாகக் கூட்டமொன்றை ஒழுங்குபடுத்துவதற்கு உட்கருதுகின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய கூட்டம் தொடங்குவதற்குமுன்னர் இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குக் குறையாமல் எழுத்திலான அறிவித்தலை, அத்தகைய கூட்டம் எந்த இடப்பரப்பில் நடைபெறவுள்ளதோ அந்த இடப்பரப்பின் சுகாதார மருத்துவ அலுவலருக்குக் கொடுத்தல் வேண்டும்.

1A – PG 5005 – 517 (2020/07)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழான அறிவித்தலைக் கொடுக்கின்ற ஒழுங்கமைப்பாளர், அத்தகைய கூட்டத்துக்கு வருகைதரும் ஆட்களின் எண்ணிக்கை முந்நூறை விஞ்சாதிருத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அரசியற் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் தலைவர் அத்தகைய கூட்டத்தில் பங்குபற்றுமிடத்து, அத்தகைய கூட்டத்துக்கு வருகைதரும் ஆட்களின் எண்ணிக்கை ஐந்நூறை விஞ்சுதலாகாது.

4. ஒழுங்கமைப்பாளர் -

(அ) அத்தகைய கூட்டத்துக்கு வருகைதருகின்ற ஆள் ஒவ்வொருவரினதும் பெயர், அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொடர்புகொள்ளும் விபரம் பற்றிய பதிவேட்டை பேணுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கூட்டத்துக்கு வருகைதருகின்ற ஆட்களுக்குச் சவர்க்காரத்தினால் அல்லது கிருமிநீக்கியினால் கைகழுவுவதற்கான போதிய வசதியை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வளாவுகளுக்கு வருகைதருகின்ற ஆள் ஒவ்வொருவரும் அவ்வளவுகளினுட் பிரவேசிக்குமுன்னர் தமது கைகளைக் கழுவுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்;

(இ) அத்தகைய கூட்டத்துக்கு வருகைதருகின்ற பேச்சாளர்களுட்பட இரு ஆட்களிடையே ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) அத்தகைய கூட்டத்துக்கு வருகைதருகின்ற ஆள் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் முகக்கவசமொன்றை அணிந்திருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(உ) ஆளொருவரினால் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் உடனடியாக ஒலிபரப்பியுட்பட சாதனங்களைத் தொற்றுநீக்கஞ்செய்தல் வேண்டும் அல்லது தொற்றுநீக்கஞ்செய்வித்தல் வேண்டும்.

5. தேருநர்களின் வாக்குவேண்டி பிரசாரஞ்செய்யும் அல்லது துண்டுப்பிரசுரங்களை அல்லது வேறு அச்சிடப்பட்ட வெளியீடுகளை விநியோகிக்கும் நோக்கத்துக்காக ஒரு தேர்தற் காலப்பகுதியின்போது அத்தகைய தேருநர்களின் வீடுகளுக்கு விஜயம் செய்கின்ற ஓர் ஆட்கள் தொகுதியினர் ஐந்து பேரை விஞ்சுதலாகாது.

6. ஐந்தாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்கள் தொகுதியினர் -

(அ) எல்லா நேரங்களிலும் முகக்கவசமொன்றை அணிதல் வேண்டுமென்பதுடன் தமக்கிடையேயும், தமக்கிடையேயும் வீட்டிலுள்ள குடியிருப்பாளர்களுக்கிடையேயும் ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியைப் பேணுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) வீட்டிலுள்ள குடியிருப்பாளர்களுக்குத் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்குமுன்னர் தமது கைகளைக் கிருமிநீக்கஞ்செய்தல் வேண்டும்.

7. ஏதேனும் தேர்தலிலான வேட்பாளர் ஒவ்வொருவரும் -

(அ) அத்தகைய வேட்பாளரின் தேர்தல் அலுவலகத்துக்கும் அதன் வளாவுகளுக்கும் விஜயஞ்செய்கின்ற ஆட்களுக்குச் சவர்க்காரத்தினால் அல்லது கிருமிநீக்கியினால் கைகழுவுவதற்கான போதிய வசதியை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அலுவலகத்துக்கும் அதன் வளாவுகளுக்கும் விஜயஞ்செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும் வளாவுகளினுட் பிரவேசிப்பதற்குமுன்னர் தமது கைகளைக் கழுவுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய அலுவலகத்திலும் அதன் வளாவுகளிலும் இரு ஆட்களுக்கிடையே ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) அத்தகைய அலுவலகத்துக்கும் அதன் வளாவுகளுக்கும் விஜயஞ்செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் முகக்கவசமொன்றை அணிவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) அத்தகைய அலுவலகத்தினுள்ளும் அதன் வளாவுகளினுள்ளும் மதுபானம் எதுவும் கொண்டுவரப்படாதிருப்பதனை அல்லது உட்கொள்ளப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(உ) அத்தகைய அலுவலகத்திலும் அதன் வளாவுகளிலும் வாய்ப்பு விளையாட்டுக்கள் அல்லது திறனாட்டங்கள் எவற்றையும் விளையாடாதிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

8. ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்திலும் அதன் வளவுகளிலும், வாக்கெண்ணும் நிலையங்களிலும் அதன் வளவுகளிலும், தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்திலும் அதன் வளவுகளிலும் உள்ள ஆள் ஒவ்வொருவரும்-

(அ) வாக்கெடுப்பு நிலையத்தினுள்ளும் அதன் வளவுகளினுள்ளும், வாக்கெண்ணும் நிலையத்தினுள்ளும் அதன் வளவுகளினுள்ளும், தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகத்தினுள்ளும் அதன் வளவுகளினுள்ளும் பிரவேசிப்பதற்கு முன்னர் தமது கைகளைச் சவர்க்காரத்தினால் அல்லது கிருமிநீக்கியினால் கிருமிநீக்கஞ்செய்தல் வேண்டும்;

(ஆ) இரு ஆட்களிடையே ஒரு மீற்றருக்குக் குறையாத சமூக இடைவெளியைப் பேணுதல் வேண்டும்; அத்துடன்

(இ) எல்லா நேரங்களிலும் முகக்கவசமொன்றை அணிதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளில் -

"ஒரு தேர்தல் காலப்பகுதியின்போது" என்பது, விடயத்துக்கேற்ப, மக்கள் தீர்ப்பொன்றை எடுப்பதற்கான அல்லது தேர்தலொன்றை நடாத்துவதற்கான பிரகடனமொன்று அல்லது கட்டளையொன்று ஆக்கப்படுவதன்மீது தொடங்கி, விடயத்துக்கேற்ப, அத்தகைய மக்கள் தீர்ப்பில் அல்லது தேர்தலில் எடுக்கப்பட்ட வாக்கெடுப்பின் பெறுபேறு வெளிப்படுத்தப்படுகின்ற தேதியன்று முடிவடையும் காலப்பகுதி என்று பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

**ஊடக அறிவித்தல் - இல. 35**

**தேர்தல் ஆணைக்குழு**

**பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05**

**உடற்றகுதியீனம் உற்றுள்ளவர்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல்**

1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 83(4)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக ஏவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது ஏதேனும் பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரத திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் மக்கள் போக்குவரத்துச் சேவையொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொது போக்குவரத்து சேவையொன்றின் மூலம் வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய்வர முடியாதவராகவிருந்தால், தான் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேட்பாளரொருவர், தேர்தல் முகவர் ஒருவர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவர், பிரதேச முகவரொருவர் அல்லாத வேரொருவரோ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்க முடியும்.

02. இவ்வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக, அதாவது 2020 யூலை 29 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்கக்கூடியதாக சமர்ப்பித்தல் சட்டமுறையான தேவை யொன்றாகுமென்பதோடு, தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைவாராயின் அந்நபருக்கு விசேட போக்குவரத்து வசதியினைப் பெற்றுக்கொள்ளவதற்கான அனுமதிப்பத்திரங்களை விநியோக்கிக்க முடியும்.

03. விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் நபர், நடந்து அல்லது பொது வாகனங்களில் போகமுடியாதவாறு உடற்றகுதியீனமுற்றிருப்பதன் தன்மையை உறுதிப்படுத்தி பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து (மேல்நாட்டு அல்லது சுதேச வைத்தியர்) பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவாரெனில் அதற்கான முடிவை எடுக்க தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவியாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து சான்றிதழொன்றை சமர்ப்பிக்குமாறு அத்தகைய ஒருவர் அரசாங்க வைத்தியரொருவரிடம் / பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியரொருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரொருவரிடம் விண்ணப்பிக்கு மிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினைக் கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம். தனியார் (மேல்நாட்டு அல்லது சுதேச) வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

04. உடற்றகுதியீனம் உற்றுள்ளவரினால் விசேட போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2 ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கத்தக்கவாறு இத்துடனுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட விண்ணபப்பத்திரங்களை உரிய தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு (மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்) அல்லது மாவட்டத்தின் பிரதி அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் ஆணைக்குழு சார்பாக.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020.07.04

மாதிரி

### பாராளுமன்றத் தேர்தல் - 2020

### 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்

### 83 (4)(ஈ) ஆம் பிரிவின்கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்காக உடற்றகுதியீனமுற்றுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்.

………………………. தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு,

1. உடற்றகுதியீனம் உற்றுள்ளவரின் விபரங்கள்:

 (அ) முழுப் பெயர் : ……………………………………………………………………..
 (ஆ) அஞ்சல் முகவரி : ……………………………………………………………………..
 (இ) தேருநர் இடாப்பிலுள்ளவாறு வாக்கெடுப்புப் பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம், தொடர் இலக்கம் (தெரியுமாயின்) : ……………………………………………………………………..
 : ……………………………………………………………………..

2. உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான விபரம் : ………………………………………………...
………………………………………………………………………………………………

3. உடற்றகுதியீனம் உற்றவருக்காக வேறெவராலும் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுமாயின் அவரது பெயரும் முகவரியும் : ………………………………………………………………...
………………………………………………………………………………………………

4. இவ்விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின் / பதிவு செய்யப் பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின் / ஆயர்வேத வைத்தியரொரு வரின் / தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்பி வைக்கின்றேன்.

 வைத்தியரின் பெயர் : ……………………………………………………………………….
 பதிவிலக்கம் : ……………………………………………………………………….

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு / உடற்றகுதியீனமுற்றுள்ள மேலே பெயர் காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவை எதனிலாலும் ஏற்பாடு செய்யப்படும் போக்குவரத்து வசதி மூலம் வாக்களிப்பு நிலையத்திற்கு போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

6. மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலை யத்திற்குப் போய் வருவதற்கென நான் / உடற்றகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப் பட்டுள்ளவர் ஏதேனுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

……………………………
உடற்றகுதியீனமானவரின் / அவருக்காக
விண்ணப்பிக்கும் வேறொருவரின்
கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.

திகதி : …………….

# அறிவித்தல்

## தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

### வலிமையிழப்பொன்றிற்கு உள்ளான வாக்காளரொருவருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்குத் தேவையான சட்டவிதிகளை ஏற்பாடுசெய்தல்

2011 ஆம் ஆண்டின் 28 ஆம் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 40(2) பிரிவிற்கமைய 2020.08.05 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ கட்புலப் பாதிப்பொன்றிற்கு அல்லது வேறேதேனும் உடல் ரீதியான வலிமையிழப்பொன்றிற்கு உள்ளான வாக்காளர் ஒருவருக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச்சீட்டினை அடையாளமிட்டுக்கொள்வதற்காக உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்லக்கூடியவாறு புதிய சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

02. ஆயினும், அவ்வாறு உடனழைத்துச் செல்லும் அவ்வுதவியாளர் 18 வயதைப் பூர்த்திசெய்த ஒருவராக இருக்க வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவராக இருத்தலாகாது. அதேபோன்று, பாராளுமன்றத் தேர்தலில் அரசியற் கட்சியொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவராகவோ அல்லது பிரதேச முகவரொருவராகவோ அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் குழுத் தலைவராகவோ அல்லது வாக்கெடுப்புப் பிரிவின் முகவரொருவராகவோ அல்லது வாக்கெடுப்பு நிலைய முகவரொருவராகவோ செயலாற்றாத ஒருவராகவுமிருத்தல் வேண்டும். அத்துடன், ஏதேனும் வலிமையிழப்பொன்றிற்கு உட்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காக பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணை மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தகுதிச் சான்றிதழொன்றை உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் அலுவலர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இத்தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்தும், கிராம அலுவலர் அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். கட்புலப் பாதிப்பு அல்லது வேறேதேனும் உடல் வலிமையிழப்புக்குட்பட்ட ஆளொருவர், கிராம அலுவலரிடமிருந்து விண்ணப்பப்படிவமொன்றைப் பெற்று பூரணப்படுத்திக் கொடுத்து கிராம அலுவலரின் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதன் பின்னர், குறித்த சான்றிதழை அரசாங்க மருத்துவரொருவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். மருத்துவ அலுவலர் வாக்காளரைப் பரிசோதித்து அந்த சான்றிதழில் வாக்காளரின் தகுதியைக் குறிப்பிட்டு அத்தாட்சிப்படுத்துவார்.

05. வலிமையிழப்பிற்கு உள்ளான வாக்காளர், தனது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் ஏதேனுமோர் அடையாள அட்டையையும் இந்த தகுதிச் சான்றிதழையும் எடுத்துக்கொண்டு வாக்கெடுப்பு நிலையத்திற்கு உதவியாளருடன் செல்ல வேண்டும். வாக்கெடுப்பு நிலைய பணியாள்தொகுதியினர் வாக்காளரின் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் வாக்கெடுப்பு நிலையத்தின் வழமையான நடைமுறையைப் பின்பற்றி வாக்குச்சீட்டொன்று விநியோகிக்கப்படுவதுடன், அவ்வாக்குச்சீட்டை அடையாளமிட்டுக் கொள்வதற்காக உதவியாளருடன் வாக்காளர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஆற்றுப்படுத்தப்படுவார். உதவியாளரும் தனது தேசிய அடையாள அட்டையை அல்லது வாக்கெடுப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஏதேனும் அடையாள அட்டையொன்றை எடுத்துச் செல்லல் அத்தியாவசியமானதாகும்.

06. வாக்கெடுப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வாக்காளரின் தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டு, உடனழைத்துவந்தவரிடம் தகுதிச் சான்றிதழின் II ஆம் பாகத்தின் கீழ் காணப்படும் உரிய வெளிப்படுத்துகையைப் பெற்றுக்கொள்வார். அதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நிலைய பணியாள்தொகுதி அங்கத்தவரொருவருடன் வாக்காளரும் உதவியாளரும் வாக்களிப்புச் சிற்றறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பணியாள்தொகுதி அங்கத்தவரின் முன்னிலையில் வாக்குச்சீட்டு அடையாளமிடப்பட்டதும் அதை வாக்குச்சீட்டுப் பெட்டியில் இடச் செய்வார்.

07. மேற்கூறப்பட்ட தகுதிச் சான்றிதழொன்று இல்லாமல் வாக்கெடுப்பு நிலையத்திற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல முடியாதென்பது வலியுறுத்தப்படுகின்றது. வாக்களித்ததன் பின்னர் குறிப்பிட்ட தகுதிச் சான்றிதழை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தன் வசம் வைத்துக்கொள்வார்.

08. எவ்வாறாயினும், உதவியாளரொருவரை உடனழைத்து வரமுடியாத, வலிமையிழப்பிற்கு உட்பட்ட வாக்காளரொருவருக்கு தேவையாயின் இதற்கு முன்னைய தேர்தல்களின்போது போன்றே மற்றுமோர் அலுவலரின் முன்னிலையில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரைக் கொண்டு தனது வாக்குச்சீட்டை அடையாளமிட்டுக்கொள்வதற்கு வாய்ப்புள்ளதென்பதும் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2020.07.06

1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 40(2)(இ) ஆம் பிரிவின்படி வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவருக்கு வாக்களிப்பதற்கென வழங்கப்படும் தகுதிச்சான்றிதழ்.

## பாகம் I

## விண்ணப்பதாரரின்/ வாக்காளரின் வெளிப்படுத்துகை

முழுப்பெயர் :-..........................................................................

முகவரி :-..........................................................................

தொழில் :-..........................................................................

பிறந்த திகதி :-..........................................................................

தே.அ.அ./ சாரதி அனுமதிப்பத்திரம்/ கடவுச் சீட்டு இல :-..........................................................

.......................................................................... என்னும் முகவரியைச் சேர்ந்த ...........
..........................................................................
ஆகிய நான் ........................................... மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் ஒருவராகவிருந்து வலிமையிழப்பிற்கு உட்பட்டவராக இருக்கின்றமையால், மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் செவ்வையானவையுமாகும் என வெளிப்படுத்துவதுடன் எதிர்வரும் .................................... தேர்தலுக்காக சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வலிமையிழப்பிற்குட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு என்னை உரித்துடையவராக்கும் தகுதிச் சான்றிதழொன்றின் வழங்கீட்டிற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

திகதி : ..........................

வாக்காளரின் பெயர் : ...............................................

வாக்காளரின் கையொப்பம் : ...............................................

### கிராம அலுவலரின் சான்றிதழ்

மேலே தரப்பட்டுள்ள விபரம் சரியானதெனவும், ............................................... (விண்ணப்பதாரரின் / வாக்காளரின் பெயர்) என்பவரின் விண்ணப்பம் தொடர்பில் பின்வரும் தகவல்கள் என்னால் பேணப்படும் பதிவேடுகளுக்கிணங்க சரியானதெனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பெயர் :- ..........................................................................

வாக்காளர் நிரலிலுள்ள இல :- ..........................................................................

மாகாணம் :- ..........................................................................

மாவட்டம் :- ..........................................................................

வாக்கெடுப்பு மாவட்டம் :- ..........................................................................

இயைபான வேறு தகவல்கள் :- ..........................................................................

திகதி :- ..............

கிராம அலுவலரின் கையொப்பம் :- ...............................................

கிராம அலுவலரின் பெயர் :- ...............................................

பிரிவு :- ...............................................

இலச்சினை :- ...............................................

---

## பாகம் II

## அரசாங்க மருத்துவ அலுவலரின் சான்றிதழ்

எதிர்வரும் ............................ தேர்தலின் போது (தேர்தலின் பெயர்) வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆளொருவராக வாக்களிப்பதற்கு உரித்துடையவராவதற்கென விண்ணப்பித்துள்ள ..................................................................... என்ற முகவரியைச் சேர்ந்த ............................................................ என்பவரை நான் நேரடியாகப் பரீட்சித்தேன் என்பதுடன் ........................................ (வாக்காளரின்/ விண்ணப்பதாரியின் பெயர்) சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வலிமையிழப்பிற்கு உட்பட்ட ஆள் ஒருவராக வாக்களிப்பதற்கு உரித்துடையவராவார்/ உரித்துடையவராக மாட்டார் எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

திகதி :- ...............................................

அரசாங்க மருத்துவ அலுவலரின் பெயர் :- ...............................................

அரசாங்க மருத்துவ அலுவலரின் கையொப்பம் :- ...............................................

இலச்சினை :- ...............................................

---

(A) (விண்ணப்பப்பத்திரத்தின் தொடர் இல.)

**அலுவலக உபயோகத்திற்கு**

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் இந்தப் பகுதியை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும்.

- வாக்காளருடன் வந்த ஆளின் பெயர் :- ...............................................
- தேசிய அடையாள அட்டை இல :- ...............................................
- வதிவு முகவரி :- ...............................................

வலிமையிழப்பிற்குள்ளாகியிருக்கும் மேலே I ஆம் பகுதியில் பெயர் காணப்படும் வாக்காளர் சார்பாக வாக்கை அடையாளமிடுவதற்காக வந்த நான் இந்த பாராளுமன்றத் தேர்தலின் வேட்பாளரொருவரோ/ அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவரோ/ வாக்கெடுப்பு நிலைய முகவரொருவரோ அல்லது வாக்கெடுப்பு நிலைய பணிக்குழு அங்கத்தவரொருவரோ அல்லவெனவும் ஏதேனும் வலிமையிழப்பிற்குள்ளான ஆளொருவர் அல்லவெனவும் வெளிப்படுத்துகின்றேன்.

...............................................
உடன் வந்த ஆளின் கையொப்பம்

பெயர் :- ..........................................................................

சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் கையொப்பம் :- ...............................................

பெயர் :- ..........................................................................

வாக்கெடுப்பு நிலையம் :- ..........................................................................

இதன் பிரதியொன்றை வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னைய நாள் குறித்த சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

# அறிவித்தல்

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் – 2020.08.05

## அரச துறையிலும் தனியார் துறையிலும் பணிபுரிபவர்களுக்கு, தேசிய ரீதியில் நடாத்தப்படும் தேர்தல்களின்போது சம்பள அல்லது தனிப்பட்ட லீவு குறைப்பின்றி வாக்களிப்பதை இயலச்செய்யக்கூடிய விதத்தில் லீவு வழங்குதல்

தாம் வாக்களிப்பதை இயலச்செய்யக்கூடிய விதத்தில் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு லீவு வழங்குவதற்கு தொழில்தருநர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 122 ஆம் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதுடன், 2020.08.05 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலின்போதும் குறித்த ஏற்பாடுகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

அரசதுறை ஊழியர்களின் விசேட லீவு சம்பந்தமாக தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12:3 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு பாராளுமன்றத் தேர்தலொன்றின்போது குறைந்தபட்சம் 4 மணித்தியாலங்கள் என்றும், வாக்களிக்கச் செல்வதற்குத் தேவையெனக் கருதும் தொடர்ச்சியான காலப்பகுதிக்கு சம்பளக் குறைப்பின்றி விசேட லீவு வழங்கப்படுதல் வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், தனியார் துறையில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவ்வாறான எழுத்துமூலமான கட்டளை பிறப்பிக்கப்பட்ட அவ்வாறான விசேட லீவு வழங்குவதற்கான முறையொன்று காணப்படாமையால், அநேகமான தொழில்தருநர்கள் தமது தொழிலாளர்களுக்கு வாக்களிக்கச் செல்வதற்கு லீவு வழங்குவதில்லையென முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக 2014.12.22 ஆந் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோருடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டிற்கு இணங்க தேசிய ரீதியில் நடாத்தப்படும் தேர்தலொன்றின்போது தனியார்துறை ஊழியர்கள் தமது வாக்கை அளிக்கச் செல்வதற்கும் திரும்பிவருவதற்கும் லீவு பெற்றுக்கொடுப்பதற்கு தூரம், காலம் என்பவற்றிற்கிடையில் தொடர்புபடுத்தி லீவு வழங்குதல் சம்பந்தமான முறையொன்றைத் தயாரிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணைக்கிணங்க தனியார் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தமது வாக்கை அளிக்கச் செல்வதற்காக லீவு வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தொழில்தருநர்கள் நடவடிக்கை எடுத்தல் உசிதமானதென பரிந்துரை செய்யப்பட்டது.

| வாக்களிப்பதற்கு சேவை நிலையத்திலிருந்து தமது வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல வேண்டிய தூர அளவு | வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த லீவு காலம் |
|---|---|
| 40 கி.மீ. அல்லது அதிலும் குறைவெனில் | அரை நாள் |
| 40 கி.மீ. – 100 கி.மீ. இற்கிடையில் எனில் | ஒரு நாள் |
| 100 கி.மீ. – 150 கி.மீ. இற்கிடையில் எனில் | 1½ நாட்கள் |
| 150 கி.மீ. இற்கு அதிகமெனில் | 2 நாட்கள் |

மேலுள்ள அட்டவணையில் வழங்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த காலம் முன்மொழியப்பட்டுள்ளதுடன், நாட்டில் ஒருசில வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று திரும்புவதற்கு மூன்று(3) நாட்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களும் குறிப்பிடத்தக்களவில் இருப்பதனால், சந்தர்ப்பத்திற்கேற்ப மூன்று நாட்கள் லீவு வழங்க வேண்டி ஏற்படும் என்பதும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

அத்துடன் அனைத்துத் தொழிலாளர்களும் தமது வாக்கை அளிப்பதற்கு மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியைப் பார்க்கிலும் குறைந்த ஒரு காலப்பகுதிக்கு லீவு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களாயின், அது மிகவும் மெச்சத்தக்க ஒரு செயலாகும்.

இதன்போது தொழிலாளர்கள், எழுத்துமூலமான கோரிக்கையொன்றின் மூலம் லீவு கோரி விண்ணப்பிக்க வேண்டுமென்பதுடன், அனைத்துத் தொழில் தருநர்களும் விசேட லீவு கோரிய நபர்கள், லீவு வழங்கும் காலப்பகுதி போன்ற விபரங்கள் அடங்கிய ஆவணமொன்றைத் தயாரித்து அதனை சேவை நிலையத்தில் காட்சிப்படுத்துதலும் வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களைக் கவனத்திற்கொண்டு தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம் மற்றும் தேர்தல் ஆணைக்குழு இணங்கித் தயாரித்த மேற்குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளுக்கு இணங்கி தமது நிறுவனத்தின் தொழிலாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் போதியளவு லீவு வழங்குமாறு அனைத்து தொழில் தருநர்களும் தயவாய் வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**மஹிந்த தேசப்பிரிய**
**தவிசாளர் - தேர்தல் ஆணைக்குழு**
**(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)**

**தேர்தல் ஆணைக்குழு**
**சரண மாவத்தை**
**இராஜகிரிய**

## தேர்தல்கள் பிணக்குகள் முகாமைத்துவப் பொறிமுறை



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2178/29 - 2020 ජුනි මස 06 වැනි සෙනසුරාදා - 2020.06.06

*2178/29 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கத்திற்கு அல்லது அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது நியதிச்சட்ட சபைகளுக்கு உரித்தான ஏதேனும் அசையா அல்லது அசையும் ஆதனத்தை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு அன்றேல் பாதிப்புக்குக் காரணமாக அமையும் விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்குத் தடங்கலாக அமையும் விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பணிப்புகள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ.(4)(அ) உப உறுப்புரையின் கீழ், தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்படுகின்ற அரசாங்கத்திற்கு அல்லது கூட்டுத்தாபனமொன்றுக்கு உரித்தான ஏதேனும் அசையா அல்லது அசையும் ஆதனத்தை தேர்தலொன்றின் போது கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களின் ஊக்குவிப்பு இன்றேல் பாதிப்புக்குக் காரணமாக அமையும் விதத்தில் அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்குத் தடங்கலாக அமையும் விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகள் பிரகடனம் செய்யப்படுகின்றன.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேக்கர,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய,
2020, யூன் 06.

1A - PG 4995— 267 (2020/06)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அரசியலமைப்பின் 104ஆ.(4)(அ) உறுப்புரைக்கமைய, "தேர்தல் காலத்தின்போது அரசுக்கு அல்லது ஏதேனும் அரச கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்றை" ஏதேனுமோர் அரசியல் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தேர்ந்தெடுப்பதை ஊக்கப்படுத்துகின்ற அல்லது தடுக்கின்ற நோக்கத்துக்காக ஏதேனும் அரசியல் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்துவதைத் தடை செய்யும் தத்துவம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. அதே போன்று அரசியலமைப்பின் 104 ஆ. (4) (அ) ஆம் உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்படுகின்ற பணிப்புகளை அமுல்படுத்துவதற்கு அரசுக்கு உரித்தான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கட்டுப்பட்டுள்ளனராதலால், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களும் இவ்வேற்பாடுகளுக்கு அமைவாக செயலாற்றுதல் வேண்டும். அதேபோன்று தமது கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அரசாங்க அலுவலர்களும் இப்பணிப்புக்கு அமைவாக செயலாற்றுகின்றனர் என்பதில் நிறுவனத் தலைவர்கள் பொறுப்பாயிருத்தல் வேண்டும். இப்பணிப்புகள் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அரசாங்கத்தால் கையேற்கப்பட்டுள்ள கம்பனிகளுக்கும் ஏற்புடைத்ததாகும்.

## 02. அலுவலர்கள்

2.1. அனைத்து அரச அலுவலர்களினதும் திறன், அறிவு, அவர்களின் காலநேரம் என்பனவும் அரச ஆதனமாகக் கருதப்படுகின்றது. அரசியல் உரிமைகளுக்கான உரித்துடைய அரச அலுவலரொருவர் கூட தனது அலுவலக நேரத்தில் அதாவது கடமைக்கு அறிக்கையிடப்பட்டுள்ள நேரத்திற்குள் அல்லது கடமை விடுமுறை பெற்றுக் கொண்டுள்ள போது அலுவலகத்திற்கு உள்ளே அல்லது வெளியே அரசியல் ரீதியான ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுதலாகாது. அரசியல் உரிமைகளுக்கான உரித்துடையவர்களல்லாத அலுவலர்கள் விடுமுறை பெற்றுக் கொண்டேனும் அரசியல் ரீதியான பணிகளில் ஈடுபடுதலாகாது.

2.2. எந்தவோர் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அரசியல் நடவடிக்கைகளுக்காக அரச ஆதனங்கள் அதாவது வாகனங்கள், பிரசாரக் கருவிகள், அச்சு இயந்திரங்கள், நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்கள், ஊடக சாதனங்கள், தொலைபேசி வசதிகள், எழுதுகருவிகள், சுற்றுலா விடுதிகள் ஆகியவற்றை அல்லது வேறோர் அரசாங்க ஊழியரை அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான உரிமை அல்லது அரசுக்குரித்தான எதனையும் பயன்படுத்தும் உரிமை கிடையாது. அவ்வாறு செய்தல் சட்டத்தினால் தண்டனை அளிக்கப்படத்தக்க ஒரு குற்றமாகும்.

2.3. அரசியலமைப்புச் சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் உள்ளிட்ட இக்காலப்பகுதியினுள் அரச நிறுவனங்களில் எவ்விதத்திலும் ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்படுதலாகாது. எவ்வாறாயினும் , தேர்தல் பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர்களின் ஆட்சேர்ப்புக்கள்/பதவி உயர்வுகளோடு தொடர்புடைய நாடளாவிய ரீதியிலான வேலைத்திட்டமொன்று அல்லது உள்ளக பதவி உயர்வு செயல்முறையொன்று கால ஒத்திவைப்பின்றி செயற்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடு காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் அல்லது நிறுவனங்களின் தலைவர்கள் கருதுகின்றவிடத்தும் நாடு முழுவதற்கும் அமுலாகக் கூடிய விதத்தில் அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக்கள்/பதவி உயர்வுகள் முறையாகவும் அரசியல் தலையீடுகள் இன்றியதாகவும் மேற்கொள்ளப்படுவதாக உரிய அலுவலர்களுக்கு உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றவிடத்தும் அதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒருப்பாடு வழங்கப்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்காக ஆணைக்குழுவுக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்து எழுத்திலான முன்னங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2.4. துப்பரவேற்பாடு, சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளின் தடங்கல்களைத் தவிர்ப்பதற்கும் அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கும் பிரதேச மட்டத்தில் அல்லது மாகாண மட்டத்தில் அரசாங்க ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதாயின், அத்தகைய ஆட்சேர்ப்புகளும் கூட தேர்தல் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதோடு எவ்வித அரசியல் தலையீடுமின்றி வெளிப்படைத் தன்மையுடன் கூடியதாக அத்தகைய பணிகளை ஆற்றும் பொறுப்பு உரிய அலுவலர்களைச் சாரும்.

2.5. தேர்தல் நடாத்தப்படவுள்ள பிரதேசங்களில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்கென எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் வழமையான இடமாற்றங்கள் வேட்புமனு கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் கழியும் வரை இடைநிறுத்தப்படல் வேண்டும். தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின்/ சபைகளின் அலுவலர்கள்கூட தேர்தல் காலப்பகுதிக்குள் இடமாற்றம் செய்யப்படுமிடத்து, அரசியல் காரணங்களுக்காக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுதலாகாதென்பதோடு, அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாடுகள் கிடைக்காத விதத்தில் உரிய இடமாற்றங்களை மேற்கொள்ளல் அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பாகும். முறையான ஒழுக்காற்றுக்

கட்டளைக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்களுக்கு இப்பணிப்பு செயல்வலுவுடையதாகக் காணப்படாதென்பதோடு, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது சேவையின் தேவைப்பாட்டுக்கமைய இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டியவரின் அதுபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்து முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

2.6. அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர் அல்லாத அரச அலுவலரொருவர் தனது தனிப்பட்ட சமூக வலைத்தளக் கணக்கொன்றை அல்லது வேறு கணக்கொன்றைப் பயன்படுத்தி ஏதேனும் அரசியல் கட்சியொன்றை அல்லது வேட்பாளரொருவரை ஊக்கப்படுத்துவதற்கு அல்லது பாதிப்பினை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்ற ஏதேனுமொரு பிரச்சாரத்தை அல்லது வெளிப்படுத்துகையை மேற்கொள்வது ஒரு குற்றமாகும், அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடைய அரச அலுவலர் ஒருவராயினும் அத்தகைய பிரச்சாரங்களையும் வெளிப்படுத்துகைகளையும் அரச வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளலாகாது என்பதோடு, தனிப்பட்ட, சமூக வலைத்தளக் கணக்குகள் மூலமாயினும் வெறுப்பூட்டத்தக்க வெளிப்படுத்துகைகள், பிழையான தகவல்கள் போலியான தகவல்கள் என்பவற்றைப் பரப்புதல் அல்லது பகிரங்கப்படுத்தல் ஒரு குற்றமாகும்.

2.7. தேர்லோடு தொடர்புடைய அரச ஆதனங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கென தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள பணிப்பொன்று அல்லது பணிப்புகள் மீறப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்கள் அல்லது முறைப்பாடுகள் தொடர்பாக மேலதிக விடயங்களை விசாரித்தறிதல் அவசியமென தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கின்றவிடத்து, அதற்குத் தேவையான அச்சு அல்லது இலத்திரனியல் ஆவணங்கள், கலந்துரையாடல், குறிப்புகள், அறிக்கைகள், ஆட்சேர்ப்புக்கள் அல்லது நியமனங்கள் வழங்குவதோடு தொடர்புடைய அறிக்கைகள் முதலிய தகவல்களை ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலரொருவருக்கு வழங்குமாறு கட்டளையிடப்படுகின்றவிடத்து, அத்தகைய தகவல்களை வழங்குவதற்கு அவ்வாவணங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஏதேனும் பணிப்பு அல்லது பணிப்புகள் மீறப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பம் தொடர்பாக மேலதிக விடயங்களை விசாரித்தறிவதற்கு வாய்மொழி மூல அல்லது எழுத்துமூல வெளிப்படுத்துகைகளை வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அலுவலர் கட்டளையிடுகின்றவிடத்து அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வெளிப்படுத்துகைகளை வழங்குவதற்கு அவ்விடயங்களோடு தொடர்புடைய அரச அலுவலர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அவர்கள் கடப்பாடுடையவர்களாவர்.

2.8. தேர்தலுடன் தொடர்புடைய அரச ஆவணங்களில் துஷ்பிரயோகத்தோடு சம்பந்தப்பட்ட பணிப்புகளை மீறுதல் தொடர்பான விடயங்களை விசாரிப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் எவரேனும அரச அலுவலருக்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு வருகை தருமாறு அழைப்பு விடுவிக்கப்படுமிடத்து அதற்காக வருகை தந்து தேவையான அனைத்து விடயங்களையும் தெளிவுபடுத்துவதற்கும் தேவைப்படக்கூடிய அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பிப்பதற்கும் அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்ட அரச அலுவலர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அவ்வலுவலர் கடப்பாடுடையவராவார்.

2.9. அரச அலுவலர்கள் அஞ்சல் மூல வாக்களிப்பின்போது வாக்குச்சீட்டை அல்லது வாக்களிப்பு நிலையத்தை புகைப்படம் எடுத்தல், காட்சிப்படுத்தல், காட்சிப்படுத்த இடமளித்தல் ஒரு குற்றமாகும்.

**03. வைபவங்கள், நடமாடும் சேவைகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகள்**

3.1. வைபவங்கள்

தேர்தல் காலப்பகுதிக்குள் அரசாங்கப் பணத்தைச் செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு வகையிலான அடிக்கல் நாட்டு விழாக்கள், திறப்பு விழாக்கள், மக்கள் கையளிப்பு நிகழ்வுகள் போன்ற வைபவங்களை அரசியல்வாதிகளின் பங்கேற்புடன் மேற்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்கள் அவர்களினால் வெளிப்படுத்தப்படுவதாலும் இத்தகைய சந்தர்ப்பங்கள் வைபவ ரீதியாக நடாத்தப்படுவதனூடாக ஏதேனும் ஒரு கட்சி/ஒரு குழு/ வேட்பாளரொருவர் ஊக்குவிக்கப்படுதல் அல்லது வேறொரு கட்சிக்கு/குழுவுக்கு/ வேட்பாளருக்கு பாதிப்பு ஏற்படக்கூடுமாதலால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களையும் கருமங்களையும் ஒழுங்கமைப்பதிலிருந்தும் நடாத்துவதிலிருந்தும் தவிர்ந்திருத்தல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்னர் திகதி நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய வைபவங்களை இரத்துச் செய்ய அல்லது ஒத்தி வைக்க முடியாதவிடத்து, அத்தகைய வைபவங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். எவ்விதத்திலும் அரசாங்க நிதியை செலவிட்டு அத்தகைய வைபவங்கள் நடாத்தப்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பமொன்று எவையேனும் கட்சிகள்/குழுக்கள்/ வேட்பாளர்களின் ஊக்குவித்தலை அல்லது பாதிப்பை ஏற்படுத்துமாயின் அது தொடர்பாக வைபவத்தை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதேபோன்று இத்தேர்தல் காலப்பகுதியில் நடாத்தப்படுகின்ற வைபவங்கள் தொடர்பாக கண்காணித்து அறிக்கைகளைப் பேணுவதற்காக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களை முன்கூட்டியே

அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பை அல்லது பாதிப்பை ஏற்படுத்தத்தக்க அவ்வகையான வெளிப்படுத்துகையை மேற்கொள்ளல் செயற்பாடுகளை ஆற்றல் கொடிகள்/பதாகைகள்/சுவரொட்டிகள்/பத்திரங்கள்/துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய பணிகளை தடுப்பதற்கு உரிய வைபவங்களை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதியீட்டம் செய்கின்ற அரச நிறுவனங்களும் அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாவர்.

*3.2.* ***நடமாடும் சேவைகளும் வர்த்தக கண்காட்சிகளும்***

மக்களுக்கு சேவைகளை வழங்கும் நோக்கோடு அரசாங்க நிதியையும் அரச ஆதனங்களையும் செலவு செய்து நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் என்பவற்றினூடாக கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படும் போக்கு காணப்படுவதனால் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய நடமாடும் சேவைகள் வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை ஒழுங்கமைப்பதிலிருந்தும் நடாத்துவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். தேர்தல் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள், களியாட்டங்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிட்டு அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். எந்த விதத்திலும் அரசாங்க நிதியை செலவழித்து இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை நிகழ்த்துகின்றபோது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு நிகழுமாயின் அதுதொடர்பில் உரிய பணியை ஒழுங்கமைத்த அலுவலர்கள் பொறுப்புக் கூறுதல் வேண்டும். அதே போன்று தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற இத்தகைய நடமாடும் சேவைகள், வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் களியாட்டங்கள் போன்றவற்றை கண்காணித்து அறிக்கைகளை பேணும் பொருட்டு உரிய மாவட்டங்களின் தெரிவத்தாட்சியலுவலர்களை முன்கூட்டியே அறிவூட்டுவதற்கு இப்பணிகளை ஒழுங்கமைக்கும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இத்தகைய எந்த ஒரு நடமாடும் சேவை, வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்டத்தில் அல்லது இத்தகையதொரு வேறு சந்தர்ப்பத்தில் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்கான அல்லது பாதிப்புக்கான எத்தகைய வெளிப்படுத்துகையையும் மேற்கொள்ளல், செயற்பாடுகளை மேற்கொள்ளல், கொடிகள்/பதாகைகள்/சுவரொட்டிகள்/பத்திரங்கள்/துண்டுப்பிரசுரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தலும் பகிர்ந்தளித்தலும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதோடு, அத்தகைய நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு, பணிகளை ஒழுங்கமைக்கின்ற அல்லது நிதி வழங்குகின்ற அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் கடடுப்பாடுடையவர்களாவர்.

**04. வசதிகள், கொடைகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் விசேட கருத்திட்டங்களை அமுலாக்கம் செய்தல்**

4.1. மக்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்காக அல்லது நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நீண்டகால அல்லது நடுத்தர கால விஷேட கருத்திட்டங்களை அல்லது வசதிகள் வழங்கும் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களை தேர்தல் காரணமாக இடைநிறுத்த முடியாத போதிலும் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் பின்னர், அத்தகைய விஷேட கருத்திட்டங்கள் அல்லது தொடர்ச்சியான நிகழ்ச்சித் திட்டங்களூடாக கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்கப்படுத்தல் அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்த இடமளித்தலாகாது.

4.2. தேர்தல் காலப்பகுதிக்குள் அரச காணிகளைப் பகிர்ந்தளித்தல், காணிக் கச்சேரிகளை நடாத்துதல், அரச காணி உரித்துறுதிகள் அல்லது வீட்டுரிமை கையளிப்புக்கான உறுதிகளை வழங்குதல், பெருந்தோட்ட கைத்தொழிலுக்கான அல்லது பயிரிடுகைக்கான மானிய உதவிகள், பசளைகள், விவசாய உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், சமையலறைச் சாதனங்கள், வீட்டுத் தளபாடங்கள், சுய தொழில் உபகரணங்கள், மிதிவண்டிகள், சூரிய வலு மின்சார விளக்குகள், வீடுகளை நிருமாணிப்பதற்கான கட்டிடப் பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிக்கும் கருத்திட்டங்கள், வீட்டுக்கடன் விநியோகங்கள்/நட்ட ஈட்டுத் தொகை வழங்கல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல் இடை நிறுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு இடைநிறுத்தப்படுவதனால் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தடங்கல் ஏற்படுமெனத் தெரியவருமாயின் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். எவ்விதத்திலும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அல்லது அனுமதி வழங்கப்படுகின்ற இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியிருப்பின் அப்பணிகளை அவ்விடயங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களின் பங்குபற்றலோடு மாத்திரம் எவ்வித கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்கள் ஊக்குவிப்பு அல்லது பாதிப்பு ஏற்படாதவாறு செயற்படுத்தல் அப்பணிகளுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் பொறுப்பான அலுவலர்களின் பொறுப்பாகும்.

4.3. தேர்தற் காலப்பகுதிக்குள் பிரசைகளுக்கு அரசாங்கத்தினால் பகிர்ந்தளிக்கப்படுகின்ற நிவாரணங்கள் வழங்கும் நடவடிக்கைகளில் அனைத்து அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் என்பவற்றின் அலுவலர்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற எந்தவொரு வேட்பாளரோடும் இணைந்து செயற்படுவது கட்சிகள்/குழுக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்பைத் தூண்டுவதால் அதனைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

05. **வாகனங்கள்**

5.1. அரசாங்கத்துக்கு உரித்தான மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள், கெப் வண்டிகள், பஸ் வண்டிகள் முதலான அனைத்து அரச வாகனங்களினதும், குழாமிற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் அவ்வாகனங்களை ஏதேனுமொரு அரசியல் கட்சியின், சுயேச்சைக் குழுவின், வேட்பாளரொருவரின் பிரசார நடவடிக்கைகளை ஊக்குவிப்புக்குப் பயன்படுத்தாத விதத்தில் தேர்தல் காலப்பகுதிக்குள் வாகன குழாமைப் பேணுவதையும் குறித்தொதுக்குவதையும் மிகக் கவனமாக மேற்கொள்ளல் வேண்டும். அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் (Assigned Vehicles) வாடகைக்குப் பெற்று கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் (Hired Vehicle) என்பன கூட இதற்குள் உள்ளடக்கப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இக்காலப்பகுதிக்குள் அலுவலர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் (Assigned Vehicles) தவிர முக்கியமாக குழாம்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கான ஓட்ட விவரக் குறிப்புகள் முறையாக பேணப்படல் வேண்டுமென்பதோடு, இந்தக் குறிப்புகளை பதவிநிலை அலுவலர் ஒருவர் அன்றாடம் பரீட்சித்து குறித்த வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதில்லை என்பது தொடர்பாக திருப்தியடைதல் வேண்டும். கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதாக போலியாக ஓட்ட விவரக் குறிப்புகளை எழுதி அரசாங்க வாகனங்களை அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அல்லது அத்தகைய சட்டவிரோத கருமங்களில் ஈடுபடுத்தப்படாமைக்கு வகை கூறுதல் வேண்டும்.

5.2. சனாதிபதி அவர்களின் பாதுகாப்பிற்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த எந்த வாகனத்திற்கும் போக்குவரத்துத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட அடையாள பதிவிலக்கம் இன்றி ஓட்டத்தில் ஈடுபட முடியாததலால், எந்தவோர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கும், இராஜாங்க அமைச்சருக்கும் அவர்களின் எவரேனுமோர் அமைச்சருக்கு அவரின் பணியாட்டொகுதி அங்கத்தினர்களுக்கு அல்லது வேறு எவருக்கும் உரிய பதிவு இலக்கமற்ற அரசாங்கத்தின் அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால், அனைத்து திணைக்களங்களுக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கும் உரித்தான வாகனங்கள் திருத்த நிலைய இலக்கங்களைப் பயன்படுத்தி அல்லது போலி இலக்கங்களை பயன்படுத்தி ஓட்டத்தில் ஈடுபடவில்லை என்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ திணைக்களங்களின் தலைவர்கள் வசமுள்ள வாகனக் குழாமிற்குப் பொறுப்பான அலுவலர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

5.3. அரசியல் பிரச்சாரப்பணிகளுக்காக விமானங்கள், ஹெலிகொப்டர்கள் அல்லது வேறு வாகனங்களை ஈடுபடுத்துவதற்காக அரசாங்கப் பணம் செலவிடப்படுவதில்லை என்பதை அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனத் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

06. **அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கத்திற்குரித்தான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியன.**

6.1. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசுக்குரித்தான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் ஆகியன அரசின் வளங்களாகும். ஆதலால், அரசியல் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றை நடாத்துவதற்கு, இக்கட்டிடங்களைப் பயன்படுத்தலாகாது. வழமையான காலப்பகுதியில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும்/ குழுவுக்கும்/ வேட்பாளர் ஒருவருக்கும் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடிய கட்டிடங்கள், மண்டபங்கள் தேர்தல் காலப்பகுதியில், உரிய முறையில் கட்டணம் அறவிடப்பட்டு எந்தவொரு கட்சிக்கும்/குழுவுக்கும் /வேட்பாளர் ஒருவருக்கும் பாரபட்சம் இன்றி வழங்கப்படுவதற்கு இவ்வேற்பாடுகளில் தடங்கல் இருப்பதாகக் கருதப்படலாகாது. தேர்தல் பிரச்சார பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு, அரசாங்கத்துக்கு உரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் ஆகியவற்றையும் இலவசமாக வழங்குவது முற்றிலும் தடைசெய்யப்பட்டதாகும். அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு உரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை இல்லங்கள் போன்றவை எந்தவோர் அரசியல்வாதிக்கும் அலுவலருக்கும் வேறொரு நபருக்கும் தேர்தல் காலப்பகுதிக்குள் முழுக் காலத்துக்குமென குறித்தொதுக்கிக் கொடுக்கப்படுவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய இடங்களில் தரித்திருக்கின்ற நபர்கள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட இடமளிக்கப்படலாகாது. அரசாங்கத்திற்கு உரித்தான கட்டிடங்களிலும் அவை அமையப்பெற்றுள்ள காணிகளிலும் அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரிய அளவிலான உருவப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தவும் இடமளித்தலோ களஞ்சியப்படுத்தலோ ஆகாது.

6.2. அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளுக்குரித்தான விளையாட்டு மைதானங்கள், வெற்றுக் காணிகள், மண்டபங்கள் அல்லது அத்தகைய வேறு கட்டிடங்கள் ஒவ்வோர் அரசியல் கட்சி/ சுயேச்சைக் குழு/ வேட்பாளரை ஊக்குவிப்பதற்கான பிரச்சாரக் கூட்டங்களுக்காக குறித்தொதுக்கிக் கொடுக்கப்படும் போது எந்தவொரு கட்சிக்கோ சுயேச்சைக் குழுவுக்கோ வேட்பாளருக்கோ விசேட கவனிப்பு அல்லது முக்கியத்துவம் அல்லது கவனிப்புக் குறைவு ஏற்படத்தக்கவாறு குறித்தொதுக்கப்படலாகாது. அத்தகைய இடங்கள், கட்டிடங்கள் என்பவற்றைக் குறித்தொதுக்குதல் வெளிப்படைத்தன்மையுடன்

கூடியதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய இடங்களை ஏனைய கட்சியொன்றிற்கு/ குழுவொன்றிற்கு / வேட்பாளரொருவருக்கு பெற்றுக் கொள்ள மு டியாதவாறு எந்தவொரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு அல்லது வேட்பாளருக்கு வேறு பணிகளுக்காக தொடர்ச்சியாக குறித்தொதுக்கி வைத்துக்கொள்ளப்படலாகாது.

## 07. பொதுவான விடயங்கள்

7.1. அரசாங்க ஆதனங்கள் முக்கியமாக அரசாங்க நிறுவனங்கள், வாகனங்கள், பொருட்களாதியவை கட்டிடங்கள், காணிகள் மற்றும் அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள்/குழுக்கள் அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக்காக பயன்படுத்தப்பட எந்தவொரு சந்தர்ப்பமும் வழங்கப்படலாகாது. தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களில் அவசரக் கடமைகளுக்காக விசேட அபிவிருத்தித் திட்டங்களின் அமுலாக்கம் போன்றவற்றை முன்வைத்து கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பை (அன்றேல் பாதிப்பை ஏற்படுத்துவதற்காக) அரசாங்கத்தின் / அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் அரசாங்கத்திற்கு/ அரச நிறுவனங்களுக்கு சொந்தமான அல்லது வாடகைக்கு அமர்த்திய வாகனங்களை வேறு அலுவலகங்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு இணைத்தல் அல்லது விடுவித்தல் போன்ற சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள எந்தவோர் அலுவலருக்கும் இடமளிக்கக் கூடாது. அரசாங்கத்தின், மாகாண சபைகளின், உள்ளூர் அதிகார சபைகளின் அல்லது அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்க வங்கிகள், நியதிச்சட்ட வேறு நிறுவனங்கள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற எந்தவோர் அரச நிறுவனத்துக்கும் உரிய ஊடகப் பிரிவின் அலுவலர்கள், வாகனங்கள், கருவிகள் எந்தவொரு கட்சியினதும்/குழுவினதும்/வேட்பாளர்களினதும் ஊக்குவிப்பை மேம்படுத்துகின்ற பணிகளுக்காக ஈடுப்படுத்தக்கூடாது. பொதுவான நிலைமையின் கீழ் எந்தவொரு அரசாங்க நிறுவனத்திற்கும் உரிய மேடைகள், சோடனைகள், கருவிகள், வாகனங்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள் போன்றவை வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதாயின் தேர்தல் காலத்துக்குள் அத்தகைய வாடகைக்கு வழங்கப்படல் அனைத்து கட்சிகள்/குழுக்களும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு வெளிப்படைத் தன்மையுடன் கூடியதாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

7.2. தேர்தல் பிரகடனம் அறிவிக்கப்பட்ட  தினத்திலிருந்து முடிவுகள் வெளியிடப்படும் வரையிலான காலப்பகுதிக்குள் மாநகரசபையொன்றின், நகர சபையொன்றின் மற்றும் பிரதேச சபையொன்றின் மேயரொருவர், தவிசாளரொருவர் இர'ரமு உறுப்பினரொருவர் தேர்தலுக்காக ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் அல்லது சுயேச்சைக் குழுவொன்றின் வேட்புமனுவொன்றில் கையொப்பமிட்டு போட்டியிடும் நோக்கில் அவ்வேட்புமனுவைத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கையளித்து, தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அவ்வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்படாவிடின், அவ்வேட்புமனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மாநகரசபையொன்றின், நகர சபையொன்றின் மற்றும் பிரதேச சபையொன்றின் மேயர், தவிசாளர் அல்லது உறுப்பினர் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதை இயலச் செய்யும் பொருட்டு அப்பதவிக்குரிய பணிகள் மற்றும் கடமை நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்க வேண்டுமென்பதோடு, அப்பதவிகளிலிருந்து லீவைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்.

7.3. அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்ட  சபைகள் என்பவற்றினால் ஏதேனும் ஓர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிக்கும் விதத்தில் அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவாறு ஏதேனும் ஒரு வருடாந்த  வைபவம் நினைவேந்தல் வைபவம் முதலியவற்றிற்காகவோ அல்லது பிரசாரப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டோ அரச நிதியை செலவிட்டு தொலைக்காட்சி, வானொலி மற்றும் செய்திப் பத்திரிகைகள் போன்ற ஊடகங்கள் ஊடாக அறிவித்ரதல்களை ஒலி/ஒளிபரப்பல் அல்லது பிரசுரித்தல், பிரசாரப் பலகைகளை பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்தல் போன்ற விடயங்களை மேற்கொள்ளக் கூடாது. மேலும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அல்லது மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பாக பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தலொன்று அல்லது கருத்திட்டமொன்றினூடாக கட்சி, வேட்பாளர் ஊக்குவிப்பு நிகழ்வதாகப் புலப்படத்தக்கவாறான பணிகளை மேற்கொள்ளக் கூடாது.

7.4. அனைத்து தனியார் கேபிள் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள், தனியார் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்கள், இணையத்தளங்கள், கையடக்க மற்றும் நிலையான தொலைபேசிச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் என்பன தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் சட்டங்களை மீறாத விதத்திலும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிகாட்டி நெறிகள், பணிப்புகள் மற்றும் அறிவுறுத்தல் சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் நடந்து கொள்வதற்கு வகை கூறுதல் மேற்குறித்த தொடர்பாடல் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தும் பொறுப்பினை வகிக்கின்ற ஊடக அமைச்சின் செயலாளர்களினதும் தொலைத்தெடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவின் தவிசாளர்/பணிப்பாளர் நாயகத்தினதும் பொறுப்பொன்றாகவிருத்தல் வேண்டும்.

7.5. கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்குவிக்கும் அல்லது பாதிக்கும் விதத்தில் தெரு விளக்குக் கம்பங்கள் மற்றும் தொலைபேசி கம்பித் தூண்கள் என்பவற்றில் பதாகைகள், சுவரொட்டிகள், கொடிகள் என்பவற்றை காட்சிப்படுத்தல் மற்றும் ஏனைய சோடனைகள் என்பவற்றை மேற்கொள்வதைத் தடுப்பது போன்றே பெருந்தெருக்கள் மீதும் இரு மருங்கிலும் உள்ள பாதசாரிகள் மேடைகள் மீதும் கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்திலோ அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலோ வர்ண மைப் பூச்சுக்களைப் பூசுதல் மூலமோ அல்லது டிஜிட்டல் அல்லது இலத்திரனியல் பலகைகள் போன்ற முறையிலோ பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர்ப்பதற்குரிய அதிகார எல்லைக்குரிய அந்த அரசாங்க

ஆதனங்களின் உரித்துரிமை அல்லது நிருவாகம் உரித்தான அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களின்/மாகாண அல்லது பிரதேச தலைவர்களின் மற்றும் மாநகர முதல்வர்/தவிசாளர்/மாநகர ஆணையாளர்/செயலாளர் மற்றும் அந்தந்த பிரிவுத் தலைவர்களின் பொறுப்பாகும்.

7.6. ஏதேனும் ஓர் அமைச்சு, திணைக்களம் அல்லது அரச நிறுவனம் தேர்தல் காலப்பகுதிக்கு முன்னர் நிர்மாணித்திருந்த அல்லது காட்சிப்படுத்தியிருந்த கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்குக் காரணமாகக் கூடிய விதத்தில் பகிரங்க இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள், பிரச்சாரப் பலகைகள், கொடிகள், பதாகைகள், சோடனைகள் ஆகியவற்றை பொதுமக்களுக்கு காட்சிப்படுத்துவதிலிருந்து அகற்றுவதற்கு அவ்வரச நிறுவனங்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நமது உள்ளூர் அதிகார சபை எல்லைக்குள் பகிரங்க இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர் ஊக்குவிப்பு பிரச்சார பலகைகள், கொடிகள், பதாகைகள் மற்றும் சோடனைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்கள் அந்நிறுவனங்களின் ஆணையாளர்களும் செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.7. தேர்தலொன்றின்போது கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்கள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் என்பவற்றிற்காக அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் விதத்திலான இப்பணிப்பு எத்தகைய தளர்த்தலுக்கும் இடமின்றி கடுமையாக அமுலாக்கப்படுதல் வேண்டும். ஒவ்வோர் அமைச்சின் கீழுள்ள அனைத்துத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அமைச்சுக்களின் செயலாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோன்று அத்தகைய அனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கும் பணிப்புகளுக்கும் அமைவாக செயற்படுகின்றனரா என்பதை அமைச்சுக்களின் செயலாளர்களும் நிறுவனங்களின் தலைவர்களும் உறுதிப்படுத்திக் கொள்ளல் அத்தியாவசியமானதாகும்.

7.8. தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உரிய சட்ட வலுவாக்கத்திற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரச அதிகாரிகளினதும் பணியாக இருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ.(2) ஆம் உப உறுப்புரையில் காணப்படுகின்ற இக்குறிப்பீடு தொடர்பாக அரச அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுதல் அவசியமாகும்.

7.9. இப்பணிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களின் பணியாளர்கள், ஆகியோரை அறிவூட்டுதல் அமைச்சின் செயலாளருக்குக் கையளிக்கப்படுவதோடு, மாகாண சபைகளின் ஆளுநர்களை அறிவூட்டுதல் பிரதம செயலாளர்கள் மற்றும் ஏனைய மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்பாகுமென்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

7.10. ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அத்தகைய ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு இப்பணிப்புகள் தொடர்பாக அறிவூட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.11. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, அமைச்சுக்கள்/திணைக்களங்கள்/நிறுவனங்களின் தலைவர்கள் பிரதான கணக்கீட்டு அலுவலர்களாகவும் அல்லது கணக்கீட்டு அலுவலர்களாகவும் உள்ளமையால், அரசாங்கத்திற்குரிய ஆதனங்களின் முறையற்ற துஷ்பிரயோகத்தை தவிர்ப்பது உரிய அலுவலர்களுக்குக் கையளிக்கப்படுகின்ற ஒரு பொறுப்பாகும்.

7.12. இப்பணிப்புகளுக்கு அமைவாக நடந்தொழுகாமை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஈஈ ஆம் உறுப்புரைக்கமைய தண்டனைக்குரிய ஒரு குற்றமென்பதும் குறிப்பிடப்படுகிறது.

இப்பணிப்புகளில் அரசாங்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள கம்பனிகள் என்ற அனைத்து நிறுவனங்கள் மற்றும் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குகளை அரசாங்கம் அல்லது அரச கம்பனிகளுக்கு உரித்தான நிறுவனங்கள் எனப் பொருள்படும்.

அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் என இடப்பட்டுள்ள ஒவ்வோர் இடத்திலும் முன்பு குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டவர்களுமான வேதனமொன்றையோ படியொன்றையோ பெற்றுக் கொள்கின்ற அனைவரும் எனப் பொருள்படும்.

06-142

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

## 1981 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களைத் தாபித்தல் தொடர்பான விபரங்கள்

| தாபிக்க முடியுமான அலுவலக வகை | அலுவலகத்தைத் தாபிப்பதற்கு அதிகாரம் உள்ளவர்கள் | அலுவலகத்தை பேணிச்செல்ல முடியுமான காலம்பகுதி | அலுவலகத்தை தாபிக்க முடியுமான அதிகாரப் பிரதேசம் | தாபிக்க முடியுமான அலுவலகங்களின் எண்ணிக்கை | விண்ணப்பப் படிவத்தின் நிறம் |
|---|---|---|---|---|---|
| **அறிவித்தல் கொடுக்கப்பட்ட மத்திய தேர்தல் அலுவலகம்** | கடசிச் செயலாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட முகவர்/சுயேச்சைக் குழுத் தலைவர் அல்லது நிரந்தர முகவர் | 2020.06.10 ஆம் திகதி தொடக்கம் 2020.08.06 ஆம் திகதி நள்ளிரவு வரை | தேர்தல்கள் மாவட்ட அதிகாரப் பிரதேசம் (யாழ்ப்பாணம், வன்னி தேர்தல்கள் மாவட்டங்கள் தவிர்ந்த ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் ஒன்று வீதம்) யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு ஒன்றும், வன்னி(மன்னார், வவுனியா, முல்லைத்தீவு) ஓர் அலுவலகம் வீதம் | ஓர் அலுவலகம் மாத்திரம் | மஞ்கள் |
| **அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளைத் தேர்தல் அலுவலகம் (i)** | கடசிச் செயலாளர்/ அதிகாரமளிக்கப்பட்ட முகவர்/சுயேச்சைக் குழுத் தலைவர் அல்லது நிரந்தர முகவர் | 2020.06.10 ஆம் திகதி தொடக்கம் 2020.08.03 ஆம் திகதி நள்ளிரவு வரை | ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவு | வாக்கெடுப்பு மாவட்டத்திற்கு ஒன்று வீதம் | வெள்ளை |
| ***அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளைத் தேர்தல் அலுவலகம் (ii)** | வேட்பாளர் | 2020.08.04 ஆம் திகதி தொடக்கம் 2020.08.06 ஆம் திகதி நள்ளிரவு வரை | தேர்தல் மாவட்டத்திற்காக ஒரு அலுவலகம் | தேர்தல் மாவட்டத்திற்கு, ஒரு வேட்பாளருக்கு ஓர் அலுவலகம் வீதம் | இளம் சிவப்பு |
| **சாதாரணமான வதிவிடத்தை, தேர்தல் அலுவலகமாகப் பயன்படுத்தல்** | அதிகாரமளிக்கப்பட்ட முகவர்/சுயேச்சைக் குழுத் தலைவர் / வேட்பாளர் | 2020.06.10 ஆம் திகதி தொடக்கம் 2020.08.06 ஆம் திகதி நள்ளிரவு வரை | ஒவ்வொரு வேட்பாளரும் வதிந்துள்ள வீடு | தேர்தல் மாவட்டத்திற்கு ஓர் அலுவலகம் மாத்திரம் | இளம் ஊதா |

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2178/24 - 2020 ජූනි මස 03 වැනි බදාදා - 2020.06.03

2178/24 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யுன் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 ஆ. (5) (அ) உப உறுப்புரையின் கீழான ஊடக வழிகாட்டி நெறிகள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 ஆ. (5) (அ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்படுகின்ற ஊடக வழிகாட்டி நெறிகள்.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய,<br>தவிசாளர்,<br>தேர்தல் ஆணைக்குழு. | என். ஜே. அபேசேக்கர,<br>உறுப்பினர்<br>தேர்தல் ஆணைக்குழு. | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,<br>உறுப்பினர்,<br>தேர்தல் ஆணைக்குழு. |

கொழும்பு,
2020, யுன் 03.

01. ஒவ்வோர் ஊடக நிறுவனமும், அரசியற் கருமங்கள் தொடர்பான தமது செய்தி மடல்களையும் வேறேதேனும் நிகழ்ச்சியையும் ஒலிபரப்புவதில் அல்லது ஒளிபரப்புவதில் அல்லது பிரசித்தப்படுத்துவதில் செம்மையான, சமச்சீரான மற்றும் பக்கச்சார்பற்ற தகவல்களை வழங்குதல் வேண்டும். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் விதித்துரைக்கப்பட்ட பின்வரும் ஊடக வழிகாட்டி நெறிகள் உரிய முறையில் அமுலாக்கம் செய்யப்படுகின்றனவா என்பதையும், ஊடகங்களின் பக்கச்சார்பின்மை பற்றி கிரமமாக கண்காணிப்புச் செய்வதற்காக ஊடாக வழிகாட்டி நெறிக்கமைய செயலாற்றுதல் குறித்த அவதானிப்புகளையும்

1A - PG 4996— 267 (2020/06)

இவ் அதி விசே வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

விதப்புரைகளையும் வழங்குகின்ற நிரந்தரப் பிரதிநிதிகள் குழுவொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்றது. இக்குழு, தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்புகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் தேர்தல் ஆணைக்குழு இக்குழுவின் விதப்புரைகளைப் பரிசீலித்து தேவையான முடிவுகளை எடுக்கும். இக்குழுவின் அமைப்பும் அங்கத்தவர்களும் ஆணைக்குழுவினால் தேர்தலுக்கான திகதி பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர் அறிவிப்புச் செய்யப்படும்.

02. ஒவ்வோர் ஒளிபரப்பு, ஒலிபரப்பு மற்றும் அச்சு ஊடகமும், ஏதேனும் தேர்தல் தொடர்பான கருமங்களை அவை அறிக்கையிடுவதில் நடுநிலைமையுடையதாகவும் பக்கச்சார்பற்றதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், போட்டியிடுகின்ற ஏதேனும் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு வானொலியில் அல்லது தொலைக்காட்சியில் வானலைக் காலத்தைக் குறித்தொதுக்குவதிலும் செய்தித்தாள்களில் இடங்களைக் குறித்தொதுக்குவதிலும் அத்தகைய அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு அநீதி இழைக்கின்ற முறையிலும் அத்தகைய ஏதேனும் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு விசேட நன்மையை விளைவிக்கின்ற முறையிலும் செயற்படுதலாகாது.

03. செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட பதிப்பாசிரியர் கருத்துக்கள் பற்றி இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக கருத்துத் தெரிவிக்கப்படுமிடத்து, அத்தகைய கருத்துரைகளிலான அபிப்பிராயங்கள் குழப்பநிலையைக் கொண்டனவாகவும் சமநிலைத்தன்மையற்றனவாகவும் இருக்கக்கூடுமாதலால், செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட எவையேனும் பதிப்பாசிரியர் கருத்துக்கள் பற்றி கருத்துரைகள் வழங்கும் போது ஏதேனும் அரசியல் கட்சி/சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரொருவர் ஊக்கப்படுத்தப்படுகின்ற விதத்தில் அல்லது பாதிப்பு ஏற்படக்கூடிய விதத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்படுதலாகாது. பதிப்பாசிரியர் அபிப்பிராயமொன்று ஒலிபரப்பப்படும், ஒளிபரப்பப்படும் அல்லது வெளியிடப்படும் சந்தர்ப்பமொன்றில் அதன் மூலம் பாதிக்கப்பட்ட திறத்தவருக்கு, அத்தகைய அபிப்பிராயத்தை எதிர்ப்பதற்கான கருத்துக்களை ஒலிபரப்புவதற்கு, ஒளிபரப்புவதற்கு அல்லது வெளியிடுவதற்கு அதனையொத்த சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

04. தொலைக்காட்சி அத்துடன் வானொலி அலைவரிசைகளில் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கின்றவர் அல்லது அறிவிப்பாளர் ஒவ்வொருவரும், ஒரு திறத்தவரை ஊக்குவிக்கின்ற அல்லது மற்றுமொரு திறத்தவருக்கு பாதிப்பேற்படுத்துகின்றவாரான செய்தித்தாள் தலைப்புச் செய்திகளையும் கேலிச்சித்திரங்களையும் தொகுத்தளிக்குமிடத்து தமது தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதை தவிர்த்தல் வேண்டும்.

05. ஏதேனும் நிகழ்ச்சி, குறைநிரப்பி அல்லது செய்தி, தேர்தல் சட்டங்களுடனும் தேர்தல் ஆணைக்குழுவின் ஊடக வழிகாட்டி நெறிகளுடனும் ஒவ்வாததாக இருப்பின், தேர்தல் காலப்பகுதியின்போது, அத்தகைய பக்கச் சார்பான நிகழ்ச்சியை அல்லது குறைநிரப்பியை ஒலிபரப்பாதிருத்தல் அல்லது ஒளிபரப்பாதிருத்தல் அல்லது வெளியிடாதிருத்தல், எல்லா இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களினதும் செய்தி மற்றும் நடப்பு செய்தி பிரிவுகளினதும் பொறுப்பாகும்.

06. தேர்தல் காலப்பகுதியினுள் ஒரு சம்பவத்தை அல்லது நிகழ்வை வெளிப்படுத்துகின்ற ஏதேனும் விடயம் வேட்பாளரொருவரின் கருத்துரைகளுடன் ஒலிபரப்பப்படுமிடத்து அல்லது ஒளிபரப்பப்படுமிடத்து அல்லது வெளியிடப்படுமிடத்து, அத்தகைய நிகழ்வில் ஆர்வம் அல்லது அக்கறை கொண்டுள்ள அல்லது அதனால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியங்கொண்ட வேறு ஏதேனும் அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் அந்தச் சம்பவம் அல்லது நிகழ்வு தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டும்.

07. தேர்தல் காலப்பகுதியின்போது ஒலிபரப்பப்பட்டதும் அல்லது ஒளிபரப்பப்பட்டதும் அத்தகைய தேர்தலுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டதுமான ஏதேனும் விவரண நிகழ்ச்சியில் அல்லது விசேட நிகழ்ச்சியில் பிரதியாக்கம் செய்பவரின், அறிவிப்பாளரின் மற்றும் பதிப்பாசிரியரின் பெயர்கள் அந்நிகழ்ச்சி நடைபெறும்போது வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் ஊடக நிறுவனம் அத்தகைய விபரங்களை வெளியிடாதிருப்பதற்கான உரிமையைத் தொடர்ந்து வைத்திருக்கும் பட்சத்தில், அத்தகைய நிகழ்ச்சிக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அதன் உள்ளீடுகளுக்குப் பொறுப்பானவராக்கப்படுதல் வேண்டும்.

08. தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளருக்கெதிரான உறுதிப்படுத்த முடியாத சார்த்துதல்களை நியாயமான முறையில் எண்பிக்க முடியாதிருப்பின், ஏதேனும் ஊடக நிறுவனம் அவற்றைச் செய்வதற்கு ஏதேனும் நிகழ்ச்சியின் போது அல்லது செய்தியின் போது வானலைக் காலத்தைப் பயன்படுத்துதலாகாது. ஏதேனுமோர் அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது வேட்பாளரொருவர் ஏதேனும் அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு எதிராக ஏதேனும் பொய்யான மற்றும் பங்கம் விளைவிக்கும் கூற்றைச் செய்துள்ளது அல்லது செய்துள்ளார் என உரிமை கோருவோராயின், அத்தகைய கூற்றுக்கெதிராக கருத்துத் தெரிவிப்பதற்கு அத்தகைய அரசியற் கட்சிக்கு, சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளருக்குச் சந்தர்ப்பமளிக்கப்படுதல் வேண்டும்.

09. ஏதேனும் அரசியற் கட்சியை, சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரொருவரை ஊக்கப்படுத்தும் அல்லது நிலை குறைக்கும் சாத்தியங்கொண்ட ஏதேனும் குற்றச் செயலுடன் தொடர்புபட்ட ஏதேனும் அலுவலக முறையான வைபவத்தை அல்லது நிகழ்வை வெளிப்படுத்துகின்ற அல்லது குற்றச் செயல் ஒன்றோடு தொடர்புடைய ஏதேனும் செய்தி அல்லது நிகழ்ச்சி வெளியிடப்படுமிடத்து, அத்தகைய செய்தி அல்லது நிகழ்ச்சி ஏதேனும் தேர்தலுடன் தொடர்புபட்டதாக இராதிருப்பினுங்கூட ஒவ்வோர் ஊடக நிறுவனமும் அத்தகைய செய்தியை அல்லது நிகழ்ச்சியை வெளியிடுமாயின், தெளிவுபடுத்துகைக்காக அதில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய திறத்தவர்களையும் கலந்தாலோசித்தல் வேண்டும்.

10. சனாதிபதியினால் அல்லது பிரதம அமைச்சரினால் அல்லது எவரேனும் அமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் அல்லது கருத்துக்கள் தேர்தலொன்றின் போது, வானொலிமூலம் அல்லது தொலைக்காட்சிமூலம் வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய ஆள் எந்த அரசியற் கட்சியைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அந்த அரசியற் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்துதலாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆதலால் அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற ஏதேனும் எதிர் அரசியற் கட்சியின் எவரேனும் தலைவருக்கு ஒத்த நிகழ்ச்சிகளில் சந்தர்ப்பமளிக்கப்படுதலும் வேண்டும். விசேட கலந்துரையாடல்களை வெளியிடுவதிலும் பிரசாரக் கூட்டங்களை அறிக்கையிடுவதிலும் அச்சு ஊடகமும் எல்லா அரசியற் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் இதே போன்று ஒத்த இடத்தையும் முக்கியத்துவத்தையும் வழங்குதல் வேண்டும்.

11. வேட்பாளரெவரையும் ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரொருவருக்கு பாதிப்பேற்படுத்துகின்ற விதத்தில் வேட்பாளரெவருக்கும் விசேட மற்றும் சார்பான கவனிப்பை வழங்கி, வானொலியில் அல்லது தொலைக்காட்சியில், வானலைக் காலத்தை அல்லது அச்சு ஊடகத்திலான இடத்தைக் குறித்தொதுக்குதல் ஆகாது.

12. தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற வேட்பாளரெவரையும் ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது வேறு வேட்பாளரொருவருக்கு பாதிப்பேற்படுத்துகின்ற விதத்தில் பகிரங்க அலுவலர்களுடனான விரிவுரை, நேர்காணல் அல்லது அத்தகைய வேறு நிகழ்ச்சி எதுவும் தேர்தல் காலப்பகுதியினுள் பிரசித்தப்படுத்தலோ அல்லது வெளியிடப்படுதலோ அல்லது ஒலிபரப்பப்படுதலோ அல்லது ஒளிபரப்பப்படுதலோ ஆகாது.

13. அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்களல்லாத பகிரங்க அலுவலர்களதும் முனைப்பான சேவையிலீடுபட்டுள்ள பாதுகாப்புப் படைகளதும் பொலிஸ் அலுவலர்களதும் இளைப்பாறிய பாதுகாப்புப் படை அதிகாரிகளதும் அல்லது பொலிஸ் அலுவலர்களதும் சேவையிலீடுபடுமிடத்து பெற்றுக் கொள்ளும் அல்லது சீருடை தரித்தவர்களாக பெற்றுக்கொள்ளும் புகைப்படங்களையோ கூற்றுக்களையோ கட்சிகளை அல்லது வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் அல்லது பாதிப்பேற்படுத்துகின்ற விதத்தில் இலத்திரனியல், அச்சு அல்லது வேறு ஊடக அல்லது பிரசார ஊடகமொன்றினூடாக வெளிப்படுத்தல், ஒளிப்பரப்புதல் அல்லது ஒலிபரப்புதல் அல்லது பிரசித்தப்படுத்தல் ஆகாது.

14. ஒவ்வோர் இலத்திரனியல் ஊடக நிறுவனமும், குழுநிலைக் கலந்துரையாடல்களுக்கான அமைப்பு சமச்சீரானதாக இருக்கும் வகையில் கலந்துரையாடலுக்கான பங்குபற்றுநர்களைத் தெரிவுசெய்வதில் நியாயமான முறையில் செயலாற்றுதல் வேண்டும். ஒவ்வோர் ஊடக நிறுவனமும், எவரேனும் பங்குபற்றுநர் எக்குறிப்பிட்ட மொழியில் தேர்ச்சியற்றவராக உள்ளாரோ அக்குறிப்பிட்ட மொழியில் நிகழ்ச்சியை நடாத்துவதன்மூலம் அத்தகைய பங்குபற்றுநருக்கு அனுகூலமின்மையை விளைவிக்கின்ற விதத்தில் நிகழ்ச்சியை நெறிப்படுத்துவதனைத் தவிர்த்தல் வேண்டும். பங்குபற்றுநர்களுடனான நேர்காணல்களின் போதும் பங்குபற்றுநர் எந்த மொழியில் தேர்ச்சியுடையவராக உள்ளாரோ அந்த மொழியில் வெளியிடப்படுதல் வேண்டும். தெளிவற்ற, புரிந்துகொள்ள முடியாத கேள்விகளினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் வெளியிடப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய கேள்விகள் எப்போதேனும் கேட்கப்படல் ஆகாது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில், ஒழுக்க முறையற்றனவாக உள்ள அல்லது மத நல்லிணக்கத்திற்கு அல்லது இன ஐக்கியத்துக்கு குந்தகம் விளைவிக்கின்றனவாக உள்ள கூற்றுக்களை நிகழ்ச்சியிலான பங்குபற்றுநர் அளிக்கக்கூடாதென அவர் எச்சரிக்கைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதோடு, கலந்துரையாடல் நடைபெறுகையில் அத்தகைய கூற்றுக்கள் அளிக்கப்படின், நிகழ்ச்சியானது உடனடியாக நிறுத்திவிடப்படுதல் வேண்டும்.

15. தொலைபேசி மூலமான ஏதேனும் நிகழ்ச்சியில், ஒழுக்கமுறையற்றதல்லாத, மத நல்லிணக்கத்திற்கு அல்லது இன ஐக்கியத்திற்கு குந்தகம் விளைவிக்காத மற்றும் தேர்தல் தொடர்பான சட்டங்களுடன் ஒத்திருக்கின்ற கேள்விகளுக்கு அழைப்பவர் ஒவ்வொருவருக்கும் ஒத்த சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தொலைபேசி மூலமான நிகழ்ச்சியை நடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் சமச்சீரற்ற தொலைபேசி மூலமான நிகழ்ச்சிக்காக வகை சொல்ல வேண்டியவராதல் வேண்டும்.

16. ஏதேனும் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடக நிறுவனத்தின் எவரேனும் தவிசாளர், முகாமைச் சபை உறுப்பினர், பணிப்பாளர் அல்லது எவரேனும் ஊடகவியலாளர் அரசியற் செயற்பாடுகளில் முனைப்பாக ஈடுபடின், அத்துடன் அத்தகைய ஏதேனும் செய்தி, சமச்சீரான ஒலிபரப்பை அல்லது வெளியீட்டை வழங்குவதில் அக்கறை முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடியவிடத்து, அத்தகைய ஆள், பின்வருவனவற்றை நிறுவனத்தின் முகாமைத்துவத்துக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் :-

(அ) அத்தகைய ஆள் அரசியல் செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ளமை ;

(ஆ) அத்தகைய ஆளினால் நிறுவனத்தில் வகிக்கப்படும் பதவி ; அத்துடன்

(இ) நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதில் அல்லது நடாத்துவதில் அத்தகைய ஆள் சம்பந்தப்பட்டுள்ள அளவு.

17. ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியில் எவரேனுமாள் ஏதேனும் பதவியை வகிக்கின்றவிடத்தும், அல்லது ஒத்த தத்துவங்களைக் கொண்டிருக்கின்றவிடத்தும் அத்துடன் தவிசாளர், பணிப்பாளர், சபை உறுப்பினர், பிரதான நிறைவேற்றலுவலர் அல்லது பிரதான பதிப்பாசிரியர் போன்ற அதிகாரங்கொண்ட முக்கிய பதவியை எவரேனுமாள் வகிக்கின்றவிடத்தும் அத்துடன் அத்தகைய ஆள் தேர்தலொன்றில் வேட்பாளரொருவராக உள்ளவிடத்தும், அல்லது அத்தகைய ஆள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராகவுள்ளாரோ அந்தக் கட்சி அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற நேரடியான அங்கீகரிக்கப்பட்ட முன்னணியாக அல்லது அதன் கீழானதாக உள்ளவிடத்தும் அவர் அத்தகைய ஊடக நிறுவனத்தில் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட கடமைகளில் முனைப்பான முறையில் ஈடுபடுதலாகாது. மேலும், அத்தகைய ஆள் தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற கட்சியொன்றில் வேட்பாளராக அல்லது அதில் முக்கிய பதவி வகிப்பவராகவிருப்பின், ஏதேனும் தொலைக்காட்சி அல்லது ஒலிபரப்பு நிறுவனத்தில் அரசியற்தன்மையினதான ஏதேனும் நிகழ்ச்சியை நடாத்துவதில் அவர் சம்பந்தப்பட்டிருத்தலாகாது என்பதுடன், அச்சு ஊடகத்தின் விடயத்தில் அத்தகைய ஆள் அந்த ஊடக நிறுவனத்தினூடாகத் தமது சொந்த அரசியல் வெளியீடுகளை வெளியிடுதலுமாகாது.

18. அரசியற் கட்சியொன்றின் எவரேனும் பங்குபற்றுநர், அத்தகைய பங்குபற்றாமைக்கான ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் ஏதேனும் ஊடக நிறுவனத்தில் ஒரு கலந்துரையாடலில் அல்லது நேர்காணலில் பங்குபற்றுவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய ஊடக நிறுவனம், அத்தகைய பங்குபற்றாமையை அழுத்திக் கூறுவதற்கு ஒரு வெற்றுக் கதிரையை வெளிக்காட்டி வைத்தலாகாது அல்லது வேறு ஒத்த நாடகப் பாணியிலான நிலைமையை உருவாக்குதலாகாது. பங்குபற்றுநரின் வராமை பற்றி எளிமையானதும் நேரடியானதுமான அறிவித்தலொன்றைச் செய்தல் உகந்ததாகும்.

19. அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றின் பெறுபேற்றை ஒலிபரப்புகின்ற ஏதேனும் இலத்திரனியல் ஊடகம் அல்லது அதனை வெளியிடுகின்ற ஏதேனும் அச்சு ஊடகம், அத்தகைய வாக்கெடுப்பை நடாத்திய ஒழுங்கமைப்பின் பெயரையும் அத்தகைய வாக்கெடுப்புக்கு நிதியளித்த ஒழுங்கமைப்பையும் அல்லது ஆளையும், ஈடுபடுத்தப்பட்ட முறைமையியலையும், மாதிரியின் அளவையும், பிழைகளின் விளிம்பையும் வெளிக்கள வேலைக்காலப் பகுதியையும், அறிவித்தல் அல்லது வெளியிடுதல் வேண்டும். மேலும், ஒலிபரப்புனர் அல்லது வெளியீட்டாளர், அத்தகைய வாக்கெடுப்பு, அத்தகைய வாக்கெடுப்பு நடைபெறும் நேரத்தில் மட்டுமே பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கின்றதென்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

20. எவரேனும் வேட்பாளர் எக்கட்சியை அல்லது குழுவைச் சேர்ந்தவராக இராதுள்ளாரோ அக்கட்சியின் அல்லது குழுவின் மற்றுமொரு போட்டியிடுநரின் வேட்பாண்மையை மேம்படுத்துவதற்கான ஏதேனும் கூற்றை அத்தகைய வேட்பாளர் அளிக்குமிடத்து, அத்தகைய கூற்றை ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல் என்ற வகையாக அத்தகைய கூற்றுக்குப் பிரசித்தமெதுவும் கொடுக்கப்படுதலாகாது.

21. தேர்தல் ஆணைக்குழுவின் எழுத்திலான சம்மதமின்றி, ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தின் அல்லது அஞ்சல் வாக்கெடுப்பு நிலையத்தின் உட்புறத்தில் நிழற்படங்களை எடுப்பதை அல்லது வீடியோ செய்வதை தவிர்த்தல் வேண்டும். சட்டவிரோதமாகப் பெறப்பட்ட ஏதேனும் நிழற்படம் அல்லது வீடியோப் படம் செய்தித்தாள்களில் வெளியிடப்படுதலோ, ஏதேனும் ஊடகத்தினூடாக ஒளிபரப்பப்படுதலோ, இலத்திரனியல், அச்சு அல்லது சமூக ஊடகங்கள் வாயிலாக பிரசித்தப்படுத்தலோ ஆகாது. தேர்தல் ஆணைக்குழுவின் சம்மதத்துடன் பெறப்பட்ட நிழற்படங்களும் வீடியோப் படங்களும் கூட வாக்கெடுப்புக்குப் பின்னரே வெளியிடப்படலாம் அல்லது ஒளிபரப்பப்படலாம்.

22. எவரேனும் வேட்பாளரினால் நடாத்தப்படுகின்றதாக அல்லது அவரை உட்படுத்துகின்றதாக அல்லது எவரேனும் வேட்பாளரை அல்லது கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை மேம்படுத்துகின்றதாக அல்லது அதன் நிலையைக் குறைக்கின்றதாகத் தேர்தல் திகதிக்கு முன்னர் ஒளிபரப்பப்பட்ட அல்லது ஒலிபரப்பப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட ஏதேனும் வர்த்தக விளம்பரம், வினாவிடை நிகழ்ச்சி, களியாட்ட நிகழ்ச்சி, அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் நிகழ்ச்சி அல்லது அத்தகைய எவையேனும் செயற்பாடுகள் தொடர்பான ஏதேனும் நிகழ்ச்சி, திரைப்படம், தொலைக்காட்சி நாடகம், சங்கீத நிகழ்ச்சி அல்லது அத்தகைய தன்மையினதான வேறேதேனும் நிகழ்ச்சி, வாக்கெடுப்புத் திகதிக்கு நேர் முன்னர் நிலவுகின்ற அமைதி காலப்பகுதியின்போது ஒளிபரப்பப்படுதலாகாது அல்லது ஒலிபரப்பப்படுதலாகாது அல்லது வெளியிடப்படுதலாகாது. தேர்தற் பிரசாரத்தின்போது அரசியற் கட்சிகளினாலும் வேட்பாளர்களினாலும் அறிவிக்கப்பட்ட கொள்கைகளினதும் அவற்றினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளினதும் குற்றநற்றுக்கள் பற்றி வாக்காளர் ஆலோசனை செய்து அவற்றைக் கவனத்திற்கொள்வதனை இயலச் செய்வதற்கு வாக்கெடுப்புத் தேதிக்கு முன்னர் அமைதி காலப் பகுதியொன்று நிலவுவது முக்கியமானதெனக் கருதப்படுகின்றது.

23. தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் "அமைதி காலம்" எனப்படுவது தேர்தலை நடாத்துவதற்கு விதித்துரைக்கப்பட்ட தினத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்னர் ஆரம்பித்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுதல் வரையான காலமாகும். ஓர் அரசியல் கட்சியை அல்லது வேட்பாளரொருவர் ஊக்கப்படுத்தப்படுவதற்கு அல்லது பாதிப்புக்குள்ளாவதற்கு காரணமாக அமையும் விதத்தில் பிரசார நடவடிக்கை அல்லது பிரசார விளம்பரம் எதுவும் இக்காலப்பகுதியினுள் வெளியிடப்படுதலாகாது.

24. மத நம்பிக்கைகள், மத வழிபாடுகள், பேசப்பட்ட மொழிகள், இனத்துவம், வழக்காறுகள் மற்றும் சாதிகள் என்பன உட்பட, பல்வேறு ஏதுக்களின் மீது இலங்கை மக்களிடையே குரோதத்தையும் சகிப்புத்தன்மையின்மையையும் உருவாக்கக்கூடிய அல்லது தூண்டக்கூடிய பிரசாரத்தை ஒலிபரப்புவதனை அல்லது ஒளிபரப்புவதனை அல்லது வெளியிடுவதனை ஊடக நிறுவனம் ஒவ்வொன்றும் தவிர்த்தல் வேண்டும்.

25. அரசியல் செயற்பாட்டாளர்களிடையேயும் சமூகத்தினுள்ளும் குரோதம் விளைவிக்கும் அரசியலை மேம்படுத்துகின்ற பிரசாரச் செயற்பாடுகளை ஒவ்வோர் ஊடக நிறுவனமும் ஒலிபரப்புவதனை அல்லது ஒளிபரப்புவதனை அல்லது வெளியிடுவதனைத் தவிர்த்தல் வேண்டும்.

26. ஒவ்வோர் ஊடக நிறுவனமும், வெளிப்படுத்துநரின் சம்மதமின்றி வேறோர் அரசியற் கட்சியின் வேறொரு வேட்பாளர் பற்றி எவரேனும் வேட்பாளரினால் அல்லது ஆதரவாளரினால் முன்னர் அளிக்கப்பட்ட ஏதேனும் கூற்றை மீளவெளியிடுவதனை அல்லது மீள ஒளிபரப்புவதனைத் தவிர்த்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆளினால் முன்னர் அளிக்கப்பட்ட அத்தகைய கூற்றை மீண்டும் வெளியிடாதிருக்கும்படி அல்லது ஒளிபரப்பாதிருக்கும்படி வெளிப்படுத்துநரினால் செய்யப்படும் கோரிக்கைக்கு மதிப்பளித்தலும் வேண்டும்.

27. அநாமதேய அறிவித்தல்களை அல்லது பிரசாரத்தை மற்றும் போலி ஒழுங்கமைப்புகளின் அல்லது ஆட்களின் பெயர்களின் கீழான அறிவித்தல்களை அல்லது பிரசாரத்தை ஏதேனும் ஊடக நிறுவனம் வெளிப்படுத்துதலாகாது. இது தொடர்பான பொறுப்பு அந்தந்த ஊடக நிறுவனத்தைச் சார்ந்ததாதல் வேண்டும்.

28. ஏதேனும் ஊடக நிறுவனமும், விடயத்துக்கேற்ப, அத்தகைய கூற்றை அளிக்கின்ற அல்லது செய்திகளை வாசிக்கின்ற ஆளும் பிழையான கூற்றுக்களை அல்லது செய்திகளை வெளியிடுதல், ஒலிபரப்புதல் அல்லது ஒளிபரப்புதல் தொடர்பாகச் சமமான முறையில் வகைசொல்ல வேண்டியதாகவும் வகைசொல்ல வேண்டியவராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், இது தொடர்பாக எழக்கூடிய சட்ட வழக்கு நடவடிக்கைக்கு அமைந்ததாகவும், அமைந்தவராதலும் வேண்டும்.

29. தேர்தலின் முடிவு எதுவும் தேர்தல் ஆணைக்குழுவினால் உத்தியோகபூர்வமாக வெளிப்படுத்தப்படும் வரை தேர்தலின் உத்தியோகப்பற்றற்ற முடிவுகளை பகிரங்கப்படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

30. ஊடகத்தின் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தலும் அவற்றுக்கு அமைந்தொழுகுதலும் ஒவ்வோர் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனத்தினதும் பொறுப்பாதல் வேண்டும்.

31. எல்லா அரசாங்க மற்றும் பகுதியளவிலான அரசாங்க ஊடக நிறுவனங்களும், ஏதேனும் அரசியற் கட்சியை, குழுவை அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்கு அரச ஆதனத்தையும் நிதிகளையும் பயன்படுத்துவதனை மற்றும் அரசாங்க அரசிறைக்கு நட்டம் விளைவிப்பதனை அத்துடன் ஏதேனும் நிறுவனத்துக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் செயலாற்றுவதனைத் தவிர்த்தல் வேண்டும். அத்தகைய செயற்பாடு ஏற்படும் பட்சத்தில், அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுடன் சேர்த்து மேலதிகமாக, பொறுப்பாகவுள்ளோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம்.

32. எல்லா இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் உரிமையாளர்களும், இவ்வழிகாட்டுநெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழிகாட்டுநெறிகளை அந்தந்த நிறுவனங்கள் பின்பற்றுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

33. ஏதேனும் தேர்தல் காலப்பகுதியின்போது, சமூக ஊடக இணையத்தளங்களின் உரிமையாளர்களும் அவற்றின் நிருவாகிகளும் கேபிள் தொலைக்காட்சி அலைவரிசைகளின் உரிமையாளர்களும் இவ்வூடாக வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றியொழுகுதல் அவர்களின் பொறுப்பாதல் வேண்டும்.

34. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு இவ்வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றுவது அத்தியாவசியமாக உள்ளமையினால், இவ்வழிகாட்டுநெறிகளைக் கடைப்பிடித்தல், ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களினதும் சமூக இணையத்தளங்களின் நிருவாகிகளினதும் பயன்படுத்துநர்களினதும் கடமை மட்டுமேயன்றி அவர்களின் பொறுப்புமாகும்.

35. இந்த ஊடக வழிகாட்டுநெறிகளில் "தேர்தல் நடாத்தப்படுகின்ற காலப்பகுதி" எனப்படுவது, விடயத்துக்கேற்ப மக்கள் கருத்துக்கணிப்பு அல்லது தேர்தல்கள் நடாத்தப்படுவதற்கான வெளிப்படுத்துகையொன்று அல்லது விதித்துரைப்பொன்று தினத்திலிருந்து ஆரம்பமாகி அச்சந்தர்ப்பத்தில் குறித்த மக்கள் கருத்துக்கணிப்பு அல்லது தேர்தலின் பெறுபேறுகள் வெளியிடப்படுகின்ற தினம் வரையான காலப்பகுதியேயாகும்.

36. இந்த ஊடக வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கியவாறான அல்லது இணங்காதவாறான விடயங்கள் தொடர்பான அச்சு, வானொலி, தொலைக்காட்சி அல்லது இணையத்தள சமூக வலைத்தளங்கள் என்பவற்றினூடாக ஊடகம் எதனிலும் மேற்கொள்ளப்படுகின்ற வெளியீடுகள், அறிக்கைகள் அல்லது பிரச்சாரங்கள் மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அல்லது நாட்டில் செயல்வலுவிலுள்ள தேர்தல் சட்டம் அல்லது வேறெந்தச் சட்டமும் மீறப்படுமாயின், அவ்வாறான வெளியீடுகள், அறிக்கைகள் அல்லது பிரச்சாரங்களை செய்வதை அல்லது ஒலிபரப்பு, ஒளிபரப்பு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

06-143

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/51 - 2020 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2020.07.17

2184/51 ஆம் இலக்கம் – 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தல் ஆணைக்குழுவினால் 2178/24 ஆம் இலக்க 2020.06.03 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டு நெறிகளோடு தொடர்புடையதாக மேலதிகமாக வெளியிடப்படுகின்ற ஊடக வழிகாட்டு நெறி

தேர்தல் காலப்பகுதிக்குள் அரசியல்வாதிகள் அல்லது வேறு நபர்களினால் வன்முறைச் செயற்பாடுகள், தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளை மதிக்கும் வண்ணமோ அல்லது சமூகக் குழுக்களுக்கிடையே கொந்தளிப்புகளை மற்றும் வன்முறைகளை ஏற்படுத்தும் வண்ணமோ வெளிப்படுத்துகைகள், பேச்சுக்கள் அல்லது ஒலி நாடாக்களை ஒலி/ஒளிபரப்புதல் என்பவற்றிலிருந்தும் தவிர்ந்து கொள்ள அனைத்து ஊடக நிறுவனங்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேக்கர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, யூன் 15.

1A - PG 5003 — 267 (2020/07)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கான அரசியல் வானலைப் பிரச்சாரங்களின்போது பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள்.

**இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்**

- வானொலிமூலம் உரையாற்றும் மொழி அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் தலைவர்கள் இணக்கம் தெரிவிகின்றவாறு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில சேவைகளினூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
- வானொலி மூலம் முன்வைக்கப்படுகின்ற மொழி, கட்சியின் / சுயேச்சைக் குழுவின் பெயர் விருப்பின் பிரகாரம் உரையாற்றுகின்ற மொழிக்கு மேலதிகமாக (உதாரணம் :- சிங்கள மொழி) வேறு மொழியிலும் (உதாரணம் :- தமிழ் மொழி) ஒலிபரப்புச் செய்யப்படல்வேண்டுமெனக் கட்சி/ சுயேச்சைக் குழு கருதுகின்றதெனில், அதற்காக மொழி பெயர்ப்பாளரொருவரின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு, கட்சி அல்லது சுயேச்சைக் குழுவினால் எழுத்து மூலம் கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்காகப் பயன்படுத்த முடிவது குறித்தொதுக்கி வழங்கப்பட்டுள்ள காலத்தை மாத்திரமே ஆகும்.
- எந்தவொரு கட்சிக்கு/ சுயேச்சைக் குழுவுக்கு வேறு எந்தவோர் அரசியல் கட்சி சார்பாகவும் உரையாற்றுவது அல்லது வாக்கு இரந்து கேட்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இடம்பெறுமாயின், அந்த கட்சிக்கு/ சுயேச்சைக் குழுவுக்கு எஞ்சியுள்ள வானலைக் காலத்தைக்குறித்தொதுக்கி வழங்குவது இடைநிறுத்தப்படும்.
- கட்சியொன்று / சுயேச்சைக் குழுவொன்று கலையகத்தில் அல்லது வெளியில் ஒலிப்பதிவு செய்யும்போது ஆத்திரமூ ட்டும் அல்லது வேறு கட்சியொன்று அல்லது குழுவொன்று பாதிப்புக்கு உட்படுகின்ற விதத்தில் அல்லது தீங்கான, வெறுப்புக் கருத்துக்களை வெளியிட்டால்,அந்த உரையை ஒலிபரப்புவதற்கு முன்னர் உடனடியாக ஆணைக்குழுவை அறிவுறுத்தல் வேண்டும். அவ்வாறான விடயமொன்று இடம்பெறுமாயின் அந்த வேட்பாளருக்கு மீதமாகவுள்ள வானலைக் காலத்தை குறித்தொக்கிக் கொடுப்பது இடைநிறுத்தப்படும்.
- ஒலிபதிவு செய்வதற்குத் தேவையான கலையகங்கள்/ஒலிப்பதிவு கூடங்கள் இலவசமாக வழங்கப்படும். தமது ஒலிபதிவுகளைச் செய்வதற்காக இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் கூடங்களைப் பயன்படுத்துமாறு அனைத்து அரசியல் கட்சிகள் / சுயேச்சைக் குழுக்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. நிகழ்ச்சிகளின் தரத்தைப் பேணி செல்கின்ற விசேட நோக்கத்தைக் காரணமாகக் கொண்டு இந்த கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களின்போது வெளியில் ஒலிபதிவு செய்யப்பட்டமை காரணமாக முன்வைக்கும்போது (ஒலிபரப்பும் போது) வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. ஒலியில் (சப்தத்தில்) அவ்வாறான வேறுபாடுகள் காணப்படுமாயின், தேவையற்ற விதத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மீது குற்றம் சுமத்தப்படும். இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஒலிப்பதிவு கூடங்களைப் பயன்படுத்துவது பொருத்தமாகும்.
- கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களுக்கு ஒலிப்பதிவு செய்வதற்காக குறித்தொதுக்கி வழங்கப்பட்டுள்ள தினங்கள் அவர்களுக்கு முன்கூட்டியே அறிவுறுத்தப்படும். வெளியில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்ற CD அல்லது DVDதட்டுக்கள் ஒலிபரப்புச் செயயப்படுவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

**இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்.**

- தொலைக்காட்சிமூலம் முன்வைக்கப்படுகின்ற மொழி பேச்சாளரின் விருப்பத்தின் பிரகாரம் அமைதல் வேண்டும்.
- தொலைகாட்சிமூலம் முன்வைக்கப்படுகின்ற மொழி, கட்சியின்/ சுயேச்சைக் குழுவின் பெயர் விருப்பின் பிரகாரம் பேசுகின்ற மொழிக்கு மேலதிகமாக (உதாரணம் : சிங்கள மொழி) வேறு மொழியொன்றிலும் (தமிழ் மொழி) பிரச்சாரம் செய்யப்பட வேண்டுமெனக் கட்சி / சுயேச்சைக் குழு விரும்புகின்றதெனில், அதற்காக மொழி பெயர்ப்பாளரொருவரின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடிவதோடு, கட்சி/ சுயேச்சைக் குழு எழுத்துமூலம் கோரிக்கையொன்றை செய்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்காகவும் பயன்படுத்த முடிவது குறித்தொதுக்கி வழங்கப்பட்டுள்ள காலத்தை மாத்திரமே ஆகும்.
- எந்தவொரு கட்சிக்கு/ சுயேச்சைக் குழுவுக்கு வேறு எந்தவோர் அரசியல் கட்சி சார்பாகவும் உரையாற்றுவது அல்லது வாக்கு இரந்து கேட்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு இடம்பெறுமாயின், அந்த கட்சிக்கு/ சுயேச்சைக் குழுவுக்கு எஞ்சியுள்ள வானலைக் காலத்தைக் குறித்தொதுக்கி வழங்குவது இடைநிறுத்தப்படும்.
- கட்சியொன்று / சுயேச்சைக் குழுவொன்று கலையகத்தில் அல்லது வெளியில் ஒலி/ஒளிப்பதிவு செய்யும்போது ஆத்திரமூட்டும் அல்லது வேறு கட்சியொன்று அல்லது குழுவொன்று பாதிப்புக்கு உட்படுகின்ற விதத்தில் அல்லது தீங்கான, வெறுப்புக் கருத்துக்களை வெளியிட்டால், அந்த உரையை ஒலி/ஒளிபரப்புவதற்கு முன்னர் உடனடியாக ஆணைக்குழுவை அறிவுறுத்தல் வேண்டும். அவ்வாறான விடயமொன்று இடம்பெறுமாயின் அந்த கட்சிக்கு/ சுயேச்சைக் குழுவுக்கு எஞ்சியுள்ள வானலைக் காலத்தைக் குறித்தொதுக்கி வழங்குவது இடைநிறுத்தப்படும்.

- கட்சியொன்று / சுயேச்சைக் குழுவொன்று அவசியமெனக் கருதுகின்றதெனில், தொலைகாட்சியில் ஒலி/ஒளிபரப்பு செய்யப்படுகின்ற காலப்பகுதியினுள் கட்சிக்கு / சுயேச்சைக் குழுவிற்கு குறித்தொதுக்கப்பட்ட தேர்தல் சின்னம் மற்றும் அரசியல் கட்சியின் பெயரைக் காட்சிப்படுத்த முடியும்.

- ஒலி/ ஒளிப்பதிவு செய்வதற்காக கலையகங்கள் இலவசமாக வழங்கப்படும். தமது ஒலி/ ஒளிப்பதிவுகளைச் செய்து கொள்வதற்காக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் கலையகங்களைப் பயன்படுத்துமாறு அனைத்து கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. நிகழ்ச்சிகளின் தரத்தைப் பேணிச் செல்கின்ற விசேட நோக்கத்தைக் காரணமாகக் கொண்டு இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களின்போது வெளியில் ஒலி/ஒளிப்பதிவு செய்யப்பட்டமை காரணமாக காட்சிப்படுத்தும் (ஒலி/ஒளிபரப்புச் செய்யும்) போது குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. பார்த்தல் அல்லது கேட்டல் ஆகியவற்றில் அவ்வாறான வேறுபாடுகள் காணப்படுமாயின், தேவையற்ற விதத்தில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மீது குற்றங்கள் சுமத்தப்படும். இந்நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக வெளியில் ஒலி/ஒளிப்பதிவு செய்வதற்காக Beta Cam Casstees அல்லது X D Cam Disk மாதிரிகளைப் பயன்படுத்த வேண்டுமெனக் கட்சிகள்/ குழுக்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

- தொலைக்காட்சி ஒலி/ஒளிப்பதிவு செய்வதற்காக குறித்தொதுக்கப்பட்டுள்ள காலப்பகுதி (தினங்கள்)அவர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படும். வெளியில் ஒலி/ ஒளிப்பதிவு செய்து வழங்கப்படுகின்ற CD அல்லது DVD தட்டுக்கள் ஒலி/ ஒளிபரப்புச் செய்யப்படுவதற்கு 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் வழங்கப்படுதல் வேண்டும்.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2178/25 - 2020 ජූනි මස 03 වැනි බදාදා - 2020.06.03

*2178/25 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தலொன்றின்போது தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிக் கோவை

*2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8 (8) ஆம் உட்பிரிவுக்கு அமைய வெளியிடப்படுகின்ற இவ்வொழுக்க நெறிக்கோவை தேர்தலொன்றிற்கான பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரையிலான காலத்திற்கு செல்லுபடியாகும்.*

*தேர்தல்கள் சட்டத்திற்கமைய அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட முன்னரும்கூட இந்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் காணப்பட்டனவென்பதோடு, இவை தொடர்பான வரலாறு 1931 ஆம் ஆண்டு வரை நீண்டு செல்கிறது. அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் தொடர்பான சட்டம் 1959 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களிலும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. சமகால சமூகத்தின் இயக்கத்திற்கு அரசியல் கட்சிகளினால் ஆற்றப்படுகின்ற சேவைகளை அர்த்தமுள்ளவையாகவும் விளைபயன்மிக்கவையாகவும் மாற்றுவதற்கு சட்ட விதிகளினூடாக மேற்கொள்ள முடிந்த செயற்பாடுகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளமையால் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான சிறந்த நிலைமையொன்றைப் பேணிக் கொள்வதன் பாரிய பொறுப்பு அரசியற் கட்சிகளுக்கே சுமத்தப்படுகின்றது.*

*அப்பொறுப்பை கருத்திலெடுத்து 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலை நோக்காகக்கொண்டு இவ்வொழுக்க நெறிக்கோவை முதன்முதலாக தேர்தல்கள் திணைக்களத்தினால் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கெனப் பிரகடனப்படுத்தப்பட்டது. மேலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்பட்ட தேர்தல்களின்போதும் இவ்வொழுக்க நெறிக்கோவையில்*

1A - PG 4997 — 267 (2020/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

காட்டப்பட்டுள்ள விடயங்களை ஒத்ததாக தயாரிக்கப்பட்ட ஒழுக்க நெறிக்கோவைக்கு கட்சிச் செயலாளர்களின் இணக்கப்பாடும் மற்றும் தேர்தல் முறைப்பாட்டு விசாரணைக்கான அரசியற் கட்சி முகவர்களின் மற்றும் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்களின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றிருந்தது.

தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற இவ்வொழுக்க நெறிக்கோவை அனைத்து தேர்தல்களிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், அரசியற் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து முதன்மைப் பதவி தாங்குநர்களுக்கும், மாகாண சபை மற்றும் உள்ளூரதிகார சபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல்வாதிகளுக்கும் மற்றும் அனைத்து அரசியற் கட்சிகளின் செயற்பாட்டாளர்களுக்கும், வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கும், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும், அவற்றின் வேட்பாளர்களுக்கும் ஏற்புடையதாகுமென்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஆதலால், இதில் காட்டப்பட்டுள்ள ஒழுக்கநெறிகளுக்கு இணங்க செயற்படுமாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைவருக்கும் தயவன்புடன் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**(அ) சட்ட ஆட்சி :**

1. இலங்கை அரசியல் அமைப்பினாலும் ஏனைய நியதிச் சட்டங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில், தேர்தல் சட்டங்களுக்கமைய மக்கள் பிரதிநிதிகளுக்கான தேர்தல்களில் அல்லது மக்கள் தீர்ப்புக்களில் வாக்காளருக்கு சுதந்திரமாகவும் எவ்வித வலுக்கட்டாயமின்றியும் தமது வாக்கினை அளிப்பதற்கு அவகாசமளித்தலும் அதற்குத் தேவையான உதவிகளையும் வலுவூக்கங்களையும் அளித்தலும்.

2. தேர்தலொன்றில் போட்டியிட முன்வருகின்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கும் தேர்தல் செயன்முறையில் உரித்தாக்கப்பட்டுள்ள சம உரிமையை அனைத்து கட்டங்களிலும் பாதுகாத்தல்.

3. அனைத்து அரசியற் கட்சிகள், வேட்பாளர்களுக்கு உரித்தான உரிமைகளுக்கும், வாக்காளர்களை அறிவூட்டுவதற்கெனவுள்ள உரிமைக்கும் மதிப்பளிப்பதோடு, எதிர்த்தரப்பினருக்கு அவர்களின் கருத்தைக் கொண்டிருப்பதற்கும் அதற்காக சட்ட ரீதியாக பிரச்சார நடவடிக்கைகள்/ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குள்ள உரிமையையும் பாதுகாத்தல்.

4. இலங்கையின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அரச, அரச சார்பான, தனியார் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு சட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ளவாறான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவ்விதத்திலான தடங்கல்களையோ அழுத்தங்களையோ ஏற்படுத்தாமை.

5. நாட்டின் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்கின்ற நியதிச்சட்டப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும் அவை பொறுப்புவிக்கப்பட்டுள்ளவர்களுக்குமுரிய கடமைகளை ஆற்றுகையில் தடங்கல்கள் அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தாமை.

6. பொது மக்களின் இயல்பான வாழ்விற்கு இடையூறு ஏற்படுத்தாமலும் நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள் மீறப்படாமலும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.

7. அனைத்து தேர்தல்கள் தொடர்பான நியதிச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் (பிரிவுகள்) தொடர்பாகவும் அனைத்து வேட்பாளர்களுக்கும் மற்றும் முதன்மை செயற்பாட்டாளர்களுக்கும் தெளிவைப் பெற்றுக்கொடுத்தலும் அச்சட்டங்களில் காட்டப்பட்டுள்ளவாறு தவறுகள், ஊழல் செயற்பாடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் அறிவுரை வழங்குதல்.

8. வாக்கெடுப்பு அல்லது வாக்கெண்ணலோடு தொடர்புடைய பொருட்கள், உபகரணங்கள், ஆவணங்கள் என்பவற்றை உரிய அலுவலரொருவரின் அனுமதியின்றி தொடுதல் அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடத்திலிருந்து வெளியில் எடுத்துச் செல்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல்.

**(ஆ) பொது நடத்தைகள் :**

1. இலங்கையர்கள் அனுஷ்டிக்கின்ற சமயங்கள், பேசுகின்ற மொழிகள், அவர்களின் இனங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் குலகோத்திரங்கள் போன்ற வேறுபாடுகள் தொடர்பாக இனப்பிரிவொன்று அல்லது ஆட்களிடையே பகைமையுணர்ச்சி மற்றும் பொறுமையின்மை என்பவற்றை ஏற்படுத்தவல்ல அல்லது தூண்டவல்ல விதத்திலான நடத்தைகளைத் தவிர்த்தல் மற்றும் அவ்வாறான உணர்வு ஏற்படுத்தத்தக்க விதத்திலான கருத்துக்களை அல்லது விடயங்களை வெளியிடாதிருத்தல்.

2. அரசியல் கட்சிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விமர்சனங்கள், அந்தந்த கட்சிகளின் கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், கடந்த கால நிகழ்வுகள் என்பவற்றிற்கு மட்டுப்படுத்த வேண்டுமென்பதோடு, எதிர்க்கட்சியினரின் அல்லது வேட்பாளர்களின் பொது நடவடிக்கைகளோடு தொடர்புபடாத, அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையின் அந்தரங்கங்களை விமர்சிப்பதைத் தவிர்த்துக்கொள்ளலும், நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள், நிரூபிக்க முடியாத விடயங்கள் மற்றும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலான விமர்சனங்களை மேற்கொள்ளாதிருத்தலும்.

3. தேர்தலின் மூலம் நிறுவப்பட எதிர்பார்க்கப்படுகின்ற நியதிச்சட்ட நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதனூடாக இலங்கையர்களின் எதிர்கால அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணம் செய்யக்கூடிய வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்து அவர்களை ஒழுக்க சீலத்துடனும் பக்குவத்துடனும் போட்டியிட வழிகாட்டல்.

4. அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் வேட்பாளர்களைப் போட்டியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கின்றபோது, அவர்களின் முந்திய செயற்பாடுகளின் நேரிய தன்மை, சட்டத்தை மதித்து செயலாற்றியமை, சட்டத்தின் முன்னால் குற்றச்சாட்டுகளுக்காளாகாமை, பொதுமக்கள் சேவைக்கான அர்ப்பணங்களை மேற்கொண்டுள்ளமை, பணபலம் மற்றும் சமூக பலம் என்பவற்றைப் பயன்படுத்தி மக்கள் சமூகத்திற்கு அழுத்தங்களை ஏற்படுத்தாமை போன்ற குணநலன்களின்பால் கவனத்தை ஈர்க்க நடவடிக்கைகளை எடுத்தல்.

5. வேட்புமனுக்களைக் கையளிக்கின்றபோது அல்லது அதன் பின்னரான 30 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் அனைத்து வேட்பாளர்களும் அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி வெளிப்படுத்துகைகளைத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தல்.

6. வாக்களிப்பு நிலைய வளாவிற்குள் அல்லது வாக்கெண்ணல் நிலைய வளாவிற்குள் புகைபிடித்தல் அல்லது மது அருந்திய நிலையில் வருவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டுமென வேட்பாளர்கள்/ முகவர்கள் ஆகியோரை அறிவூட்டுதல்.

7. வேட்புமனுக் கையேற்பு நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையம் அதன் சுற்றுச் சூழல் மற்றும் வாக்கெண்ணல் நிலையம் மற்றும் முடிவுகளை வெளியிடும் நிலையம் என்பவற்றினுள் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள நபர்கள் மாத்திரமே உட்பிரவேசித்தல் மற்றும் அவ்விடங்களுக்கு சுடுகலன்களை எடுத்து வரக்கூடாதென்ற விதிகளுக்கு இணங்க செயற்படுதல்.

8. தேர்தலுடன் தொடர்புடைய தடுக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது தமது ஆதரவாளர்களை அப்பணிகளில் ஈடுபடத் தூண்டுதல், ஆதரவு தெரிவித்தல் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்.

**(இ) தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் :**

1. தேர்தல் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை சட்டரீதியாகவும் அமைதியைப் பேணும் விதத்திலும் மேற்கொள்ளல், எதிர்த்தரப்பினர்களின் சட்டரீதியான தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காமை மற்றும் சட்டத்திற்கமைய தேர்தல் பிரச்சார அலுவலகங்களைப் பேணுதல்.

2. அச்சிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வாக்காளர்களை அறிவூட்டத்தக்க ஆவணங்களை அச்சிடல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பாக தேர்தல் சட்டத்துக்கு அமைய நடந்துகொள்ளல் :

(i) அச்சகரின்/வெளியீட்டாளரின் தகவல்களின்றி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், சட்டவிரோத அறிவித்தல்களை அச்சிடல் போன்ற விடயங்களை தவிர்ந்து கொள்ளல் ;

(ii) சட்டத்தால் தடுக்கப்பட்டிருந்தால் வேட்பாளர் அல்லது வேட்பாளரின் நெருங்கிய உறவினர் துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தல் அல்லது வாக்குகளை இரந்து கேட்டல் என்பனவற்றிற்காக வீடுவீடாகச் செல்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தலுக்காக வீடுவீடாகச் செல்லும்போது பெருந்தொகை மக்கள் கூட்டம் அல்லது இசை முழக்கம், பதாகைகளைப் பயன்படுத்தாதிருத்தல்.

3. தமது கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளர்களின் வெற்றியை இலக்காகக் கொண்டு அல்லது வேறொரு தரப்பினரின் தோல்வியை எதிர்பார்த்து எந்தவொரு தேர்தல் பிரச்சார அறிவித்தலையோ, பிரச்சார பலகைகளை அல்லது அதனோடு தொடர்புடைய புகைப்படத்தையோ, சித்திரங்கள் போன்றவற்றையோ அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களில் அல்லது பிரச்சார கூட்டம் நடைபெறும் தினம் கூட்டம் நடைபெறும் காணியில் தவிர மக்களுக்கு தெரியக்கூடியவாறு அரசாங்க அல்லது தனியார்துறைக்குச் சொந்தமான கட்டிடமொன்றில், வதிவிடமொன்றில், வெற்றுக்காணியொன்றில் அல்லது பொதுமக்கள் பிரவேசிப்பதற்கென அனுமதிக்கப்பட்டுள்ள பாதைகளில் அல்லது பொது இடங்களில் சட்டவிரோதமாக காட்சிப்படுத்துவதைத் தவிர்த்தல்.

4. கட்சி/வேட்பாளர் வேறுபாடின்றி சாதாரண நிலைமையின் கீழ் வாடகை அடிப்படையில் வழங்கப்படும் கூட்ட மண்டபங்கள் அல்லது விளையாட்டு மைதானங்கள் தவிர தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசாங்க அல்லது அரச சார்பான நிறுவனங்களுக்குரித்தான காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஆதனமொன்றை அல்லது சேவையொன்றைப் பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

5. தேர்தல் பிரச்சார/ ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக எந்தவொரு சமயத் தலத்தையோ, சமயத் தலமொன்றுக்குரித்தான காணியொன்றையோ, ஆதனமொன்றையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.

6. தேர்தலோடு தொடர்புடைய கொடிகள் அல்லது அறிவித்தல்கள் அல்லது ஸ்ரிக்கர்கள் மற்றும் வேட்பாளரின் இலக்கம், பெயர், புகைப்படம் என்பன வேட்பாளர் பயணம் செய்கின்ற வாகனத்தில் மாத்திரம் காட்சிப்படுத்தல் மற்றும் பதிவுசெய்யப்படாத வாகனங்களில் அல்லது கராஜ் இலக்க/போலி இலக்கங்களைக் கொண்ட வாகனங்களை தமது சொந்த தேர்தல் பிரச்சாரங்களுக்கு ஈடுபடுத்தாதிருத்தல்.

7. தேர்தல் பிரச்சாரத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற சோடனைகள் அனுமதியளிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரச்சாரக்கூட்டம் இடம்பெறுகின்ற காணியில் அக்காலப் பகுதிக்குள் மாத்திரம் சூழலை மாசுப்படுத்தாதவாறு மேற்கொள்ளலும் அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் பின்னர் கால தாமதமின்றி அச்சோடனைகளை அகற்ற நடவடிக்கையெடுத்தலும்.

8. தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் பிரச்சார/ ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்குரிய ஊர்வலங்களை, பொதுமக்கள் ஊர்வலங்களை மற்றும் வாகன ஊர்வலங்களை நடாத்துதல் தேர்தல் சட்டங்களை மீறும் செயல்களென்பதால் அவ்வாறான ஊர்வலங்கள், பாத யாத்திரைகள், வாகனப் பேரணிகள், துவிச்சக்கர வண்டி ஊர்வலங்கள் போன்ற எவற்றையும் தேர்தல் காலக்கெடுவினுள் நடத்தாதிருத்தல்.

9. ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்ட கூட்டத்திற்காக மாத்திரம் ஒலிபெருக்கியைப் பயன்படுத்துதல், கூட்டக்காலத்திற்கும் அக்காணிக்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்படல், வாகனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒலிபெருக்கியூடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்த்தல்.

10. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு 48 மணித்தியாலத்துக்கு முன்னர் உரிய தேர்தல் சட்டத்திற்கு அமைய தேர்தல் பிரச்சாரங்களை நிறுத்த நடவடிக்கையெடுத்தல் மற்றும் அவ்வமைதிக் காலக்கெடுவினுள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாண்மையை ஊக்குவிக்கக்கூடியதாக இசை நிகழ்ச்சிகளை நடாத்துதல், அச்சு/ இலத்திரனியல் ஊடகங்களூடாகப் பிரச்சாரம் செய்தல் போன்ற பணிகளை இடைநிறுத்தல்.

11. எந்தவொரு கட்சியையும் அல்லது சுயேச்சைக் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில், மாகாண சபையொன்றில் அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றில் மக்கள் பிரதிநிதியொருவராகப் பதவி வகிக்கின்றவர், ஏதேனுமொரு கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அல்லது அவற்றின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதற்காக தனக்கு பிரதிநிதியொருவர் என்ற வகையில் கிடைக்கப்பெற்றுள்ள வரப்பிரசாதங்களையும், தத்துவங்களையும், வாகனங்களையும் மற்றும் ஏனைய அரசாங்க வளங்களையும் பயன்படுத்தாமை.

12. பொதுமக்கள் பிரதிநிதியொருவரின் பாதுகாப்புக்காக சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புத்துறை உத்தியோகத்தர்கள் அல்லது அவர்களின் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ள சுடுகலன்கள் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றை குறித்த மக்கள் பிரதிநிதியின் பாதுகாப்புக்காகவன்றி வேறெந்தவொரு சட்டரீதியற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல்.

13. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாகப் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் தேர்தல் சட்டத்தின்கீழ் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற வானலைக்கால எல்லை, உரிய கூட்டுத்தாபனத் தலைவர்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகியோரால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கமையப் பயன்படுத்தப்படல் (மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பொருந்தாது.).

14. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய தேர்தலொன்றிபோது வாக்காளர் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் செய்தியொன்றை அனுப்புவதற்குள்ள உரிமையை, உரிய சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அஞ்சல் மா அதிபரினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய பயன்படுத்துதல் (இவ்வாய்ப்பு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குப் பொருந்தாது.).

15. க. பொ. த. சாதாரண தரம் அல்லது உயர்தரப் பரீட்சைகள் மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை உட்பட முக்கியமான பரீட்சைகள் இடம்பெறும் பாடசாலைகள் மற்றும் அப்பரீட்சைகளின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படும் பாடசாலைகள், பரீட்சை நிலையங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் அப்பாடசாலைகளின்/ நிலையங்களின் சுற்றுப்புறத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்ளல்.

16. எவரேனும் வேட்பாளரொருவரினால் அல்லது வேறு கட்சியொன்று அல்லது வேட்பாளர் ஒருவர் தொடர்பாக முன்னர் தெரிவித்த கூற்றொன்றை அல்லது கருத்தொன்றைத் தெரிவிப்பதற்கு வேறு கட்சியொன்று அல்லது வேட்பாளரொருவர் ஊக்குவிப்புக்கு அல்லது பாதிப்புக்குட்படுத்துவதற்காக பயன்படுத்தல் தொடர்பில் அக்கூற்றை அல்லது கருத்தைத் தெரிவித்த நபர் எதிர்ப்புத் தெரிவிப்பாராயின், அவ்வாறான கூற்றை/ கருத்தை பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

**(ஈ) வாக்கெடுப்புத் தினம் :**

1. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் மேற்கொள்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் குறிப்பாக வாக்குகளை இரந்து கேட்டல் போன்ற தேர்தல்கள் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை இழைக்காமை.

2. வாக்களிப்புக்காக வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருகின்ற வாக்காளர்களுக்கு மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கினைப் பிரயோகிப்பதற்காக வருகின்ற வாக்காளர்களுக்கு எவ்வித இடையூறையும் ஏற்படுத்தாமையும், வாக்கினைப் பிரயோகிப்பதற்கான அழுத்தங்களை ஏற்படுத்தாமையும் வாக்காளர்களுக்கு தமது வாக்கினை சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும், அந்தரங்கமாகவும் பிரயோகிப்பதற்குள்ள உரிமைக்குப் பங்கம் ஏற்படுத்தாமையும்.

3. தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வேட்பாளர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்கள் ஆகியோர் எந்தவோர் அச்சுறுத்தலுக்கும் ஆளாக்கப்படுதல், உடல் ரீதியான சித்திரவதைகளுக்கு இலக்காக்கப்படுதல் அல்லது அவர்களின் ஆதனங்களுக்கு சேதம் விளைவித்தல் என்பவற்றைத் தவிர்ந்து கொள்ளல் மற்றும் வாக்களிக்க வருகின்ற அல்லது வாக்களித்து விட்டுச் செல்கின்ற வாக்காளர்களை அச்சுறுத்தல், அவர்களுக்கு இடையூறு விளைவிப்பதிலிருந்து தவிர்ந்திருத்தல், வாக்கெடுப்பு நிலைய முகவர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டுவதைத் தவிர்த்தல்.

4. வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திற்குள் உட்பிரவேசிப்பதற்காக அனுமதியுள்ளவர்கள் மாத்திரம் (போட்டியிடுகின்ற அரசியல் கட்சியொன்றின் செயலாளர், வேட்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்) உட்பிரவேசிக்க வேண்டுமாதலால் அது தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கி செயற்படுதல் மற்றும் தத்தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் மற்றும் வாக்கெடுப்பு நிலையத்தினுள் பாதுகாவலர்கள், ஊடகவியலாளர்கள் அல்லது புகைப்படப்பிடிப்பாளர்களை அழைத்து வராதிருத்தல்.

5. தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எத்தகைய குற்றத்தையும், தேர்தல் ஊழல் நடவடிக்கைகளையும் ஆற்றுவதையும் ஒத்துழைப்பு வழங்குவதையும், தவிர்த்தல் (வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குப்பெட்டிகளை வலுகட்டாயமாக நிரப்புதல், வாக்கெடுப்பு நிலையத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்தல், ஆள்மாறாட்ட வாக்குகளை அடையாளமிடல் போன்ற தவறான ஊழல் நடவடிக்கைகள்).

6. சட்ட ரீதியற்ற முறையில் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்காளர்களைப் போக்குவரத்துச் செய்யாமலிருக்க வழிவகை செய்தல்.

7. வாக்கெடுப்பை நடாத்துவதற்காக அந்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பணியாட் குழுவுக்கு எதிர்பார்க்கப்பட்டவாறு ஒத்துழைத்தலும், அவர்களின் பணிகளுக்கு முகவர்கள் இடையூறு ஏற்படுத்தாமைக்கு வழிவகை செய்தலும்.

8. தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு, வாக்கெடுப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கின்ற முகவர்களுக்கு, கண்காணிப்பு நிறுவனங்களின் முகவர்களுக்கு தடங்கலேற்படுத்தாமையும் அவர்களின் பணிகளை ஆற்றுவதில் ஒத்துழைப்பு வழங்கலும்.

9. வாக்கெடுப்பு நிலைய வளவினுள் புகைப்படமெடுத்தல், கையடக்க தொலைபேசி பாவனை போன்ற தடை செய்யப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருத்தல்.

மேற்குறித்த விடயங்கள் ஏற்புடையதாகின்றவிடத்து அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படும் தினத்திற்கும் செல்லுபடியாகுமெனக் கருதுதல் பொருத்தமாகும்.

**(உ) வாக்குகள் மற்றும் விருப்புக்கள் எண்ணல் (அஞ்சல் வாக்குகள் உள்ளிட்ட) மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்:**

1. வாக்குகள் மற்றும் விருப்புக்களை எண்ணல் (அஞ்சல் வாக்கெண்ணல் உள்ளிட்ட) நடைமுறை தொடர்பாக தமது வாக்கெண்ணல் முகவர்களை அறிவூட்டலும் முறைப்பாடுகளை சமர்ப்பிக்கும் உரிய முறைமை தொடர்பாக தமது முகவர்களை அறிவூட்டலும்.

2. வாக்கெண்ணல் நிலையத்திற்குள்ளேயும் மற்றும் பெறுபேறுகள் தயாரிக்கப்படும் நிலையத்திற்குள்ளேயும் அந்நடவடிக்கைகளை நிர்வகித்தல் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரால் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கையெடுத்தல் இன்றியமையாததென தத்தம் முகவர்களை அறிவூட்டல்.

3. வாக்கெண்ணல் முகவர்களாக முறையாக நியமனஞ் செய்யப்படாவிடின் அல்லது வேட்பாளராக இல்லாவிடின் அரசாங்கத்தின் அல்லது மாகாண சபைகளின் அமைச்சர்கள், பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்கள் அல்லது ஏனைய அரசியல்வாதிகள் வாக்கெண்ணல் நிலையக் கட்டிடத் தொகுதிக்குள்/ நிலையத்திற்குள் உட்பிரவேசிக்காதிருக்க வழிவகை செய்தல்.

4. வாக்கெண்ணல் அல்லது முடிவுகளை வெளியிடுதல் மண்டபங்களின் முகவர்களாக வருகை தருகின்ற எந்தவோர் அரசியல்வாதியும் சுடுகலன்கள் அல்லது சுடுகலன்களின்றி பாதுகாவலர்களை அம்மண்டபங்களினுள் அழைத்துச் செல்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் மற்றும் வாக்கெண்ணல் மண்டபங்கள், முடிவுகளை வெளியிடும் மண்டபத் தொகுதி என்பவற்றினுள் சட்டவிரோதமாக ஆட்களை அழைத்து வருவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

**(ஊ) குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகைகள் அல்லது தேசிய ஐக்கியத்திற்கு எதிரான வெளிப்படுத்துகைகள் :**

1. பெண்கள், விசேடதேவைப்பாடுகளுடன் கூடிய அதாவது அங்கவீனர்கள், வித்தியாசமான பால் ரீதியான தோற்றத்துடன் கூடிய நபர்கள் மற்றும் பிற சமய அல்லது இன குழுமங்கள் என்பவற்றை வேறுபிரித்துக்காட்டி அத்தகைய சனக் குழுமங்களை அல்லது சமூகத்தினரை அச்சுறுத்தத்தக்க அல்லது அசௌகரியத்திற்கு இலக்காக்குகின்ற விதத்திலான குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகைகளை வெளியிடக்கூடாது.

2. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அனைவரும் குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகையை மேற்கொள்வது எப்பொழுதும் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் முக்கியமாக தேர்தலொன்றின் போது வேட்புமனு காலப்பகுதி ஆரம்பிக்கின்ற முதல் நாள் முதல் அத்தேர்தல் நடாத்தப்படுகின்ற தினத்திற்குப் பின்னர் வருகின்ற தினம் வரையிலான காலப்பகுதிக்குள் அவ்வாறு மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

3. குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகைகள் குற்றமாக இனங்காணப்பட்டுள்ளமையால் அத்தகைய வெளிப்படுத்துகைகளை வெளியிடுபவர்கள் தொடர்பாக அறிக்கையிடல் வேண்டும்.

4. இன மற்றும் சமய குழுக்களிடையே உள்ள நட்புறவிற்கும், பரஸ்பர நம்பிக்கைக்கும் இடையூறு விளைவிக்க கூடியதான எந்தவொரு வெளிப்படுத்துகைகளை மேற்கொள்வதையோ எந்த உருவப்படங்களை காட்சிப்படுத்தலையோ தவிர்ந்து கொள்ளல்.

5. இன அல்லது சமயக் குழுக்களினதும் நபர்களினதும், தனித்துவத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடிய ஏதேனுமொரு வெளிப்படுத்துகையை வெளியிடுவதை தவிர்ந்து கொள்ள வேண்டுமென்பதோடு, அத்தகைய வெளிப்படுத்துகைகளை பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதை தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

6. சமய, இன, மொழி, சாதி அல்லது பால் ரீதியான சமூக நிலை தொடர்பான வேறுபாடுகளை அடிப்படையாக வைத்து எவரேனுமொருவருக்கோ அல்லது குழுவிற்கோ பாதிப்பை ஏற்படுத்தத்தக்கதாக அல்லது வேறுபாடு காட்டத்தக்கதாக கருத்தில் கொள்ளப்பட முடிந்த எந்தவொரு வெளிப்படுத்துகையையும் மேற்கொள்வதையோ ஏதேனும் செயற்பாட்டினை நிகழ்த்துவதையோ தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

7. பெண் ஒருவரின் அங்க இலட்சணங்களை அடிப்படையாக வைத்து பெண்களுக்கு ஊறு விளைவிக்கத்தக்க விதத்தில் அல்லது மன உளைச்சலை ஏற்படுத்தத்தக்க விதத்தில் அல்லது கீழ்த்தரமான விதத்தில் வெளிப்படுத்துகையை மேற்கொள்வதை அல்லது ஏதேனும் செயலொன்றை மேற்கொள்வதை தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவ்விடயம் பெண்கள் தொடர்பாக பிரத்தியேகமாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அனைத்து பிரசைகளுக்கும் பொருந்தக்கூடியதென்பதால் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

8. எவரேனும் ஒரு நபரின் ஏதேனும் விதத்திலான அங்கவீனம் அல்லது உடலியல் குறைபாடு தொடர்பாக மானபங்கப்படுத்தக்கூடிய விதத்தில் அல்லது கீழ்த்தரமாக மதிப்பீடு செய்யத்தக்க விதத்திலான வெளிப்படுத்துகையொன்றை மேற்கொள்ளலை அல்லது எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளலை தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

**(எ) ஏனைய முக்கிய விடயங்கள் :**

1. தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் தத்தம் கட்சிகளின் கொள்கைகளையும் ஒரு குறித்த காலப்பகுதிக்குள் தமது கட்சியால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டமொன்றையும் வாக்காளருக்கு முன்வைத்தல் மற்றும் அதன் பிரதிகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அதன் மூலம் தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்திற்கும் அனுப்பி வைத்தல்.

2. தேர்தல் பிரச்சாரங்கள்/ ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் அரசாங்க ஆதனங்கள், உத்தியோகபூர்வ வாகனங்கள் அல்லது அரசாங்க அலுவலர்களை ஈடுபடுத்தாமை மற்றும் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் போன்ற எந்தவொரு நிறுவனத்தினுள்ளும் அல்லது அவ்வளாவிற்குள் வாக்குகளை இரந்து கேட்டல், துண்டுப் பிரசுர விநியோகம், பதாகைகளைக் காட்சிப்படுத்தல் அல்லது அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தல் போன்ற பிரச்சாரங்களை மேற்கொள்ளாதிருத்தல்.

3. மக்கள் பிரதிநிதிகள் தமது உத்தியோகபூர்வ கடமை நடவடிக்கைகளூடாக தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்வதைத் தவிர்ந்து கொள்ளல்.

4. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகக் கட்டணமின்றி அரசாங்க உலங்கு வானூர்திகளையோ அல்லது வேறு வாகனங்களையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.

5. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகப் பொதுக்கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள், அரசாங்க, சுற்றுலா விடுதிகள் என்பன பயன்படுத்தப்படுமாயின் உரிய கொடுப்பனவுகளை வழங்கி அவற்றைப் பயன்படுத்தலும் மற்றும் அத்தகைய வளங்களை அதேமுறையில் அனைத்துத் தேவையான தரப்பினராலும் பெற்றுக்கொள்ளத்தக்கவாறு நடவடிக்கையெடுத்தலும்.

6. தேர்தல் காலத்தில் அரசியல் செய்திகளையும், கடிதங்களையும் மற்றும் அறிவித்தல்கள் அனுபந்தங்கள் போன்றவற்றையும் அரசின் அல்லது அரச நிறுவனங்களின் செலவில் பிரசுரிக்காமை.

7. தேர்தல் காலப்பகுதிக்குள் வாக்காளர்களை அல்லது அரச அலுவலர்களைத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தமது தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அழைத்து உபசரிப்பதைத் தவிர்த்துக் கொள்ளல்.

8. ஏதேனுமொரு விதத்தில் நிதி ஏற்பாடுகளை வழங்கல் அல்லது வாக்குறுதிகளையளித்தல், கருத்திட்டங்கள் அல்லது திட்டங்கள் என்பவற்றிற்காக அடிக்கல் நாட்டல், பாதைகள், நீர், மின்சாரம் ஆகிய வசதிகளை வழங்கல் தொடர்பான வாக்குறுதிகளையளித்தல் மற்றும் தமது கட்சிக்கு அனுகூலம் ஏற்படுத்தத்தக்கவாறு வளைத்துப் பிடித்துக்கொள்ள முடிந்த வாக்காளர்களுக்காக முறையற்ற விதத்தில் மிகத்துரித கதியில் அரசாங்கத் துறையின் பதவிகள் மற்றும் நியமனங்கள் என்பவற்றை வழங்குவதைத் தவிர்த்தல்.

9. தேர்தல் சட்ட மீறல்கள், தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல், தேர்தல் மோசடிகள் மற்றும் குற்றங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துகின்ற துறைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளில் தலையிடாமையும் அத்துறைகளுக்கு சுயாதீனமாக நடந்து கொள்ளத் தேவையான பின்னணியை உருவாக்கலும்.

10. தேர்தல் காலப்பகுதிக்குள் எதிர்த்தரப்பினர்களுக்கும் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக உறுதிப்படுத்த முடியாத தவறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு அவற்றிற்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தைக்கூட வழங்காமல் நிகழ்ச்சித் திட்டங்களை பிரச்சாரம் செய்வதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தாமை.

11. அரசியல் கட்சியொன்று அல்லது அரசியல்வாதிகள் தொடர்பாக செய்யப்படுகின்ற விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிப்பதில் எந்த விதத்திலான தேர்தல் பிரச்சாரங்களையும் (நம்ப முடியாத தேர்தல் ஊக்குவிப்புத் தகவல்களை பிரச்சாரம் செய்வதை) தவிர்ந்து கொள்வதோடு, வன்முறைத்தன்மையற்ற சட்டரீதியான செயற்பாடுகளை மாத்திரம் பின்பற்றல்.

12. மக்கள் பிரதிநிதிகளின் சட்டரீதியான மெய்ப்பாதுகாவல்களாகக் கடமையாற்றுகின்ற பொலிஸார் மற்றும் ஏனைய பாதுகாப்புத்துறை அதிகாரிகளை உத்தியோகப்பற்றற்ற விதத்தில் அரசியல், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதையும் எதிர்க்கட்சியினரின் தேர்தல் செயன்முறைகளைச் செயலிழக்கச் செய்வதையும் தவிர்ந்து கொள்ளல், அவ்வாறான செயற்பாடுகளை பகிரங்கமாகக் கண்டித்தல்.

13. எந்தவோர் அரசியல் கட்சியோ அல்லது அரசியல் அமைப்போ தமது தேர்தல் நடவடிக்கைகளில் சட்டரீதியற்ற விதத்தில் ஆயுதந் தாங்கிய நபர்களை ஈடுபடுத்த நடவடிக்கைகள் எடுக்குமாயின், அத்தகைய செயற்பாடுகளைப் பகிரங்கமாகக் கண்டிப்பதும் மற்றும் அவற்றைத் தடுப்பதற்காக உரிய தரப்பினருக்கும் அறிவித்தலும்.

14. தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்தப்படுகின்ற அரச வைபவங்களின் போது வேட்பாளர்களை அல்லது அரசியற் கட்சிகளின் முதன்மை செயற்பாட்டாளர்களை பங்குகொள்ள செய்யாதிருத்தல் மற்றும் அவ்வாறான வைபவங்களை கட்சி/வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கு பயன்படுத்தாதிருத்தல்.

15. அரசியல் ரீதியான நியமனங்களை வழங்குதல் மற்றும் பதவியுயர்வு அல்லது இடமாற்றம் செய்தல் என்பனவற்றிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களிப்புச் செய்வதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

16. தேர்தல் நடாத்தப்படுகின்ற ஒரு பிரதேசத்தில் அரசாங்கத்தின் ஆதரவில் களியாட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன நடாத்தப்படுமாயின் அச்சந்தர்ப்பங்களை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களினதும் கட்சிகளினதும் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கோ அல்லது தேர்தல் பிரசாரங்களோடு தொடர்புபடுத்துவதற்கோ நடவடிக்கையெடுக்காமை.

17. பகிரங்க பரீட்சைகள் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கு ஏற்புடையதாக நடாத்தப்படுகின்ற கல்விச் செயலமர்வுகள் ஊடாக கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்பை மேற்கொள்ளாதிருத்தல்.

**வேறு விடயங்கள் :**

1. தேசிய கீதம், தேசியக் கொடி, சமயச் சின்னம், சமயக் கொடிகள், சமயக் குரவர்கள் மற்றும் சமயத் தலைவர்களின் வரைபடங்கள் அல்லது உருவப்படங்கள் போன்ற எவற்றையும் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக அல்லது பாதிப்புறச் செய்வதற்காக பயன்படுத்தல் கூடாது.

2. மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றை கட்சி/ குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிப்புக் கூட்டங்கள் ஆகியவற்றில் அல்லது அறிவித்தல், பிரச்சாரப் பலகை என்பனவற்றில் காட்சிப்படுத்தல் கூடாது. மேலும் கட்சி/ வேட்பாளர் ஊக்குவிப்புக்காக எந்தவொரு அரச அலுவலரினதும் உருவப்படத்தை அல்லது வரைபடத்தை எவ்விதத்திலும் பயன்படுத்தக் கூடாது.

3. அரசியற் கட்சிகள்/ சுயேச்சைக் குழுக்களின் பிரச்சார அலுவல்களுக்காக பொதுவாக பெற்றுக்கொடுக்கப்படுகின்ற அரசாங்க இடங்கள் ஒரு கட்சியின் அல்லது ஒரு வேட்பாளரின் பிரச்சார அலுவல்களுக்காக மாத்திரம் குறித்தொதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கக் கூடாதென்பதோடு, வேறு கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களின் பிரச்சார அலுவல்களுக்காகவும் அவ்வாறான இடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சம சந்தர்ப்பம் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய விளையாட்டு மைதானங்களை அல்லது மண்டப வசதிகளைக் குறித்தொதுக்கும்போது ஏற்படக்கூடிய சிக்கல்களை குறைத்துக்கொள்வதற்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் பேணப்பட்டு வருகின்ற மாவட்டக் குழுவின் உத்தரவுகளுக்கமைய செயற்படுவதற்கு அனைத்து அரசியல்வாதிகளும் ஆதரவாளர்களும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

5. எந்தவோர் சமயக் கூட்டத்திலும் ஏதேனும் தேர்தல் முடிவில் அழுத்தத்தை ஏற்படுத்தும் விதத்திலோ அல்லது அத்தேர்தலில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவிற்கு அல்லது வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பதற்கோ அல்லது வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கோ வாக்காளரைத் தூண்டக்கூடிய விதத்திலான எவ்வித வெளிப்படுத்துகையையும் மேற்கொள்ளக் கூடாது.

6. ஏதேனுமொரு தேர்தலில் எந்தவோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது அவரது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக ஏதேனுமொரு சமயத்தலத்தில் எவையேனும் துண்டுப்பிரசுரங்கள், பிரச்சாரப் பலகைகள், சுவரொட்டிகள், சித்திரங்கள், அறிவித்தல்கள், வேட்பாளர்களின் உருவப்படங்கள், சின்னங்கள், குறியீடுகள், கொடிகள், பதாகைகள் என்பவற்றை பகிர்ந்தளித்தலோ காட்சிப்படுத்தலோ அல்லது எந்தவொரு பொது மக்கள் கூட்டத்தையும் நடாத்துதலோ மேற்கொள்ளக்கூடாது.

எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் ஏற்புடையவிடத்து அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு இசைவாக செயற்படுவார்களென எதிர்பார்க்கப்படுவதோடு, இவ்வொழுக்க நெறிக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தமது முகவர்கள், கட்சிக்காரர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பின்பற்றுகிறார்களென திருப்தியடையக்கூடிய விதத்திலான பொறிமுறையொன்று வேட்பாளர்கள் மற்றும் ஏற்புடையவிடத்து கட்சிச் செயலாளர்களினால் நடைமுறைப்படுத்தப்படுமென மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என். ஜே. அபேசேக்கர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, யூன் 03.

06-144

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/52 - 2020 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2020.07.17

2184/52 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தல் ஆணைக்குழுவினால் 2178/25 ஆம் இலக்க மற்றும் 2020.06.03 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்ட ஒழுக்க நெறிக் கோவையோடு தொடர்புடைய மேலதிகமான ஓர் ஒழுக்க நெறி

தேர்தல் காலப்பகுதிக்குள் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் அலுவலர்கள் வன்முறைச் செயல்கள், தேர்தல் சட்டமீறல்கள், சட்ட முரணான செயற்பாடுகள் என்பவற்றை மெச்சும் விதத்திலான வெளிப்படுத்துகைகளையும் வன்முறை மற்றும் சமூகக் குழுக்களுக்கிடையிலான கொந்தளிப்புகளை ஏற்படுத்தவல்ல கருத்து வெளிப்பாடுகளையும் மேற்கொள்வதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

என்.ஜே. அபேசேக்கர,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, யூன் 15.

1A - PG 5004— 267 (2020/07)   இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## பாராளுமன்றத் தேர்தல் - 2020

## தேர்தல் கண்காணிப்புக்காக அங்கீகாரம் பெற்ற கண்காணிப்பாளர்களால் பின்பற்றப்படவேண்டிய ஒழுக்க நெறிகள்

1. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் பணிப்பாளர் சபை அங்கத்தவர், நடமாடும் கண்காணிப்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்புநிலைய கண்காணிப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர்கள் கடந்த 05 ஆண்டுகளுக்குள் தொழிற்பாட்டு அரசியலில் ஈடுபடாதவர்களாக விருத்தல் வேண்டும். தேர்தல்களில் வேட்பாளர்களாக போட்டியிடாத வாக்காளர்களாக தகைமை பெற்றுள்ள நடுநிலையாளர்களாகவிருத்தல் வேண்டும். அனைத்து அலுவலர்களும் கண்காணிப்பாளர்களும் சத்தியக்கடதாசியொன்றின் / உறுதியுரையொன்றின் மூலம் அதனை உறுதிப்படுத்த வேண்டுமென்பதோடு, தேவைப்படுமிடத்து பரிசீலிக்கத்தக்க விதத்தில் அச்சத்தியவெளிப்படுத்துகைகள் /உறுதி யுரைகள் கண்காணிப்பு நிறுவனத்தின் பொறுப்பில் பாதுகாப்பாக வைக்கப்படல் வேண்டும். (சத்தியத்தின் / உறுதியுரையின் மாதிரியின் பிரதியொன்று இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.)

2. தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றின் எவரேனுமோர் அலுவலர் அல்லது கண்காணிப்பாளர் அரசியல் தொடர்புகளின் காரணமாக அரசாங்கம் அல்லது வேறேதேனும் நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பதவியை வகிப்பவராகவோ அல்லது கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் அத்தகைய பதவியை வகித்த ஒருவராகவோ இல்லாதிருப்பது அவசியமாகும்.

3. கண்காணிப்பு நிறுவனங்களினால் வேட்பாளரொருவருடைய அரசியற் கட்சி அல்லது குழுவிற்கு உரித்தான கட்டிடங்கள், வாகனங்கள், தொலைபேசி வசதிகள் போன்றனவற்றை தமது கண்காணிப்பு நிறுவனத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாமை அவசியமாகும்.

4. தேர்தல்கள் கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தினர்கள் அல்லது அலுவலர் குழாத்தின் அங்கத்தினர்கள், கண்காணிப்பாளர்கள் எந்தவோர் வேட்பாளரினதும் அல்லது அரசியற் கட்சியொன்றின் அல்லது அரசியல் குழுவொன்றின் நோக்கங்களுக்கமைய நடவடிக்கைகளில் ஈடுபடாமை அவசியமாகும்.

5. தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களினூடாக தேர்தலோடு தொடர்புடையதாக ஊடக அறிவித்தல்கள் மற்றும் அறிக்கைகள் வெளியிடப்படுகின்ற போது ஏதேனுமொரு கட்சியை அல்லது குழுவை இன்றேல் வேட்பாளரொருவரை ஊக்குவிக்கத்தக்கவாறோ அல்லது பாதிப்புக்களை ஏற்படுத்தத்தக்கவாறோ வெளிப்படுத்துகைகளை வெளியிடாமையும் நடுநிலைத் தன்மையைப் பேணலும்.

6. தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களால் தேர்தல் ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவை அறிவூட்டாது ஊடக அறிவித்தல்களையோ அல்லது ஊடக வெளிப்படுத்துகைகளையோ வெளியிடலாகாது.

7. கண்காணிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் குழு, அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகிய அனைவரும் கண்காணிப்புப் பணிகள் தொடர்பாக ஆற்றுகின்ற அனைத்து அலுவல்களிலும் பக்கச்சார்பற்ற தன்மை முழுமையாக அனுஷ்டிக்க வேண்டுமென்பதோடு, நடத்தையிலும் பேச்சிலும் பக்கச்சார்பற்ற தன்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். அதேபோன்று பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்வதை அடுத்தவர்களுக்கும் உணரச் செய்தல் வேண்டும்.

8. எவரேனும் ஒரு கண்காணிப்பாளர் பக்கசார்பாக நடந்துகொள்வதாக ஏதேனும் முறைப்பாடு கிடைக்கப்பெற்றவுடன் அவரை அக்கண்காணிப்பு பணியிலிருந்து அகற்றி துரிதமாக உரிய முறைப்பாட்டை விசாரித்தல் வேண்டும்.

9. வாக்கெடுப்புக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர் வாக்கெடுப்பு நிலைய பணியாட் குழுவினர், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்காளர்களோடு தேவையற்ற அளவலாவலில் ஈடுபடக்கூடாது. தேர்தலின் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் இரகசியத்தைப் பேணலும், வாக்கெடுப்பு நிலையத்தில் அது தொடர்பான வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்குக் கையளித்தலும் அவசியமாகும்.

10. நடமாடும் மற்றும் வாக்கெடுப்பு நிலையக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பாளர்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியுமான விதத்தில் சீருடையொன்றையோ அல்லது பொருத்தமான விஷேட ஆடையொன்றையோ அணிந்திருத்தலும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுகின்றபோது மது அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல் என்பனவற்றைத் தவிர்ந்துகொள்ளலும் அவசியமாகும். மேலும் வாக்களிப்பு நிலையத்தில் மற்றும் வாக்கெண்ணும் நிலையத்திலும் புகைப்படங்கள் எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

11. வாக்கெடுப்பு முடிவடைந்ததன் பின்னர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் வசமுள்ள ZLOB படிவ அறிக்கையைப் பெற்று உரியவாறு பூர்த்தி செய்து தனது கண்காணிப்பையும் குறிப்பீடு செய்து கண்காணிப்பு அறிக்கையை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

12. கண்காணிப்பு அமைப்புக்களால் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் அனைத்தும் உறுதிப்படுத்தக் கூடிய சாட்சியங் களுடனான விடயங்களுக்கு மாத்திரம் உட்பட்டிருத்தல் வேண்டும்.

13. வாக்கெடுப்பு நிலையமொன்றில் / வாக்கெண்ணும் மண்டபமொன்றில் வாக்கெடுப்பு தொடர்பான ஏதேனும் தவறுகள் அல்லது முறையற்ற செயல்கள் காணக்கிடைக்குமாயின், அத்தகைய தவறுகள் அல்லது கடமைகள் அல்லது சம்பவம் தொடர்பாக வாக்கெடுப்பு நிலையத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கும், வாக்கெண்ணும் நிலையத்தில் தலைமை வாக்கெண்ணும் அலுவலருக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அவ்விடயங்களை தனது நிறுவனத்தின் உரிய அதிகாரிகளுக்கன்றி வேறு எவருக்கும் இவ்விடயங்கள் தொடர்பான தகவல்களை வழங்கக் கூடாது. தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்காது அத்தகைய தகவல்களை வெளியாருக்கு வழங்குவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு கண்காணிப்பு அமைப்புக்களின் முகாமைத்துவம் பொறுப்பாக விருத்தல் வேண்டும்.

**மஹிந்த தேசப்பிரிய,**
**தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு**
**(தேர்தல் ஆணைக்குழுசார்பாக)**

**தேர்தல்கள் செயலகம்,**
**சரணமாவத்தை,**
**இராஜகிரிய.**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2188/2 - 2020 අගෝස්තු මස 10 වැනි සඳුදා - 2020.08.10

2188/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பாராளுமன்றத் தேர்தல் - 2020

*அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழான வெளிப்படுத்துகை*

இதற்கான அட்டவணையில் காணப்படும் பெயர்களையுடைய ஆட்கள், அரசியலமைப்பினது 99அ ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**என். ஜே. அபேசேகர,**
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,**
அங்கத்தவர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, ஓகத்து 10.

1A - PG 5083 — 522 (2020/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

காமினீ லக்ஷ்மன் பீரிஸ்
ஹபுதந்திரி கமகே சாகர காரியவசம்
அஜித் நிவாட் கப்ரால்
மொஹொமட் உவைஸ் மொஹொமட் அலி சப்ரி
ஜயந்த வீரசிங்க
விஜேகோன் முதியன்சேலாகே மஞ்சுலா விஜேகோன் திசாநாயக
ராஜபக்ஷ வாசல தென்னகோன் முதியன்சேலாகே ரஞ்சித் பண்டார
ஹேரத் முதியன்சேலாகே சரித்த ஹேரத்
கெவிந்து குமாரதுங்க
மொஹொமட் முசம்மில்
திஸ்ஸ வித்தாரண
யதாமிணீ நரோதம ரூபசிங்க குணவர்தன
சுரேந்திர ராகவன்
டிரான் அலஸ்
விஜயபால ஸ்ரீ நாராயண வாசல பண்டாரநாயக மொஹொட்டாலலாகே சீதா குமாரி அரம்பேபொல
கெட்டகொட கமகே ஜயந்த பெரேரா
மொஹமட் பளீல் மர்ஜான் அஸ்மி

தவராஜா கலை அரசன்

செல்வராசா கஜேந்திரன்

08-519

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2188/46 - 2020 අගෝස්තු මස 14 වැනි සිකුරාදා - 2020.08.14

*2188/46 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பாராளுமன்றத் தேர்தல் - 2020**

*அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழான வெளிப்படுத்துகை*

*தேர்தல் ஆணைக்குழுவினால் 2188/2 ஆம் இலக்க, 2020.08.10 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் தொடர்புடையது.*

*இவ் அட்டவணையில் காணப்படும் பெயர்களையுடைய ஆட்கள், அரசியலமைப்பினது 99அ ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**மஹிந்த தேசப்பிரிய,**
*தவிசாளர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

**என். ஜே. அபேசேகர,**
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

**எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,**
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய,*
*2020, ஒகத்து 14.*

**அட்டவணை**

*ரத்நாயக்க முதியன்சேலாகே ரஞ்சித் மத்தும பண்டார*
*அத்தநாயக்க முதியன்சேலாகே குடாபண்டா திஸ்ஸ அத்தநாயக*
*இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்*
*இரான் விக்ரமரத்ன*
*நாலக ஜூட் ஹரின் பிரனாந்து*
*மயந்த யஸ்வந்த் திசாநாயக்க*
*டயனா கமகே*

*ஹரினி அமரசூரிய*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2206/22 - 2020 දෙසැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.12.18

2206/22 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பாராளுமன்றத் தேர்தல் - 2020**

*அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழான வெளிப்படுத்துகை*

தேர்தல் ஆணைக்குழுவினால் 2188/2 ஆம் இலக்க 2020.08.10 ஆந் திகதிய மற்றும் 2188/46 ஆம் இலக்க 2020.08.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு வெளியிடப்பட்ட அறிவித்தல்களுடன் தொடர்புடையது.

இவ் அட்டவணையில் பெயர் காணப்படுபவர், அரசியலமைப்பினது 99அ ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, திசெம்பர் 18.

**அட்டவணை**

அதுரெலியே ரதன தேரர்

1A - G 33350 — (2020/12)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2232/34 - 2021 ජූනි මස 18 වැනි සිකුරාදා - 2021.06.18

*2232/34 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யுன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பாராளுமன்றத் தேர்தல் - 2020**

*அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழான வெளிப்படுத்துகை*

தேர்தல் ஆணைக்குழுவினால் 2188/2 ஆம் இலக்க, 2020.08.10 ஆந் திகதிய மற்றும் 2188/46 ஆம் இலக்க, 2020.08.14 ஆந் திகதிய மற்றும் 2206/22 ஆம் இலக்க, 2020.12.18 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட அறிவித்தல்களுடன் தொடர்புடையது.

இவ் அட்டவணையில் பெயர் காணப்படுபவர், அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**நிமல் ஜி. புஞ்சிஹேவா**
தவிசாளர்
தேர்தல் ஆணைக்குழு

**எஸ்.பி.திவாரத்ன**
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

**எம்.எம்.மொஹமட்**
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

**கே.பீ.பீ.பத்திரண**
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

**ஜீவன் தியாகராஜா**
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2021, யுன் 18.

**அட்டவணை**

ரணில் விக்கிரமசிங்ஹ

06-345

1A - G 34443 — 410 (2021/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## 48. புள்ளிவிபரக் குறிப்புக்கள்

**பக்க இலக்கம்**


01. தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கையளிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் தொடர்பான தகவல்கள். 154

02. தேர்தலில் போட்டியிட்ட அரசியற் கட்சிகள் மற்றும் அக்கட்சிகள் போட்டியிட்ட தேர்தல்கள் மாவட்டங்கள். 155

03. தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் நிர்வாக மாவட்டங்களுக்கு அமைய பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் எண்ணிக்கை. 158

04. தேருநர் இடாப்புக்களை இறுவட்டுக்களாக விற்பனை செய்தல் தொடர்பான தகவல்கள். 159

05. வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்கெடுப்பு நிலையங்களை வகைப்படுத்தல் பற்றிய தகவல்கள். 160

06. வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான வகைப்படுத்தல். 161

07. வன்னி தேர்தல்கள் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் பெயர்ப்பட்டியல். 162

08. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை வகைப்படுத்தல். 163

09. அஞ்சல் வாக்கு விநியோகித்தல் தொடர்பான தகவல்கள். 164

10. ஒவ்வொரு மாவட்டங்களுக்கமைய அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குகளின் எண்ணிக்கை. 169

11. ஒவ்வொரு மாவட்டத்திலும் பயன்படுத்தப்பட்ட காட்போட் பெட்டிகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள். 170

12. தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் தொடர்பான விபரங்கள். 171

13. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையின் தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதங்கள் பற்றிய தகவல்கள். 172

14. இறப்பெய்தியுள்ளதாக மற்றும் வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள். 173

15. பணியாட்குழுவினர் தேவைப்பாடு தொடர்பான தகவல்கள். 174

16. சுகாதார சேவைகள் பணியாட்குழுவினர்கள் தொடர்பான விபரங்கள். 175

17. முறைப்பாடுகளை வகைப்படுத்தல். 177

18. பத்திரிகை அறிவித்தல்கள் தொடர்பான விபரங்கள். 178

19. ஊடக அறிவித்தல்கள் தொடர்பான விபரங்கள். 180

20. i. போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்காக அரசியல் வானொலிப் பிரச்சாரம் மற்றும் தொலைக்காட்சி பிரச்சாரங்களுக்காக வானலைக் காலத்தை குறித்தொதுக்குதல் தொடர்பான தகவல்கள். 183

ii. போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுக்களுக்காக அரசியல் வானொலிப் பிரச்சாரம் மற்றும் தொலைக்காட்சிப் பிரச்சாரங்களுக்காக வானலைக் காலத்தை குறித்தொதுக்குதல் தொடர்பான தகவல்கள். 185

21. வாக்கெண்ணல் வளாகங்கள் மற்றும் வாக்கெண்ணல் நிலையங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள். 186

22. போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை, செல்லுபடியான வாக்குகளின் சதவீதம், உரித்துப்பெற்ற உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள். 187

23. ஒவ்வோர் அரசியற் கட்சிகளினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் உரித்தாக்கிக் கொண்ட உறுப்பினர் பதவிகளின் எண்ணிக்கை. (8 ஆவது பாராளுமன்றத்தின் உள்ளடக்கம்) 188

24. தேர்தல் மாவட்டங்களின் விருப்பு வாக்கு முடிவுகள். (பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 62 ஆம் பிரிவு) 189

25. பாராளுமன்றத் தேர்தலின் முழுமையான செலவின அறிக்கை. (செலவின் தன்மையின் பிரகாரம்) 195

**தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கையளிக்கப்பட்ட பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் தொடர்பான தகவல்கள்**

| | அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் | | | சுயேச்சைக் குழுக்கள் | | | பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் | | | வேட்பாளர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தேர்தல் மாவட்டம்** | கிடைக்கப் பெற்ற | நிராகரிக்கப் பட்ட | ஏற்றுக் கொள்ளப் பட்ட | கிடைக்கப் பெற்ற | நிராகரிக்கப் பட்ட | ஏற்றுக் கொள்ளப் பட்ட | கிடைக்கப் பெற்ற | நிராகரிக்கப் பட்ட | ஏற்றுக் கொள்ளப் பட்ட | அரசியல் கட்சிகள் | சுயேச்சை குழுக்கள் | மொத்தம் |
| கொழும்பு | 19 | 03 | 16 | 27 | 01 | 26 | 46 | 04 | 42 | 352 | 572 | 924 |
| கம்பஹா | 17 | 02 | 15 | 21 | 03 | 18 | 38 | 05 | 33 | 315 | 378 | 693 |
| களுத்துறை | 18 | 07 | 11 | 14 | 01 | 13 | 32 | 08 | 24 | 143 | 169 | 312 |
| கண்டி | 18 | 01 | 17 | 15 | 03 | 12 | 33 | 04 | 29 | 255 | 180 | 435 |
| மாத்தளை | 13 | 00 | 13 | 10 | 00 | 10 | 23 | 00 | 23 | 104 | 80 | 184 |
| நுவரெலியா | 13 | 01 | 12 | 15 | 02 | 13 | 28 | 03 | 25 | 132 | 143 | 275 |
| காலி | 14 | 01 | 13 | 13 | 00 | 13 | 27 | 01 | 26 | 156 | 156 | 312 |
| மாத்தறை | 16 | 03 | 13 | 08 | 01 | 07 | 24 | 04 | 20 | 130 | 70 | 200 |
| அம்பாந்தோட்டை | 11 | 00 | 11 | 08 | 00 | 08 | 19 | 00 | 19 | 110 | 80 | 190 |
| யாழ்ப்பாணம் | 19 | 00 | 19 | 17 | 03 | 14 | 36 | 03 | 33 | 190 | 140 | 330 |
| வன்னி | 19 | 02 | 17 | 34 | 06 | 28 | 53 | 08 | 45 | 153 | 252 | 405 |
| மட்டக்களப்பு | 19 | 03 | 16 | 25 | 03 | 22 | 44 | 06 | 38 | 128 | 176 | 304 |
| திகாமடுல்லை | 20 | 00 | 20 | 38 | 04 | 34 | 58 | 04 | 54 | 200 | 340 | 540 |
